மகாபாரதச் சுருக்கம்

உத்தியோக பருவம்



U.G
3063-A
63a
06

மகாமகோபாத்தியாய
டாக்டர். உ.வே.சாமிநாதையர் நூல்நிலையம்
பெசன்ட் நகர், சென்னை-90

மகாபாரதச் சுருக்கம்

ஐந்தாவது

உத்தியோக பருவம்

(பதவுரை, விசேடவுரை முதலியவற்றுடன் கூடியது)

MAHABHARATHA CHURUKKAM

Udyoga Parvam

உரையாசிரியர் — பதிப்பாசிரியர்

பேராசிரியர் C. ஜெகந்நாதாசார்யர்

M.A. (Hist.), M.A. (Tamil) L.T., P.O.L. Dip. Geog. Vidvan

முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர்

விவேகாநந்தர் கல்லூரி, மயிலை, சென்னை-4.

(U. G. C. பேராசிரியர்)

மகாமகோபாத்தியாய

டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல்நிலையம்

பெசன்ட்நகர், சென்னை - 600090

1985

மகாமகோபாத்தியாய
டாக்டர் உ. வே. சாமிநாதையர்
நூல்நிலைய வெளியீடு எண் - 92

முதற்பதிப்பு 1985 - 1000 பிரதிகள்

© மகாமகோபாத்தியாய
டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல்நிலையம்
பெசன்ட் நகர், சென்னை - 600 090

விலை ரூ. 22

Published with the financial Assistance of the
Government of India
Dept of Edn. and Culture, New Delhi

Printed at : Sudha Printers
287/3 Lloyds Road, Madras - 600 014.

உள்ளடக்கம்

பதிப்பாளர் குறிப்பு	iv
Introduction	vi
முகவுரை	xvi
நூல்	1 - 237
உலூக மாமுனி தூது சருக்கம்	1 - 39
சஞ்சயன் தூது சருக்கம்	40 - 99
கிருஷ்ணன் தூது சருக்கம்	100 - 203
படையெழுச்சிச் சருக்கம்	204 - 237
அபிதான சூசிகையகராதி	238 - 244
அரும்பத அகராதி முதலியன	245 - 257
சில அருந்தொடர்கள்	258-259
செய்யுண் முதற்குறிப்பகராதி	260 - 267

பதிப்பாளர் குறிப்பு

தொழுது மலர்கொண்டு தூபம் கையேந்தி
எழுது மெழுவாழி நெஞ்சே — பழுதின்றி
மந்திரங்கள் கற்பனவும் மாலடியே கைதொழுவான்
அந்தரமொன் றில்லை யடை.

—(பொய்கையாழ்வார்)

ஐந்தாவது வேதமென்று சிறப்பித்துக் கூறப்படுகின்ற மகாபாரதத்தில் ஐந்தாவது பருவமாக விளங்குவது உத்தியோக பருவம். கண்ணபிரானுடைய திருவிளை யாடல்களே மிகுதியும் நிரம்பித் தனிச்சிறப்புடையது இந்த உத்தியோக பருவம். எல்லாவற்றையும் தன்ன கத்தே கொண்டவனுர் ஆதியந்தமற்றவனுமான பக வான் அடியார்களுக்குக் கட்டுப்பட்டவன் என்பதைத் தூது சென்றும், அனுஷ்டித்துக் காட்டியிருப்பதும் இப் பருவத்திலேதான். இந்தப் பருவத்தின் மூலம் நாம் பல அரியவிஷயங்களை அறிந்துகொள்ளலாம். இந்தப் பருவம் உலூக மாமுனி தூதுசருக்கம் முதல் படையெழுச்சிச் சருக்கம் ஈருக நான்கு சருக்கங்களைக் கொண்டது.

இந்தப் பருவத்தினைத் **திருமதி ருக்மிணி தேவி** அவர் களால் நிறுவப்பட்டுத் திருவான்மியூரில் இயங்கிக் கொண்டிருக்கும் **டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்** சுவடியிலிருந்து அச்சுவாகனம் ஏற்றித் தமிழுல கம் பயன் பெறும் வண்ணம் செவ்விய முறையில் வெளி யிடுகின்றது.

இந்தப் பருவத்திற்கும் பதவுரை, விளக்கவுரை முத லியவற்றை எழுதிக் கொடுத்தவர் **திரு C. ஜெகந்நாதா சார்யார்** அவர்கள். அன்ருருக்கு நூல்நிலையத்தின் சார் பில் நன்றி உரித்தாகுக. நூல்நிலைய வளர்ச்சிக்காக

ஊக்கம் காட்டிவரும் அத்யக்ஷகர் திருமதி ருக்மிணிதேவி அவர்களுக்கும், நிர்வாகக் குழுத் தலைவர் அவர்களுக்கும் நன்றி.

மத்ய அரசு இந்தப்பதிப்பு வெளிவருவதற்கு மானியம் அளித்தமைக்கு நன்றி.

இந்த நூலினை அச்சிட்டுக்கொடுத்த சுதா அச்சக உரிமையாளர் திரு சுப்பிரமணியன் அவர்களுக்கு நன்றி.

சென்னை - 90
27-12-85

வித்வான் சு. பாலசாரநாதன்
ஆராய்ச்சித்துறைப் பிரிவு
டாக்டர் உ. வே. சாமிநாதையர்
நூல்நிலையம்

INTRODUCTION

Man is considered to be paragon of animals. He is undoubtedly the apex of creation, In apprehension he is like a god. But all these things will carry no weight unless he realises the goal of life. That goal of life can be determined only if he has recourse to "Shastras" or codes of law. These codes are to be found in the Vedas, Smrithis, Itihasas and Puranas. But to go through all these texts in a lifetime is a herculean task and hence if one takes into his head to go through the Itihasas alone it is tantamount to have gone through all the scriptural texts mentioned above. These Itihasas are two in number, the Ramayana and the Mahabharata.

Our Bharat is the Punya Bhoomi which produced these two monumental works. The Ramayana is by Valmiki and the Mahabharata by Vyasa. Both are sages of a high order. Of the two, Vyasa is considered to be Vishnu incarnate: C. F. "Vyasaya Vishnurupaya Vyasarupaya Vishnave." His work, the Mahabharata consists of nearly a lakh of slokas, divided into eighteen 'Parvas'. The amanuensis for this colossal work is none other than Vinayaka, the Lord of 'the ganas'. This work includes the Bhagavat Gita in Bhishma Parva and the Vishnu Sahasranama stotra in the Anusasanika Parva. Hence the sanctity of the work is emphasised in more ways than one. Though apparently, the work seems to deal with the history and lives of the kings of the Kuru dynasty who carried on an internecine war resulting practically in total annihilation, yet it contains the panacea for all the evils in this world, guiding us at the same time in the right path to face the problems of life which may arise in diverse situations.

Now, I shall briefly give the essence of Udyoga Parva.

Udyoga Parva

This is the fifth of the Eighteen Parvas (sections) of the Mahabharata. This consists of four sargas or Carukkams (sub-sections) starting from Uluka-mamuni Thoodhu Carukkam and ending with Padai - ezhucchic - Carukkam. This Parva consists of the famous "Krlshnan - thoodhu" "or Sri Krishna's embassy to the court of Duryodhana. The important events and details dealt with in this Parva can be briefly analysed as follows :—

Sage Uluka's Message.

(i) Return of the Pandavas from their exile and stay at Upapplavyam — consultation with Sri Krishna, Balarama, Satyaki, Virata and Panchalan as to the course to be adopted for recovering the lost kingdom at dice. At last it was concluded that the proper thing to be done is to send a messenger as had been suggested by Krishna. Then Sage Uluka was sent as messenger to Duryodhana and Duryodhana did not consent to return their kingdom.

(ii) **Sanjaya's Message.**

Dhridharashtra sent sage Sanjaya with the definite purpose of preaching to Dharmaputra the religious truths culminating in instructing him the benefits of going to the forest to do penance and thereby attain heaven. Accordingly he went to the Pandavas but they said that it was their duty as Kshatriyas to conquer their enemies and rule the land recovered. Sanjaya returned to Dhridharashtra.

(iii) **Sri Krishna's Embassy.**

1. Krishna addressing the Pandavas asked them to tell individually what their desires are, whether to rule the land

should Duryodhana give the half that properly belonged to them or to kill him in battle as they vowed to do if he did not give, or to wander still in the forest. Dharmaputra worshipping Krishna said. "Please be so gracious as to bring the matter to an amicable settlement that neither of the parties may die in war and that all may live in unity in the Kuru land.

(2) Dharmaputra further said " O Lord! If you shall speak to Duryodhana he would give us our half; if he refuses that, then ask him to give us, five brothers, five towns and should he decline even that, ask him to give at least five houses. If even that is declined then ask him to go to war with us and then you can return.

(3) On hearing this, Bhima was roused to anger and roared that he shall send Duryodhana to rule over the celestial regions requesting his brother to send him as his messenger. Arjuna followed suit. Then Nakula got up and said "Instead of begging by embassy the fittest thing will be to begin war. Now it is the turn of Sahadeva and he expressed his opinion as follows :— What if you go on an embassy or stop from doing so! what if Duryodhana gave the Kingdom or not! what if Panchali ties up her hair or not! I know how you would finish it. Others know it not. What sincerely is your opinion is also mine" Krishna took him aside to a separate place, questioned him "whether he had any means whereby the Bharata war might the stopped." Sahadeva, knowing the purpose of the incarnation of Krishna to remove the burden of the earth by making them all come together and killing them replied that the Bharata war may be stopped if Karna were to be crowned King by killing Arjuna, if Panchali's mattresses were to be removed (or tied) and if Krishna himself were to be bound tightly by his arms without any movement whatsoever. [The substance is that these things will never happen and hence war is inevitable]. Then Krishna questioned him as to how he would bind him and saying this he took many forms. But Sahadeva, rightly knowing the one Supreme Being (the Mula-Purusha) bound his legs by the rope

of his mind and then prayed to Him to spare them, the Pandavas, from the general destruction. Krishna granted him the boon, requested him to keep it a secret and turned to Panchali. She wept exclaiming "when am I to tie my hair if the Pandavas were to get their land by sending a messenger and live? Krishna wiped her tears and said "I shall fulfil your vow". Then he took leave of Dharmaputra and started for Hastinapura as their envoy.

(4) Dhridharashtra came to know about Krishna's coming to intercede on behalf of the Pandavas and informed Bhishma and Drona about that and on the advice of both of them he was prepared to give a warm welcome to Krishna and knowing his father's intention Duryodhana himself wanted to go and welcome Krishna when Sakuni interfered and stopped the welcome. Krishna reached Hastinapura and took his quarters in Vidura's mansion.

(5) The next day Duryodhana issued a command to all those present in the assembly, that if that shepherd of a messenger from the Pandavas were to come here, none of them should meet and bow to him, nor should any body speak to him. Krishna after finishing his morning duties entered Duryodhana's Council hall. Then Bhishma, Drona, Aswathama, Vidura and other Kings met and received him and bowed before his lotus feet. Karna and Sakuni hung their heads. Krishna then went, took his seat. He addressed Duryodhana thus :—

" O Head of the Kurus ! The Pandavas have finished their term of exile in the forest and the term of concealment and are come. Give you, therefore, their kingdom back as you have promised before adding at the same time that that was just and in accordance with the rules of state. Duryodhana did not consent to it but said to the Lord " You are the cause for all this sedition. Don't think that I would be like the Pandavas. I won't give even an inch of space enough for a fly to sit. Then Dhridharashtra, Bhishma, Drona and the three sages Parasu-

rama, Kanva and Narada also gave sound advice but they fell on deaf ears. Duryodhana bursted out " He who would conquer the other in war shall rule over the Kingdom ". The Lord then asked him to confirm this promise of war by patting on his palms with his hands, but Duryodhana, much enraged reviled and abused Krishna' in most despicable terms. The Lord than told him to do as he pleased and then went to Vidura's mansion.

(6) Next Duryodhana turned on Vidura and abused him by asking him why he the son of a hand - maid should feast Krishna, who came to him as a messenger, and why he should show him all the civilities associated with friendship. Thereafter Vidura got angry and said "You should die in war. If I had this bow of mine with me, I would have to help you. Behold now, I break it." So saying he took his bow and broke it into pieces and then repaired to his mansion.

(7) Krishna then went to Kunti's house enlightened her as to the birth of Karna to her due to Surya's grace and ordered her to go and get a boon from him not to aim the serpent shaft (Nāgāstra) for a second time at Arjuna. Kunti felt much worried but Krishna consoled her and she at last succumbed to his words and yielded to go to Karna. Krishna returned to Vidhura's mansion.

(8) Meanwhile, during the night, Duryodhana hatched a plot to dispose of Krishna, dug a pit in the council - hall, stationed wrestlers within, spread bamboos over it, spread a carpet over it and then placed a seat over it. He issued command to the wrestlers within to bind Krishna by putting chains round his hands and feet, as soon as he falls within. The morning dawned and Duryodhana sent with great solicitations, messengers to invite Krishna to come to him, and Krīshna came accordingly. Duryodhana pointed to the seat placed over the pit and Krishna sat on it. Instantly the bamboos broke and down went Krishna.

Viswarupa :—Krishna thence rosa so high that his crest touched the top of the universe. His feet went to Padalaloka.

He manifested himself in all His glory and trampled with his foot all the wrestlers who were down below in the pit. He told Duryodhana that he would have killed him and his entire family that very moment had not Bhima vowed that he would kill him.

(9) Krishna then called Karna and taking him out of the hall made him realise that he was born of Kunti to the Sun-god and hence elder to the Pandavas. He then told him that he can come over to the side of his brothers, but Karna remained adamant and refused to leave Duryodhana's side.

(10) Then Krishna left Karna met Aswathama, took him aside and told him not to accept the generalship of Duryodhana's army. He then let slip one of the rings in his finger and instantly Aswathama picked it up and gave it to him. Immediately after this he pointed out the sun with his finger and calling Aswathama's attention to it remarked. "The Sun is surrounded by a halo: (meaning thereby will it rain before Upapplavyam is reached?) Aswathama also pointedly saw the halo. This had been mistaken by Duryodhana as if Aswathama had sworn upon the sky and earth that he would assist the Pandavas in the ensuing war. Krishna then left him and reached the abode of Vidura.

(11) Kunti then left for Karna's abode, told him and proved to him that she was his mother and asked him to give her two boons (1) not aiming a second time the serpent shaft (Nagastra) at Arjuna and (2) to spare the lives of the other four Pandava brothers. Karna acquiesced and granted the boons. Then he requested Kunti to grant him two boons :— (1) to prove openly to the world that she is his mother, when he fell down dying due to Arjuna's arrow and (2) not to reveal this relationship at any time to her sons, (the five Pandava princes) but always to keep it a sacret Kunti agreed to his request and returned to her place. Krishna took leave of both Kunti and Vidura and returned to Upapplavyam. He told the Pandavas that Duryodhana is bent on war and in his opinion they must go to war.

(iv) The massing of the army

(1) Dharmaputra sent envoys to request the Kings to help him in the ensuring war. Then there came to his help Panchala, his son Drishtadumna and Sikandi etc, Virata and his sons; the king of the Kekeya Country, Kuntibhojas, the Macchas, the Maghadas, Abimanyu and other sons, and the Upapandavas. The army thus collected amounted to seven 'acronis'. Sri Krishna then appointed Sveta, son of Virata, the generalissimo of the army. Duryodhana issued letters summoning the Kings who were yet to come and join him, Already Salya King of Madhra, Saupala King of Gandhara, Bagadatta son of Narakasura, Trikarta the King of Malva, the King of Kalinga, the Yadavas, the nine crores of Narayanas (Navakoti Narayanar) Balarama and others joined him. The army thus collected amounted to eleven 'acronis. Ganga's son Bhishma was appointed as the generalissim.

(2) **Preliminaries for the war (Kalap-pali)**—Bhishma asked Duryodhana to go and ask Sahadeva for an auspicious hour to march the army to Kurushetra. Duryodhana asked Sadeva to fix an auspicious time for his army to march so that his victory becomes certain. He said that Duryodhana would succeed if he were to march the army on the next new-moon day. Duryodhana then approached Aravan and said that he intended to sacrifice him for the war as "Kalap-pali" and asked him to help him with his life. Aravan readily consented and Duryodhana returned cheerfully.

Meanwhile, Dharmaputra asked Krishna as to when they should go to Kurukshetra and Krishna kept silent for a while and then divulged the actions of both Sahadeva and Aravan. No doubt, Dharmaputra was pleased with them but when Krishna said that he should be glven as the victim because he was the only one who had an upturned line of hair now (except Aravan and Salya) Dharmaputra was puzzled and then Aravan came forward and accepted to sacrifice himself as the victim, before Duryodhana claim him. Krishna then struck upon a plan. He

changed the auspicious hour which Sahadeva had selected for Duryodhana by turning the Chaturdasi day into the Amavasya day or the new - moon - day and all of them, including Brahmins performed 'tarpanam' on that day. Amazed by this change of event, both the Sun-God and the Moon-God came to Krishna and questioned him as to how he could say that that was a new-moon-day. Krishna then asked 'what is a new-moon. Is it not the day when you both come together? If that is so, then this day on which both of you have come together is a new-moon day. [Divide the one extra-day among the remaining fifteen days]. They assented to it and went away.

(3) March of the Pandava army.

Krishna then asked Sveta to march the armies and they reached the field of Kurukshetra. The next day at the ninth hour in the night he summoned Aravan. He after worshipping Durga cut off with his knife everyone of his thirty-two limbs and offered them. He then asked Krishna to grant him a boon, that of dying by fighting that the world might not say that he, Aravan, died as a sacrificial victim.

(4) Division of the armies.

The Pandavas then divided their officers into Artharathas, Maharathas, Samarathas and Artharathas and divided the army also. Duryodhana when he heard that the Pandavas had, reached Kurukshetra, had given the sacrifice to the battle-field and had divided their army, commanded Bhishma to divide his army also. He classed Karna as an Artharatha; and Karna getting indignant at that, vowed that he would never fight till Bhishma dies. Duryodhana then marched to Kurukshetra with his army and sacrificed his state-elephant. Meanwhile, Balarama and Vidura started on a "teertha-yatra" (religious pilgrimage) so as not to witness the death of Duryodhana in the ensuring war. Rukmi, the Vidharba king, (the brother of Rukmini) came to join Arjuna for helping him in the war but Arjuna refused to

accept his heip and sent him to Duryodhana. Duryodhana also refused to accept his help and hence he had to return abashed.

Thus ends the Udyoga Parva. High truths and moral values abound in this Parva and I have done by best to bring them into limelight for the benefit of humanity.

The work of writing a Commentary on all the Parvas of the Mahabharata Curukkam was enjolned on me by the authorities of Dr. U.V. Swaminatha Iyer Library and I am grateful to them for this honour conferred on me. By the grace of the Mahamahopadyaya Dal'shinadhya Kalanidhi Dr. Iyer and by the benign benediction of my esteemed Guru Sri U. Ve, V. M. Gopalakrishnamachariar, the modern Patanjali, I ventured to write this explanatory commentary. I have given the meaning for words, their explanation, allusions, the grammatical peculiarities, the kind of prosody used in the course of the composition, and the rhetoric set like gems now and then. My thanks are due to Sri K. Subramania Iyer, Honorary Curator of Dr. U. Ve. S. Iyer Library and to his associate Sri S. Balasaranathan for the encouragement they have given me. In fine, I express my gratitude to the Sudha Printers, Royapettah, Madras for their excellent cooperation.

Triplicane
Madras-5.
Date 16-12-85

C. Jagannathachariar
Commentator and Editor.

முகவுரை

அருந்தமிழறிஞர்காள்!

மகாபாரதம் பதினெட்டுப் பருவங்களைக் கொண்டது. அவற்றுள் ஐந்தாவது இந்த உத்தியோக பருவமாகும். இந்தப் பருவம் நான்கு சருக்கங்களைக் கொண்டமைந்தது. அவை—உலூக மாமுனி தூது சருக்கம், சஞ்சயன் தூது சருக்கம், கிருஷ்ணன் தூது சருக்கம், படையெழுச்சிச் சருக்கம் என்பன. இவை மொத்தம் இருநூற்றிருபத்தேழு செய்யுட்களாகும்,

இந்த உத்தியோக பருவத்தின் உயிர்நிலையாகிய கிருஷ்ணன் தூது சருக்கம் அனைவரும் விரும்பிக் கற்கின்றதொன்று. "சிறையிருந்தவள் ஏற்றம் சொல்லும் இராமாயணம் தூது போனவன் ஏற்றம் சொல்லும் பாரதம்" என்பர் உலகாரியர்.

இத்தகைய மேன்மை வாய்ந்த உத்தியோக பருவத்திற்கு உரையெழுதும் பணியை மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல் நிலையத்தார் அடியேனுக்கு இட்டனர். ஐயரவர்களின் ஆசியின் பலமும் அடியேனுக்கு ஞானாசிரியரான உரையாசிரியச் சக்கரவர்த்தி ஸ்ரீ உ. வே. வை. மு. கோபாலகிருஷ்ணமாசார்யர் ஸ்வாமி அவர்களின் அருளாசியின் பலமும் துணைபுரிய இவ்வுரையெழுதத் துணிந்தேன்.

இந்த உத்தியோக பருவவுரையில் பல அரிய விடயங்கள், இலக்கண நுணுக்கங்கள், உரை விசேடங்கள், கதைக் குறிப்புக்கள், கடைப்பிடிக்க வேண்டிய நற்பண்புகள் முதலியன காட்டியுள்ளேன். மற்றும். பயில்வோர்க்குப் பெரிதும் பயன்படும்படி இப்பதிப்பில் அபிதான சூசிகையகராதி, அரும்பதவகராதி முதலியன, அருந்தொடர்கள், செய்யுண்முதற்குறிப்பகராதி என்பனவும் இறுதியிற் சேர்க்கப்பட்டுள்ளன.

இந்தப் பதிப்பினைச் செம்மையுற அச்சிட்டுதவிய சுதா பிரிண்டர்ஸ் அச்சகத்தார்க்கும், அடியனை இந்நற்பணியிற் கூவி யேவல் கொண்ட ஸ்ரீ க. சுப்பிரமணிய ஐயர் அவர்களுக்கும் என்றும் நன்றியறிதலுடையேன்.

திருமகள் கொழுநனை திருமால் தனது சரிதையாகிய இப் பாரதத்தில் அடியேனுக்கு மனம் பதியுமாறு செய்து இந்நூலின் உத்தி யோக பருவத்திற்கு நல்லுரை வெளியிடுதலாகிய இந்த நற்பணிக்குத் தோன்றுத்துணையாய் நின்று உதவிய கருணைத்திறத்திலீடுபட்டு அனவரதமும் அப்பரமனை வழுத்துகின்றேன்.

மடந்தாழு நெஞ்சத்துக் கஞ்சனார் வஞ்சங்
கடந்தானை நூற்றுவர்பா லுற்றிசையும் போற்றப்
படர்ந்தா ரணமுழங்கப் பஞ்சவர்க்குத் தூது
நடந்தானை யேத்தாத நாவென்ன நாவே
நாராய ணாவென்னா நாவென்ன நாவே.

குரோதன ஸ்ரீ
மார்கழி மீ 1
16—12—1985

இங்ஙனம்
சி. ஜெகந்நாதாசாரியர்
உரையாசிரியர்—பதிப்பாசிரியர்

டாக்டர் ஐயரவர்கள்

1855 - 1942

ஐந்தாவது
உத்தியோக பருவம்

இத்தொடர்—பாண்டவர் திரும்ப தமது தாயபாகத்தைப்பெற முயற்சி செய்ததைப் பற்றிய பருவம் என்று பொருள்படும். உத்தியோகம்-முயற்சி, உத்தியோக பருவம்-இரண்டனுருபும் பயனுமுடன்றெக்கதொகை, பருவம்=பர்வம்: நூலுக்கு ஏகதேசமாகிய உறுப்பைப் பருவம் என்பர். இந்த உத்தியோக பருவம் உலூகன் தூது சருக்கம் முதல் படையெழுச்சிச் சருக்கம் ஈருக நான்கு சருக்கங்களையுடையது. அவற்றுள்,

முதலாவது
உலூகமாமுனி தூது சருக்கம்

உலூகனது தூதின் செய்கையைக் கூறுகின்ற சருக்கம் என்பது பொருள். உலூகன் - பாண்டவர்களால் துரியோதனுதியரிடம் அனுப்பப்பட்ட ஓர் அந்தணன். தூது-இங்கே தூது சென்ற செய்தி. சருக்கம்-நூற் கூறுபாடு. உலூகன் தூது - ஆரும்வேற்றுமைத் தொகை. தூது சருக்கம்-இரண்டனுருபும் பயனும் உடன்றெக்க தொகையாம். இனி, தூதினது சம்பந்தமான சருக்கம் என விரித்து, விஷயமாகவுடைமையாகிய சம்பந்தப் பொருளில்வந்த ஆரும் வேற்றுமைத் தொகையென்றுங் கொள்ளலாம்.

பாண்டவர்கள் அஜ்ஞாதவாசங்கழிந்தபின் கண்ணன் முதலானுரோடு ஆலோசித்து முடிவுசெய்து உலூகனென்னும் அந்தணனைத் திருதராட்டிரனிடம் தூதனுப்ப, அவ்வேதியன் சென்று செய்தி கூறினன். ஆனல் அங்குத் துரியோதனன் துரோணர் முதலிய பெரியோர்கள் பலர் சொல்லவும் கேளாமல்

கர்ணன் முதலிய சிற்றினத்தவரின் கருத்தையே முக்கியமாகக் கொண்டு சிறிதும் இராச்சியங்கொடுக்கமாட்டேனென்று சொல்லி விட்டான். அதனைக் கேட்டு வந்து பாண்டவர்களுக்கும் கண்ண பிரானுக்குந் தெரிவித்த செய்தியை விளக்கும் பாகமென்பது திரண்ட பொருளாம். "தூதுச் சருக்கம்" என்ற பாடத்துக்கு—இரண்டாம் வேற்றுமைத்தொகையாதலின், சிறப்பு விதியால் வலிமிக்க தென்க: மேல் 'சஞ்சயன் தூது சருக்கம்; கிருஷ்ணன் தூது சருக்கம்' என்பவற்றிற்கும் இங்ஙனமே காண்க.

கடவுள் வணக்கம்.

வேறு.

1. கடந்த வேலின்மா துலன்விட வானிளங்
   கன்றெனத் தனைக்கோறற்
கடைந்த வாசுரன் றனைவிளா வெறிந்துயிர்
   அகற்றிமீட் டவனேவப்
படர்ந்த மாவரைப் பாந்தளை யெறுழ்வலிப்
   பரியினைப் பகந்தன்னைத்
தடிந்த மாதவன் தாமரைத் தாளுளந்
   தன்னைவிட் டகலாதே.

(இ-ள்) மாதுலன்-மாமனாகிய கம்சன், கடந்த வேலின் விட-கூரிய வேலாயுதத்தைப் போல ஏவ, ஆன் இளம் கன்று என-பசுவின் கன்று என்று சொல்லும்படி வடிவெடுத்து, தனைக் கோறற்கு-தன்னைக் கொல்லுதற்கு, அடைந்த-(வேகமாக) ஓடிவந்த, ஆசுரன் தனை-வத்ஸாசுரனை, விளா எறிந்து-விளாமரமாகவடிவெடுத்துவந்த கபித்தாசுரன்மேல் மோதி யெறிந்து, உயிர் அகற்றி-இருவர் உயிரை யும் போக்கி, மீட்டு-மறுபடியும், அவன்-அந்தக் கம்சன், ஏவ-தன் மேல் (கொல்ல) அனுப்ப, படர்ந்த-வந்த, மா வரைப் பாந்தளை-பெரிய மலைப்பாம்பினையும், எறுழ் வலி பரியினை-மிக்கவலிமையினை யுடைய குதிரையினையும், பகம் தன்னை-கொக்கினையும், தடிந்த-கொன்றழித்த, மாதவன்-கண்ணபிரானது, தாமரைத் தாள்-திரு வடித் தாமரைகள், உளம் தனை விட்டு அகலாது-(அடியேன்) மனத்தை விட்டு (என்றும்) நீங்காதனவாம்; (எறு.)

இங்ஙனம், கொடியவர்களைக் கொன்ற மாதவன் விஷயமான வணக்கங் கூறியதனால், கவி தாம் எடுத்துக்கொண்ட காரியம் இடையூறின்றி இனிது முடியுமென்பது கருத்து. மா தவன்-இலக்கு மிக்குக் கணவன்: இங்கே ஏற்புடைக் கடவுளாகிய கண்ணபிரானைக் காட்டியது, திருவடிகளுக்குத் தாமரை மலர் உவமை—செம்மை, மென்மை, குளிர்ச்சியழகுகளுக்கென்க. தன்னை-தனை யென்பதன் மிகுத்தல்.

கன்றினால் விளவெறிந்த கதை :—கம்சனால் ஏவப்பட்ட அசுரர் களிற் கபித்தாசுரன் விளாமரத்தின் வடிவாய், கண்ணன் தன்கீழ் வரும்பொழுது மேல்விழுந்து கொல்வதாக எண்ணி வந்துநிற்க, அதனையறிந்து, கிருஷ்ணபகவான் அவ்வாறே தன்னை முட்டிக் கொல்லும் பொருட்டுக் கன்றின் வடிவங்கொண்டு வந்த வத்ஸா சுரனைப் பின்னிரண்டு கால்களையும் பிடித்து எடுத்துச் சுழற்றி விளா மரத்தின்மேல் எறிய இருவரும் சிதைந்து தமது அசுரவடிவத்துடனே விழுந்து இறந்தனரென்பதாம்.

மலைப்பாம்பினையழித்த கதை :—பூதனைக்கும் பகாசுரனுக்கும் தம்பியான **அகாசுரன்** கண்ணன் கன்றுமேய்த்து விளையாடும் வழியிற் பெரிய மலைப்பாம்பின் வடிவமாய் வாய் விரித்துக்கிடக்க, இடைப்பிள்ளைகள் மலைக்குகையென்று கருதிப் பசுக்களோடுங் கன்றுகளோடும் அதனுள்ளே புகுந்துசெல்ல, கண்ணபிரான் தானும் ஒன்றுங்கூறாமல் உட்சென்று அங்குப் பெரிய வடிவமெடுத்து அப்பாம்பினுடலைக் கீண்டெழுந்து அதனையழித்து ஆயர்களையும் ஆக்களையும் அளித்தருளினன் என்பதாம்.

பரிவாய் பிளந்த கதை :—கம்சனாலேவப்பட்ட அசுரர்களிற் **கேசி**யென்பவன் குதிரையினுருவத்தோடு ஆயர்கள் அஞ்சி நடுங்கும் படி கனைத்துத் துரத்திக்கொண்டு கண்ணபிரான்மேற் பாய்ந்துவர, அப்பெருமான் தன் திருக்கையை நன்றாகப் பெருக்கி நீட்டி அதன் வாயிற்கொடுத்துத்தாக்கிப் பற்களை யுதிர்த்து உதட்டைப் பிளந்து அதனுடம்பையும் இரு பிளவாக வகிர்ந்து தள்ளின னென்பதாம்.

பகந்தன்னைக் கொன்ற கதை:—பகனென்னும் அசுரன் கொக்கு வடிவங்கொண்டு கண்ணபிரானைக் கொல்வதாக நெருங்கிவர, அப்பொழுது கண்ணன் அப்பறவையின் வாயலகுகளை இருகை யாலும் பிடித்துக்கிழித்து அதனையழித்தனனென்பதாம். கடந்த-கடைந்த : கூறிய. வேலின், இன்-உவமவுருபு. விட அடைந்த என இயையும், கோறல்-தொழிற்பெயர் : கொல்-பகுதி; தல்-விகுதி. ஆசுரன்-அசுரன் என்பதன் நீட்டல்.

இதுமுதல் ஒன்பது கவிகள்-பெரும்பாலும் முதற்சீர் மாச்சீரும், ஆருஞ்சீர் மாங்காய்ச்சீரும், மற்றை நான்கும் விளச்சீர்களுமாகிய கழிநெடிலடி நான்குகொண்ட **அறுசீராசிரிய விருத்தங்கள்.** (1)

2. உப்பிலாவியத்துக்கு வந்து பாண்டவர்கள் கண்ணபிரானோடும் மற்றவரோடும் ஆலோசித்தல்.

இருடி சொற்றல்கேட் டடல்சென மேசெயன்
இசைத்திமேற் செயலென்றே
சரணி றைஞ்சியே வினவிடத் தவமுனி
சாற்றிடு மடலைவர்
கரிய வன்பல ரொடுமுப லாவியங்
கலந்தனர் அவைமேவி
அரிகொள் பீடமே லிருந்துமாக் குறுமியல்
பியாவையுந் தெளிந்தாய்வார்.

(இ-ள்) இருடி சொற்றல் கேட்டு-வைசம்பாயனமுனிவன் சொன்ன விராடபருவகதையைக் கேட்டு, அடல் செனமேசெயன்-வலிய ஜனமேஜயராஜன், மேல் செயல்-மேலே நடந்த பாண்டவர் செய்திகளை, இசைத்தி-சொல்லுவாயாக, என்று-, சரண் இறைஞ்சியே-பாதங்களை வணங்கி, வினவிட-கேட்க, தவமுனி-வைசம்பாயனன், சாற்றிடும்-கூறலாயினன்: அடல் ஐவர்-வலிமையுடைய பாண்டவரைவரும், கரியவன் பலரொடும்-கிருஷ்ணனோடும் ஏனைய பலருடனும், உபலாவியம் கலந்தனர்-உபப்பிலாவியம் என்னும் இடத்தைச் சேர்ந்தனர்: அவை மேவி-(பின்பு) சபையாகக்கூடி, அரிகொள் பீடம் மேலிருந்து-சிம்மாதனத்தின்மேல் அமர்ந்து, மாக்கு-(சூதிலிழந்த) செல்வங்களை மீட்கும் பொருட்டு, உறும்-பொருந்திய, இயல்பு யாவையும்-(உபாயங்களின்) தன்மைகள் அனைத்தையும், தெளிந்து ஆய்வார்-தெளிவுற ஆலோசிப்பாராயினர்; (எ.று).

மா-செல்வம், கு-நான்கனுருபு பொருட்டுப்பொருளது, சாற்றிடும்-செய்யுமென்முற்று. சொற்றல்-தொழிற்பெயர், இசைத்தி-முன்னிலை வியங்கோள், ஐவர்-தொகைக்குறிப்பு. ஈற்றடியில் குற்றியலிகரம் அலகுபெறவில்லை. (2)

3. தூதனுப்பித் துரியோதனன் கருத்தைத் தெரிந்து கொள்ளலாமென்று கண்ணன் கூற, பலராமன் இராச்சியத்தை மீட்டல் தகாதென்று கூறுதல்.

சூதி னுலவன் கொளும்புவி மீளவச்
சூதினுற் கொளலன்றி
நீதி யன்றுபோர் தனிற்கொள லாமினும்
நிகரிலோர் தூதேவி
தீதி னுனுளந் தெரியலா மென்னமால்
செப்பலும் அவன்சூதாற்
கோதி லாதுகொள் புவிகொள நீதெனக்
கூறினன் பலதேவன்.

(இ-ள்) சூதினுல்-சூதாட்டத்தினுல், அவன் கொளும் புவி-அவன் கவர்ந்துகொண்ட இராச்சியத்தை, மீள-மறுபடியும், அ சூதினுல் கொளல் அன்றி-அச்சூதாட்டத்தினுலே சயித்துப்பெறுவது தகுதியே யல்லாமல், போர்தனில் கொளல் ஆம்-போரைச்செய்து பெறுவது ஆகும் என்பது, நீதியன்று-அரசதருமமாகாது; (ஆகவே) இனும்-இன்னமும், நிகரில் ஓர் தூது ஏவி-ஒப்பற்ற [சிறந்த] ஒரு தூதுவனை யனுப்பி, தீதினுன்-கொடியவனுகிய துரியோதனனின், உளம் தெரியலாம்-எண்ணத்தையறிந்து கொள்ளலாம், என்ன-என்று, மால் செப்பலும்-கண்ணன் சொல்லவும், (அப்போது) பலதேவன்-பலராமன், அவன்-அத்துரியோதனன், சூதால்-சூதாட்டத்தினுல், கோது இலாது-(யாதொரு) தோஷமும் இல்லாதபடி, கொள்-(வென்று) கொண்ட, புவி-இராச்சியத்தை, கொளல்-மீளவும் கவர்ந்து கொள்ள எண்ணுதல், தீது என-நன்மையாகாது என்று, கூறினன்-சொன்னுன் ; (எ.று).

துரியோதனன் பலராமனிடம் கதாயுதப்பயிற்சியை விசேஷ மாகக்கற்றுக்கொண்டது பற்றிப் பலராமன் அவனிடம் மிகுந்த பட்சபாதமுடையவனுயிருந்ததனுலும், பலராமனுக்குப் பழைய அபிமானம் துரியோதனனிடத்தில் நீங்காதிருந்ததனுலும் இங்ஙனம் கூறின தென அறிக. கோது இலாது கொள்புவி என்றது-சபா மண்டபத்தில் வந்துள்ளவர் பலரும் பிரதியட்சமாகப் பார்க்கையில் வென்றுகொண்டது என்றபடி. பலதேவன்-பலராமன்: கிருஷ்ணனது தமையன்; விஷ்ணுவின் எட்டாம் அவதாரம் ; வசுதேவருடைய

பத்தினியருள் தேவகியின் வயிற்றில் ஆறுமாதமும் உரோகிணியின் வயிற்றில் ஆறு மாதமும் இருந்து பிறந்தவன்; இவனை ஆதிசேஷனது அம்சமென்றும் நூல்கள் கூறும். இனும்-இன்னும் என்பதன் இடைக்குறை. கொளல்-தொழிற்பெயர். (3)

4. சாத்தகி பலராமனைப் பழிக்க, பாஞ்சாலன் அவனைச் சமாதானப்படுத்தல்,

இன்ன வோதிய தம்முனைச் சாத்தகி
இசைத்தனன் இம்மாற்றம்
துன்ன லார்களு முரைசெயா ரெனவவன்
சோர்வுற வுருத்தோத
முன்ன வன்மனு நெறியறை விதிப்படி
மொழிந்தனன் அதற்கேதம்
பன்ன லென்கொனீ யிதைவிடென் றுரைத்தனன்
படையுடைப் பாஞ்சாலன்.

(இள்-) இன்ன-இப்படிப்பட்ட வார்த்தைகளை, ஓதிய-சொன்ன, தம் முனை-தன் அண்ணனாகிய பலராமனை, சாத்தகி-(அவன் தம்பியாகிய) சாத்தகி, (நோக்கி), இ மாற்றம் இசைத்தனன்-இந்த வார்த்தையைச் சொன்னான்: (அஃதாவது) 'துன்னலார்களும் உரை செயார்-(நீர் சொன்ன வார்த்தையைப் பாண்டவர்களுக்குப்) பகைவர்கள்கூடச் சொல்ல மாட்டார்கள், என-என்று, அவன் சோர்வு உற உருத்து ஓத-அந்தப் பலராமன் தளர்ச்சியடையும்படி கோபித்துச்சொல்ல, (அதனைக்கேட்ட) படையுடை பாஞ்சாலன்-சேனையையுடைய துருபதன், முன்னவன் - அண்ணனாகிய பலராமன், மனுநெறி அறை விதிப்படி-மனுதர்மசாத்திரம் கூறிய முறைமைப்படியே, மொழிந்தனன்-கூறினான்; அதற்கு-அவன் கூறியதற்கு, நீ—,ஏதம் பன்னல் என்?-குற்றம் சொல்வது ஏனோ? இதை விடு-இந்த விரோதத்தை ஒழி, என்று உரைத்தனன்-என்று கூறினான் (சமாதானப்படுத்தினான்); (எ.று).

சாத்தகி-சத்யகனது குமாரனென்று பொருள்; பிள்ளைப் பொருளில் வந்த தத்திதாந்தநாமம். யதுகுலத்தரசர்களுள் வசுதேவனுக்கு உடன்பிறந்த முறையாகிய சத்தியகனது குமாரனும், பிராயத்தில் பலராம கிருஷ்ணர்களினும் இளையவனுமாதலால்,

சாத்தகி இவர்க்குத் தம்பிமுறையாவன். இவன் கண்ணனிடம் மிகுந்த அன்புகொண்டு அவனது கருத்துக்குச் சிறிதும் மாறுபடாது நடப்பவன். அன்றியும், இவன் அருச்சுனனிடம் வில்வித்தையைக் கற்றறிந்தமாணுக்கனுதலால், அவனிடத்தும் மற்றைப் பாண்டவரிடத்தும் நீதிமுறைவழுவாது அன்புகொண்டொழுகுபவன்: ஆதலால், பாண்டவர்க்கு விரோதமாக அக்கிரமமாகப் பேசின பலராமன் தனக்கு அண்ணனுயினும் மனம்பொருது அவன்பால் மாறுபாடு கொண்டான்: [குறிப்பு:—பலராமன் பாண்டவர்க்கு மாருகவே பேசுவதைப் பாரத கதையிற் பலவிடத்துங் காணலாம்]. மனுநெறிவிதிப்படி மொழிந்தனனென்றவிடத்து அறியவேண்டியது- எந்தவகையிலோ ஒருகால் தருமனைவென்று துரியோதனனுற் கொள்ளப்பட்டதாதலாலும், பதின்மூன்று வருஷமாய்விட்டதனுல் காலதோஷம் வந்து விட்டதனுலும், மறுபடி அந்த இராச்சியத்தைப் பாண்டவர் எந்தவிதத்திலாயினும் பெற முயல்வது நீதியன்று என்பது, இதன் கருத்து. மற்றும், திருதராஷ்டிரன் பாண்டு என்ற இரண்டு ஞாதிகளுள் மூத்தவனுதலால் இராச்சியத்துக்கு உரியவனுன திருதராஷ்டிரனது புத்திரனுதல் பற்றியும், துரியோதனனுக்கு அந்த இராச்சியத்தில் அதிக பாத்தியதை உண்டு என்பதும் கருத்து. "அவனும் முடிக்குரியான் தோன்றல் அவனுக்கு, இவனும் இடு கவற்றுல் தோற்றுன்-அவனும், அரசிழவா வண்ணம் அறிந்துரைமினென்றுன், வரை கெழுதோள் மன்னன் மதித்து" என்பது பாரத வெண்பா. படையுடைப் பாஞ்சாலன் என்றதால், போர்வந்தால் துருபதன் போரிடச் சித்தமாயிருக்கிறுன் என்பது பெறவைக்கப் பட்டது. முன்-முன்பிறந்தவனுக்குக் காலவாகுபெயர். துன்னலார் களும் உரைசெயார் என்றதால் — நீ பழுதெண்ணும் உட்பகைவனுவாய் என்றபடி. பன்னல்-தொழிற்பெயர், விடு-முன்னிலையேவல். (4)

5. விராடன் கண்ணன் சொல்லை ஆமோதிக்க, பாஞ்சாலன் உலூகனைத் தூதனுப்பலாமெனல்.

உரைத்த வஞ்சின முற்றுமா றன்றிமண்
ணுவந்திலர் அதைத்தீதாங்
கருத்தென் ருேதிட லாகுமோ தூதினுற்
கண்ணன்சொற் படிதேர்தல்
திருத்த மென்றனன் மச்சர்கோன் பகைவர்பாற்
சென்றுசந் துரையாடற்
குரித்த னுவனெம் புரோகித வுலூகனென்
றுரைத்தனன் பாஞ்சாலன்.

(இ-ள்) (அப்போது) மச்சர்கோன் - விராடராசன், உரைத்த-பாண்டவர்கள் அவையில் கூறிய, வஞ்சினம்-சபதங்கள், முற்றுமாறு அன்றி-நிறைவேற்றவேண்டும் என்பதேயன்றி, மண் உவந்திலர்-இராச்சியத்தை விரும்பினரிலர் : அதை-அங்ஙனம் சபதம் நிறை வேற்றுதலே, தீதாம் கருத்து என்று-நன்மைபயவாத எண்ணமாகும் என்று, ஓதிடல் ஆகுமோ-சொல்லுவது தகுதியோ? (தகுதியாகாது): (மற்றும்) கண்ணன், சொற்படி-கிருஷ்ணன் கூறியபடியே, தூதினுல் தேர்தல்-ஒரு தூதுவனையனுப்பி [அவன் மூலம் துரியோதனன் கருத்தை]யறிதல், திருத்தம் என்றனன்-செவ்விய செயலாகும் என்று கூறினுன் : (அது கேட்ட) பாஞ்சாலன்-துருபதன், பகைவர் பால் சென்று-துரியோதனுதியரிடம் போய், சநது உரையாடற்கு-சமாதானவார்த்தை பேசுதற்கு, எம் புரோகிதன் உலூகன்-என்னுடைய புரோகிதனுகிய உலூகமுனிவன், உரித்தன் ஆவன்-தகுதியுடையவனுவன், என்று உரைத்தனன் -என்று கூறினுன் ; (எ.று).

சொன்ன சபதவார்த்தைகளை நிறைவேற்றுவதில் நோக்கே யன்றி, மண்பெறுதலில் இல்லையென்ற விராடன் பேச்சில், அப் பாண்டவர்கள் போர்க்குச் சித்தமாயுள்ளனர் என்பது தொனிக்கும். தூதலட்சணத்தின்படி சமயோசிதமாக ஆராய்ந்து ஒழுங்கான சொற்களை யுரைக்கத்தக்கவன் உலூகனென்பான் 'சந்துரையாடற்கு உரித்தனுவன்' என்ருன், ஆகுமோ, ஓகாரம்-வினு எதிர்மறை. தேர்தல்-தொழிற்பெயர். மச்சநாட்டினர்க்குத் தலைவன் விராடன். (5)

6. மன்னர்களின் உதவிவேண்டி ஓலைபோக்கியபின் உலூகனைத் தூதனுப்பச் சொல்லிக் கண்ணன் துவாரகை சேர்தல்.

குந்தி நந்தனர் கருத்தொடும் அவையுளோர்
குறிப்புமோர்ந் தெனையாளும்
பைந்து ழாய்முடிப் பரமன்பாம் பெழுதிய
பதாகை மன்னவன் தூது
முந்திடா தமர்க் கவனிபர் வரும்படி
முடங்கல் போக்கிபினுலூக
அந்த ணன்றனை யவ்வுழி போக்குமென்
றணிநகர் புகுந்தானே.

(இ-ள்) எனை ஆளும் பைந்துழாய்முடிப் பரமன்-அடியேனையாட் கொண்டருளும் பசியதிருத்துழாய்மாலையைச் சிரசிலணிந்துள்ள கண்ணபிரான், குந்திநந்தனர் கருத்தொடும் - குந்தியின் மைந்தர்களாகிய பாண்டவர்களின் எண்ணத்தோடு, அவையுளோர் குறிப்பும்-சபையிலுள்ள மன்னர்களின் எண்ணத்தையும், ஓர்ந்து ஆய்ந்து பார்த்து, பாம்பு எழுதிய பதாகை மன்னவன்-அரவக் கொடியோனுகிய துரியோதனன், தூது முந்திடாது-விடுக்கும் தூதர்கள் முந்திக்கொள்ளாதபடி, அமர்க்கு—நிகழப்போகும் போர்க்கு, (உதவியாக) அவனிபர் வரும்படி-பிற மன்னர்கள் வந்து சேரும்படி, முடங்கல் போக்கி-ஓலைகளை முன்னதாக எழுதியனுப்பி, பின்-பின்னர், உலூக அந்தணன் தனை-உலூக முனிவனை, அ உழி போக்கும்-அந்தத் துரியோதனன்மாட்டு அனுப்பவும், என்று-என்று ஆலோசனை கூறிவிட்டு, அணி நகர் புகுந்தான்-அழகிய துவாரகா புரியை யடைந்தான்; (எ.று).

போர் நிகழப்போவது நிச்சயம் எனக் கண்ணன் ஓர்ந்து, துரியோதனன் பிற மன்னர்களைத் துணைவேண்டி ஓலைபோக்குதற்கு முன் தருமனை முந்திக்கொள்ளும்படி ஆலோசனை கூறி, பின் உலூகனைத் தூதனுப்பச் சொல்லினுன் என்பது. 'எனையாளும் பரமன்' என்றதால் ஆசிரியரின் கிருஷ்ண பக்தி விளங்கும். பூபாரந் தீர்க்கப் பிறந்தவனுதலின் கண்ணன் முன்னர்ப் போர்க்கு ஓலை போக்கிப் பின் தூதனுப்பச் சொல்லினுன். (6)

7. அங்கு வந்துள்ள அரசர்கள் திருதராஷ்டிரன் இராச்சியம் தராவிட்டால் செய்தி தெரிவிக்கும்படி கூறித் தத்தம் நகரமடைய, தருமன் வாராத மன்னர்க்கு ஓலை போக்குதல்.

இதுவும் அடுத்த கவியும் — குளகம்.

இந்தத் தூதினுக்கு அந்தகன் புவிதர
 விசைகில னெனிலோலை
யுந்து மெந்தமக் கென்றடற் றுருபத
 னெழியமற் றவர்போனுர்
வந்தி டாதபற் றரணிபர் படைத்துணை
 வரத்திரு முகமேவிச்
சந்த னுச்சுதன் முதலியர்க் கெமதுவந்
 தனமுன்சொ லெனக்கூறி.

(இ-ள்) இந்த தூதினுக்கு-இந்த உலூகன் தூதுக்கு, அந்தகன்-திருதராட்டிரன், புவிதர இசைகிலன் எனில்-இராச்சியத்தை (த்திரும்பக்) கொடுக்கச் சம்மதியாதிருந்தால், எம் தமக்கு-எங்களுக்கு, ஓலை உந்தும்-(செய்தியை) முடங்கல் மூலம் தெரிவியுங்கள், என்று-என்று (தருமனுக்கு) கூறி, துருபதன் ஒழிய மற்றவர் போனார்-பாஞ்சாலனைத்தவிர ஏனைய மன்னர்கள் தம்தம் நகர் போயினர்; (பின்னர்) வந்திடாத பல் தரணிபர்-இங்கே [உபப்பிலாவியத்திற்குத் தம்மைக் காண] வாராத பல அரசர்களுக்கும், படைத்துணை வர - [போரினில்] தமக்குத் துணையாக வரும்படி, திருமுகம் ஏவி-ஓலைகளை யெழுதியனுப்பி. (பின் உலூகனை நோக்கி) சந்தனுச் சுதன் முதலியர்க்கு-வீடுமன் முதலான பெரியோர்க்கு, எமது வந்தனம் முன் சொல்-எங்களது (பணிவான) வணக்கத்தை முதன் முதலில் தெரிவிப்பாயாக, எனக்கூறி-எனச்சொல்லி; (எ.று) 'சொல்வித்து விடுத்திட' என மேலைக்கவியிற் குளகமாய்த் தொடரும்.

அந்தகன்-பிறவிக்குருடன்: புறமாகிய ஊனக்கண் இல்லையென்ற மாத்திரத்தையுணர்த்துவதோடு, அகமாகிய ஞானக் கண்ணுமில்லையென்ற கருத்தையும் குறிப்பதாகக்கொள்ளலாம். திருமுகம் என்ற சொல்லுக்கு-அழகிய முகமென்று பொருள்: இப்பெயரால் ஓலையைக்கூறுவது மங்கலவழக்கென்பர். வடமொழியில் 'ஸ்ரீமுகம்' என்று வழங்கும், 'திருமுகம் ஏவி'யென்ற விடத்து, திருமுகம் என்றது-தனது சொல்லாற்றலால் தருமன் அவ்வரசர்களிடம் வைத்திருந்த மதிப்பை நன்கு விளக்கும். 'துருபதனொழிய' என்றது முன்னமே அவன் தன் படையுடன் வந்திருத்தலின் என்க: இதனைப் "படையுடைப் பாஞ்சலன்" என்று முன்னர் செய்யுள் 4-இல் குறித்திருத்தலால் அறியலாம். ஈற்றடி, பெரியோர்களிடத்தில் தருமனுக்கு உள்ள விநயத்தைத் தெரிவிக்கும். (7)

8. தருமன் உலூகனைத் தூதனுப்புதல்.

மேலும் மச்சர்கோன் துருபதன் தனைக்கொடு
வேண்டுவ சொல்வித்து
மாலுரைப்படி யறன்மகன் விடுத்திட
மா நிலம் புரப்பான்றன்
பாலு லூகமா முனிபுகு முன்னகிப்
பதாகையா னமர்க்கைவர்
ஓலை போக்குத லுணர்ந்துவீ டுமன்முத
லோரொடு முற்றுய்ந்தே.

(இ-ள்.) மேலும்-மற்றும், மச்சர்கோன் துருபதன் தனைக் கொடு-விராடராசன் துருபதன் இவர்களைக் கொண்டு, வேண்டுவ சொல்வித்து - (உலூகன்) தூதாகச் சொல்லவேண்டியவற்றை (அவனுக்குக்) கூறவைத்து, மால்உரைப்படி -கண்ணபிரான் கூறின படியே, அறன்மகன் விடுத்திட-தருமபுத்திரன் (உலூகமுனிவனைத் துரியோதனன்பால்) அனுப்ப, (அந்த) உலூகமாமுனி—, மாநிலம் புரப்பான்தன் பால்-துரியோதனராசனிடத்து, புகும் முன்-வருவதற்கு முன்னமேயே, அகிப்பதாகையான் - பாம்புக்கொடியையுடைய துரியோதனன், ஐவர் அமர்க்கு ஓலைப்போக்குதல் உணர்ந்து—பஞ்ச பாண்டவர் (தமக்குப்) போருக்கு உதவியாகவர (பிறமன்னருக்கு) முடங்கல் அனுப்புதல் அறிந்து, வீடுமன் முதலோரொடு-பீஷ்மன், துரோணன் முதலானுரொடு, முற்று ஆய்ந்து-தீர்க்க ஆலோசித்து; (எ-று).

அகி-பாம்பு, கொடு-அழைத்து எனவுமாம், அறன்மகன்-நான் கனுருபு தொக்கது. (8)

9. பலதேய அரசர்களைத் தனக்குத்துணைவேண்டித் தூதனுப்பி விட்டுத் துரியோதனன் கிருஷ்ணனையழைக்கத் தானே செல்ல, அவன வருகையறிந்த கிருஷ்ணன் அருச்சுனனை வரவழைத்தல்.

தனக்க மர்த்துணை வரும்படி திருமுகந்
தரணிபர் தமக்கேவிச்
சினக்க ளிற்றினுன் மேலவர் மொழிப்படி
சீதரன் றனைக்கூட்ட
மனக்கொண் டேகினுன் துவரைமன் னவனவன்
வருவதோர்ந் ததன்முன்னர்
எனக்கு நண்பனும் நரன்றனைக் கொணர்கென
ஏவலன் கொண்டுய்த்தான்.

(இ-ள்.) தனக்கு-(துரியோதனனாகிய) தனக்கு, அமர்த்துணை வரும்படி-போரில் உதவியாக வரும்படி, தரணிபர் தமக்கு-(பலதேச) மன்னர்களுக்கு, திருமுகம் ஏவி-ஓலைபோக்கி, (பின்பு) சினக்களிற்றினுன்-கோபிக்குந்தன்மையுள்ள யானைகளையுடைய துரியோதனன், மேலவர் மொழிப்படி-பெரியோர்களாகிய வீடுமன் முதலியோர் கூறிய படி, சீதரன்தனைக் கூட்ட-கிருஷ்ணனைத் தன்னேடு துணையாகச்

சேர்க்க, மனம் கொண்டு-எண்ணமிட்டு, துவரை - துவராகாபுரிக்கு, ஏகினன் - சென்றான்; மன்னவன் - துவாரகைக்கு அரசனாகிய கிருஷ்ணன், அவன் வருவது ஓர்ந்து-அந்தத் துரியோதனன் வருதலையறிந்து, அதன் முனர்-அவன் தன்னிடம் வருதற்கு முன்னமே, (ஒரு ஏவலாளனை நோக்கி) எனக்கு நண்பனும் நரன் தனை கொணர்க என-எனக்குச் சிநேகிதனாகிய அருச்சுனனை யழைத்து வருக என்று கட்டளையிட, (அதன்படியே), ஏவலன்-வேலையாளன், கொண்டு - அருச்சுனனையுடனழைத்து வந்து, உய்த்தான்-(கிருஷ்ணன் முன்னர்) செல விடுத்தான்; (எ.று.)

மற்றையரசர்களைப் படைத்துணையாகச் சேர்த்துக்கொள்வதற்குத் தூதர்களையனுப்பிவிட்டு, ஸ்ரீகிருஷ்ணபகவானைத் தனக்குப் படைத் துணையாக அழைப்பதற்குத் துரியோதனன் பெரியோர் சொற்படி தானே துவாரகைக்குச் சென்றனனென்பதாம். மனக்கொண்டு-அத்துச்சாரியை கெட்டது. 'சினக்களிற்றனுன்' எனவும் பாடமிருக்கலாம். (9)

வேறு.

10. ஸ்ரீகிருஷ்ணன் அப்போது பொய்த்துயில் புரிதல்.

இதுவும் அடுத்த கவியும்—குளகம்.

தொடைநர னெய்து முன்னர் சுயோதனன்
 எய்தின் தன்பான்
தடையற வாயி லோர்க டாம்விடச்
 சொலிமால் பொய்க்கண்
படைபுரிந் திருந்தான் ஆங்குப் படர்ந்துதன்
 னனிகங் கோயிற்
புடையுற நிறுவித் தானும் புகுந்தர
 வுயர்த்த கோமான்.

(இ-ள்) தொடை நரன் எய்தும் முன்னர்-வில் தொடுத்தலில் வல்ல அருச்சுனன் (தன்னிடம்) வருதற்குமுன்பு, சுயோதனன் எய்தின்-துரியோதனன் வந்தால், தன்பால்-தன்னிடத்து, தடை அற-(வருதற்கு யாதொரு) தடங்கலும் இல்லாமல், வாயிலோர்கள் விடச் சொலி - வாயிற்காவலரை உள்ளேவிடக் கட்டளையிட்டு, மால்-கிருஷ்ணபகவான், பொய் கண்படை புரிந்து இருந்தான்-பொய்

யுறக்கங்கொண்டிருந்தான் : (அப்போது) அரவு உயர்ந்த கோமான்- பாம்புக்கொடியை யுயரத்தூக்கிய துரியோதனன், ஆங்கு படர்ந்து- (அந்தக்கிருஷ்ணனின்) அரண்மனைசேர்ந்து, (அங்கு) தன் அனிகம் கோயில் புடையுற நிறுவி-தனது சேனையை அரண்மனையின் பக்கத்தில் பொருந்த நிற்கவைத்து, தான் உட்புகுந்து - தான்மட்டும் உள்ளே சென்று ; (எ. று.) : "தவிசின் உற்றான்' என மேலைக் கவியிற் குளகமாய்த்தொடரும்.

கண்படை புரிதல்-துயில்கொள்ளுதல், தூங்குதல். பொய்த்- துயில், யோகத்துயில், அறிதுயில், விழிதுயில், துயிலாத்துயில் என்பன ஒருகருத்துடையன: கண்படை — தொழிற்பெயர். தாம். அசை. சொலி-சொல்லி யென்பதன் தொகுத்தல்.

இதுமுதல்ஐந்து கவிகள்-ஒன்று நான்காஞ்சீர்கள் விளச்சீர்களும், மற்றைநான்கும் மாச்சீர்களுமாகிவந்த கழிநெடிலடிநான்குகொண்ட அறுசீராசிரிய விருத்தங்கள். (10)

11. துரியோதனன் கண்ணன் பள்ளிகொண்ட சயனத்தின் தலைப்பக்கத்திலிருந்த ஆசனத்திற்சேர, அருச்சுனன் திருவடிப் பக்கத்தில் வந்துசேரல்.

இதுவும் அடுத்த கவியும்-குளகம்.

மெய்த்துயி லென்றும் தாட்பான் மேவருழ்
வென்றுஞ் சென்னி
வைத்தபாற் றவிசி னுற்றான் மானரன்
வரவை யுன்னிப்
பொய்த்துயிற் புரிபோ தன்னோன் புகுந்துதாழ்ந்
தடிமா டுற்றான்
மைத்துனன் அன்பும் மன்னன் வஞ்சமும்
நெஞ்சில் வைத்தோன்.

(இ. ள்.) மெய்த்துயில் என்றும்-உண்மையான தூக்கமென்றும், தாள்பால் மேவல்-காலின்மாட்டு உட்காருதல், தாழ்வு என்றும்-மதிப் புக்குறைவாகும் என்றும், சென்னிபால் வைத்த-தலைமாட்டில் வைத் திருந்த, தவிசின் உற்றான் - ஆசனத்தில் அமர்ந்தான். (இஃது.) இங்ஙனாக) மால்-கிருஷ்ணன், நரன் வரவை உன்னி-அருச்சுனன் வருதலைநினைந்துகொண்டு, பொய்த்துயில் புரிபோது-பொய்யுறக்கம் செய்யும்போது, அன்னோன் புகுந்து-அந்த அருச்சுனன் உள்ளே

சென்று, தாழ்ந்து-பணிந்து வணங்கி, அடிமாடு உற்ருன் - திருவடிப் பக்கத்தில் சேர்ந்தான் ; (அப்போது) மைத்துனன் அன்பும்-அத்தை மைந்தனுகிய அருச்சுனனின் நட்பையும், மன்னன் வஞ்சமும்-துரியோதனராசனின் கபடவெண்ணத்தையும், நெஞ்சில் வைத்தோன்-மனதில் நினைந்தவனுகிய கிருஷ்ணன் ; (எ. று.) 'விழித்து முன் நரனை நோக்கி' என மேலைக்கவியிற் குளகமாய்த் தொடரும்.

துரியோதனன் அளவிறந்த செருக்குக் கொண்ட வணங்காமுடி மன்னனுதலால், அங்கிருந்த ஆசனங்களுள் கண்ணனது தலைப் பக்கத்தே யிருந்த ஆசனத்தில் சேர்ந்திருந்தானென்க. 'நரன்வரவை யுன்னி' என்றதுவே பொய்த்துயில்புரிந்ததற்குக் காரணமாம். அருச்சுனன் கிருஷ்ணனிடத்தில் மெய்யன்பும் விநயமுமுடையவனுதலால், அவன் காற்கடையில் வணங்கிநின்ருனென்க. தாட்பால்-தாள் + பால் : "லள வேற்றுமையில் றடவும் வலிவரின் (நன்னூல்-மெய்யீற்றுப் : 24) என்பதுவிதி. மேவல் + தாழ்வு = மேவருழ்வு : 'அல்வழி அவற்ருேடுறழ்வும்' என்பது விதி. (மெய்யீற்-24) ஈற்றடியில்-கருத்துடையடைகொளியணி காண்க. (11)

12. அருச்சுனனுல் துரியோதனன் வருகையை யறிந்து கண்ணன் அவனுக்கு முகமன் கூறி பின் இருவரையும் வந்த காரியம் வினவ, இருவரும் தெரிவித்தல்.

விழித்துமுன் னரனை நோக்கி விழைந்துரை
செய்து சீர்த்தி
ஒழித்தவ னெய்த லோத வுவந்தெழுந்
தணைத்தோ ரின்சொல்
மொழிந்திரு வருமிங் கெய்தல் மொழிதிரென்
றிடப்போர்க் கும்மைக்
கழித்துணை கொளற்கென் றன்னோர் கழறலுங்
கண்ணன் சொல்வான்.

(இ-ள்.) விழித்து-கண்திறந்து, முன்-முன்னுக, நரனை நோக்கி-அருச்சுனனைப்பார்த்து, விழைந்து-(அன்புடன்) விரும்பி, உரை செய்து-இனியவார்த்தைபேசியிருப்ப, (அப்போது அந்த அருச்சுனன்) சீர்த்தி ஒழித்தவன் எய்தல் ஓத-புகழ் நீக்கியவனுகிய (பழியேமிக்க) துரியோதனன் வந்திருத்தலைச்சொல்ல, (அதனைக்கேட்டுக்

கண்ணன்) உவந்து எழுந்து - மகிழ்ச்சியோடு படுக்கையினின் றெழுந்து, அணைத்து-(அத்துரியோதனனைக்) கட்டித்தழுவி, இன் சொல் மொழிந்து-இனிய வார்த்தைகளைப்பேசி (முகமன் மொழிந்து), [பின்பு] 'இருவரும் இங்கு எய்தல் மொழிதிர் என்றிட-நீங்கள் இரண்டுபேரும் என்னிடம்வந்த காரியம் கூறுவீர்' என்று (பொதுப் பட) வினவ, அன்னோர்-அவ்விருவரும், உம்மை போர்க்கு கழித்துணை கொளற்கு-'(இனி நிகழும்) போரில் உம்மை மிக்கதுணையாகக் கொள் வதற்காக', என்று கழறலும்-என்று (ஒருபடிப்படச்) சொன்னபொழு தில், கண்ணன் சொல்வான்-கிருஷ்ணன் கூறுவானானான்; (எ.று.) கிருஷ்ணன் கூறியவற்றை மேலைக்கவியிற் காண்க.

கண்ணனது கடாக்ஷம் முதன்முதல் அருச்சுனன்மேல் விழுந்தது: அவன் திருவருளுக்குப் பாத்திரனான அருச்சுனன், அப்போது துரியோதனன் வந்திருப்பதைத் தெரிவிக்க, கண்ணன் தன் படுக்கை யினின்றெழுந்து அவன் மனமகிழும்படி தழுவி இன்சொற் கூறினன் என்பதாம். கழித்துணை-உரிச்சொற்றொடர் : 'கழிமிகல்' (நன் : உரி : 15) 'சீர்த்தி மிகுபுகழ்' (தொல் : சொல் : உரி : 16) சீர்த்தியொழித்த வன்-துரியோதனனுக்குக் குணத்தால்வந்த பெயர். எய்தல்-தொழிற் பெயர். மொழிதிர்-முன்னிலைப்பன்மைவினைமுற்று. (12)

13. கண்ணன் தன் கருத்தினைத் தெரிவித்தல்.

தருமனுக் களித்தேன் வாய்மை தனஞ்செயன்
றனைமுன் கண்டேன்
செருவிலா யுதம்பற் றேனென் சிறுவர்கண்
முதலாந் தானை
ஒருவருக் கொருவர்க் கியான்பின் னேன்முனங்
குறிக்க வென்ன
நரனெனக் கடிக ளென்ன நானியற்
றிடல்யா தென்றான்.

(இ-ள்) தருமனுக்கு—, வாய்மை அளித்தேன்-(உபப்பிலாவியத்தில் முன்னமே) வாக்குதத்தஞ்செய்துவிட்டேன்; (மற்றும்) தனஞ்செயன் தனை-அருச்சுனனை, முன் கண்டேன்-முற்படப் பார்த்தேன்: (ஆனால்) செருவில்-(நிகழப்போகும்) போரில், ஆயுதம் பற்றேன்-படைதொட மாட்டேன் : என் சிறுவர்கள் முதலாம் தானை-என்னுடைய குமாரர்

களாகிய நாராயணகோபாலர்கள் முதலாக (உள்ளிட்ட) யாதவ சேனை, ஒருவருக்கு-(உங்களில்) ஒருவர்க்காகும்: யான்-[தனிப்பட்ட] நான்மாத்திரம், ஒருவர்க்கு-மற்றவர்க்காவேன் : (உங்களிருவரில்) பின்னோன்-வயதிற்சிறியவனாகிய அருச்சுனன், முனம் குறிக்க-முற்பட (த்தன் விருப்பத்தைத்) தெரிவிக்கவும், என்ன-என்று சொல்ல, நரன்-அருச்சுனன், எனக்கு அடிகள் என்ன-எனக்கு வேண்டுவது தேவரீரே என்றுகூற, (அதற்குக் கண்ணன்) நான் இயற்றிடல் யாது-[படைதொடாத] என்னால் [உனக்கு உதவியாகச்] செய்யத்தக்க செயல்யாது?), என்றான்-என்று சொன்னான் ; (எ.று.).

சிறுவர்கள்-யாதவகுமரர் : கண்ணனுக்குப் பதினாயிரங்கோபஸ்திரீ களிடம் பிறந்த் நாராயணகோபாலர்கள் என்பவர். தானை-யாதவ சேனை. பின்னோன்-பின்பிறந்தவன்:அருச்சுனன் துரியோதனனுக்குப் பின்னர்ப் பிறந்தவனாவன். குறிக்க - முன்னிலையேவல். 'அடிகள்' என்று உயர்ந்தோரைக்கூறல் மரபு. (13)

14. அருச்சுனன் பதில் கூற, கண்ணன் துரியோதனனிடம் தன்னைச்சேர்ந்தவரையெல்லாம் படைத்துணையாக அனுப்புவதாகச் சொல்ல, துரியோதனன் பலராமனிடம் போதல்.

செருவில்சந் தனநீ தூண்டிற் செருநர்யா
 னிகுப்ப லென்ன
அரியதற் கிசைந்து சாய்ந்தா டரவகே
 தனனை நின்பாற்
கிருதவன் மாபற் றானைக் கேள்சுதன்
 விடுப்பன் போகென்
றுரைசெய்தே விடலு மற்றோ னுமேலலா
 யுதன்பா லுற்றே.

(இ-ள்) செருவில் - போரினில், நீ—, சந்தனம் - (என்) தேரினை, தூண்டில்-செலுத்துவையாயின், யான்-நான், செருநர்-பகைவரை, இகுப்பல்-அழிப்பேன், என்ன-என்றுகூற, அரி-கிருஷ்ணன், அதற்கு இசைந்து - அங்ஙனமே தேர்செலுத்துதற்கு ஒருப்பட்டு, (பின்பு) சாய்ந்து ஆடு அரவகேதனனை - வளைந்து ஆடுகின்ற பாம்பினைக் கொடியிலெழுதியுள்ள துரியோதனனை (நோக்கி), 'நின்பால்-உன் பக்கல், பல் தானை-பல சேனைகளோடு, கிருதவன்மா- (நமது) கிருத வர்மா என்பவன், கேள்-சுற்றத்து யாதவ அரசர்கள், சுதர்-யாதவ குமரர்களாகிய நாராயண கோபாலர்கள், (இவர்களனைவரையும்)

விடுப்பன் - (உதவியாக) அனுப்புவேன் ; போகு - நீ செல்வாயாக, என்று உரைசெய்து-என்று சொல்லி, விடலும்- (விடைகொடுத்து) அனுப்பவும், மற்றேனும்-அத்துரியோதனனும், மேல்-(மேற்கொண்டு) பின்னும், அலாயுதன்பால் - பலராமனிடம், உற்று - வந்து ; (எ-று) ''சொற்று'' என மேலைக்கவியிற் குளகமாய்த் தொடரும்.

கிருதவர்மா - யதுகுலத்தில் இருதிகன் என்பவனது குமாரன் : இவனைக் கிருஷ்ணன் துரியோதனனுக்குப் படைத்துணையாகத் தான் அனுப்பும் யாதவசேனைக்குத் தலைவனாக்கி அனுப்புகிறான் : இதில் வர்மா என்பது-க்ஷத்திரிய சாதிக்கு உரிய பெயர் : (பிராமணர்க்குச் சர்மா என்றும், வைசியர்க்குக் குப்த என்றும், சூத்திரர்க்குத் தத்த அல்லது தாஸ என்றும் வழங்கும்). சாய்தல்-வளைதல் : ''சாய்செவிக் குருளை'') சிறுபாண், 130), சந்தனம்-ஸ்யந்தநம். (14)

வேறு.

15. துரியோதனன் சல்லியனையேமாற்றித் தன்பக்கத்திற் சேர்த்துக்கொள்ளல்.

அரிசெயல்சொற் றவன்விடுவா கினியு நீயும்
அடைகெனச் சொற் றூர்புகுந்தே யடன்மத் திரேசன்
பொருமவரை வர்க்குதவிக் கெய்தல் தேர்ந்து
புதுநெறியின் மறைந்திருந்தோர் பொழில்பா லன்னோர்
திருநாமத் தனஞ்சாந்த மடைக்கா யாதி
சீர்மைபெலா மவற்கிதமாய்ச் செய்வித் தன்னேன்
பருமெகிழ் பொழுதணுகித் தன்பேர் நாட்டிப்
படர்ந்திடத்தன் பாலில்வயம் படுத்திக்
கொண்டான்.

(இ-ள்) அரிசெயல் சொற்று - கிருஷ்ணனுடைய செய்தியைச் சொல்லி, அவன் விடு வாகினியும்- அந்தக்கிருஷ்ணன் (தனக்கு உதவியாக) அனுப்புகின்ற சேனையும், நீயும்- (எனக்குக் கதாயுதப் பயிற்சி விசேஷமாகக் கற்றுக்கொடுத்த) நீயும், (பலராமனும்), அடைக என சொற்று-அத்திருபுரிக்கு வருவீராக எனச்சொல்லி, ஊர் புகுந்து - தனதுநகர்சேர்ந்து, (பின்னர்) அடல் மத்திரேசன்-வலியமத்திரநாட்டரசனாகிய சல்லியன், பொருமவர் ஐவர்க்கு-(தன்

னோடு) போரிடப்போகும் பாண்டவர்க்கு, உதவிக்கு எய்தல் தேர்ந்து- உதவியாக வருதலையாலோசித்து, புகுநெறியின் - அச்சல்லியன் வரும் வழியில், மறைந்திருந்து-ஒளிந்திருந்து, ஓர் பொழில்பால்-ஒரு சோலை யினிடத்து, அன்னோர் திருநாமத்து-அந்தப்பாண்டவர் பெயரால், அனம்-உணவு, சாந்தம்-சந்தனம், அடைக்காய்-வெற்றிலை, ஆதி- முதலாய, சீர்மை எலாம்-சிறப்புக்களையெல்லாம், இதமாய்-பக்குவ மாய் (மனம்மகிழும்படி) அவற்கு-அந்தச்சல்லியனுக்கு, செய்வித்து- உபசாரம் பண்ணி, (பின்பு) அன்னோன்-அந்தச் சல்லியன், பருகி மகிழ் பொழுது - உண்டு களித்திருக்கும்போது, அணுகி - அவனை நெருங்கி, தன் பேர் நாட்டி - தன்னுடைய பெயரை (விருந்திட்டவனாக) உறுதிசெய்து (வஞ்சித்து), தன் பாலில் படர்ந்திட- தன்பக்கம் (உதவியாக) வரும்படி, வயம் படுத்திக்கொண்டான் - வசமாக்கிக் கொண்டான் ; (எ-று).

சல்லியராசன் தன் சேனைகளுடன் தருமனை நோக்கி வாராநிற் கையில் இடைவழியே மிகவும் இளைப்பையடைந்த வேளையில் தருமன் பெயரால் செய்ததென்று தோன்றும்படி வஞ்சித்து விருந்துசெய்து விட்டுப் பின்னர்த் துரியோதனன் தான் செய்த விருந்து என்று தெரிவித்ததனால், "உண்டவீட்டிற்கு இரண்டகஞ்செய்யக்கூடாதாத லின்", துரியோதனனுக்கே போர்த்துணைவனானான் என்றபடி. அனம்- அன்னம் என்பதன் தொகுத்தல்: சோறு. தன்பாலில், இல்-ஏழனுருபு, பொருமவர்-வினையாலணையும் பெயர்.

இதுமுதல் இச்சருக்கம் முடியும்வரையுள்ள பதினேழு கவிகள்— பெரும்பாலும் ஒன்று இரண்டு ஐந்து ஆறுஞ்சீர்கள் காய்ச்சீர்களும், மற்றைய நான்கும் மாச்சீர்களுமாகிய கழிநெடிலடி நான்கு கொண்ட எண்சீராசிரிய விருத்தங்கள். (15)

16. சல்லியன் துரியோதனன்செயத வஞ்சனையைத் தருமனிடம் சொல்ல, அவன் சல்லியனிடம் ஒன்று வேண்டுதல்.

இரண்டுகவிகள் — ஒருதொடர்.

சல்லியன்வேற் சுயோதனனுக் கைவர்பாற் போய்ச்
சார்குதுமீண் டெனவுபலா வியஞ்சென்
றன்னோர்
புல்லிதவி சிருத்திடப்பெற் றரவ கேது
புரிவிரகும் அவற்குதவி பொருந்து மாறும்

சொல்லவுதிட் டிரன்மகிழ்வுற் றியாவர்க் கேனும்
துணையாதல் நன்றெமக்கோ ருதவி சொல்லில்
சில்லியந்தேர் விடற்கரிநீ யன்றி வல்லார்
செகத்திலைமா னரற்கிசைந்தான் தேர்தூண்
டற்கே.

(இ-ள்.) சல்லியன்—, வேல் சுயோதனனுக்கு -வேற்படையை யுடைய துரியோதனனை நோக்கி, 'ஐவர்பால் போய் ஈண்டு சார்குதும்-பாண்டவர்பக்கல் சென்று (அவர்களைப் பார்த்துவிட்டு) இங்கே உன்னிடம் வருவேன்', என-என்று கூறி, உபலாவியம் சென்று-உபப்பிலாவியம் அடைந்து, (அங்கு) அன்னோர்-அந்தப் பாண்டவர், புல்லி-(தன்னைத்) தழுவி, தவிசு இருத்திடப்பெற்று-ஆசனத்தில் அமரச்செய்ய, (சல்லியன்) அரவகேது புரி விரகும்-துரியோதனன் செய்த வஞ்சனையையும், (அதனால்) அவற்கு உதவி பொருந்துமாறும்-அந்தத் துரியோதனனுக்கு (நிகழும் போரில்) துணையாகுமாறும், சொல்ல-கூற, (அதனைக்கேட்ட) யுதிட்டிரன்-தருமன், மகிழ்வுற்று-சந்தோஷமடைந்து, 'யாவர்க் கேனும்-(எங்களிருவரில்) யாருக்காவது, துணையாதல் நன்று-உதவி யாயிருத்தல் நல்லதுதான் : (எனினும்) எமக்கு ஓர் உதவி சொல்லில்-எங்களுக்கு வேண்டியதோர் உதவியை நீர் செய்தலைச் சொல்லப் புகின்,(அஃது இது) "சில்லியம் தேர் விடற்கு-சக்கரங்களைக் கொண்ட தேரினைச் செலுத்துதற்கு, அரி நீ அன்றி-கிருஷ்ணனும் நீரும் அன்றி, (மற்று) வல்லார்-சாமர்த்தியமுடையவர், செகத்து இலை-நிலவுலகத்தில் இல்லை", மால்-கிருஷ்ணன், நரற்கு-அருச்சுனனுக்கு, தேர் தூண்டற்கு-தேரைச் செலுத்துதற்கு, இசைந்தான்-சம்மதித் துள்ளான் ; (எ.று.)

சல்லியன் துரியோதனனுக்குத் தான் துணையாவதைச் சொன்ன போது தருமன் மகிழ்ந்தது அவனது பெருந்தன்மையைக் காட்டும். தருமன் சல்லியனிடம் கோரிய உதவியை மேலைக்கவியிற் காணலாம். அரிநீ-உம்மைத்தொகை. (16)

17. தருமன் வேண்டுகோளுக்குச் சல்லியன் இசைந்து, மேலும் அவனுக்கு ஆறுதலாக இந்திரன் கதையினைக்கூறத் தொடங்குதல்.

உன்னுழைவந் தடுத்திடும்போ லாகும் பார்த்தற்
கொழிவில்பகைக்கன்னன்தே ரூர்தற் கூர்ந்தால்
அன்னவன்மொய்ம் பிழியநரன் வெலச்செய் கென்ன
அவ்வணம்யான் செய்குவனென் றடல்மத்
திரேசன்
பன்னியிது மொழிந்திடுவான் அரசே! மேனுட்
பன்னியொடு சுஞசிதுயர் படுதல் போனீர்
ஒன்னலராற் றுயருழந்தீ ரென்ன மன்னன்
ஓதுதியக் கதையெனலு முவனுஞ் சொல்வான்.

(இ-ள்.) (இனி) பார்த்தற்கு ஒழிவில் பகை கன்னன்-அருச்சுனனுக்கு நீங்காத (என்றும்) பகைவனுகிய கர்ணன், தேர் ஊர்தற்கு-தன்தேரைப் போரிற் செலுத்துதற்கு, உன் உழை வந்து அடுத்திடும் போல் ஆகும்-உன்னிடம் வந்து வேண்டுவன்போல் தோன்றுகின்றது; ஊர்ந்தால்-(அங்ஙனம் அவனுக்குத்) தேர் செலுத்துவதாயிருந்தால், அன்னவன் மொய்ம்பு இழிய-அந்தக் கர்ணனுடைய வலிமை குறையும்படியும், நரன் வெல-அருச்சுனன் செயிக்கும்படியும், செய்க என்ன-(துணை) செய்வாயாக . என்று சொல்லிவேண்ட, அடல் மத்திரேசன்-வலிய சல்லியன், யான் அவ்வணம் செய்குவன்-நான்' அப்படியே செய்கின்றேன், என்று சொல்லி, (மேலும்) இது மொழிந்திடுவான்-இந்த விஷயத்தைச் சொன்னுன்: அரசே!-தருமனே! மேல்நாள்-முற்காலத்து, சுஞசி-இந்திரனுனவன், பன்னியொடு-தன் பத்தினி இந்திராணியோடு, துயர்படுதல்போல-துன்பம் அனுபவித்தது போல, நீர்-நீரும், ஒன்னலரால்-பகைவராகிய துரியோதனுதியரால், துயர் உழந்தீர்-துன்பமநுபவிக்கின்றீர், என்ன-என்று கூற, மன்னன்-தருமராசன், அ கதை ஓதுதி எனறும்-அந்தக் கதையினைச்சொல்லுவாயாக என்று வேண்டலும், உவனும் சொல்வான்-சல்லியனும் சொல்ல ஆரம்பித்தான்; (எ.று.)

தேவர்களுக்கரசனுன இந்திரனே பத்தினியோடு பெரிய துக்கங்களையநுபவித்து, இறுதியில் சுகமடைந்தான்: அதுபோல உனக்கும் கடைசியில் சுகமுண்டாகப்போகிறது என்று ஆறுதலாகத்

தருமனுக்குச் சல்லியன் இக்கதையைக் கூறினன் என்பது அறிய வேண்டுவது. மொய்ம்பு இழிதலாவது-தேஜோபங்கம் செய்தல்; பாரக்கிரமத்தையபஹரித்து எளிதில் கொல்லத்தக்கவனாகும்படி செய்தல்-[சல்லியன்-(பகைவர்க்கு) அம்பு நுனிபோல் (வருத்தஞ்செய்) பவன். சல்யம்-அம்புமுனை]. செய்க, ஓதுதி-முன்னிலைவியங்கோள். செய்குவன் - தன்மையொருமை, செய்கென்ன - வியங்கோளின் அகரவீறுதொகுத்தல். பன்னி-பத்நீ: வடசொற் சிதைவு. (17)

18-25: எட்டுக் கவிகள் : இந்திரவிஜயம் என்னும் விருத்திர வதைக் கதை.

18. துவஷ்டா விருத்திரனையுண்டு பண்ணி, இந்திரனைக் கொல்ல ஏவ, அவன் இந்திரனை விழுங்கியது.

குருவின்மிகு துவட்டரையென் றொருவன் சொர்க்கங்
கொளச்சுதனொன் றீன்றுதவங் கோட்டென் றேவ
புரிதவஞ்சு ஞசியறிந் தவனைக் கொன்றே
பூண்டுபவம் விரதமொன்றாற் புவிநீர் மின்னார்
தருவிவைபாற் றொலைத்தான்சே யிறந்த தோர்ந்து
தந்தைவிருத் திரனைமகந் தனிற்றந் தும்பர்
விரைவினிலுண் டெவ்வுலகு மாள்கென் றேவ
வெள்ளிபமோ டரிசுரரை விழுங்கி னனே.

(இ-ள்.) குருவின்மிகு - தேவாசிரியர்களிற் சிறந்தவனாகிய, துவட்டரை என்றொருவன்-துவஷ்டா என்கிற சிருஷ்டிகர்த்தன், சொர்க்கம் கொள-சுவர்க்கலோகம் அடைவதற்காக, சுதன் ஒன்று ஈன்று-விச்வரூபன் என்ற ஒருபுத்திரனைப் பெற்று, [அவனை நோக்கி) தவம் கோட்டு என்று ஏவ-தவத்தை மேற்கொண்டு செய்வாயாக என்று கட்டளையிட, (அவர் சொற்படியே) புரி தவம்-செய்கின்ற தீவ்ரமான தவத்தைப்பற்றி, சுனசி அறிந்து-இந்திரன் தெரியவந்து, அவனைக்கொன்று-அந்த விச்வரூபனைக் கொன்று, (அதனால்) பவம் பூண்டு-பிரமஹத்திதோஷமாகிய பாவத்தையேற்று, (பின்னர்) விரதம் ஒன்றால்-(கோரமான) விரதத்தையநுஷ்டித்து அதனால், (அந்தப் பிரமஹத்திபாவத்தை), புவி-பூமி, நீர்-சமுத்திரம், மின்னார்-ஸ்திரீகள், தரு-விருட்சங்கள், இவைபால்-இவைகளிடத்தில், தொலைத்தான்- (பிரித்துக்கொடுத்துத்) தள்ளினன் : (இது இங்ஙனாக) சேய்

இறந்தது ஓர்ந்து - பிள்ளையாகிய விச்வரூபன் கொல்லப்பட்டு இறந்ததை யறிந்து, தந்தை-பிதாவாகிய துவஷ்டா, விருத்திரனை-விருத்திராசுரனை, மகம் தனில்தந்து-வேள்வியினின்று உண்டாக்கி, (அவனை நோக்கி) உம்பர்-தேவர்களை, விரைவினில் உண்டு-சீக்கிரமாகத் தின்று, எ உலகும் ஆள்க-எல்லாவுலகங்களையும் ஆள்வாயாக, என்று ஏவ-என்று கட்டளையிட்டனுப்ப, (அந்த விருத்திராசுரன்) வெள் இபமோடு-வெள்ளையானையாகிய ஐராவதத்தோடு, அரி-இந்திரனையும், சுரரை - தேவர்களையும், விழுங்கினான் - உண்டு விட்டான் ; (எ.று.)

விச்வரூபனது தவத்தின் வீரியத்தையும் ஸத்யத்தையும் பார்த்து விட்டு இந்திரன் தன் பதவிக்குப் பங்கம் வருமோ என்றஞ்சி அவனைக் கொன்றான் என்பதறிக. பவம்-பாவம் : தோஷம், துவஷ்டா இந்திரனுடைய நாசத்தின் பொருட்டு விருத்திரனை யுண்டுபண்ணினான். (18)

19. விழுங்கிய இந்திரனை விருத்திரன் வெளிவிட, அவனைத் தேவர்கள் அழைத்துப்போதல்.

விருத்திரன்கொட் டாவிகொளும் பொழுதத்தியாரும்
வெளிப்பட்டார் சுனாசிவட மேரு பாற்போய்
இருத்தனன்முத் தலம்புரக்கு மவன்பாற் றூய
இருடியர்புக் கரிப்பகைவிட் டிடினின்மொய்ம்புக்
கொருத்தரெதிர் இலையெனவன் னவனென் னுவி
கூறுசுரர் படையினிலா துதவு மென்ன
உரைத்தவரந் தந்தவர்வா சவனை யும்பர்
உறுவித்தார் அவனொடுநா ளுளவுற் றோர்நாள்.

(இ-ள்) விருத்திரன் கொட்டாவி கொளும் பொழுதத்து-விருத்திராசுரன் கொட்டாவி விடும் போது, யாரும் வெளிப்பட்டார் - அவன் விழுங்கிய எல்லோரும் வெளிப்பட்டனர் : சுனாசி-இந்திரன், வடமேரு பால் போய்-வடதிசையிலுள்ள மேருமலைக்குப்போய், இருத்தனன்-தங்கியிருந்தனன் ; (பின்பு) தூய இருடியர்-புனித ரிஷிகள், முத்தலம்

புரக்கும் அவன்பால் புக்கு-மூன்று லோகங்களையும் ஆளும் அந்த விருத்திரனிடம் சென்று, 'அரிப்பகை விட்டிடின் - இந்திரனோடு பகைத்தலைவிட்டு நட்புக் கொள்ளின், நின் மொய்ம்புக்கு-உன் வலி மைக்கு, ஒருத்தர் எதிர் இலை-ஒருவரும் நிகரில்லை', என-என்றுபுகழ, அன்னவன் - அந்த விருத்திரன், (அந்த ரிஷிகளை நோக்கி) 'என் ஆவி-எனது உயிர், கூறு-துண்டுபடுதல், சுரர்படையின்- வச்சிரா யுதத்தால், நிலாது - நிகழாதபடி, உதவும் - துணைசெய்ய வேண்டு கிறேன்', என்ன-என்று பிரார்த்திக்க, அவர்-அந்தரிஷிகள், உரைத்த வரம் தந்து - (அவன்) கேட்ட வரத்தைக்கொடுத்து, வாசவனை - இந்திரனை, உம்பர் உறுவித்தார் - தேவலோகத்தில் சேர்த்தனர் : அவன்-அந்த இந்திரன், நெடுநாள் உலைவுற்று-பலநாட்கள் வருந்தி யிருந்து, ஓர் நாள் ஒருதினம் ; (எ,-று.) '××× மாதவற்குரைப்ப' என மேலைக்கவியில் இயையும்.

•

விருத்திரன் கொட்டாவி விட்டு வாயைத்திறக்கவே, இந்திரன் தன் அங்கங்களைச்சுருக்கிக் கொண்டு வெளியில் வந்தான். அதுமுதல் கொட்டாவியானது உலகத்திலுள்ள பிராணிகளை யடைந்தது என்பர் இருடியர் வரமீந்து விருத்திரனோடு சமாதானம் செய்துகொண்டது. விஷ்ணு சொன்ன உபாயத்தின்படியாகும் என்பது அறியவேண் டுவது. மற்றும் முதனூலின்படி விருத்திரன் கேட்ட வரமாவது-உலர்ந் ததினாலும் ஈரமுள்ளதினாலும் கல்லினாலும் மரத்தினாலும் சஸ்த்ரத்தி னாலும் அஸ்திரத்தினாலும் பகலிலும் ராத்திரியிலும் கொல்லத்தகாதவ னாதல் வேண்டும் என்பது. இந்திரன் நெடுநாள் உளைவுற்றது ஏனெனில்-வச்சிரப்படையால் தனக்கு மரணம் நிகழக்கூடாது என்று விருத்திரன் வரங்கேட்டதனாலாகும். இருத்தனன்-இருந்தனன் என் பதன் வலித்தல் எதுகைநோக்கி. அரி - இந்திரன், உதவும் - வியங் கோள். (19)

20. இந்திரன் விருத்திரனைக் கொன்று, அப் பாவத்தால் நிடத மலைக்கு ஓடி யொளித்தல்.

தன்திறமா சுரன்கொளத்தான் ருழ்தற் போய்மா
தவற்குரைப்ப அவனந்தி தன்னி னீயோர்
பொன்றுரும்பே வதினின்றியா னடுவ னென்னப்
பொருந்தியவன் சென்றொருநாட் புணரி
மாட்டில்

நின்றிடக்கண் டரியையுனி துரும்பொன் றேவி
நிருதனைக்கொன் றப்பவத்தா னிடத வெற்பிற்
சென்றிருந்தான் சுரர்முனிவர் நேடி நோக்கிச்
சேர்ந்தமையோம் பெனமவுனஞ் செயமீண்
டன்னோர்.

(இ-ள்.) தன் திறம் ஆசுரன் கொள - தன்னுடைய பராக்கிரமத்தை (தேஜஸை) விருத்திராசுரன் கவர்ந்து கொள்ளவே, தான் தாழ்தல் - தான் இழிந்து போனதை, போய் - சென்று, மாதவற்கு உரைப்ப-விஷ்ணுவுக்குச் சொல்ல, அவன்-அந்த விஷ்ணு, 'அந்தி தன்னில்-சாயங்காலவேளையில், நீ—, ஓர் பொன்துரும்பு ஏவ-நீ ஒரு உலோகத்தாலாகிய துரும்பினை விடுவாய் : யான்-நான், அதினின்று அடுவன் - அந்தத்துரும்பில் பிரவேசித்து (அந்த விருத்திரனைக்) கொல்வேன்', என்ன-என்றுகூற, அவன்-அந்த இந்திரன், பொருந்தி சென்று - அதற்கு உடன்பட்டுப்போகி, ஒருநாள் -ஒருதினம் சாயங் காலம், புணரிமாட்டு-சமுத்திரக்கரையினில், நின்றிடக்கண்டு - (அந்த அசுரன்) நிற்றலைப்பார்த்து, அரியை உனி-விஷ்ணுவைத்தியானித்து, துரும்பு ஒன்று ஏவி-துரும்பொன்றைச் செலுத்தி, நிருதனைக் கொன்று-விருத்திராசுரனைக்கொன்று, அ பவத்தால் - அந்தப் பிரம்மஹத்தி தோஷத்தால், நிடத வெற்பில்-நிடதமலையில், சென்றிருந்தான்-போய் ஒளிந்திருந்தான்: சுரர்முனிவர் - தேவர்களும் முனிவர்களும், நேடி-(அவ்விந்திரனைத்) தேடி, நோக்கி- (கடைசியில்) அவனைக்கண்டு, எமை சேர்ந்து ஓம்பு என-எங்களையடைந்து கூட வந்து காப்பாற்று வாயாக என்று பிரார்த்திக்க, (அதற்கு உத்தரம் எதுவும் கூருமல்) மவுனம் செய- (வாய்திறவாமல்) மௌனம் சாதிக்க, அன்னோர் மீண்டு-அந்தத்தேவர்களும் முனிவர்களும் திரும்பிவந்து ; (எ-று) நகுடன்தனை வேந்தாக வைத்தனர் என மேலைக்கவியில் இயையும்

வச்சிரப்படை விடாதபடி பயனின்றிப் போயினமையால் இந்திரன் 'தன்திறம் ஆசுரன் கொள' என்ருன். ஸந்தியாகாலம் இரவும் அன்று பகலும் அன்று. ஆதலின் அந்த அசுரன் கேட்டவரம் பழுதாகாது அவனைக் கொல்லும் ஏற்ற சமயமாயிற்று என்க. விருத்திரனும் துவஷ்டாவினுல் வேள்வியில் உண்டாக்கப்பட்டவனுதலின், அசுரனுயினும் பிரம்மஹத்தி தோஷம் பீடித்துக்கொண்டது. (முதன் முதல் விச்வரூபனைக் கொன்றதற்காக இந்தப் பிரம்மஹத்தி தோஷம் இருந்து பின்னர் அகன்றதையும் நினைக). இந்திரன் ஏவிய துரும்பினில் விஷ்ணு கடலின் நுரையாகப் பிரவேசித்தானுதலின், 'புணரி

மாட்டில்' என்றது. தாழ்தல் - தொழிற்பெயர். அடுவன் - தன்மை யொருமை. புணரி- (நதிகளோடு) புணர்வதெனக் காரணப்பெயர். புணர்தல்-சேர்தல் ; ஆறுகளாகிய பெண்களுக்குச் சேருமிடமாகிய கடலைக் கணவனாகக் கூறுதல், கவிமரபு ; இதனை 'நதீபதி' என்னுங் கடலின் வடமொழிப் பெயராலும் அறிக. 'சென்றிருந்தான்' என்ற விடத்து- ஜலத்தில் மறைந்து நீர்ப்பாம்பு போல சஞ்சரித்துக் கொண்டு வசித்தான் என்றது முதனூல். ஓம்பு-முன்னிலை வியங்கோள். (20)

21. நகுஷனை இந்திரனாக்க அவன் இந்திராணியை விரும்ப, அவளுக்குப் பிருஹஸ்பதி அபயங் கொடுத்தல்.

மன்னவநின் குலநகுடன் தனைவேந் தாக
வைத்தனர்மற் றவனவர்கள் வழிபட் டேத்த
பொன்னுலகைப் புரந்திடுநாட் சசியைப் புல்லப்
புந்திகொடும் பரைவிடவப் பூவை யாசான்
தன்னுடன்சொற் றனளவனீ யஞ்ச லென்று
தரித்தழைப்போர் தமையிஃது தகாதென் றேவ
அன்னதுகேட் டுருத்தனங்கன் வாளிக் காற்றான்
அரம்பையரே யினனழைத்தார் அணங்குற்
றன்னாள்.

(இ-ள்) மன்னவ - தருமராசனே ! நின் குல நகுடன்தனை- உனது குருகுலமுதல்வனான நகுஷனை, வேந்து ஆக் வைத்தனர்- (தேவர்களும் ரிஷிகளும்) தமக்கு அரசனாக வைத்தனர் : (இந்திரப் பட்டம் சூட்டினர் என்றபடி) : அவன்-அந்த நகுஷன், அவர்கள் வழிபட்டு ஏத்த-அந்தத் தேவர்களும் இருடிகளும் பூசித்துப்போற்ற, பொன்னுலகைப் புரந்திடுநாள்- தேவலோகத்தையாண்டு காத்து வரும்போது, சசியைப் புல்ல புந்தி கொடு-இந்திராணியை (விரும்பித்) தழுவ எண்ணமிட்டு, உம்பரை விட -தேவர்களை (அவளிடம்) அனுப்ப, அ பூவை- அந்த இந்திராணி, ஆசான் தன்னுடன் சொற்றனள்-பிருஹஸ்பதியினிடம் இதனைச் சொன்னாள் : அவன்-அந்தப் பிருஹஸ்பதி, நீ அஞ்சல் என்று ஆதரித்து- நீ பயப்படாதே என்று அபயமளித்து, அழைப்போர்தமை-இவளை யழைக்க வந்த தேவர்களை நோக்கி, 'இஃது தகாது-இச்செயல் தகுதியுடையதாகாது, என்று - என்று புத்திமதிகூறி, ஏவ-அவர்களை அனுப்பிவிட,

(நகுஷன்) அன்னது கேட்டு-அச்செய்தியைச் செவிமடுத்து, உருத்து-கோபித்து, அனங்கன் வாளிக்கு ஆற்ருன்- மன்மதனம்புக்குத் தளர்ந்தவனுய், அரம்பையர் ஏயினன்-தேவமாதரை யனுப்பினுன் : அழைத்தார் - (அவர்கள்சென்று) இந்திராணியைக் கூப்பிட்டனர் : (அப்போது) அன்னுள் - அந்தச்சசி, அணங்கு உற்று - வருத்த மடைந்து ; (எ. று) "சீவனுரைப்படி நகுடன்பாற் சென்று" என மேலேக்கவியில் தொடரும். (21)

22. இந்திராணி நகுஷனிடம் நியமம் செய்து கொண்டதும், இந்திரன் அசுவமேதம் செய்து பாவம் நீங்கியும் பயந்தமையும் கூறும்.

சீவனுரைப் படிநகுடன் பாற்சென் றன்பன்
சிலதினத்தெய் துவனிலேயேல் திறலோய் நின்னே
மேவுதுமென் றின்சொல்புகன் றுரியோன் பாற்போய்
விளைந்தமைசொற் றனளவன்சின் னுளின் மின்னே!
பாவமொழித் துறுவன்விண் ணணுகென் றேவிப்
பைந்துளவோற் குரைத்தவன்சொற் படிமா மேதந்
தேவியுடன் கொடுபோய்ச்செய் தப்பா வந்தீர்த்
திட்டான்வலி யுந்தேசுஞ் சேரா வாற்ருல்.

(இ-ள்.)சீவன்-குருவாகிய பிருஹஸ்பதியின், உரைப்படி-சொற்படியே, நகுடன்பால் சென்று-நகுஷனிடத்துப்போய், 'அன்பன்-என் கணவனுகிய இந்திரன், சில தினத்தெய்துவன்-சில நாட்களில் வந்து சேருவன் : இலேயேல்-(என்னிடம்) வந்து சேரவில்லையானுல், திறலோய் !-பராக்கிரமமுடையவனே !, நின்னே மேவுதும்-உன்னே வந்தடைவேன்', என்று இன் சொல் புகன்று-என்று இனிய வார்த்தைகள் சொல்லி, உரியோன்பால் போய்-பிருஹஸ்பதியினிடம் சென்று, விளைந்தமை சொற்றனள்-நேர்ந்த செய்தியைச் சொல்லினள் ; (கேட்ட) அவன்-அந்தப் பிருஹஸ்பதி, மின்னே !-மின்னற்கொடிபோன்ற சசியே ! சின்னுளில்-சில நாட்களில், பாவம் ஒழித்து-பிரம்மஹத்தி தோஷத்தையொழித்தபின், உறுவன் - (இந்திரன்) தானே (உன்னிடம்) வருவன் : [நீ இப்போது] விண் அணுகு-தேவலோகம் சேர்வாய்', என்று ஏவி-என்று ஆணையிட்டனுப்பி, (பின்பு) பைந்துளவோற்குஉரைத்து-மகாவிஷ்ணுவுக்குச் சொல்லி, அவன் சொற்படி-அந்தக் கடவுளின் மொழிப்படி, (இந்திரனே)

மாமேதம் - அசுவமேதயாகம், தேவி உடன்கொடுபோய்-சசி தேவியையும் உடன்கொண்டு அழைத்துப்போய், செய்து-செய் வித்து, அ பாவம்-அந்தப் பிரம்மஹத்திதோஷத்தை, தீர்த்திட்டான்-போக்கிவைத்தான்; (எனினும்) [இந்திரன் தனக்கு] வலியும் தேசும் சேரா ஆற்ருல்-பராக்கிரமமும் ஒளியும் வந்து பொருந்தாமலிருந்த மையால்; (எ.று.). 'வருத்தி' என மேலேக்கவியில் தொடரும்.

பிருஹஸ்பதியின் சொற்படி இந்திராணி நகுஷனிடம் சென்று சிறிது காலந் தாமதித்தலே வேண்டினுள். ஏனெனில், காலமானது பல விக்னங்களேயுடையது. அசுவமேதம் செய்து பிரம்மஹத்தி பாவம் நீங்கியும் இந்திரனுக்கு வலிமையும் தேஜஸும் வாராமைக்குக் காரணம்-நகுஷனே இந்திரபதவியிலிருந்து அசைக்க முடியாமை• வரபலத்தால் அவனது அபரிமிதமான செருக்குடைமை, எல்லாப் பிராணிகளுடைய பலத்தையும் அவன் கிரகித்துக் கொள்ளும் சக்தி யுடைமை முதலியன ; ஆகவே இந்திரன் பயந்து ஒளிந்தான்: அது மேலேக்கவியாற் புலப்படும். சீவன் - பிருஹஸ்பதி ; வியாழன். (பிங்கலந்தை) : மேவுதும் - தன்மையொருமை. மின் - உவமவாகு பெயர். (22)

23. இந்திரன் பயந்து தாமரைத்தண்டினில் ஒளிந்து கொள்ள, உபச்ருதிதேவியால் இந்திராணி அவனேக்கண்டு செய்திசொல்ல அவன் உபாயம் தெரிவித்தல்.

வருந்தியொரு வருமறியா திமயத் தோர்தா
மரைநாளத் தணுவுருவாய் வலாரி மேவி
அருந்தவஞ்செய் தனன்காணுள் சசியோர்
நோன்பால்
அசரீரி மாதாய்வந் தழைத்துக் காட்டக்
கரந்தமைகேட் டெய்தாபுகன் றுபாய மன்பன்
கழறியதுட் கொண்டுசின கரம்புக் கும்பர்
புரந்தவன்புல் லெனவழைப்ப முனிவர் யானம்
பொறுத்திடப்பெற் றிடில்நின்னேப் புணர்வ
னென்ருள்.

(இ-ள்.) வருந்தி - துன்புற்று, வலாரி - இந்திரன், ஒருவரும் அறியாது-எவரும் அறியாதபடி, இமயத்து - இமயபர்வதத்து (ஒரு தடாகத்தில்) ஓர் தாமரை நாளத்து - ஒரு தாமரைத்தண்டில், அணுவுருவாய் மேவி - அணுஸ்வருபனாய் ஒளிந்திருந்து, அரும் தவம் செய்தனன் - கடுமையான தவத்தைச்செய்திருந்தான் : (இஃது இங்ஙனாக) சசி - இந்திராணி, காணாள் - தன்கணவனை எங்கும் காணமாட்டாமல், (பிறகு) ஓர் நோன்பால் - ஒரு உபாசனையால், அசரீரி - ஆகாசவாணி, மாதாய்வந்து - உபச்ருதிதேவியாய்வந்து, அழைத்துக் காட்ட - தன்னையழைத்துக்காட்ட, (கண்டு), கரந்தமை கேட்டு - ஒளிந்தகாரணத்தைக் கேட்டறிந்து, எய்து ஆ புகன்று - தான் அங்குவந்தகாரணத்தைச்சொல்லி, (அப்போது) அன்பன் - கணவனாகிய இந்திரன், உபாயம் கழறியது உட்கொண்டு-சொன்ன தந்திரத்தை மனதிலே கொண்டு, சினகரம் புக்கு- தன் அரண்மனையை அடைந்து, (அப்போது) உம்பர் புரந்தவன்-தேவேந்திரனாகிய நகுஷன், புல் என அழைப்ப - தன்னைத்தழுவ வருவாய் என்று கூப்பிட, (அதற்கு இந்திராணி) 'முனிவர் யானம் பொறுத்திடப்பெற்றிடில்-ஸப்தரிஷிகள் உமது பல்லக்கைச் சுமந்து வரப் பெற்றால், நின்னைப் புணர்வன் என்றாள்- உன்னைத் தழுவிச் சேர்வேன்[3] என்றுகூறினாள் ; (எ-று.)

இந்திரன் தாமரைத்தண்டின் நூலில் அதிசூட்சுமமான ரூபத்தோடு புகுந்திருந்தான் : சசியும் உபச்ருதிதேவியும் தாம் சூட்சும ரூபத்தைக் கொண்டு தரிசித்தார்கள். அப்போது இந்திரன் கூறிய உபாயம்-நகுஷனை முனிவர் சுமக்கும் பல்லக்கில் வரச்சொல்லுதல் ; மிக்க செருக்குடையனாதலின் நகுஷன் முனிவர்சாபத்திற்கிலக்காவன் என்பது உட்கோள். நோன்பு-உபாஸனை : முதனூலின்படி ராத்ரிதேவியைச் சசி உபாஸிக்க, அவள் உபச்ருதி தேவியை அழைத்துச்சசியிடம் அனுப்பினாள் என்பது. (உபச்ருதி-ஸந்தேகத்தைத் தெளிவிக்கிற தேவி) கரந்தமை கேட்டு - கரந்த வரலாறு கேட்டு என்றபடி. (எய்து) ஆ - ஆறு என்பதன் விகாரம் : வகை என்பது பொருள். 'புல்' — முன்னிலையேவல். (23)

24. அகஸ்தியர் நகுஷனைச் சாபமிட்டதும், அது தருமனால் நீங்கும் என்றதும் கூறல்.

சுந்தரிபுல் வானகுடன் முனிவர் யானஞ்
சுமந்திடப்பெற் றலின்றவம்போய்ச் சோர்வுற்
றோர்நாள்

வந்தகுறு முனிக்குபசா ரஞ்செய் தெண்ணு
மறைப்பொருளொன் ருலிகழ்ந்தான் மற்றே
னென்னை
நிந்தித்தாய் அரவாகென் றுரைத்தான் சாப
நீங்கிடுநாள் அவனிரப்ப நெடுநா டுன்புற்
றுந்தமர பிற்றரும ஞறீர்த் தும்பர்
உறுகெனமா சுணமாய்க்கா னுழன்ரு னன்றே.

(இ-ள்) சுந்தரி புல்வான்-இந்திராணியைத் தழுவும் பொருட்டு, நகுடன்—, முனிவர் யானம் சுமந்திடப் பெற்றலின்-ஸப்த ரிஷிகளால் தனது பல்லக்கு சுமந்திடப் படுதலால், தவம் போய்-(செய்த) தவத்தின் பயனெல்லாம் ஒழிந்து, சோர்வுற்று - தளர்ந்து, ஓர் நாள்-ஒரு தினம், வந்த குறுமுனிக்கு-[தன்னைநோக்கி] வந்த அகத்திய மகரிஷிக்கு, உபசாரம் செய்து-வழிபாடு இயற்றி, (ஆனல்), எண்ணு-நினைக்கவும் பொருந்தாத (தவருன. அதர்மமான), மறைப்பொருளொன்ருல்—வேதார்த்த விவாதத்தால், இகழ்ந்தான் - அவரை இழிவுசெய்தான் : மற்ரேன்-அகத்திய முனிவன், 'என்னை நிந்தித்தாய்-என்னை இழிவு செய்தாய் (ஆகவே நீ) அரவு ஆகு-சர்ப்பமாக ஆவாய்' என்று உரைத்தான்-என்று சாபமிட்டான் : (அது கண்டு பயந்து) சாபம் நீங்கிடு நாள் அவன் இரப்ப-சாபவிமோசனம் பெறும் நாளை அவன் பிரார்த்திக்க, (அதற்கு அகத்தியன்) நெடுநாள் துன்புற்று-பலகாலம் துயருழந்து, (பின்னர்) உந்தம் மரபில் தருமனுல் தீர்த்து-உன்னுடைய குருகுலத்தில் உதித்த தருமபுத்திரனுல் சாபம் நீங்கி, உம்பர் உறுக என-தேவலோகத்துக்கு வந்து சேர்வாய் என்று [சாபவிடை] கூற, (அக்கணமே) மாசுணமாய் - சர்ப்பமாய் (பாம்பாய்), கான் உழன்ருன்-காட்டில் சஞ்சரிக்கலானுன்; எ-று) அன்றே-ஈற்றசை : தேற்றமுமாம்.

அகத்தியரோடு மறைப்பொருள் விவாதித்து இகழ்ந்ததாக ஈண்டு கூறப்பட்டுள்ளது. ஆனல் முதனூலின்படி நோக்கின், மகரிஷிகளாலே பிரமாணமாகக் கொள்ளப்பட்ட பிராம்மணங்களையும் மந்திரங்களையும் இல்லைசெய்து விவாதம் செய்ததால் அதர்மத்தால் பீடிக்கப்பட்டவனுய்ச் செய்வது தெரியாது அகத்தியரைத் தன் காலால் தலையில் இடித்தான் : அதனுல் தவப் புண்ணியம் நசித்து அகத்தியர் சாபத்தால் ஸ்வர்க்கத்திலிருந்தும் பூதலத்தில் சர்ப்பமாய் விழுந்தான் : பதினுயிரம் வருடங்கள் பாம்பாய்ச் சஞ்சரித்தான். பின்பு தன் வமிசத்திலுண்டான தருமனைத் தரிசித்தபின் ஸ்வர்க்

கத்தையடைந்தான் என்பது பெறப்படும். ஏட்டில், 'அரவாகென் றுதைத்தான்' என்று பாடம் காண்கின்றது. அஞ்ஞான்று அகத்திய முனிவன் நகுடனைக் காலால் உதைத்ததாக ஏற்படும். அஃது சிறவாது. முதனூலின்படி நகுடன் உதைத்ததாகக் காணப்படுகிறது. இனி, இவ்வரலாறு பெருவாரியாக வழங்கப்படுவது பின்வருமாறு—நகுஷன் இந்திராணிமேல் வைத்த காதல் மிகுதியால், தன் சிவிகை தாங்கிச் செல்கிற சப்த ரிஷிகளுள் குறுமுனிவராதலால், மெதுவாய் நடந்த அகத்தியரை நோக்கி, விரைவிற் செல் என்பான் (ஸர்ப்ப ஸர்ப்ப' (ஓடு ஓடு) என்று கூறினனாக, அகத்தியர் வெகுண்டு 'நீ ஸர்ப்ப மாகுதி' என்று சபிக்க, அவன் இந்திரபதமிழந்து உடனே பாம்பாகி நிலத்திற் கிடந்தானென்பது. ஈண்டு "ஏந்திய கொள்கை யார் சீறின் இடைமுரிந்து, வேந்தனும் வேந்து கெடும்" என்ற குறள் நினைக. தருமனால் குருகுலவமிசமே சிறப்புற்றதைச் சல்லியன் தருமனிடமே கூறினமை சுவைக்கத்தக்கது. புல்வான்-வானீற்று வினையெச்சம். ஆகு-வியங்கோள்: சபித்தற்பொருளில் வந்தது. 'நெடுநாள்' என்றது—பதினாயிரம் ஆண்டுக்காலம் குறிக்கும். உறுக-முன்னிலையேவல். (24)

25. இந்திரன் மீண்டும் தன்னுலகம் ஆள, அவன் வரலாறு கூறியவாற்றால் சல்லியன் தருமனைத்தேற்றித் துரியோதனனிடம் வருதல்; கண்ணன் தருமனிடம் வருதல்.

சுந்திரிதன் னாற்சுரரிந் திரனைக் கண்டு
துறக்கங்கொண் டெய்தியொளிர் சுடிகை சூட்ட
அந்தரமங் கவன்சசியோ டோம்பி வாழ்ந்தான்
அவன்போனீ தரியலர்வென் றழற்கொம் போடும்
இந்தவுல களிப்பையென விசைத்து முன்னால்
இசைந்தவன்பால் மத்திரன்சென் றிட்டான் மாயோன்
வந்தநர னொடுதருமன் பாற்புக் காங்கே
மாசுணக்கே தெய்தியவர லாறுஞ் சொன்னான்.

(இ-ள்) சுந்தரி தன்னால்-இந்திராணியினால், சுரர்-தேவர்கள், இந்திரனைக் கண்டு—, துறக்கம் கொண்டு எய்தி-சுவர்க்கத்திற்கு (தேவலோகத்திற்கு) அழைத்து வந்து, ஒளிர் சுடிகை சூட்ட-

விளங்குகின்ற முடியை அணிவிக்க, அந்தரம்-பின்பு, அவன்-அந்த இந்திரன், சசியோடு ஓம்பி வாழ்ந்தான் - இந்திராணியோடு சுவர்க்கத்தைப் பாதுகாத்து வாழ்ந்துவந்தான்: அவன்போல்-அந்த இந்திரனைப்போல, நீ-தருமனுகிய நீ, தரியலர்வென்று-பகைவராகிய துரியோதனுதியரைச் செயித்து, அழல்கொம் போடும் - திரௌபதியுடனும் (ஒக்கவீற்றிருந்து), இந்த உலகு அளிப்பை-இந்த நிலவுலகத்தைப் பாதுகாத்து ஆளுவாய், என இசைத்து-என்று கூறி ஆசீர்வதித்து, முன்னுல் இசைந்தவன்பால்-முன்னுல் (போரில்) உதவுவதாக ஒருப்பட்ட துரியோதனனிடத்து, மத்திரன்-சல்லியன், சென்றிட்டான்-போய்ச்சேர்ந்தான்; மாயோன்-கிருஷ்ணனும், வந்த நரனெடு-தன்னுடன் வந்த அருச்சுனனேடு, தருமன்பால் புக்கு-தருமபுத்திரனிடம் சென்று, ஆங்கே-அங்கு அவனிடத்து, மாசுணக்கேது எய்திய-துரியோதனன் தன்னிடம் (துவாரகைக்கு) வந்த, வரலாறும்-கதையையும், சொன்னுன்-கூறினுன்; (எ-று.)

மாசுணக்கேது-பாம்புக்கொடி: அக்கொடியையுடையானுக்கு ஆகுபெயர். அளிப்பை-முன்னிலைவியங்கோள்-வாழ்த்துப்பொருளில் வந்தது. இசைந்தவன்-வினையாலணையும்பெயர். (25)

26. அத்தினுபுரிக்கு வந்த உலூக முனிவனைத் துரியோதனன் வணங்கி ஆசனத்திலிருத்த, அவன் வந்த வரலாற்றைக் கூறத் தொடங்குதல்.

மற்றவற்குச் சல்லியனிங் கெய்தி மீளல்
மன்பகர்ந்தான் முன்பகன்ற மறையோன் வாய்மை
பெற்றவர்வந் தனம்யார்க்கும் இயம்பி யோர்நாள்
பேரவையிற் புகுந்தரசர் பிரான்ருழ்ந் திட்ட
பொற்றவிசுற் றிருந்தான்வீ டுமன்முன் னேர்கள்
புகுஞ்செயல்யா தெனமுனிவன் புகல்வான் நீவிர்
சொற்றவண மவதிகடந் தடைந்த பாண்டு
சுதர்க்குரிய வரசுதவி துதிகைக் கொண்மின்.

(இ-ள்) (அப்போது) அவற்கு-அந்தக் கிருஷ்ணனுக்கு, சல்லியன்-மத்திரதேசத்தரசன் சல்லியன், இங்கு எய்தி-உபப்பிலாவியத்துக்கு வந்து, மீளல்-திரும்பித் துரியோதனன்பாற் சென்றதை, மன்-தரும

ராசன், பகர்ந்தான்-சொன்னன் : (இங்ஙனகை) முன்பு அகன்ற மறையோன்-முன்னர்த் தூதாகச் சென்ற உலூக முனிவன், வாய்மை பெற்றவர் வந்தனம்-சத்தியவிரதனுகிய தருமனின் வணக்கத்தை, யார்க்கும் இயம்பி-அனைவர்க்கும் தெரியச் சொல்லி, (பின்பு) ஓர் நாள்-ஒரு தினம், பேரவையில் புகுந்து-பெரிய சபையிற் சென்று, (அங்கு) அரசர் பிரான்-துரியோதன மன்னன், தாழ்ந்து இட்ட-பணிந்து போகட்ட, பொன் தவிசு உற்றிருந்தான்-அழகிய ஆசனத் திலமர்ந்திருந்தான் : (அப்போது) வீடுமன் முன்னேர்கள்-பீஷ்மன் முதலிய பெரியோர்கள், புகும் செயல் யாது என-வந்த காரியம் என்ன என்று வினவ, முனிவன் புகல்வான் - உலூக முனிவன் கூறலானுன் : நீவிர் சொற்ற வணம் - நீங்கள் சொல்லியபடியே, அவதி கடந்து-[பதின்மூன்ருண்டு] காலவெல்லையைக் கழித்து, அடைந்த பாண்டு சுதர்க்கு-(இப்போது) வந்துள்ள பாண்டவர்க்கு, உரிய அரசு உதவி-உரித்தாய அரசபாகத்தைத் திரும்பக்கொடுத்து, துதி கைக்கொண்மின் - அனைவராலும் பாராட்டப்படுதலைப் பெறுங்கள். (எ-று.)

உலூகனுக்குச் செய்யவேண்டிய உபசாரங்களைச் செய்தானென்ற படி. துதி-ஸ்துதி : புகழ். கை-தமிழுபசர்க்கம். (26)

27. உலூக முனிவன் வார்த்தையும், விதுரன் அறிவுரையும்.

மண்ணளிக்க மனதிலையேல் உங்கட் கைவர்
வானளிப்ப துண்மையென மன்னர் மன்னன்
பண்ணமரி லாண்மைதிறங் காண லாகும்
பலவாய்மை யென்கொலெனப் பாண்டு பின்னேன்
வண்ணமுடி மைந்த! புவி முனிசொல் வண்ணம்
வழங்காமல் அழுக்காறே மனங்கொண் டின்னுந்
தண்ணளிசற் றிலார்பொழிக்குட் படில்செய் யாள்போம்
தந்திரமு நந்தமருந் தவறு மென்ருன்.

(இ-ள்) மண் அளிக்க மனது இலையேல்-பூமியைக் கொடுக்க எண்ணம் இல்லையென்ருல், உங்கட்கு-(பகைவராகிய) உங்களுக்கு,

ஐவர் பஞ்சபாண்டவர், வான் அளிப்பது உண்மை—(நிலவுலகத்தினும் மேலான) வீரசுவர்க்க லோகத்தைக் கொடுப்பது நிச்சயம், என-என்று உலூகன் சொல்ல, மன்னர் மன்னன்-துரியோதனன், பண் அமரில் - செய்யப்போகும் போரில், ஆண்மை திறம் காணலாகும் - வீரத்தின் திறமையைப் பார்க்கலாம்: பல வாய்மை என்-பலபடி சொல்லுவானேன், என-என்று பதிலிறுக்க, (அதுகேட்ட) பாண்டு பின்னேன்-பாண்டுவுக்குத் தம்பி முறையினனான விதுரன், வண்ண முடி மைந்த!—அழகிய கிரீடத்தைத் தரித்த மகன் துரியோதனனே! முனி சொல்வண்ணம் - உலூக முனிவன் சொன்னபடியே, புவி வழங்காமல்-(அவர்க்குரிய)பூமியைக் கொடுக்காமல், அழுக்காறே மனங்கொண்டு - பொருமையையே உள்ளத்துக்கொண்டு, இன்னும் - இனிமேலும், தண்ணளி சற்று இலார்-கருணை சிறிதும் இல்லாதவருடைய, மொழிக்கு-வார்த்தைக்கு, உட்படில்-கட்டுப்பட்டு நடந்தாயாயின், செய்யாள்போம்-இலக்குமி நீங்குவாள் (செல்வம் ஒழியும்): தந்திரமும் நந்த - சேனைகளும் கெட்டழிய, அமரும் தவறும் - போரிலும் தோற்றுப்போவோம், என்ருன்-என்று புத்திமதி கூறினுன்; (எ-று.)

உங்களை ஐவர் கொல்வர் என்ற பொருளை 'உங்களுக்கு ஐவர் வானளிப்பர்' என வேறுவாய்பாட்டினுற் கூறியது, **பிறிதினவிற்சியணி**.வாய்மை-வாய் வார்த்தை. என்கொல், கொல்-அசை. தண்ணளி-அருள், கருணை, இரக்கம். தண்ணளிசற்றிலார்-சகுனி, கர்ணன் துச்சாதனன் போன்ருேர். நந்த + அமரும் = நந்தமரும்: உடம்படு மெய்பெருது நிலைமொழியினீற்று அகரம்கெட்டுப் புணர்ந்தது. தந்திரம்-சேனை: வடசொல். (27)

28. துரோணனும் வீடுமனும் நற்புத்தி கூறுதல்.

சொற்றமொழி வழுவியம ருடற்றி லேதந்
　தொடங்கிநரன் விடுங்கணையால் தொலைவீரென்று
வெற்றிதனு வேதிபுகன் றனன்முன் சொல்லே
　வேந்துரைத்தான் கங்கைமகன் விழியி லாத
கொற்றவனை நின்புதல்வ ரவதி போக்கிக்
　குறுகினர்நா ளியாமற் கொடும்போர் செய்யிற்
விற்றனைபற் குனற்கெதிர்யார் குனிப்போ ரென்று
　விளம்பினனங் கேசன்மிக வெகுண்டு சொல்வான்.

(இ-ள்.) சொற்றமொழி வழுவி-சொன்ன வார்த்தை தவறி, அமர் உடற்றில்-போரிடுவீராயின், ஏதம்-குற்றமாகும் : நரன்-அருச்சுனன், தொடங்சி-ஆரம்பித்துத்தொடர்ச்சியாக, விடும் கணையால்-பிரயோகிக்கும் அம்பினால், தொலைவீர்-அழிந்துபோவீர், என்று—, வெற்றி தனுவேதி புகன்றனன் வெற்றிபொருந்திய வில்வித்தையில் வல்ல துரோணாசாரியர் கூறினார் : (அதுகேட்டும்) வேந்து-துரியோதனராசன், முன் சொல்லே உரைத்தான் - (போரில் அவர் ஆண்மைகாண்போம் என்ற) முன்னால் சொன்னதையே (இப்போதும் சொன்னான் : (அதனைக்கண்ட) கங்கைமகன்-வீடுமன், விழியிலாத கொற்றவனை-குருடனாகிய திருதராட்டிரனை நோக்கி, 'நின் புதல்வர்-உன் மைந்தர்களாகிய பாண்டவர்கள், அவதி போக்கி - (குறித்த)பதின்மூன்றாண்டு காலவெல்லையும் கடந்து, குறுகினர்-வந்துள்ளனர் : (அவர்களுக்கு) நாடு அளியாமல்-ராச்சியத்தைக் கொடுக்காமல், கொடும் போர் செய்யின்-கொடிய போரினை (மேற்கொண்டு) செய்வோமாயின், பற்குனற்கு எதிர் - அருச்சுனனுக்கு எதிராக, வில் தனை-விற்படையை, குனிப்போர் யார்-வளைக்க வல்லவர் யாவர் (ஒருவருமிலர்), என்று விளம்பினன்-என்று கூறி முடித்தார் : (இதனைக்கேட்ட) அங்கேசன்-கர்ணன், மிக வெகுண்டு-பெரிதும் கோபங்கொண்டு, சொல்வான்-பதில் சொல்வானாயினான் ; (எ-று.).

வாய்மை தவறிப்பொருதாலோ அருச்சுனன் கணைக்குத் தப்புவது முடியாது என்று தம் கருத்தைத் துரோணனும் வீடுமனும் தெரிவித்தனரென்க. வீடுமன் அருச்சுனனுக்கு எதிரில் வில்வளைப்பாரில்லையென்று கூறியதைக் கேட்டுக் கர்ணன் மிகவெகுண்டான். கர்ணன் தன்னிடம் அளவு கடந்த சாமர்த்தியம் இருப்பதாகக் கருதிக் கர்வங்கொண்டவனாதலாலும், அர்ச்சுனனிடத்து வெகு காலமாக வைரங்கொண்டவனாதலாலும், அர்ச்சுனனை வீடுமன் சிறப்பித்துப்பேசினதைப் பொறாமல் வெகுண்டான் என்க. தனுவேதி தனுர்வேதம் கற்றவன் ; வேதியன் என்றபடியுமாம். வில்+தனை = விற்றனை : ''னலமுன்றனவும்'' என்பது விதி. அங்கேசன், அங்க+ ஈசன் : குணசந்தி. **(28)**

29. கர்ணன் வீடுமனை நோக்கிக் கோபத்தோடு கூற, அவ் வீடுமன் அவனைப் பரிகசித்துக் கூறும் உத்தரம்.

முந்திராக வற்குடைந்தோன் றன்னை யன்னேன்
மொழிவிஞ்சை கொடுவென்ற முறையே யல்லால்
எந்தசேவ கத்தால்யா ரையுநீ எள்ளல்
என்றனன் மன்றலைதந்தோ னியற்றும் வேள்வி
வந்தபாஞ் சாலிசுயம் வரத்தில் யாழோர்
மன்னைவிசித் தகல்கானில் வலியான் போரிற்
பிந்துமுனாண் மையினரனை மாறே ரூரும்
பேரமர்வாய் நீவேறற் பெரிதோ வென்றான்.

(இ-ள்.) முந்தி-முற்காலத்தில், ராகவற்கு-தசரத ராமனுக்கு, உடைந்தோன் தன்னை-தோற்று வலிமையிழந்த பரசுராமனை, அன்னேன் மொழி விஞ்சை கொடு-அந்தப்பரசுராமன் சொல்லிக் கொடுத்த தநுர்வித்தையினாலேயே, வென்ற முறையே அல்லால்-அவனை செயித்தகணக்கேயல்லாமல், எந்த சேவகத்தால் - எந்த வீரச்செயலால், நீ—, யாரையும் எள்ளல்- எல்லாரையும் இகழ்ந்து பேசுதல், (அது தகாது) என்றனன்-என்று கர்ணன் கூறி முடித்தான் : (அதற்கு உத்தரமாக வீடுமன்), மன் தலை தந்தோன்-திருஷ்டத்யும்நனை முதலில் (வேள்வியிடத்துப்) பெற்றவனாகிய துருபதன், இயற்றும் வேள்விவந்த பாஞ்சாலி- செய்த யாகத்தில் தோன்றிய திரௌபதியின், சுயம் வரத்தில்- சுயம்வரத்தின் போதும், யாழோர்-கந்தருவர் (சித்திரசேனன் தலைமையில்) மன்னை-துரியோதனராசனை, விசித்து-கட்டி, அகல்- (தேரிலேற்றிச்) சென்ற, கானில் - காட்டிடத்தும், ஆன்போரில் - ஆநிரையைக்கவரச்சென்ற போரிடத்தும், வலி பிந்தும் உன் ஆண்மையின்-வலிமை (பராக்கிரமம்) பின்னிட்டுப்போன (சிதைந்த) உனது வீரத்தினால், (இப்போது) நரனை-அருச்சுனனை, மால் தேர் ஊரும் பேர் அமர்வாய்-கண்ணன் (அவனது) தேரைச் செலுத்துகின்ற பெரும் போரிடத்து, நீ வேறல் பெரிதோ ? - நீ வெல்லுதல் பெரியகாரியமோ ? (எளிதன்றோ ; எனப் பரிகாசமாகக் கூறியபடி) (எ-று.).

தசரதராமன் சீதையை மணம் புரிந்து மிதிலையினின்று மீண்டு வருகையில், அவனை வலியச்சென்று எதிர்த்துப் பரசுராமன் அவனால் வெல்லப்பட்டு அப்பொழுது எல்லாவலிமைகளையும் இழந்தனனாதலாலும். அவனிடம் நீ மாணாக்கனாயிருந்து அவனது வில் வித்தையிலுள்ள அந்தரங்கமான பொருள்களையெல்லாம் அறிந்தனை

யாதலாலும் நீ உன்னினும் முதியவனுன பரசுராமனை வென்றது ஒருவெற்றியாகச் சிறிதும் மதிக்கத்தக்கதன்று என்று கர்ணன் இகழ்ந்தவாறு. துருபதன் துரோணன்மீது கறுக்கொண்டு அவனைக் கொல்லும் பொருட்டு ஒருபுத்திரனும், அருச்சுனனது பலபராக்கிரமங் களைக்கண்டு மகிழ்ந்து அவனுக்கு மணஞ்செய்து கொடுக்கும் பொருட்டு ஒரு புத்திரியும் உதித்தல்வேண்டும் என்று புத்திரகாம யாகஞ்செய்விக்க, அவ்வோமத் தீயினின்றும் முதலில் திருஷ்டத் யும்நனும், திரௌபதியும் தோன்றினராதலின் 'மன் தலை தந்தோன் இயற்றும் வேள்விவந்த பாஞ்சாலி' என்றது. திரௌபதியின் சுயம் வரகாலத்தில் பிறரால் அறுத்தற்கு முடியாத மத்ஸ்யயந்திரத்தை அருச்சுனன் அறுத்திட்டு அவளால் மாலைசூட்டப்பட்டது காரண மாக அழுக்காறு கொண்டு துரியோதனுதியரும் கர்ணனும் மற்றும் பல அரசர்களோடு எதிர்த்துப் போர்செய்து அருச்சுனனுலும் வீமனுலும் வென்று அடித்துத் துரத்தப்பட்டு ஓடினுர்கள் என்பது பிரசித்தம். பாண்டவர்கள் வனவாசஞ் செய்கையில் ஒருநாள் துரி யோதனன் தன் பெருமையைப் பாராட்டிப் பாண்டவரை அழுங்கச் செய்யவேண்டுமென்று ஆடம்பரத்துடனே அருகிற் சென்றபோது, இந்திரனேவலால் சித்திரசேனனென்னுங் கந்தருவராசன் வந்து துரியோதனனைக் கயிற்ருற் கட்டி வானத்தில் தூக்கிக் கொண்டு போக, அப்பொழுது கர்ணன் முதலாயினேர் எதிர்த்துப் பொருது தோற்று ஓட, பின்பு துரியோதனனது பரிதாபகரமான நிலைமையை அவனது பரிவாரத்தாலறிந்த தருமபுத்திரனது கட்டளையால் வீமன் அருச்சுனனேடு சென்று கந்தருவனை நண்பாக்கித்தருமனிடம் அழைத்து வந்து அத் தருமன் சொற்படி துரியோதனனை விடுவித் தான் என்பது கதை. விராட நகரத்தில் பாண்டவர் ஒளித்திருத்தல் கூடுமென்று துரியோதனுதியர் அந்நகரத்தின்மேல் படையெடுத்து வடபுறத்திற் சென்று பசுக்களைக் கவர்ந்து கொண்டனர். அதனை யறிந்து நிரைமீட்டற்குப் போருக்கு வந்த உத்தரகுமாரனுக்குச் சாரதியாய் நின்ற பேடிவடிவமான அருச்சுனன் உத்தரனைத்தேர் செலுத்தச் சொல்லித்தான் போர் செய்து அத்தனை பேரையும்வென்று துரத்திப் பசுக்களைத் திருப்பி யோட்டிக்கொண்டு சென்றனன் என்பது கீழ் விராட பருவத்தில் நிரைமீட்சிச் சருக்கத்தின் வரலாறு. தைரியமற்ற உத்தரனென்னுஞ் சிறுவனைப் பேருக்குச் சாரதியாக வைத்துக்கொண்டு தானே சாரதியும் ரதியுமாக வேறுதுணையின்றித் தனியே வந்து போர் செய்த காலத்திலும் அருச்சுனனை வெல்ல மாட்டாத நீயோ, போர்த்தொழிலையும் போர்க்குதிரை செலுத்துந் தொழிலையும் முழுவதுமறிந்த தந்திரசாலியும் மிக்க தைரியமுடைய வனுமான கண்ணபிரானைச் சாரதியாக வைத்துக்கொண்டு பெருஞ் சேனையோடு வந்து அருச்சுனன் எதிர்த்துப் பெரும்போர் செய்யும் பொழுது அவனை வெல்வாய்? என்பது கருத்து. எனவே, 'நீ வேறல்

பெரிதோ ?, என்றது இகழ்ச்சியும் பரிகாசமும் பற்றியது. எள்ளல்-தொழிற்பெயர். மன்-தலைவன் : திருஷ்டத்யும்நனைக் காட்டி வந்தது. பின்னர் போரில் சேனைத்தலைவனுதல் நோக்கி என்னவுமாம். மால்+தேர் = மாறேர் ; 'னலமுன்றனவும்' என்பது விதி (நன் : மெய்யீற் : 34), வேறல் — தொழிற்பெயர் : வெல் - பகுதி : தல்—விகுதி. (29)

30. பாண்டவர்க்குப் பாகமில்லை யென்று துரியோதனன் கூற, திருதராட்டிரன் உலூகனிடம் செய்தி கூறியனுப்புதல்.

கன்னனைமன் னவன்கசிந்துட் கொண்டு வந்த
கலைமுனியைப் பார்த்தெமதே கைக்கொள் வையம்
முன்னமர்கா னுமதேயென் றிகழ்ந்தா னீன்ருேன்
முனிந்துமகன் றனைத்தெழித்து முனியை நோக்கி
சொன்னநின்சொ லெலாஞ்சரத மைய போரிற்
ருெடங்கின்மடி குவர்வாழ்வான் றூயர் தம்மோ
டின்னமெணி யறிவினெரு வனையங் குய்ப்பன்
ஏகியவர் சினந்தணிய விதஞ்சொ லென்றே.

(இ-ள்) மன்னவன்-துரியோதனன், கன்னனை கசிந்து உட்கொண்டு-கர்ணன் வார்த்தையையே விரும்பிக் கொண்டாடி, வந்த கலைமுனியைப்பார்த்து - தூதுவந்த உலூகமுனிவனைப் பார்த்து, 'கைக்கொள் வையம் எமதே - (நாங்கள்) கவர்ந்துகொண்ட ராச்சியம் எங்களுடையதே ; முன் அமர் கான்-முன்னம் (இவ்வளவு காலம்) வசித்திருந்த காட்டினிடம், நுமதே-உங்களுடையதே' (பாண்டவர்களுடையதே), என்று-என்றுகூறி, இகழ்ந்தான் - (பரிகாசஞ் செய்து) அலட்சியம் பண்ணினுன் : (அப்போது) ஈன்ருேன்- தந்தையாகிய திருதராட்டிரன், மகன்தனை முனிந்து-பிள்ளையாகிய துரியோதனனைக் கோபித்து, தெழித்து - அதட்டி, முனியை நோக்கி-உலூகனைப்பார்த்து,ஐய-பெரியோனே ! சொன்ன நின்சொல் எலாம் சரதம் - நீர் சொன்ன வார்த்தைகளெல்லாம் உண்மையே : போரில் தொடங்கின் - போரை நிகழ்த்துவையாயின், மடிகுவர் - (என் பிள்ளைகள் அனைவரும்) இறந்துபோவர்: (ஆதலின்) தூயர் தம்மோடு இன்னம் வாழ்வான் எணி - புனிதரான பாண்டவர்களோடு இனி மேலும் (நண்பாய்) வாழவேண்டும் என்று எண்ணி, அறிவின் ஒருவனை-அறிவிற்சிறந்த ஒரு குருவை, அங்கு - அந்த உபப்பிலா

வியத்துக்குப் பாண்டவரிடம், உய்ப்பன்-அனுப்புவேன் : ஏகி-நீர் (திரும்பி அவர்களிடம்) சென்று அவர் சினம் தணிய- அப்பாண்டவர்களுக்குக் கோபம் அடங்கும் பொருட்டு, இதம் சொல்- (இனிமையாக இருவருக்கும்) நன்மைதரும் வார்த்தைகளைச் சொல்லுவீராக, என்று-என்று வேண்டி ; (எ-று) 'இன்னுரை சொற்று' என மேலிற் கவியில் இயையும்.

கசிந்து உட்கொண்டு-அன்புகொண்டு அங்கீகரித்து என்றபடி. இராச்சியபாகம் வேண்டுகிற பாண்டவரிடத்து உள்ள அலட்சியத்தையும் பரிகாசத்தையும் அவர்களுக்குத் தூதனாய் வந்த உலூகன் மேல் 'கான்றுமதே' என்று கூறிக் காட்டினான் துரியோதனன் என்க வாழ்வான் - வானீற்று வினையெச்சம் : எணி- எண்ணியென்பதன் தொகுத்தல். உய்ப்பன்-தன்மையொருமை வினைமுற்று. (இதம்) சொல்- முன்னிலை வியங்கோள் வினைமுற்று, ஈன்றோன் - வினையாலணையும்பெயர். (30)

31. உலூகன் பாண்டவரிடம் திரும்பிவந்து, தூதின் செய்தி கூறுதல்.

இன்னுரைசொற் றவிர்கலன்றூ சாதி நல்கி
யெழுந்தருள்க வெனப்பணிந்தா னிருந்த
மேலோர்
அன்னதுவே சரியென்றார் உலூக நாமத்
தையனுப லாவியஞ்சென் றரியோ டைவர்
மன்னவைபுக் கவருரைத்த மொழிக ளொன்றும்
வழுவாமல் எடுத்துரைத்தான் வள்ளல் உள்ளம்
இன்னமுணர் குவமெனவத் திசையை நாடி
யிருந்திட்டார் பொருந்திறலா லிசையான்
மிக்கோர்.

(இ-ள்.) (திருதராட்டிரன்) இன் உரை சொற்று-இனிமையான வார்த்தைகளை (உலூகமுனிவனிடம்) சொல்லி, (மேலும் அம் முனிவனுக்கு) அவிர்கலன் தூசு ஆதி நல்கி-விளங்குகின்ற ஆபரணங்கள் வஸ்திரங்கள் முதலியவற்றைக்கொடுத்து, எழுந்தருள்க - (பாண்டவரிடம்) செல்வீராக, என-என்று விடையீந்து, பணிந்தான்- (அவரை) வணங்கினான் : (அப்போது) இருந்த மேலோர்-அங்கேயெழுந்தருளியிருந்த வீடுமன் துரோணன்போன்ற பெரியோர், அன்னதுவே சரி என்றார்-(அறிஞனொருவனை அனுப்புவேன் என்று திருதராட்டிரன்

சொன்ன) அந்த யோசனேயே ஏற்கத்தக்கது என்று அங்கீகரித்தனர்: (பின்னர்) உலூகநாமத்து ஐயன்- உலூகமுனிவன். உபலாவியம் சென்று-உபப்பிலாவியத்திற்கு வந்து, (அங்கு) அரியோடு-கிருஷ்ணனோடு, ஐவர்-பஞ்சபாண்டவர், மன் - எழுந்தருளியிருந்த, அவை புக்கு-சபையிடத்துச்சென்று, அவர் உரைத்த மொழிகள் ஒன்றும் வழுவாமல் - அந்தத்துரியோதனனதியர் சொன்ன செய்திகளொன்றையும் விடாமல், எடுத்து உரைத்தான் - வகுத்துச் சொல்லினான் : (அவற்றைக் கேட்ட) பொரும் திறலால் இசையால் மிக்கோர்-போர்செய்யும் வலிமையினாலும் புகழினாலும் மேன்மையையுடைய அந்தப்பாண்டவர்கள். வள்ளல் உள்ளம் இன்னம் உணர்குவம் என - திருதராட்டிரனது மனக்கருத்து இன்னதென்பதை மேலும் அறிந்து கொள்வோம் என்று, அத்திசையை நாடி இருந்திட்டார்-(திருதராட்டிரன் அனுப்பும் அறிஞனாகிய குரு வரும்) அந்தத்திக்கை நோக்கிய வண்ணம் எதிர்பார்த்திருந்தனர் ; (எ-று).

'வள்ளல்' - திருதராட்டிரனைக் குறிக்கும், துரியோதனன் தன் மனக்கருத்தைத் தெரியச் சொல்லிவிட்டானாதலின். 'வள்ளல்' என்றது இகழ்ச்சிக்குறிப்பினது எனலாம். எழுந்தருள்க-வியங்கோள். உணர்குவம்-தன்மைப்பன்மை. (31)

உலூகமாமுனி தூது சருக்கம் முற்றிற்று.

இரண்டாவது
சஞ்சயன் தூது சருக்கம்

சஞ்சயனென்னும் முனிவன் திருதராட்டினரது வேண்டுகோளின் படி பாண்டவரிடம் தூது வந்த செய்தியைச் சொல்லும் பாகம். சஞ்சயன் கவல்கணனென்பவனது குமாரன் : ஆதலால் இவனுக்குக் காவல்கணியென்று ஒரு பெயரும் வழங்கும். இவன் திருதராட்டிரனுக்கு மிகவும் இஷ்டனான நண்பன். இவன் அவனுக்குச் சில சமயங்களில் தேர் செலுத்துதலுமுண்டு.

வேறு.

1. திருதராட்டிரன் சில கூறிச் சஞ்சயமுனிவனைப் பாண்டவரிடம் தூதனுப்புதல்.

தால கேதுவி தூர ணுரியர் சர்ப்ப கேதன ணுதியோர்
ஞால வேந்தர்கள் சூழ வேந்தவை நண்ணு மந்தக
னம்புவி
பால ராதரித் தார்கண்ணன்னெறி பயிலு மாதவ
மைவர் போய்
சால வாற்றநீ சென்று போக்கெனச் சஞ்ச யற்குரைத்
தேவினுன்.

(இ-ள்) தால கேது - பனைக்கொடியையுடையனான வீடுமன், விதூரன்-விதுரன், ஆரியர்-துரோணன் கிருபன், சர்ப்பகேதனன்-பாம்புக் கொடியையுடைய துரியோதனன், ஆதியோர்-முதலாயவர்களும், ஞாலவேந்தர்கள்-பூமியையாளும் அரசர்களும், சூழ-தன்னைச் சுற்றிலும் இருப்ப, வேந்தவை - இராச சபைக்கு, நண்ணும்-வந்து சேர்ந்த, அந்தகன்-குருடனாகிய திருதராட்டிரன், 'அம் புவி பாலர்-அழகிய பூமியைப் பாதுகாக்கின்ற அரசர்கள், நல் நெறி பயிலும் மா

தவம் ஆதரித்தார்கள்-நல்லவழியாகிய முத்திக்குச் செல்லவேண்டிச் சிறந்த தவத்தை மேற்கொள்ள விரும்பினார்கள்' (அஃதேபோல) ஐவர் போய்-பஞ்ச பாண்டவர்களும் போய், சால ஆற்ற-நன்றாகத் தவத்தை மேற்கொண்டு செய்யுமாறு, நீ-குருவாகிய நீ, சென்று, அவர்களிருக்கும் உபப்பிலாவியம் போய், போக்கு-(அவர்களைத் தவத்தில் மூளச் செய்து) காட்டிற்கு அனுப்புவாயாக, என-என்று, சஞ்சயற்கு உரைத்து-சஞ்சய முனிவனிடம் சொல்லி, ஏவினான்-(அவனைச்) செலுத்தினான்; (எ.று.)

மன்னர்கள் நல்ல கதியையுடைய தவத்தை மேற்கொண்டார்கள். அஃதேபோல பாண்டவர்களும் தவத்தை மேற்கொண்டு நல்ல கதியடையுமாறு உபதேசிக்கும்படி சஞ்சயனுக்குக் கூறித் திருதராட்டிரன் விடுத்தான் என்க. விதூரன்-விதுரன் என்பதன் நீட்டல். சால-உரிச்சொல். போக்கு-முன்னிலையேவல்.

இதுமுதல் பதினைந்து கவிகள் - பெரும்பாலும் ஒன்று மூன்று ஐந்தாஞ்சீர்கள்-மாச்சீர்களும், மற்றை நான்கும் விளச்சீர்களுமாகிய கழிநெடிலடி நான்குகொண்ட எழுசீராசிரிய விருத்தங்கள். (1)

2. சஞ்சயன் பாண்டவரிடம் வருதல்.

சஞ்ச யன்னுப லாவி யப்பதி சார்ந்து பார்த்தனோ டுறுமரிக்
கஞ்ச லித்துற லோதி பிற்பக லவையி னுற்றட றுருபதன்
மஞ்சு வண்ணன்வி ராடன் பின்னவர் மன்னர் சூழ
மகத்தெழும்
வஞ்சி யூடுறை செம்ம றாழ்ந்தவன் வழங்கி ருக்கைகண்
மேவினான்.

(இ-ள்) சஞ்சயன்—, உபலாவியப்பதி சார்ந்து - உபப்பிலாவியம் அடைந்து, பார்த்தனோடு உறும்அரிக்கு - அருச்சுனனோடு இருந்த கிருஷ்ணனுக்கு, அஞ்சலித்து-கைகூப்பி வணங்கி, உறல் ஓதி-தான் வந்தமையைத் தெரிவித்து, பிற்பகல் அவையின் உற்று-பகலின் பிற்போதில் சபைக்கு வந்து,—அடல் துருபதன்-வலிமையுடைய துருபதராசன், மஞ்சு வண்ணன் - மேகநிறத்தவனாகிய கிருஷ்ணன், விராடன்—, பின்னவர்-தம்பிமார்கள், மன்னர்-துணையரசர்கள், சூழ-(இவர்கள்) சுற்றியிருப்ப, மகத்து எழும் வஞ்சியூடு உறை-யாகத் தீயினின்று தோன்றிய திரௌபதியுடன் நடுவே தங்கியிருந்த, செம்மல்-தருமன், தாழ்ந்து-வணங்கி, வழங்கு இருக்கைகண்-இட்ட ஆசனத்தின்மேல், அவன் மேவினான்-சஞ்சயமுனிவன் அமர்ந்தான்; (எ.று).

முனிவனுதலின், செம்மல் தாழ்ந்தான் என்பது பொருந்தும். வஞ்சியூடுறை என்றதால், திரௌபதியும் தாழ்ந்தனள் என்பது பெறவைக்கப்பட்டது. வஞ்சி-உவமையாகுபெயர். செம்மல்-ஆண் பாற் சிறப்புப்பெயர். (2)

3. தருமன் சஞ்சயனைப் பிறர் சேமம் விசாரித்தல்.

தரும ஞரியர் விதுரன் தாதைமூ
 தாதை யுஞ்சுக மோவெனக்
குரிசி லுய்த்தவன் சேம மாசிகள்
 கூறி ஞருமக் கென்னலும்
ஒருவில் கற்பின ளறுவை தொட்டவ
 னூரு மீதிரு வென்பவன்
உரையில் வெல்கனன் கவறில் வென்றவ
 னுஞ்சு கங்கொலோ வெனவவன்.

(இ-ள்) தருமன்—, 'ஆரியர்-துரோணுசாரியர் அசுவத்தாமன், விதுரன்—, தாதை-திருதராட்டிரன், மூதாதையும் - வீடுமன் முதலியோரும், சுகமோ-சேமமாயிருக்கின்ருர்களா?' என-என்று வினவ, குரிசில் உய்த்தவன்-பெரியோனுகிய திருதராட்டிரனுலே அனுப்பப் பட்ட சஞ்சயன், சேமம்-அவர்கள் சேமந்தான்; உமக்கு ஆசிகள் கூறினர்-உங்களுக்கு ஆசீர்வாதங்கள் செப்பினர், என்னலும்-என்று சொன்னவுடன், ஒருவு இல் கற்பினள்-நீங்குதலில்லாத கற்பினளாகிய திரௌபதியின், அறுவை தொட்டவன் - ஆடையைத் தொட்டு உரிந்த துச்சாதனன், ஊருமீது இரு என்பவன்-(என்) தொடையின் மேல் உட்காருவாய் என்று (அவளைச்) சொன்ன துரியோதனன், உரையில் வெல் கனன்-பேசுதலில் வெல்லும் கர்ணன், கவறில் வென்றவனும் - சூதாட்டத்தில் வென்றவனுகிய சகுனி முதலியோர் களும், சுகம்கொல் - சேமம் தானே? என-என்று விசாரிக்க, அவன் அச் சஞ்சயன்; (எ.று). '××× சுகமாவர் என' என மேலைக் கவியிலியையும்.

வாய்ப்பேச்சில் வெல்பவன் என்று கர்ணனைக் கூறியது-கீழ்ச் சபாபருவத்தில் சூதுபோர்ச் சருக்கத்து "துல்லிய சொல்லின் நமக்குத் தோற்றமனையொடும் இல்லாள் தொக்காளென்னிர், இல்லியல் கொண்டில்லாளென்றிசைக்கும் பண்பென்னும் ... யான் சொல்லிய சொற்கெதிருண்டேற் சொன்மின்" (செ: 109) என்றது

நோக்கி என்க. துட்ட சதுட்டர் சுகமா என்று வினவியது-ஒருவில் கற்பினளுக்கு ஊறுசெய்தவர் அழிவரே என்ற குறிப்பினது. (3)

4. சஞ்சயன் அவர்கள் சேமம் தெரிவித்தல்.

ஈது காறுமி லாத தாயினும்
இறைவ! நீவின வன்பினும்
தாதை யென்னை நும்பால்விடுத்திடு
தகைவி னுஞ்சுக மாவரச்
சேதி மாலொடை வருக்க லாதவை
செப்பொ ணுதென இவ்வயின்
பேத மானவ ரில்லை யோதெனப்
பிறப்பி லாதவ னேதுவான்.

(இ-ள்) இறைவ! - தருமராசனே! ஈதுகாறும் - இதுவரையில், இலாததாயினும் - [சேமம் விசாரிப்பதற்குப்] பிரசக்தி இல்லாமற் போயினும், (இப்போது) நீ வினவு அன்பினும்-நீ விசாரிக்கின்ற பரிவினாலும், என்னை-முனிவனாகிய என்னை, நும்பால் விடுத்திடு தகைவினும் - உன்னிடம் அனுப்பியிருக்கின்ற தகுதியினாலும், சுகமாவர்-அவர்கள் சுகமாகவிருக்கின்றனர் : (இனி) அ சேதி-(திருதராட்டிரன் கூறியனுப்பியுள்ள) அந்தச்செய்தியை, மாலொடு ஐவருக்கு அலாது-கிருஷ்ணனுக்கும் பாண்டவர்க்கும் அல்லாமல், அவை செப்ப ஒணாது என - (பிறர்க்கு) அச்செய்தி மொழிகளைச் சொல்லக் கூடாது, என்று சஞ்சயன் சொல்ல, (அதனைக் கேட்ட தருமன்) இவ்வயின்-இவ்விடத்து, பேதமானவர் இல்லை-பிறர் அன்னியர் எவரும் இல்லை ; ஓது-ஆகவே சொல்வாயாக, என-என்று கூற, பிறப்பிலாதவன்-முக்தியடைதற்குரிய முனிவன், ஓதுவான்-கூறலாயினான் ; (எ.று) அவன் கூறியவற்றை மேலைக் கவிகளிற் காண்க.

அன்பினும், தகைவினும்-இன், ஐந்தனுருபு ஏதுப்பொருளது. ஓது-முன்னிலை வியங்கோள். (4)

5-6. இரு கவிகள்—ஒரு தொடர் : சஞ்சய முனிவன் கூறிய செய்தி.

ஏரின் மானிட ராய்ப்பி றப்பரி
தெய்தி னும்மர சாளுறும்

பாரி னாசையு மாத ராசையும்
பைம்பொ னாசையும் பகைவர்மேற்
போரி னாசையும் விட்டு மாயைபு
ணர்ப்பி லாதமெய்ஞ் ஞானியாஞ்
சீரி னாகுத லரிதி வைக்குநீ
தெரித ருங்கரி யாமரோ.

(இ-ள்) ஏரின்-அழகுடைய, மானிடராய்-மனிதராய், பிறப்பரிது-பிறத்தல் அரியதாகும்: எய்தினும்-மானிடப்பிறவி வாய்த்தாலும், அரசாளுறும் - அரசாளுதற்குரிய, பாரின் ஆசையும்-மண்ணின்மேல் ஆசையும், மாதர் ஆசையும்-பெண்ணின்மேல் ஆசையும், பைம் பொன் ஆசையும்-பசிய பொன்னின்மேல் ஆசையும், பகைவர்மேல் போரின் ஆசையும்-எதிரிகள்மேல் போரிட்டு வெல்லும் ஆசையும், விட்டு-துறந்து, மாயை புணர்ப்பு இலாத-மாயையின் சம்பந்தமில்லாத, மெய்ஞ்ஞானியாம் சீரின் ஆகுதல்-உண்மையறிந்த தத்துவ ஞானி யாகிற சிறப்பினனாகுதல், அரிது-அரியதேயாகும்: இவைக்கு-இந்தப் பேருண்மைகளுக்கு, நீ-தருமனாகிய நீயே, தெரிதரும் கரியாம்-பிரதி யட்சமான சாட்சியாவாய்; (எ.று) அரோ-ஈற்றசை.

அரிதரிது மானிடராதல் அரிது: அப்படி மானிடராய்ப் பிறந் தாலும் மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசையாகிய மூவாசை நீத்தல் அரிது; அரசர்க்குப் போரில் வெற்றி கொள்ளும் ஆசையும் ஏற்படும்; அதனையும் நீத்தல் அரிது. இந்த ஆசைகளைவிட்டு, மாயையின் பிடியினில் சிக்காது தத்துவஞானியாகுதல் என்பது மிகவும் அரிது. இந்தப் பேருண்மையையறிய வைக்க நீயே சிறந்த சான்றாவாய்: ஆசைகளைத் துறந்து மாயையில் சிக்காது மெய்ஞ் ஞானியாவன் தருமன் என்பது சஞ்சயன் கருத்து. அதனால் அவனைப் பாராட்டுகின்றான். கரி-சாட்சி, சான்று. (5)

6. அற்ப வாழ்வினைச் சதமெ னக்கொட
ளிப்ப நாடொரு மித்திலன்
சற்ப கேதமர் செயத் துணிந்துளன்
தன்ம நீதிமொய்ம் புடையநீர்

விற்பி டித்திடின் யார்பி ழைப்பவர்
விட்ட ருந்தவ மாற்றிடின்
நற்ப யன்புக ழென்ன வுந்தை
நவின்ற தென்றுரை யாடினுன்.

(இ-ள்) அற்ப வாழ்வினை - நிலையற்ற வாழ்ச்சியை, சதம் எனக் கொடு - நிலையானதென எண்ணி, நாடு அளிப்ப - (உங்களுக்கு) நாடு கொடுப்பதற்கு, ஒருமித்திலன் - உடன்பட்டிலன்; (ஆகவே) தன்ம நீதி மொய்ம்பு உடைய நீர் - தர்ம முறைமையையே வலிமையாகக் கொண்டொழுகும் நீங்கள், வில் பிடித்திடின் - விற்பிடித்துப் போருக்கு வருவீர்களாயின், யார் பிழைப்பவர் - உயிர்பிழைத்துத் தப்புபவர் யாவர்? (ஒருவருமிலர்): (இதனையெண்ணி) உந்தை - உமது பெரிய தந்தையாகிய திருதராட்டிரன், (உங்களை) விட்டு - போரினைக் கைவிடுத்து, அருந்தவம் ஆற்றிடின் - செய்தற்கரிய தவத்தைச் செய்திடுவீராயின், நற்பயன் - அதனால் கிட்டுகின்ற நல்லபயன், புகழ் - கீர்த்தியாகும், என்ன - என்று, நவின்றது - சொல்லியனுப்பிய செய்தி, என்று - என்று கூறி, உரையாடினுன் - பேச்சு நிகழ்த்தினுன்; (எ.று).

தருமன் அறிவு ஒழுக்கங்களில் மிக்கவனுதலின், 'தன்மநீதி மொய்ம்புடைய நீர்' என்ருன். மொய்ம்பு - வலிமை. நவின்றது - குறிப்பு வினையாலணையும்பெயர். உந்தை - உன் தந்தை யென்பதன் மரூஉ. (6)

7. தருமன் கூறிய உத்தரம்.

மும்மை யுந்தெரி வான்மொ ழிக்கெதிர்
முரச கேதுபுன் முறுவல்செய்
திம்மை யேவசை நிற்க வீடுற
வெண்ண லின்னர செய்தலே
செம்மை மன்னர றத்தி ஞென்னலர்
செற்ற பின்றவஞ் செய்வதற்
கெம்மு ளஞ்செலு மென்று ரைத்தலும்
இறைவ னுய்த்தவ ஞேதுவான்.

(இ-ள்) மும்மையும்-மூன்று கால நிகழ்ச்சிகளையும், தெரிவான் மொழிக்கு-அறிந்து சொல்லும் சஞ்சய முனிவனது வார்த்தைக்கு, எதிர்-பதிலாக, முரச கேது-முரசக்கொடியையுடைய தருமன், புன் முறுவல் செய்து-புன்சிரிப்புச் சிரித்து, 'இம்மையே-இப்பிறப்பிலே இவ்வுலகத்து, வசை நிற்க-பழிச்சொல் [ஏற்பட்டு] நிலைக்கும்படி, வீடு உற-முக்தியடைய, எண்ணல்-(நான்) நினைக்கவில்லை: இன் அரசு எய்தலே செம்மை-இனிய அரசாட்சியை மீண்டும் அடைதலே சிறந்தது: மன்னர் அறத்தின்-அரச நீதிப்படி, ஒன்னலர் செற்றபின்-பகைவர்களையழித்த பின்பு, தவம் செய்வதற்கு எம் உளம் செலும்-தவம்மேற்கொள்வதற்கு எனது மனம் விரும்பும், என்று உரைத்தலும்-என்று சொன்னவுடன், இறைவன் உய்த்தவன்-திருதராட்டிரன் தூதாக அனுப்பிய சஞ்சயன், ஓதுவான்-கூறுவானாயினான்; (எ.று.) சஞ்சயன் கூறியதை மேலிற்கவியிற் காண்க.

''வசையொழிய வாழ்வாரே வாழ்வா ரிசையொழிய, வாழ்வாரே வாழாதவர்'' என்றார் திருவள்ளுவனாரும். செம்மையென வந்ததனால், அல்லது-தீமையாயிற்று. இராச தருமத்தில் நின்று பகையொழித்த பின்பே மனத்திற்கு நிச்சலத்தன்மை தோன்றித் துறவறத்திற்குச் செல்லுமாதலால், இப்போது என்மனம் எண்ணவும் இடங்கொடாது என்று மறுத்தவாறு.

மும்மை-பண்பாகுபெயர். தெரிவான், உய்த்தவன் - வினையாலணையும் பெயர்கள். எண்ணல்-அல்லீற்று எதிர்மறை. அறத்தின், இன்-ஐந்தனுருபு ஏதுப்பொருளது. (7)

8. சஞ்சயன் கூறியது கேட்டு வீமன் வெகுளல்.

சுற்ற நந்தனர் துணைவ ராரியர்
சுரந திச்சுதன் முதலிய
கொற்ற மன்னரைக் கோற லிற்றவங்
குற்ற மோவலி கொண்டுளோம்
மற்ற வர்க்கிலை யென்னில் வெஞ்சமர்
வாய்தெ ரிந்திடு மென்னவே
சொற்ற லுங்கதை யோன்வெ குண்டிது
சொல்லு வான்விள வென்னவே.

(இ-ள்) சுற்றம்-உறவினர், நந்தனர் - பிள்ளைகள், துணைவர்-சிநேகிதர்கள், ஆரியர்-பெரியோராகிய துரோணன் விதுரன் போன்

ரூர், சுரநதிச்சுதன்-கங்காபுத்திரனுகிய வீடுமன், முதலிய கொற்றம் மன்னரை-முதலாகக்கொண்ட வீரமுடைய அரசர்களை, கோறலின்-கொல்லுதலைக் காட்டிலும், தவம் குற்றமோ-தவஞ்செய்யப் போகுதல் பழுதாகுமோ! (ஆகாதே): (இனி) வலிகொண்டுள்ளோம்-பலங் கொண்டுள்ளோம் யாம்: மற்று அவர்க்கு இலை-அந்தத் துரியோதனுதியர்க்கு வலிமையில்லை, என்னில்-என்று நினைப்பீர்களானுல், வெம் சமர்வாய் தெரிந்திடும்-கொடிய போரிடத்து நீவிர் உணர்வீர்கள், என்னவே சொற்றலும்-என்றே (சஞ்சயன்) கூறவும், கதையோன்-வீமன், வெகுண்டு-கோபித்து, விளவு என்ன - கமர் வெடிப்பதுபோல, இது சொல்லுவான் - இந்த வார்த்தையைச் சொல்லுபவனுனன்; (எ.று). வீமன் கூறியதை மேலைக்கவியிற் காண்க.

விளவு-கமர்: நிலத்தின் பிளப்பு. வெட்டெனப் பேசினுன் என்றபடி. கோறல் - தொழிற்பெயர். இன் - ஐந்தனுருபு உறழ் பொருளது. என்ன-உவமவுருபு. (8)

9. **வீமன் வெகுண்டு கூறுதல்.**

பிடரி யின்மதி பெற்ற கண்ணிலி
பெற்ற மைந்தர்ம ஞளவைத்
தடவி யிற்றவ மெமையி யற்றிட
வரைத னீதிகொல் பொதுமையே।
கொடிய நூற்றுவ ரான கோக்களைக்
கொன்றி ராசசு யப்பெயர்
உடைய வேள்விசெய் திடுவ னென்கதை
யொன்றி ஞற்கண மொன்றினில்.

(இ-ள்) பிடரியின் மதி பெற்ற கண்ணிலி-பின்னிடத்திலே புத்தியுள்ள பிறவிக் குருடனுன திருதராட்டிரன், பெற்ற மைந்தர்-(தான்) பெற்ற பிள்ளைகளாகிய துரியோதனுதியர், மண் ஆள வைத்து-பூமியை அரசாளும்படியாகத் திட்டமிட்டு, எமை - எங்களை, அடவியில் தவம் இயற்றிட - காட்டிலே தவம் (மேற்கொண்டு) செய்யும்படி, வரைதல்-நியமித்தல், நீதி கொல் - தருமமாகுமா? (மேலும்) பொதுமையே?- (இதுதான்) நடுநிலைமைபா? (இனி) என் கதை ஒன்றினுல்-என்ஒரே கதையை ஆயுதமாகக்கொண்டு, கணம் ஒன்றினில்-ஒரே க்ஷணத்தில், கொடிய நூற்றுவரான கோக்களைக்

கொன்று-துட்டர்களான துரியோதனுதியர் நூற்றுவரான பசுக்களை வதைத்து, இராசசுயப்பெயர் உடைய வேள்வி செய்திடுவன்-இராசசூய யாகத்தைச் செய்து முடிப்பேன் ; (எ.று).

தன் மக்களுக்கு வீமனுல் நேரும் அபாயத்தைக் கருதாது தன் மக்கள் இராச்சியம் பெறும் உபாயத்தையே கருதுதலால், திருதராட்டிரன் 'பிடரியின் மதிபெற்ற கண்ணிலி' எனப்பட்டான். சத்துருகாதிநியென்னும் வீமனது கதையின் பெயருக்குப் பகைவரைக் கொல்வதென்பது பொருளாதலால், அக்கருத்துத் தோன்ற, ''என் கதையொன்றிஞல்'' என்ருன். துரியோதனுதியர் என்னும்கோ (பசு) என உருவகத்தில் உயர்திணை அஃறிணையோடு மயங்கிற்று ; திணைவழுவமைதி. யாகத்திற் கொல்லப்பட்ட பசுக்கள் நற்கதி பெறுவதாக நூல்களிற் கூறப்பட்டிருத்தல் போலப் போரிற் கொல்லப்பட்டவர் வீரசுவர்க்கம் பெறுதல் மரபு. கொடுமை தவிர விவேகமில்லாமல் ஆகாரம், நித்திரை, பயம் முதலியவற்றை மாத்திரமேயுடைய துரியோதனுதியர் விலங்குபோலுதலால், நூற்றுவரான 'கோக்கள்' என்றது. கோ-பசு : வடசொல் : இங்கே 'பசு' என்றது, யாகத்திற்குரிய பிராணியைக் காட்டிற்று. இராயசூயயாகம் அரசர்களனைவரையும் வென்று அவர்தரும் திறைப்பொருள்கொண்டு செய்யப்படுவதொரு பெருவேள்வி. இங்கு நூற்றுவரையும் அவருக்கு உதவியாக வந்த அரசர்களையும் வென்று கொன்று செய்யப்படும் களவேள்வியைக் குறித்தது என்க. பொதுமையே, ஏ-விஞ. இராசசுயம்-இராசசூயம் என்பது குறுகிற்று. (௯)

10. வீமனைக் கையமர்த்தித் தருமன் கூறுதல்.

ஈதி யற்றுத லெத்த வத்தினும்
எற்கு நற்றவ மெனமுனேன்
ஓதி னைஞ்ஞனைக் கைய மமைத்தர
சுய்த்த வன்றனெ டோதுவான்
ஆதி யிற்றரு மத்த டங்கின
மாற்றல் கொண்டிகன் மாற்றுவேம்
ஏத மோநல மேகொ லோவிஃ
தெந்தை யோடுநீ யோதுவாய்.

(இ-ள்) ஈது இயற்றுதல்-களவேள்வியைச் செய்தல், எ தவத்தினும்-எல்லாத் தவங்களைக் காட்டிலும், எற்கு-எனக்கு, நல் தவம்-

நல்ல தவமாகும், என-என்று வீமன் கூற, முனோன்-தமையனான தருமன், ஓது இளைஞ்ஞனை -[இங்ஙனம்] பேசிய தம்பியை, கையமைத்து-கையால் சைகை காட்டி மௌனமாயிருக்க வைத்து, அரசு உய்த்தவன் தன்னொடு-திருதராட்டிர மன்னன் அனுப்பிய தூதனாகிய சஞ்சயனோடு, ஓதுவான்-கூறுவானாயினன் : ஆதியில்-முன்நாளில், தருமத்து அடங்கினம்-அரச நீதிக்குக் கட்டுப்பட்டோம். (இனி) ஆற்றல் கொண்டு-வலிமை கொண்டு, இகல் மாற்றுவேம்-பகையையொழிப்போம். (இந்த எமது முடிவு) ஏதமோ-குற்றமாயிருக்குமோ! (அல்லது) நலமோ-நற்றமாயிருக்குமோ? (எப்படியாயினும் சரி) : இஃது-இந்த முடிவினை, எந்தையோடு-எனது தந்தையாகிய திருதராட்டிரனோடு, நீ—, ஓதுவாய்-சொல்லுவாயாக; (எ.று)

இளைஞ்ஞன்-மிகுதல்விகாரம், கையமைத்தல்-கையமர்த்துதல் : கையால் சைகை காட்டுதல். உய்த்தவன் - வினையாலணையும் பெயர். கொல்-அசை. ஓகாரம்-விகற்பப்பொருளது. (10)

11 சஞ்சயன் கூறிய வார்த்தைக்குத் தருமன் பதிலிறுத்தல்.

வாட்டி றற்றுரி யோத னாதியர்
மாட லாதரு ளாரியர்
பாட்டன் நற்குண விதுர னாதியர்
பால டுஞ்சமர் கருதலோ
நாட்டில் ராசதன் மத்தை மன்னவர்
நாட்ட னற்றவ மெந்தையெம்
மாட்ட ருட்டிறம் பினுவ ணங்குதெய்
வதத்த ருட்டிறம் பொய்க்குமோ ?

(இ-ள்) வாள் திறல் துரியோதனாதியர் மாடு அலாது-வாளாயுதத்தில்வல்ல (போர் செய்யும் திறமையுள்ள) துரியோதனாதியரோடு போரிடுதலில்லாமல், அருள் ஆரியர்-வில்வித்தை கற்பித்தருளிய துரோணாசாரியர், பாட்டன்-வீடுமன், நற்குண விதுரன்-நல்ல பண்புகளையுடைய விதுரன், ஆதியர்பால்-முதலியோரிடத்து, அரும் சமர்-கொல்லுந்தன்மையுள்ள போரினைச் செய்ய, கருதலோ?— எண்ணுவதோ? (எண்ணுவது அதர்மமாகுமே என்றான் சஞ்சயன்): [அந்த வினாவுக்கு விடையாகத் தருமன்] நாட்டில்-, ராசதன்மத்தை-அரச நீதியை, மன்னவர் நாட்டல்-அரசர்கள் நிலைநாட்டுதல், நல்

தவம்-நல்ல தவத்திற் கொப்பாகும்: எந்தை-எம் பெரிய தந்தை யாகிய திருதராட்டிரன், எம்மாட்டு அருள் திறம்பினும்-எங்களிடத்துக் கருணைமாறினாலும், வணங்கு தெய்வதத்து அருள்திறம்- [யாங்கள் எப்போதும்] வழிபடும் தெய்வமாகிய கிருஷ்ணனின் கருணைத்திறம், பொய்க்குமோ ? - தவறுமோ ? (என்றும் தவறாது: நற்பயனை விளைக்கும்) : (எ.று).

கருதலோ ?-ஓகார விடைச்சொல் வினாப்பொருளில் வந்து எதிர் மறை குறித்தது. நாட்டல்+நற்றவம்=நாட்டனற்றவம்: "னலமுன் றனவும்...... ஆகுந் தநக்களாயுங்காலே" என்றது விதி. (நன் : மெய் : 34). வணங்கு தெய்வதம் என்றது கிருஷ்ண பகவானை. பொய்க்குமோ, ஓகாரம்-எதிர்மறை. (11)

12. சஞ்சய முனிவனை நோக்கிக் கண்ணன் கூறுதல்.

என்று திட்டிர னுரைசெய் போதரி
யிவர்க ளோடுவல் பொருதுபார்
வென்று கொள்ளினுங் கற்பி னுடனை
வெய்ய சொற்சொலி துகிறொடற்
கொன்று மோவவ ணுற்ற மேலவர்
உணர்வு மன்னனுக் கோதினால்
பொன்று வார்களோ விவையெ லாம்விழி
பொய்த்த வன்செய லாமரோ.

(இ-ள்) என்று உதிட்டிரன் உரைசெய் போது-என்று தரும புத்திரன் சொன்னபோது, அரி-விஷ்ணுவினமிசமாகிய கிருஷ்ணன், 'இவர்களோடு - இப்பாண்டவர்களோடு, வல் பொருது - சூதாட் டத்தைச் செய்து, பார் வென்று கொள்ளினும் - துரியோதனாதியர் பூமியைக் கவர்ந்து கொண்டாலும், கற்பினாள் தனை-கற்பிற் சிறந்த திரௌபதியை, வெய்ய சொல் சொலி-கொடிய சொற்களைச் சொல்லி, துகில் தொடற்கு-ஆடையைத் தொட்டு உரிதற்கு, ஒன்றுமோ- பொருந்துமோ ? (பொருந்தாதே): (அன்றியும்) அவண் உற்ற மேலவர்-அங்கேயிருக்கின்ற [வீடுமன் துரோணன் போன்ற] பெரி யோர்கள், மன்னனுக்கு உணர்வு ஓதினால்-திருதராட்டிரனுக்கு நல்ல புத்தி புகட்டிச் சொல்லியிருப்பாரானால், (இப்போது) பொன்றுவார் களோ—இறக்கும்படி நேர்படுமோ ? (போரைத் தவிர்த்துச் சுகமா யிருக்கலாமே) : இவை எலாம்-இப்போது உன்னைத் தூதனுப்பும்படி

நேர்ந்த இச்செய்திகளெல்லாம், விழி பொய்த்தவன் - குருடனாகிய திருதராட்டிரனது, செயலாம் - செய்கைகளாகும்; (எ.று). அரோ- ஈற்றசை.

சூது போர்செய்து நாட்டை வென்று கவர்ந்து கொண்டாலும், கற்புடைய அவர்களின் தேவியை வசைபேசித் துகிலுரிந்த செயல் அடாததாகும் என்றபடி, 'பொன்றுவார்களோ?' என்றதால் மேலவர் போரில் இறத்தல் திண்ணம் என்று குறிப்பிற் காட்டியபடி. கிருஷ்ணன் முக்காலமும் உணர்ந்த முழுமுதற் கடவுளாதலின், 'அரி' என்ருர். 'விழி பொய்த்தவன்' என்றது—ஊனக் கண்ணோடு ஞானக் கண்ணும் இல்லாதவன் என்றபடி. வெய்ய சொல்- பொதுமகள் என ஏசியது. (12)

13. வீமார்ச்சுனர் கூறுதல்.

பற்கு ணன்கதை யோன்வெ குண்டெதிர்
பாய்ந்து நூற்றுவ ராகிய
துற்கு ணத்தரை வீட்டி யம்புவி
தூய வெண்குடை நீழலில்
நற்கு ணத்தரு மன்பு ரந்திட
நல்க லுண்மைநீ யோருதி
சற்கு ணத்தவ வென்று ரைத்திட
சஞ்ச யன்றளர்ந் தோதுவான்.

(இ-ள்) பற்குணன்-அருச்சுனன், கதையோன்-வீமசேனன், வெகுண்டு-(இருவரும்) கோபித்து, நூற்றுவராகிய துற்குணத்தரை- துரியோதனுதியராகிய நூறு குணக்கேடரை, எதிர் பாய்ந்து-எதிரிட்டு மேல் விழுந்து விரைந்து, வீட்டி-கொன்ருெழித்து, தூய வெண்குடை நீழலில்-புனிதமான வெண்கொற்றக்குடையின்கீழ், அம் புவி-அழகிய இப்பூவுலகத்தை, நற்குணத்தருமன்-நல்ல பண்புகளையுடைய [எமது அண்ணனுகிய] தருமராசன், புரந்திட-பாதுகாக்கும்படி, நல்கல்_ (நாங்கள்) வழங்குதல், உண்மை-சரதம்: சற்குணத்தவ-நற்குணத் தவனே! நீ—, ஓருதி-(நன்கு) தெரிந்து கொள்வாய்: என்று உரைத் திட-என்று சொல்ல, சஞ்சயன்-தளர்ந்து-ஊக்கங்குன்றி, ஓதுவான்- கூறுவானுயினன்; (எ.று.)

பற்குணன் = பற்குனன் : எதுகைநயம் நோக்கி 'ணகரம்' வந்தது. துற்குணத்தர் = துர்க்குணத்தர் : எதுகை நோக்கி 'றகர' மாயிற்று. ஒருதி-முன்னிலைவியங்கோள். (13)

14. சஞ்சயனுக்கு விடைநல்கித் தருமன் கூறலுறல்.

இங்கு ரைத்திடு மென்சொலிற் பய
னேய தொன்றிலை யாவையும்
அங்க டைந்தர சற்கு ணர்த்துவன்
அறையு மென்மொழி யிற்பிழை
தங்கி னும்பொறுத் தெற்கு நீர்விடை
தருகெ னத்தரு மன்சொல்வான்
எங்க ளுக்கர சன்பொ டன்றரு
ளெந்தை யவ்வருள் பொய்ப்பினும்.

'(இ-ள்) இங்கு உரைத்திடும் என் சொலில்-இவ்விடத்து யான் கூறிய மொழிகளில், ஏயது பயன் ஒன்று இலை-பொருந்தியதாகிய நற்பயனொன்றுமில்லை : (ஆகவே) அங்கு அடைந்து-அத்திநபுரிக்குச் சென்று, யாவையும்-[நீங்கள் கூறிய] எல்லாவற்றையும், அரசற்கு உணர்த்துவன்-திருதராட்டிர மன்னனுக்குச் சொல்லுவேன்: அறையும் என் மொழியில் பிழை தங்கினும்-நான் (இங்குக்) கூறிய வார்த்தைகளில் (ஏதாவது) தவறு இருக்குமாயின், பொறுத்து-(அவற்றையேற்றுச்) சகித்து, எற்கு-எனக்கு, நீர் விடை தருக-நீங்கள் விடைகொடுப்பீராக' என-என்று சஞ்சயன் கூற தருமன் சொல்வான்-தருமபுத்திரன் கூறுவானாயினன்: 'எங்களுக்கு—, அரசு-உரிய அரசாட்சியை, அன்று-வாரணவத நகரத்துக்கு அனுப்பிய நாளில், அன்போடு-பிரியத்தோடு, அருள்-கொடுத்த, எந்தை-திருத ராட்டிர மன்னர், (இன்று) அ அருள் பொய்ப்பினும்-அந்தக் கருணை மாறிப்போனாலும்; (எ.று.) '× × × சொல்திறம்போம்' என மேலைக் கவியில்இயையும்.

ஏயது-பொருந்துவது : குறிப்புவினையாலணையும் பெயர். அறையும்-பெயரெச்சம். உணர்த்துவன் - தன்மையொருமை. தருக - முன்னிலை வியங்கோள். (14)

15. தருமன் கூறியவை கேட்டுச் சஞ்சயன் மீளுதல்.

இன்று ளத்தினுக் கிசைவு நல்கிடின்
எந்தை சொற்றிறம் போமவர்
அன்று செய்தவை யொன்று முன்னலம்
அண்ண லுக்கிவை யோதிசீர்
துன்ற றிஞ்ஞருக் கெமது வந்தனஞ்
சொற்றெ வர்க்குநீ வினவலோ
தென்று டைக்கல னல்கி யுய்த்தனன்
எய்து சஞ்சய னேகினன்.

(இ-ள்) 'இன்று-இந்தத் தடவை, உளத்தினுக்கு-எம் கருத்திற்கு, இசைவு நல்கிடின்-சம்மதம் கொடுப்பராயின், (நாங்கள்) எந்தை-எமது தந்தையாகிய திருதராட்டிரனின், சொல் திறம்போம்-வார்த்தையை மீறமாட்டோம்: (மேலும்) அவர்-அந்தத் துரியோதனனதியர், அன்று செய்தவை-முன்னாட்களில் செய்த கொடுமைகளில், ஒன்றும் உன்னலம்-ஒன்றுகூட நினைக்கவும் மாட்டோம்: அண்ணலுக்கு-பெரியோனாகிய திருதராட்டிரனுக்கு, இவை ஓதி-இச் செய்திகளைச் சொல்லி, (மற்றும்) சீர் துன்று அறிஞ்ஞருக்கு-சிறப்புமிக்க ஞான வான்களாகிய வீடுமன் துரோணன் முதலியோருக்கு, எமது வந்தனம் சொற்று-எமது வணக்கங்களைத் தெரிவித்து, எவர்க்கும்-(அங்குள்ள) அனைவர்க்கும், நீ—, வினவல் ஓது-எமது விசாரிப்புக்களைச் சொல்லுவாயாக, என்று-என்று (தருமன்) கூறி, உடை கலன் நல்கி-ஆடையாபரணங்களைக் கொடுத்து, உய்த்தனன் - அனுப்பினான்: எய்து சஞ்சயன்-வந்த சஞ்சயமுனிவனும், ஏகினான்-அத்தினபுரிக்குத் திரும்பிச் சென்றான்; (எ.று).

திறம்போம், உன்னலம்-தன்மைப் பன்மை யெதிர்மறை வினைமுற்றுக்கள். அறிஞ்ஞர்-விரித்தல் விகாரம் வினவல்-கேட்டதாகச் சொல்லுதல்; தொழிற்பெயர். உடைக்கலன் - உம்மைத்தொகை. (15)

வேறு.

16. சஞ்சயன் அத்தினபுரி மீண்டு திருதராட்டிரனிடம் கூறுதல்.

அத்தின புரியுத் தமனடைந் தரசை
யடிபணிந் தையநின் மொழியப்

புத்திரர்க் குணர்த்தி யவர்கருத் தறிந்தேன்
புவிவழங் காயெனிற் சரதம்
இத்தனை யருநின் வாழ்வுமே போமென்
றிஃதலா லுளதுபன் மொழிகள்
மித்திர னுதயத் தவையிடை யுணர
விளம்புவ லென்றகம் புகுந்தான்.

(இ-ள்) உத்தமன்-சஞ்சயமுனிவன், அத்தினபுரி அடைந்து-அத்தினபுரத்தைச் சேர்ந்து, அரசை அடிபணிந்து - திருதராட்டிர மன்னனின் பாதங்களை வணங்கி, ஐய-பெரியோனே! நின் மொழி-நீர் சொல்லியனுப்பிய வார்த்தைகளை, அ புத்திரர்க்கு உணர்த்தி-அந்தப் பாண்டவர்க்குத் தெரியச் சொல்லி, அவர் கருத்து அறிந்தேன்-அந்தப் பாண்டவர்களின் எண்ணத்தையும் தெரிந்துகொண்டேன்; புவி வழங்காயெனில்-அவர்க்குரிய நாட்டினைக் கொடாமலிருப்பாயாயின், இ தனையரும்-இந்தப்பிள்ளைகளாகிய துரியோதனாதியரும், நின் வாழ்வும்-உன்னுடைய செல்வ வாழ்க்கையும், போம்-அழிந்துபோகும். சரதம்-(இஃது) நிச்சயம், என்று-என்று (பீடிகையிட்டுக்) கூறி, (மற்றும்) இஃது அலாது-இதனைத் தவிர, [மேலும்], பன்மொழிகள் உளது-பல செய்திகள் கூறவேண்டியவையுள: [அவைகளை] மித்திரன் உதயத்து-சூரியோதய காலத்து, அவை இடை-சபா மண்டபத்தில், உணர (அனைவரும்) தெரிந்துகொள்ளும்படி, விளம்புவல்-சொல்லுவேன், என்று-என்று மொழிந்து, அகம் புகுந்தான்-அரண்மனையினுட் சென்றான்; (எ.று).

'உதயத்து விளம்புவல்' என்றதால், திருதராட்டிரனைக் கண்டு பணிந்து முதலிற்கூறியது நிசியிலென்க. பன்மொழிகள் உளது-பன்மை யொருமை மயக்கம். விளம்புவல்-தன்மையொருமை.

இதுமுதல் ஆறுகவிகள்—இரண்டு நான்கு ஏழாஞ்சீர்கள் மாச்சீர்களும், மற்றை நான்கும் விளச்சீர்களுமாகி வந்த **எழுசீராசிரிய விருத்தங்கள்.** (16)

17. திருதராட்டிரன் விதுரனை யழைத்தல்.

சஞ்சய னுரையால் நஞ்சருந் தினன்போற்
றளர்ந்துயிர்த் துறக்கமற் றரசன்

வெஞ்சிலை விதுரன் றன்னையொற் றேவி
விளித்தன னவனும்வந் துசாவப்
பஞ்சவ ருரைகொண் டெய்தினேன் சிலசொற்
பகர்ந்தினும் பகர்வனென் றகன்றான்
துஞ்சலில் லாம னீண்டவிப் பொழுது
தொலைக்குமா றழைத்தன னென்றான்.

(இ-ள்) சஞ்சயன் உரையால்-சஞ்சயமுனிவன் கூறிய வார்த்தைகளைக் கேட்டு, நஞ்சு அருந்தினன்போல்-விஷத்தையுண்டவன் போல, தளர்ந்து-சோர்ந்து, உயிர்த்து-பெருமூச்சுவிட்டு, உறக்கம், அற்று-தூக்கமின்றி, அரசன்-திருதராட்டிரன், வெம் சிலை விதுரன் தன்னை-கொடியவில்லையேந்திய விதுரனை, ஒற்று ஏவி விளித்தனன்-தூதுவனையனுப்பி (த்தன்னிடம் வரும்படி) அழைத்தான்: அவனும் வந்து உசாவ-அந்த விதுரனும்[திருதராட்டிரனிடம்]வந்து[அழைத்த காரணத்தை] விசாரிக்க, (திருதராட்டிரனும்) 'பஞ்சவர் உரை கொண்டு எய்தினேன்-பாண்டவருடைய வார்த்தைகளைக் கேட்டு வந்த சஞ்சயன், சில சொல் பகர்ந்து-ஒருசில செய்தி மட்டும் கூறிவிட்டு, இனும் பகர்வன்-மேலும் இருப்பவற்றை [நாளை உதயத்தில்] கூறுவேன், என்று அகன்றான்-என்று சொல்லிப் போயினான்; (ஆகவே) துஞ்சல் இல்லாமல்-(எனக்குத்) தூக்கம் வராமல், நீண்ட இப்பொழுது-நெடிதாக நீட்டித்துத் தோன்றும் இந்த இராப் பொழுதை, தொலைக்குமாறு-கழிக்கும்படி, அழைத்தனன்-(உன்னைத் துணையாகக் கொள்ள) வரவழைத்தேன், என்றான்-என்று கூறினான்; (எ-று.)

கவலையுற்றவர்க்கு இரவு நீட்டித்துத் தோன்றுதல் இயல்பு. 'தனையரும் நின்வாழ்வும் சரதம் போம்' என்றதால் விடமுண்டவன் போல் வருந்தினான் என்றார். இனும் - இன்னும் என்பதன் தொகுத்தல். (17)

18. **விதுரனையழைத்ததற்குக் காரணம் கூறுதல்.**

பொருளிழந் தவனும் கல்விவேண் டினனும்
பொருநரை வெல்வலி யிலனும்
விரகமுற் றவனும் வஞ்சநா டினனும்
விழியுறங் காருனக் கென்னென்

றருளினன் வினவச் சுதர்களென் படுமோ
அமரிலென் றனந்தலெய் தாமற்
பருவர லுழந்தேன் எம்பிபோர் வாரா
பரிசுரைத் திடரகற் றென்றான்.

(இ-ள்) பொருள் இழந்தவனும் - செல்வத்தையிழந்தவனும், கல்வி வேண்டினனும்-வித்தை கற்ப விரும்புபவனும், பொருநரை-பகைவரை, வெல்வலி இலனும் - வெல்லும் வலிமையில்லாதவனும், விரக முற்றவனும்-காமத்தால் பிரிவுநோய் அடைந்தவனும், வஞ்சம் நாடினனும்-வஞ்சனை செய்யச் சூழ்பவனும், விழி உறங்கார்-கண் துஞ்சமாட்டார்கள் : உனக்கு என்-(மன்னனாகிய) உனக்கு என்ன துன்பம் நேர்ந்தது, என்று அருளினால் வினவ-(விதுரன்) கருணை கொண்டு கேட்க, (அதற்குத் திருதராட்டிரன்) 'அமரில் சுதர்கள் என்படுமோ என்று-போர் நிகழில் என் பிள்ளைகளாகிய துரியோதனாதியர் நூற்றுவரும் என்னபாடுபடுவரோ ? (இறப்பரோ ?) என்று கவலைகொண்டு, அனந்தல் எய்தாமல்-தூக்கம்வராமல், பருவரல் உழந்தேன்-துன்பமுற்று அலைகின்றேன் : எம்பி !-என் தம்பியே ! போர் வாரா பரிசு-போர் நிகழாதவண்ணம், உரைத்து - (என்ன செய்யவேண்டும் என்பதைச்) சொல்லி, இடர் அகற்று-என் கவலைத் துன்பத்தைப் போக்குவாயாக', என்றான்-என்று கூறிவேண்டினான்; (எ-று).

செல்வமிழந்தவன், கல்வியை நாடிக் கற்க விரும்புபவன், பகை வரையஞ்சுபவன், காதல் நோயுற்றவன், வஞ்சனை சூழ்பவன் இவர்கள்தாம் தூக்கமில்லாமல் வருந்துவர் : நீர் பேரரசராயிற்றே : உமக்கென்ன கவலை தூக்கம் வராமலிருப்பதற்கு என வினவினன் விதுரன் என்க. எம்பி - விளி : என் தம்பியென்பதன் மரூஉ. வாரா-ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். அகற்று - முன்னிலை வியங்கோள். (18)

19. விதுரன் நன்மதி கூறுதல்.

இரண்டுகவிகள் — ஒருதொடர்.

என்றலும் விதுர னியம்புமன் னவநின்
இளவனந் தனர்தமை வருவித்
தன்றுபோ லவனி யளித்திடின் நின்சொல்
லவர்மறுத் திடார்பெருஞ் சுதர்சொற்

கொன்றிநல் காயேல் அன்றவை நீவிர்
உஞற்றுவஞ் சனையெலா நினைத்தே
கொன்றரசடைவர் குலமொடுன் சுதரைக்
கொற்றவர் பெரும்படை யோடும்.

(இ-ள்) என்றலும்-என்று திருதராட்டிரன் கூறினவுடன், விதுரன்—, இயம்பும்-கூறுவானாயினான் : 'மன்னவ!-அரசனே !, நின் இளவல் நந்தனர்தமை வருவித்து-உன்னுடைய தம்பியாகிய பாண்டுவின் புத்திரர்களை வரவழைத்து, அன்றுபோல்-முன்னர் போல், அவனி அளித்திடின் - (அவர்க்குரிய) நாட்டினைக் கொடுப்பாயின், நின் சொல் - உன்னுடைய வார்த்தையினை, அவர் - அந்தப் பாண்டுபுத்திரர்கள், மறுத்திடார்-மீறிப் பேசமாட்டார்கள் : (அங்ஙனன்றி) பெறும் சுதர் சொற்கு ஒன்றி-நீ பெற்ற பிள்ளைகளின் வார்த்தைக்கிணங்கி, நல்காயேல் - கொடுக்காமலிருப்பாயாயின், அன்று-சூதாட்டம் ஆடிய அந்நாளில், அவை-சபையில் நீவிர்-நீங்கள், உஞற்று-செய்த, வஞ்சனையெலாம் நினைத்து-கொடுமைகளையெல்லாம் எண்ணி, கொற்றவர்-அந்தப் பாண்டவர், பெரும்படையோடும்-[தம்துணைவராலான] பெருத்த (சேனையோடும்) வந்து, குலமோடு உன் சுதரைக்கொன்று-உன் இனத்தோடு உன்பிள்ளைகள் நூற்றுவரையும் அழித்து, அரசு அடைவர் - [தமக்குரித்தாய] அரசாட்சியை எய்துவர் ; (எ.று).

'அன்றுபோல் அவனியளித்திடின்' என்றது-முன்னர் இந்திரப்பிரத்த நகரத்தில் தருமபுத்திரர்க்குத் திருதராட்டிரன் பட்டாபிஷேகம் செய்வித்ததைக் குறிக்கும். இதனை ஆதி பருவத்துப் பதினேழாஞ் சருக்கத்தாலுணரலாம். அவை-சபை. வஞ்சனை-துகிலுரிந்ததுபோல்வன. இயம்பும்-செய்யுமென்முற்று. (19)

20. திருதராட்டிரன் விதுரனையனுப்பிவிட்டு, மறுநாட்காலை அவையிலிருத்தல்.

ஆதலி னவரை யழைத்தர சுதவி
ஐய ! நின் அணங்ககன் றிடுகென்
றேதபிற் பகனின் னுரைப்படி யெம்பி !
யுலகவர்க் களிப்பனீ யகத்திற்

போதியென் றேவிப் புலர்ந்தபின் கடனப்
பூபதி யியற்றிபுக் கவைபால்
வேதிய ரீன்றோன் இளவல்புத் திரர்பல்
வேந்தர்மற் றியாரொடு மிருந்தான்.

(இ-ள்) ஆதலின்-ஆகையினால், ஐய-பெரியோனே! அவரை அழைத்து-அந்தப் பாண்டுபுத்திரர்களை வரவழைத்து, அரசு உதவி-(அவர்க்குரித்தாய) அரசாட்சியைத் (திரும்பக்) கொடுத்து, நின் அணங்கு அகன்றிடுக-உன் கவலைத் துன்பத்தைப் போக்கிக் கொள்வாயாக, என்று ஓத-என்று நற்புத்தி சொல்ல, (அப்போது திருதராட்டிரன்) எம்பி!-என் தம்பியாகிய விதுரனே! நின் உரைப்படி-நீ சொன்னபடியே, பிற்பகல்-நாளை பிற்பகற்போதில், அவர்க்கு-அந்தப் பாண்டவர்க்கு, உலகு அளிப்பல்-(அவர்க்குரிய) நாட்டைக் கொடுப்பேன்: நீ—,அகத்தில் போதி-மனைக்குள் போவாய் (உறங்குவாயாக)-என்று ஏவி-என்று அனுப்பிவிட்டு, புலர்ந்த பின்-பொழுது விடிந்த பிறகு, அ பூபதி-அந்த மன்னன் திருதராட்டிரன், கடன் இயற்றி காலைக் கடன்களைச்செய்து முடித்து, அவைபால் புக்கு-சபையிடத்திற்கு எழுந்தருளி, வேதியர்-துரோணாசாரியர், ஈன்றோன்-அவர் மகன் அசுவத்தாமன், இளவல்-தம்பியாகிய விதுரன், புத்திரர்-துரியோதனாதியராகிய பிள்ளைகள், பல் வேந்தர்-பலவரசர்கள், மற்று யாரொடும்-மேலும் (சபைக்கு வந்திருந்த) அனைவரோடும், இருந்தான்-வீற்றிருந்தான்; (எ.று.)

விதுரன் சொற்படியே மறுநாட் பிற்பகல் பாண்டவர்க்கு நாடளிப்பதாகக் கூறித் திருதராட்டிரன் அன்றிரவைக் கழித்தான் என்றபடி. இடுகென்று-வியங்கோளின் அகரவீறு தொகுத்தல். அளிப்பன்-தன்மையொருமை. போதி-முன்னிலையேவல். ஈன்றோன், வினையாலணையும்பெயர். (20)

21-29. ஒன்பது கவிகள்—சஞ்சயன் கூறியவை கூறும்.

புனிதரிற் சிறந்த சஞ்சயன் காலைப்
புரிகட னியற்றிமன் னவைபுக்
கின்னவன் றனைமன் னவன்கணுற் றைவர்
கிளத்திய தெலாமெடுத் துரைத்தி
யெனவவ னுரைப்பான் யானுப லாவிய
மெனுநக ரணுகிமா லமர்ந்த

மனைபுகுந் தொற்று லடைந்தமை யுணர்த்த
வரவருள் புரிதலு மடைந்தேன்.

(இ-ள்) புனிதரில் சிறந்த சஞ்சயன்-பரிசுத்தமான முனிவர்களில் சிறந்த சஞ்சயன், காலை புரி கடன் இயற்றி-காலையிற் செய்யவேண்டிய கடமைகளைச் செய்து, (பின்) மன் அவை புக்கு-அரச சபையிற் புகுந்து சேர, இன்னவன் தனை-இந்த முனிவனை, மன்னவன் கனுற்று-திருதராட்டிரன் வரவறிந்து, ஐவர் கிளத்தியது எலாம் எடுத்து உரைத்தி என-பஞ்சபாண்டவர்கள் கூறியனவனைத்தையும் அனை வர்க்கும் தெரிய வெடுத்துக் கூறுவாயாக என்று கட்டளையிட, அவன் உரைப்பான்-அச்சஞ்சயமுனிவன் கூறலாயினன்: "யான்-நான், உபலாவியம் எனும் நகர் அணுகி-உபப்பிலாவியம் என்று பெயர் பெற்ற நகரத்தைக்கிட்டி, (ஆங்கு) மால் அமர்ந்த மனை புகுந்து-திருமாலினவதாரமாகிய ஸ்ரீகிருஷ்ணன் தங்கியிருந்த வீடு சென்று, ஒற்றால்-(ஆங்கிருந்த) தூதுவரால், அடைந்தமை உணர்த்த-வந்திருந் தமையைத் தெரிவிக்க, (அவர் உடனே) வர அருள்புரிதலும்-தம் மிடத்து வரும்படி கிருபை செய்தருளவும், அடைந்தேன் - அவர் சந்நிதியையடைந்தேன்; (எ.று).

புனிதரிற் சிறந்தவனுதலின், முதன்முதலில் உபப்பிலாவியத்து மாலமர்ந்திருந்த மனைபுகுந்தானென்க. புக்கு-புக: எச்சத்திரிபு. இன்னவன்-குறிப்பு வினையாலணையும்பெயர். ஐவர் - தொகைக் குறிப்பு. கிளத்தியதெலாம்-ஒருமைப்பன்மை மயக்கம். உரைத்தி-முன்னிலையேவல். அடைந்தமை - தொழிற்பெயர். பிறவிக் குருட னுதலின், திருதராட்டிரன் 'கனுற்று' என்றது-கண்ணுற் பார்த்தலைக் குறிக்காது, வரவு அறிந்தமையை யுணர்த்தும் என்று கொள்க. (21)

வேறு.

22. சஞ்சயன் கிருஷ்ணார்ச்சுனரைக் கண்டமை.

மஞ்சமீது ருக்குமணி வட்டமத சைப்ப
எஞ்சலறு வேள்விகொடி சாமரையிரட்ட
வெஞ்சிலைவ லானுடைருண் மெய்ப்புய லுறக்கண்
டஞ்சலிசெய் தேனருகி லங்கவர ழைத்தே.

(இ-ள்) உருக்குமணி-(மனைவியாகிய) ருக்மிணிப் பிராட்டியார், வட்டம் அது அசைப்ப-விசிறிகொண்டு வீச, எஞ்சல் அறு வேள்வி கொடி-(யாதொரு) குறைவுமில்லாத திரௌபதி, சாமரை இரட்ட-

வெண்சாமரையை வீச, அருள் மெய்ப்புயல்-கருணையே வடிவாய்க் கொண்ட மேகம்போன்ற ஸ்ரீகிருஷ்ணன், வெஞ்சிலை வலானொடு-கொடிய [காண்டீபமென்னும்] வில்லையுடைய அருச்சுனனோடு, மஞ்சம் மீது-கட்டிலின் மீது, உற கண்டு-ஒருசேரப் பொருந்தியிருத் தலைப்பார்த்து, அஞ்சலி செய்தேன்-கைகூப்பி வணங்கினேன் : (அப்போது) அவர்-அந்தக் கிருஷ்ணன், அருகில் அழைத்து-தமது சமீபத்தில் வரவழைத்து ; (எ று.) "தருதவிசு" என மேலைக் கவியிலியையும்.

உருக்குமிணி ஆலவட்டம் வீசவும், திரௌபதி சாமரையிரட்ட வும் கிருஷ்ணார்ச்சுனர் ஒரு சேரக் கட்டிலின்மீது அமர்ந்திருந்தன ரென்று சஞ்சயன் கூறியதால், அவ்விருவரிடையுள்ள நட்புச் செறிவைப் புலப்படுத்தினான் என்க. மற்றும், எங்குக் கிருஷ்ணனும் விற்பிடித்த அருச்சுனனும்-ஒருசேர இருக்கின்றனரோ அங்கு அவர்க்கு வெற்றி நிச்சயம் எனத் தன் துணிபைத் தெரியப்படுத்திய படியுமாம் : அது மேலைக்கவியில் விசதமாகும்

"யத்ரயோகேச்வர : க்ருஷ்ணோ யத்ர பார்த்தோ தனுர்த்தர:
தத்ர ஸ்ரீர்விஜயோ பூதிர் த்ருவா நீதிர் மதிர் மம

என்ற சஞ்சயன் வார்த்தை நினைக்கத்தக்கது. வட்டம்-ஆலவட்டம். விசிறி: "செங்கேழ் வட்டஞ்சுருக்கி" (நெடுநல்: 58) வேள்விகொடி - யாகத்தினின்று தோன்றிய கொடிபோன்ற திரௌபதி: அடையடுத்த உவமவாகுபெயர். இரட்டுதல்-மாறிமாறி வீசுதல். புயல்-உருவகம்.

இதுமுதல் ஐந்துகவிகள்—பெரும்பாலும் முதல் மூன்றும் காய்ச் சீர்களாகவும் ஈற்றுச்சீர் மாச்சீராகவும் வந்த கலிவிருத்தங்கள். (22)

23. தருமனைப் போரில் வெல்ல முடியாது எனச் சஞ்சயன் துணிதல்:

தருதவிசி ராதவனி தன்மிசையி ருந்தே
கரியவுரு வாரையிரு கண்குளிர நோக்கிப்
புரியிலிவ ரேவலறன் புத்திரனை வெல்வோ
ரொருவருல கில்லையென வுள்ளின னகத்தே.

(இ-ள்) தரு தவிசு இராது-(அவர்கள்) சமர்ப்பித்த ஆசனத்தில் அமராது, அவனிதன் மிசை இருந்தே-தரையின்மேல் உட்கார்ந்து கொண்டே, கரிய உருவாரை-கருநிறம் படைத்த கிருஷ்ணார்ச்சுனர் களை, இருகண் குளிர நோக்கி-(எனது) இரண்டுகண்களும் மகிழும் படி பார்த்து, "இவர்-இந்தக் கிருஷ்ணார்ச்சுனர் இருவரும் ஒருசேர, ஏவல் புரியில்-(சேவகர்களாய்க்) கைங்கரியஞ் செய்வாராகில், அறன் புத்திரனை-தருமனை, வெல ஓரொருவர் உலகு இல்லை-ஜெயிக்க ஒருத்தர்கூட இப்பூமியில் இல்லை, என-என்று, அகத்தே உள்ளினன்-மனதினில் நினைத்தேன்; (எ.று).

கிருஷ்ணர்ச்சுனர் இருவரும் சேரவிருந்து ஏவல்புரிவராயின், தருமனைப் போரில் வெல்வதென்பது ஒருவர்க்கும் சாத்தியமில்லை யென்று நினைத்தான் சஞ்சயன் என்க. "யத்ர யோகேச்வர: க்ருஷ்ணோ" என்ற கீதா சுலோகம் முன்செய்யுளுரையில் காட்டப் பட்டது ஈண்டும் அநுசந்தேயம். தவிசிராது அவனிமிசையிருந்தது-நரநாராயணர் என்ற ரகசியம் உணர்ந்தமை பற்றியென்க. கண் குளிர நோக்கியதற்கும் அதுவே காரணமாம். "மேனாள் நரனும் நாரணனுமானோம்" என்றான் கிருஷ்ணன் (வில்லி: வீட்டும: முதற்: 6) பார்த்தன் நிறம் கறுப்பு என்பதை வில்லியாரும் "பார்த் தனருச்சுனன் கரியோன் விசயன் ××× சுவேதவாகனெனுந் நாமம் படைத்தோன்" என்று காட்டியுள்ளார். (ஆதி: அருச்: 44) கரியோ னாதலின், அருச்சுனனுக்குக் "கிருஷ்ணன்" என்றும் ஒருநாமமுண்டு. [கிருஷ்ணன்-கருநிறமுடையவன் என்று அவயவப்பொருள்.] (23)

24-26. சஞ்சயனுக்குக் கிருஷ்ணன் கூறியவை.

மூன்று கவிகள்—ஒரு தொடர்.

ஆயபொழு தெய்துபரி சியாதெனவ றைந்தேன்
மாயவன தற்குமுடி வாயிவைவ குத்தான்
பாயுமம ருக்கிவர்ப யந்திலரி வர்க்கு
நேயமொடி தஞ்சொலிநி லந்தரல்வ ழக்கே.

(இ-ள்) ஆய பொழுது-அந்தச் சமயத்தில், (அவர் நீர்) எய்து பரிசு யாது என-வந்தவகை எதற்காக என்று வினவ, அறைந்தேன்-வந்த காரியத்தைப் பற்றிச் சொன்னேன்: அதற்கு-யான் கூறியவற் றுக்கு, மாயவன்-கிருஷ்ணன், முடிவாய்-துணிந்த பொருளாக, இவை வகுத்தான்-இந்த வார்த்தைகளைக் கூறினான்: பாயும் அமருக்கு-(எதிரிகள்மேல்) பாய்ந்து செய்யும் போரினுக்கு, இவர்—இப்பாண்ட வர்கள், பயந்திலர்-அஞ்சவில்லை: இவர்க்கு—, நேயமொடு-சிநேகத் தோடு, இதம் சொலி-(கோபந்தணியுமாறு) நல்ல நன்மைதரும் வார்த்தைகளைச் சொல்லி, நிலம் தரல்-நாடு வழங்குதல், வழக்கு-நியாயமாகும்; (எ.று).

பாண்டவரோடு நட்புறவுகொண்டு அவர்க்குரித்தாய நாட்டை வழங்குதல் தகுதியுடைத்து என்று கிருஷ்ணன் கூறினான் என்றபடி. பரிசியாது-குற்றியலிகரம். அறைந்தேன்-தன்மையொருமை. (24)

25. இவ்வகையி யற்றமன தில்லையெனில் வெம்போர்
தெவ்வரையி குத்தரசு செய்திடுத லாண்மை
எவ்வகையு மின்றியுனை யேவலிவர் கோப
வெவ்வழலை வளர்த்திடநெய் விட்டிடுதல் போலாம்.

(இ-ள்) இ வகை-இந்த என்சொற்படி, இயற்ற-செய்ய, மனது இல்லையெனில்-எண்ணமில்லையென்றால், (அத்துரியோதனன்) வெம் போர்-கொடிய போர்க்களத்தில், தெவ்வரை இகுத்து-பகைவரை வென்றழித்து, அரசு செய்திடுதல்-அரசாட்சி செய்தல், ஆண்மை-வீரர்க்கு அழகாகும்: (இங்ஙனிருப்ப) எ வகையும் இன்றி-எந்த வழிக்கும் வராமல், உனை-முனிவணுகிய உன்னை, ஏவல்-தூதாகச் செல்லவிடுத்தல், இவர்-இப்பாண்டவர்களின், கோப வெவ் சுழலை வளர்த்திட-சினமாகிய கொடியதீயை மிகுவிக்க, நெய் விட்டிடுதல் போலாம்-நெய்வார்த்திடுதல் போலாகும்; (எ.று).

நட்புறவோடு நாடுகொடுக்க மனமில்லையேல் பகையையொழித் தாவது அரசு செய்தல் ஆண்மையாகும். இருவகையுமின்றித் தூது விடுதல் மேலும் சினமூட்டுஞ் செயலாகும் என்றான் கிருஷ்ணன் என்க. கோபவழல்-சினத் தீ; உருவகம். ஈற்றடியில் உவமையணி. (25)

26. தீதுநல மீதெனதெ ரிந்துரைசெ யாத
தாதைமதி கொண்டிவர்த வத்தடைவ ரோவென்
றோதினனு ருத்துசிலை யோனெனைமு கங்கொண்
டிதுரைசெய் தான்பலரி ருந்துழிசொ லென்றே.

(இ-ள்) (மேலும்) தீது (ஈது) நலம் ஈது என தெரிந்து-இது தீமை இது நன்மை என்று பயனுராய்ந்து, உரை செயாத-தூது மொழி சொல்லியனுப்பாத, தாதை மதி கொண்டு-பெரிய தந்தையாகிய திருதராட்டிரனின் ஆலோசனையையேற்று, இவர்-இப்பாண்டவ வீரர்கள், தவத்து அடைவரோ-தவத்தை மேற்கொண்டு (காடு) செல்வரோ? என்று ஓதினன்-என்று கிருஷ்ணன் கூறிமுடித்தான்: (பிறகு) சிலையோன்-விற்பிடித்த அருச்சுனன், உருத்து-கோபித்து, எனை முகம்கொண்டு-என்முகத்தையேறிட்டுப்பார்த்து, 'பலர் இருந்து உழிசொல்' - ('யான் கூறப்போவதைப்) பலருங்கூடியிருக்குஞ் சபையில் சொல்வாயாக', என்று—,ஈது உரைசெய்தான்-இந்த வார்த் தைகளைச் சொல்லினன்; (எ.று). அவன் கூறியதை மேலைக் கவிகளிற் காண்க.

நன்மை தீமைகளையாராய்ந்து பாராத மதியிலி திருதராட்டிரனின் சொற்கொண்டு பாண்டவர் தவத்தேகார் எனக் கிருஷ்ணன் உறுதியாகச் சொன்னுன்: அதுகேட்டு மேலும் அருச்சுனன் வெகுண்டு தான் கூறுவனவற்றைப் பஹிரங்கமாகச் சபையில் கூறும்படி சஞ்சயனையேறிட்டுப் பார்த்துக் கூறலானுன் என்க. அடைவரோ, ஓ-எதிர்மறை. 'சொல்'-முன்னிலையேவல். (26)

வேறு.

27-29. அருச்சுனன் கூறியவற்றைச் சஞ்சயன் கொண்டு கூறுதல்.

மூன்று கவிகள்—ஒரு தொடர்.

மைந்தருக் கரசீந் தெம்மை
மாதவம் புரியச் சொற்ற
தந்தைசொற் பரிப்போ மெம்மைத்
தையலோ டவம தித்த
வெந்திற லாளர் தம்மை
வீட்டியெஞ் சபத முற்றிப்
பைந்துள வோனை யேத்திப்
பரகதி வேண்டு நாளில்.

(இ-ள்) எம்மை-எங்களைவரையும், தையலோடு அவமதித்த-திரௌபதியாகிய பத்தினியோடு அவமானப்படுத்திய, வெம்திறலாளர் தம்மை-கொடிய வலியுடைய துரியோதனுதியராகிய துட்டர்களை, வீட்டி-கொன்று வீழ்த்தி, எம் சபதம் முற்றி-எங்களுடைய சபத மொழிகளை நிறைவேற்றி, (பின்னர்) பைந்துளவோனை ஏத்தி-(எங்கட்குத் துணையாய் வெற்றியீந்த) பசியதிருத்துழாய் மாலையைத் தரித்த கிருஷ்ணனைத் துதித்துப் போற்றி, பரக்தி வேண்டும் நாளில்-மேலான முக்தியை விரும்புங்காலத்து, -மைந்தருக்கு அரசு ஈந்து-தன் பிள்ளைகளுக்கு அரசாட்சியைக் கொடுத்து, எம்மை-(அவர் தம்பி புத்திரர்களாகிய) எங்களை, மா தவம்புரிய சொற்ற-சிறந்த தவத்தை மேற்கொண்டு செய்யும்படி சொல்லியனுப்பிய, தந்தை சொற்பரிப்போம்-பெரிய தந்தையாகிய திருதராட்டிரரின் சொல்லைத் தாங்குவோம்; (எ.று).

'பரகதி வேண்டுநாளில் பரிப்போம்' என முன்னர் இயையும், 'வெந்திறலாளர்' என்றது-முக்கியமாக, துட்டசதுட்டரைக் குறிப்பதெனலாம். பரிப்போம்-உளப்பாட்டுத் தன்மைப்பன்மை. (27)

28. தேரினி லிபத்தின் மாவிற்
செலத்தகுஞ் செம்ம றன்னைப்
பாரினி னடத்து வித்தப்
பாதக ருடல மெல்லாம்
மூரிவெங் கதையால் வீமன்
மோதிதுண் டுகளாய்ச் செய்து
வீரியஞ் செலுத்தா தாரு
வெஞ்சினந் தணிவன் கொல்லோ ?

(இ-ள்) தேரினில் - தேரிலேறியும், இபத்தில்,-யானைமேலேறியும், மாவில்-குதிரைமேலேறியும், செலத்தகும் - போதற்குத் தகுதிபெற்ற, செம்மல் தன்னை - தருமராசனை, பாரினில் - தரையின்மேல், நடத்துவித்த-(காலால்) நடக்கச் செய்த, அ பாதகர்-அந்தப் பாவிகளுடைய உடலம் எல்லாம்-உடலிலுள்ள அங்கங்களையெல்லாம், வீமன்-(என் அண்ணனாகிய) வீமசேனன், மூரி வெம் கதையால்-(தனது) வலிமை கொண்ட கொடிய கதாயுதத்தினால், மோதி-தாக்கி, துண்டுகளாய்ச் செய்து-சின்னபின்னங்களாகச் செய்து, வீரியம் செலுத்தாது-தன் வீரத்தைக் காட்டிநிறுத்தாது, ஆரு வெம் சினம்-தணியாத கொடுங் கோபம், தணிவன் கொல்-ஆறுவனோ? (ஆறமாட்டானே); (எ.று.). ஓ-ஈற்றசை.

பரிகரி தேரின்மேலே ஏறிச்செல்ல வேண்டிய ராசனைப் பாதசாரியாய் நடக்கச் செய்த அவலங் காட்டி, அந்தப் பழியைத் தீர்க்காது வீமன் சினந்தணிவனோ என்றவாறு. ஆரு-ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். (28)

29. வடுக்கணு ளிட்ட சாபம்
வழுவுரு தவனி யாங்கள்
கொடுக்கவென் றிரத்தல் வெம்போர்
குறிப்பதென் றறிஞர் எம்மை
தடுக்கிலன் றவையிற் சொற்ற
சபதம்பொய்த் திடுமென் றுள்ளத்
திடுக்கணின் றகன்றேன் நீசொற்
றிடுஞ்சொலா லென்று னென்றே.

(இ-ள்) வடுகணுள் - மாவின் பிளவுபோன்ற கண்ணையுடைய திரௌபதி, இட்ட சாபம்-(வாயாற்) சொல்லிய சாபம், வழுவுருது-(ஒருநாளும்) பொய்க்காது: யாங்கள்-(வீரர்களாகிய) நாங்கள், அவனி கொடுக்க என்று இரத்தல்-(எங்கட்குரிய) நிலத்தை வழங்குவீராக என்று கெஞ்சுதல், வெம் போர் குறிப்பது என்று-கொடிய போருக்குச் சூசகமாகுமென்று, அறிஞர்-உம்மைப் போன்ற ஞானிகள், தடுக்கில்-தடைசெய்வீர்களாஞல், அன்று—சூதுபோர் நிகழ்த்திய போது, அவையில் சொற்ற சபதம்-சபையில் கூறிய வஞ்சின மொழிகள், பொய்த்திடும் என்று-பிழைபட்டுப்போகுமோ என்று, உள்ளத்து இடுக்கண் - மனத்திலிருந்த துயரம், இன்று-இன்றைய தினம், நீ சொற்றிடும் சொலால்-நீர் கூறிய வார்த்தையினுல், அகன்றேன்-நீங்கப் பெற்றேன், என்ருன்-என்று அருச்சுனன், கூறிமுடித்தான், என்று—; (எ.று).'சஞ்சயனுரைப்ப' என மேலைக்கவியிற் குளகமாய்த் தொடரும்.

பத்தினிப்பெண் இட்டசாபம் கட்டியே தீரும்: நாங்கள் நாடு இரத்தல் போரில் முடியும் என்று எண்ணி நீவிர் தடுப்பீர்களாஞல், அன்று சபையில் கூறிய சபதங்கள் பொய்த்திடுமோ என்று மனத் துயர் கொண்டிருந்தேன். அது இப்போது நீர் கூறிய சொல்லால் நீங்கிவிட்டது என்று அருச்சுனன் சஞ்சயனிடம் கூறிஞன். சஞ்சயன் கூறிய சொல்லாவது-''வலி கொண்டுள்ளோம் மற்றவர்க் கிலையென்னில் வெஞ்சமர்வாய் தெரிந்திடும்'' என்றது. (செ: 8 காண்க). இரத்தல்-தொழிற்பெயர்: 'இரத்தல் போர் குறிப்பது' என முடியும். குறிப்பது-விணைமுற்று. வடு-மாவடு, மாவின் பிளவு. சொல்லால் அகன்றேன் என முடியும். (29)

30-31. சஞ்சயன் கூறிமுடிக்க, வீடுமன் கூறுதல்.

சற்றுமஞ் சாம லிச்சொற்
சஞ்சய னுரைப்பக் கங்கை
பெற்றவ னரசுக் கோதும்
பெருமயெவ் வுலகத் தேனும்
முற்றறம் பிழைத்தார் நூறி
யுடையர்மாட் டிருந்து காக்கும்
வெற்றிகொள் நரனந் நாரா
யணர்களிவ் விசயன் மாலும்.

(இ-ள்) இ சொல்-இந்த வார்த்தைகளை, சற்றும் அஞ்சாமல் - சிறிதேனும் பயமில்லாமல் (பஹிரங்கமாக), சஞ்சயன் உரைப்ப - சஞ்சயமுனிவன் சொல்ல, (அதன் பின்னர்) கங்கை பெற்றவன் - கங்காபுத்திரனாகிய வீடுமன் அரசுக்கு-திருதராட்டிர மன்னனுக்கு, ஓதும் - கூறுவானாயினான்: பெரும!- பெரியோனே! இ விசயன்மாலும்-இந்த அருச்சுனனும் கிருஷ்ணனும், எ உலகத்தேனும்-எந்த லோகத்திலிருந்தாலும் முற்று அறம் பிழைத்தார் நூறி-முழுவதும் தருமநெறி தவறிய துட்டர்களையழித்து, உடையர் மாட்டு-(அந்தத்) தருமநெறியை யுடைய சாதுக்கள் பக்கல், இருந்து காக்கும்-துணையாக நின்று காப்பாற்றும்; வெற்றி கொள் - ஜயம் பொருந்திய, நரன் நாராயணர்கள் - நரநாராயணர்களாய் (முன்னர்) அவதரித்தவர் களாவர்; (எ.று). 'ஆதலின்' என மேலைக்கவியில் தொடரும்.

முன்னொரு காலத்தில் குரு சிஷ்ய கிரமத்தை உலகத்தில் அனை வர்க்கும் விளக்கும் பொருட்டு நரனென்னும் சிஷ்யனும் நாராயண னென்னுங்குருவுமாகப் பதரிகாசிரமத்தில் திருமால் தோன்றிச் சிஷ்ய யனுக்குக் குரு தத்துவப் பொருள்களை யுபதேசிப்பதாக வீற்றிருக் கின்றனர்; "நரநாரணனாயுலகத்தறநூல், சிங்காமை விரித்தவ னெம் பெருமான்" என்பது பெரிய திருமொழி. அவர்கள் தாமே இங்கு முறையே அருச்சுனனும் கண்ணனுமாக அவதரித்தவர்; இங்கும் அருச்சுனனைச் சிஷ்யனாக்கிக் கண்ணன் குருவாய் நின்று தத்துவம் விளக்கியருளுதல் காண்க; இது பற்றியே அருச்சுனனுக்கு நரனென்று ஒரு பெயர். நாராயணன்—நார + அயந எனப் பிரியும்! சிருஷ்டிப் பொருள்களுக்கெல்லாம் இருப்பிடமானவனென்றும், பிரளயப் பெருங்கடலை இருப்பிடமாகவுடையவனென்றும், மற்றும் பலவாறும் பொருளுரைப்பர். மூன்றாமடியில்;

"பரித்ராணாய ஸாதூநாம் விநாசாயச துஷ்க்ருதாம்
தர்ம ஸம்ஸ்தாப நார்த்தாய ஸம்பவாமி யுகே யுகே"

(பகவத் கீதை - 4: 8) என்ற கீதாசுலோகத்தின் ஆழ்பொருள்களை நினைக. ஓதும்-செய்யுமென்முற்று. உடையர்-அறமுடையர். மாடு- ஏழனுருபு. (30)

31. ஆதலின் விசய னும்பர்க்
கர்கவிண் ணசுரர் நூறிப்
பூதலத் துதிட்டி ரன்பாற்
புகுந்தன னவனம் மாலின்

மீதடுத் திடின்யார் வெல்வோர்
வெய்யர்சொற் குடன்படாமற்
காதலர்க் கரசீந் துய்தி
கடந்திடா தெம்மனோர் சொல்.

(இ-ள்) ஆதலின்-ஆதலால், விசயன் - அருச்சுனன், உம்பர்க் காக-தேவர்களுக்காக (இந்திரனுக்காக), விண் அசுரர் நூறி-வான வாசிகளாயிருந்த நிவாதகவசர் காலகேயர் என்ற அசுரர்களையழித்து, (பின்பு) பூதலத்தில் - இப்பூவுலகத்து வந்து, உதிட்டிரன்பால் புகுந்தனன்-(தன் அண்ணனாகிய) தருமராசனிடத்து வந்து சேர்ந் தான்: அவன்-அத்தகைய (புகழ்படைத்த) அருச்சுனன், அ மாலின் மீது-அந்தக் கிருஷ்ணனோடு, அடுத்திடின்-சேர்ந்து துணைவனாயிருப் பனாயின், வெல்வோர் யார் - அவனை ஜெயிப்பவர் யாவருளர்: (ஒருவருமிலர்) (ஆகவே) வெய்யர் சொற்கு உடன்படாமல்-கொடிய துட்டசதுட்டர் வார்த்தைக்குக் கட்டுப்படாமல், எம்மனோர் சொல் கடந்திடாமல்-எங்களைப் போன்ற அறிஞர்களின் வார்த்தையை மீறாமல், காதலர்க்கு-உன் அன்பிற்குரிய (தம்பி) புதல்வர்களாகிய பாண்டவர்க்கு, அரசு ஈந்து உய்தி - அரசாட்சியைக் கொடுத்து வாழ்ந்து போவாயாக; (எ.று). 'என்றுரைத்திடலும்' என மேலைக் கவியிற்றொடரும்.

'முற்றறம் பிழைத்தார் நூறி' என்று முற்செய்யுளிற் கூறியதற்கு ஏற்ப ஈண்டு விசயன் விண்ணசுரர் செற்றமை காட்டியபடி என்க. அவன்-(பாசுபதம் பெற்ற) அவன் என்றவாறுமாம். அ-பிரசித்தி காட்டுவது. மீது-உருபுமயக்கம். வெய்யர்-குறிப்பு வினையாலணை யும்பெயர். உய்தி-முன்னிலை வியங்கோள். 'அம் மாலின்மீது அவன் அடுத்திடின் 'என்றவிடத்து "யத்ரயோகேச்வர : க்ருஷ்ணோ" என்ற சுலோகம் கருதுக. (31)

32. வீடுமன் சொற்கேட்ட கர்ணன் வெகுளல்.

என்றுரைத் திடலுங் கன்னன்
யானமர் விசயன் றன்னை
வென்றிட விருக்க யாவர்
வெல்வரென் றவைமுன் சொற்றல்
நன்றென விகழ்ந்தான் மீட்டு
நதிமகன் வெகுண்டு வேந்தர்

மன்றனக் குரைப்பான் கன்னன்
வாயினுல் வெல்வ தல்லால்.

(இ-ள்) என்று உரைத்திடலும்-என்று (வீடுமன்) கூறியவுடனே, கன்னன்-கர்ணன், 'அமர்-போரில், யான்-நான், விசயன் தன்னை-(அந்த) அருச்சுனனை, வென்றிட-செயிக்குமாறு, இருக்க-உயிரோடிருக்க, வெல்வர் யாவர் என்று-(அவனை) ஜெயிப்பவர் யாவருளர் என்று, அவை முன் சொற்றல்-சபையோர்க்கு முன்னர்க் கூறுதல், நன்று-நல்ல அழகாயிருக்கிறது! என இகழ்ந்தான்-என்று கூறிப் பரிகசித்தான்: (அது கண்டு) நதிமகன்-வீடுமன், மீட்டு-மறுபடியும், வெகுண்டு-கோபித்து, வேந்தர் மன் தனக்கு-மன்னர் மன்னனாகிய திருதராட்டிரனுக்கு, உரைப்பான் - கூறுவானாயினான்: கன்னன் வாயினுல் வெல்வதல்லால் - (இந்தக்) கர்ணன் வாய்ப்பேச்சில் செயிப்பானேயன்றி; (எ-று).

கையினுலாகாது என்பது இசையெச்சம். நன்று-பிறகுறிப்பு. மன்-தலைவன். கன்னன் வாய்ப்பேச்சில் வீரன் என்று குத்திக் காட்டியபடி. (32)

33. கர்ணனையிகழ்ந்து வீடுமன் கூறுதல்.

குரிசிலை விசித்தியாழ் வல்லோன்
கொண்டுபோம் முனைவென் றானே
துருபதன் சுயம்வ ரத்தும்
தொறுநிரை மீட்ட போதும்
நரனைவென் றானே வேந்தே
நவிலுதி யெனலு மாசான்
அரச! இங் குந்தை சொற்கோர்
அயிர்ப்பிலை கோடி யென்றான்.

(இ-ள்) குரிசிலை-துரியோதனராசனை, விசித்து-கயிற்றால் கட்டி, யாழ்வல்லோன்-சித்திரசேனனென்னுங் கந்தருவன், கொண்டுபோம் முனை-சிறைபிடித்துப்போகும் போர்முகத்து, வென்றானே-(இந்தக் கர்ணன்) செயித்தானோ? (தோற்று ஓடினனே): துருபதன் சுயம் வரத்தும்-துருபதன் (தன்மகன்) திரௌபதிக்கு நடத்திய திருமணத் தின்போதும், தொறு நிரை மீட்டபோதும் - [நாம் கவர்ந்த] பசுக் கூட்டங்களை (அவற்றுக்குரியோர்) மீட்டுச் சென்ற போதும், நரனை-

அருச்சுனனை, வென்ருனே-செயித்தானே! (புறமிட்டானே): வேந்தே - திருதராட்டிரனே! நவிலுதி-நீரே சொல்லும், எனலும்-என்று சொன்னவுடன், ஆசான்-துரோணுசாரியன், அரச!-வேந்தே!, இங்கு - இப்போது, உந்தை சொற்கு-உன் தகப்பன் முறையினனுகிய வீடுமன் வார்த்தைகளின் தகுதிக்கு, அயிர்ப்பு இலே-சந்தேகப்பட வேண்டியதில்லை: கோடி-ஏற்றுக்கொள்வாயாக, என்ருன்-என்று (தன் கருத்தைத்) தெரிவித்தான்; (எ.று).

திரௌபதியின் திருமணத்தின்போதும், சித்திரசேனன் துரியோதனனைக் கயிற்ருற் கட்டி வானத்தில் தூக்கிச்சென்றபோதும், விராடன் தன் நிரையை மீட்க வந்தபோதும் கர்ணன் எதிர்த்துப் பொருது தோற்ருேடியமை பிரசித்தமாதலின், அதனை வீடுமன்சுட்டிக் காட்டினுனென்க. துரோணனும் வீடுமன் சொல்லிய நன்மதியை ஆமோதித்தான் என்றபடி. விசித்தியாழ்-குற்றியலிகரம்: அலகு பெறவில்லை. வென்ருனே, ஓ-எதிர்மறை. நவிலுதி - முன்னிலை வியங்கோள். உந்தை-மரூஉ. கோடி-முன்னிலை வியங்கோள்: கொள்-பகுதி: இ-விகுதி: த்-எழுத்துப்பேறு. தொறு நிரை-மீமிசைச் சொல். (33)

34. திருதராட்டிரன் சஞ்சயனை வினவுதல்.

தக்கவர் மொழி நஞ்சாகிச்
சஞ்சயன் றனைக்கண் ணில்லான்
மிக்கமொய்ம் பைவர்க் கியாது
விளம்பென வறிஞ ருேழென்
றக்கணத் துயிரி னுசை
யகன்றனர் சுதரி கழ்தென்
இக்கருந் தரசுக் கென்னி
தென்றுசஞ் சயனுஞ் சொல்வான்.

(இ-ள்) தக்கவர் மொழி நஞ்சாகி-தகுதியுடைய பெரியோராகிய வீடுமன் துரோணன் இவர்களின் (அமுத) வார்த்தைகள் விஷம் போலாகி (பயனற்றதாகி), கண்ணில்லான்-பிறவிக்குருடனுகிய திருதராட்டிரன், சஞ்சயன்தனை - சஞ்சயமுனிவனை (நோக்கி) 'ஐவர்க்கு-(எதிரியாகிய)பஞ்சபாண்டவர்க்கு, மிக்க மொய்ம்பு யாது-அதிகமான வலிமையரண் எது? விளம்பு-(நீ) சொல்வாயாக, என-என்று வினவ, [அதனைக்கேட்ட] அறிஞர்-வீடுமன் துரோணன்

போன்ற ஞானிகள், ஊழ் என்று-விதியிப்படியுளதே என்று, அ கணத்து - அந்தப் பொழுதிலேயே, உயிரின் ஆசை அகன்றனர்-தங்கள் உயிர்மேற் கொண்டிருந்த வாஞ்சையை விட்டனர் : (நிகழும் போரில் தாம் இறத்தல் நிச்சயம் என்று): [அப்போது] சஞ்சயனும்—, சுதர் இகழ் தென் இக்கு-தனது பிள்ளைகள் இகழ்ச்சியாகப் பேசும் பேச்சாகிய இனிய கருப்பஞ்சாற்றை, அருந்தும் அரசுக்கு-விரும்பி யுட்கொள்ளும் திருதராட்டிர மன்னனுக்கு, இது என்-இந்த வினு எதற்கு?, என்று-என்று (மனத்தில்) எண்ணி, சொல்வான்-(எனினும்) பதில் கூறுவானுயினன் ; (எ.று).

மாற்றுன் வலியறிய வேண்டி பாண்டவர்க்குமிக்க வலிமை யளிக்கும் கருவி எங்கேயிருக்கிறது? என்ற கருத்தில் சஞ்சயனை 'விளம்பு' என்று வினவியவுடனே, திருதராட்டிரன் போரில் நாட்டங் கொண்டுள்ளான் என்பது பெறப்படுதலின், அறிஞர் 'ஐயோ, விதி யின்பயன் இது : போர் நிகழின் நாம் அனைவரும் உயிரிழப்போமே : கண்ணனுகிய மிக்க வலிமை அவர்க்குளதே' என்று உளத்து எண்ணி அக்கணத்தே 'உயிரினுசையகன்றனர்' என்பது அறிய வேண்டியது. பிள்ளைகள்மேல் வைத்த பேரபிமானத்தால் அவர் இகழ்ச்சியாகப் பேசுகின்ற பேச்சுக்களைக் கருப்பஞ்சாறு அருந்துவது போல (எப்போதும்) இனிமையாக ஏற்றுக்கொள்பவன் திருதராட்டிரன் என்பது கருத்து. தென்-இனிமை: (sweetress), "தென்னிசை பாடும் பாணன்" (திருவாலவா : 56, 7) இக்கு-கரும்பு : இங்கு அதன் சாற்றினைக் காட்டி வந்தது. 'என் இது' என்றது-பதில் சொல்லியும் பயனிலாது போகுமே என்ற கருத்தினது, இகழ்-முதனிலைத்தொழிற்பெயர். (34)

வேறு.

35-37 **சஞ்சயன் திருதராட்டிரனுக்குப் பாண்டவர் படைவலிமை கூறல்.**

இதுமுதல் மூன்றுகவிகள் - குளகம்.

கீசக ரிடும்பன் முதலியர் வென்றோன்
 கிரீசன்வென் றசுரரைக் காய்ந்தோன்
வாசவன் கன்மா மழைக்கொர்வெற் பெடுத்தோன்
 மடங்கனேர் நகுலசா தேவர்
பூசலிற் பயந்தோ னனையவா ளபிமன்
 புராந்தக னிவனெனு மரவான்

கேசவற் கிளவல் சாத்தகி யென்போன்
கெடாதகற் பினள்சுத ரிருப்ப.

(இ-ள்) கீசகர் இடும்பன் முதலியர் வென்றோன்-கீசகன் உப கீசகர்கள் இடும்பன் முதலிய பலம் பொருந்தியவர்களைச்செயித்துக் கொன்ற வீமன், கிரீசன் வென்று-கைலாயமலைக்கு ஈசனாகிய சிவ பெருமானைச் செயித்து, (மேலும்) அசுரரை-நிவாதகவசர் காலகேயர் என்ற அசுரர்களை, காய்ந்தோன்-சினந்து அழித்த அருச்சுனன், வாசவன்-இந்திரன், கல் மா மழைக்கு-பெரிய கல்மாரிக்கு (அதனை விலக்கும்பொருட்டு) ஓர் வெற்பு எடுத்தோன்-ஒப்பற்ற கோவர்த்தன மலையைத் தூக்கி [க்குடையாக]ப் பிடித்த கிருஷ்ணன், மடங்கல் நேர் - சிங்கத்தையொத்த, நகுல சாதேவர் - நகுலசகதேவர்கள், பூசலில்-போர்க்களத்தில், பயந்தோன் அனைய-(தன்னைப்) பெற்ற தந்தையாகிய அருச்சுனனை யொத்த, (வீரமுடைய) வாள் அபிமன்-வாளாயுதத்தையேந்திய அபிமன்யு, இவன் புராந்தகன் எனும்-இவன் திரிபுரங்களையெரித்த சிவனாவன் என்று ஒப்புச்சொல்லும்படி யுள்ள, அரவான்-இராவான், கேசவற்கு இளவல் சாத்தகி என் போன்-கிருஷ்ணனுக்குத் தம்பி முறையினனாகிய சாத்தகி என்பவன், கெடாத கற்பினள் சுதர்-பழுதுறுத கற்பினையுடையளாகிய திரௌபதியின் பிள்ளைகளாகிய உபபாண்டவர், இருப்ப-(அந்தத் தருமனுக்குத்) துணையாகவிருக்க; (எ.று). இது மேலைக்கவியினிறுதியிலுள்ள 'இருப்ப' என்பதனோடு குளகமாய்த் தொடரும்.

கிரீசனை வென்றது-பாசுபதம் பெறச் சென்றபோது, வெற்பெடுத்தது-ஆநிரையையும் ஆயர்களையும் காத்தற் பொருட்டு. மடங்கல்-சிங்கம் : பிடரிமயிர் மடங்கியிருப்பது எனச் சிங்கத்திற்குக் காரணக் குறி. அபிமன் அருச்சுனனை யொத்தவனென்பதை, "புலிக்குப் பிறந்ததுதான் எலியாமோ என்பார்" என்ற பெருந்தேவனார் பாரதங் கொண்டறியலாம். சிவபிரான் திரிபுரம் எரித்தமை பிரசித்தம். அரவான்-இராவான் எனப்படுவன் : இவன் உலூபியென்னும் நாக கன்னிகைக்கு அருச்சுனனிடம் பிறந்தவன் : துரியோதனன் படைகளையெல்லாம் ஒரு பகற்பொழுதில் கொல்ல உறுதிகூறி நின்றவன் என்பதை "அரவமின்மகன்றெவ்வர், கொற்ற வெம்படையனைத்து மோரம்பினாற் கொல்வனோர்தினத்தென்றான்" என்ற வில்லிபாரதத்தாலுணரலாம். (உத் : படை : 12). சாத்தகி-வசுதேவனுக்கு உடன்பிறந்த முறையினனாகிய சத்தியகனது குமாரன் : பிராயத்தில் பலராமகிருஷ்ணர்களினும் இளையவனாதலால், இவர்க்குத் தம்பி முறையாவன். சுதர்-இங்கே, உபபாண்டவரைக் காட்டும். தருமன் முதலிய பாண்டவரைவர்க்கும் முறையே பிரதிவிந்தியன், சுத

சோமன், சுருதகர்மா, சதாநீகன், சுருதஸேநன் என்ற ஐவர் வருஷத்திற்கு ஒருவராய்ப் பிறந்தனரென்பதை முதனூலினுலறிய லாம். இவர்கள், உபபாண்டவரென்றும், பஞ்சதிரௌபதேயரென் றும் கூறப்படுவர். வென்ருேன், காய்ந்தோன், எடுத்தோன், பயந் தோன்-வினையாலணையும்பெயர்கள்.

இதுமுதல் மூன்று கவிகள்-ஒன்று மூன்று ஐந்து ஆறுஞ்சீர்கள் விளச்சீர்களும், மற்றவை மாச்சீர்களுமாகி வந்த எழுசீராசிரிய விருத் தங்கள். (35)

36. கைத்திறற் கரிபோற் கடோற்கச னென்போன்
கடற்கன லனிலனஞ் சிமனுக்
கொத்திடுந் திட்டத் தூய்மனுத் தமோசா
உதாமன்விற் சிகண்டிபாஞ் சாலன்
உத்தரன் சுவேதன் விராடன்முன் னிறந்தே
யொழிசரா சந்தன்மா லிகழ்ந்தோன்
புத்திர ரபயன் வழுதிமற் றநேகர்
போரெனில் வரும்பொருட் டிருப்ப.

(இ-ள்) கைத்திறல் கரி போல்-தும்பிக்கையையுடைய வலிய யானைபோன்ற, கடோற்கசன் என்போன் - கடோற்கசனென்னும் (வீமன் மகனுகிய) வீரன், கடல் கனல் அனிலன் நஞ்சு இமனுக்கு ஒத்திடும் திட்டதூய்மன்- நீர் நெருப்புகாற்று விடம் யமன் இவர்களை யொருசேர ஒத்திருக்கின்ற திட்டத்துய்மன், உத்தமோசா- உத்தமோஜஸ், உதாமன்-யுதாமந்யு. வில் சிகண்டி - விற்பிடித்த சிகண்டி, பாஞ்சாலன்-துருபதன், உத்தரன்—, சுவேதன்—, விராடன்—, முன் இறந்தொழி சராசந்தன் மாலிகழ்ந்தோன் புத்திரர் - முன்வீமனுலும் கண்ணனுலும் முறையே கொல்லப் பட்டொழிந்த சராசந்தன் சிசுபாலன் ஆகிய இருவரின் புதல்வர்கள், அபயன்-சோழன், வழுதி-பாண்டியன்,மற்று-மேலும், அநேகர்-பல மன்னர்கள், போர் எனில் - போர் நிகழ்வது நிச்சயமானுல், (தருமனுக்குத் துணையாக) வரும்பொருட்டு- [தமது படையுடன் உதவ] வருவதற்காக, இருப்ப-சித்தமாக இருப்ப; (எ.று). இது மேலைக்கவியின் முதலடியீற்றிலுள்ள 'இருப்ப' என்பதனேடு குளகமாய்த் தொடரும்.

கடோற்கசன்-வீமனுக்கு இடிம்பியென்னும் அரக்கியினிடம் பிறந்த குமாரன் : கடம்-குடம்: உத்கசம்-மயிரில்லாதது. இவனுடைய குடம்போன்ற தலை மயிரின்றியிருந்ததனுல், கடோத்கசனென்று

இவனுக்குப் பெயரிடப்பட்டதென்று வடநூல் கூறும். திட்டத் தூய்மன்-துருபதன் துரோணனைக் கொல்ல மகன் வேண்டுமென்று செய்த யாகாக்கினியினின்று தோன்றியவன். உத்தமோசா-உத்த மோஜஸ் : இவன் துருபதனுக்கு உறவினன் : இவனை 'ஒட்டிப்போர் பொரும் உத்தமோசா' என்றார் வில்லி (உத் : படை : 3). உதாமன்-யுதாமந்யு : போரிற் கோபமுடையானென்று பொருள் 'இவனும் துரு பதனுக்கு உறவினன். சிகண்டி-அலிவடிவாகத் துருபதனிடத்துப் பிறந்து வளர்ந்தவன் : வீடுமனை விண்ணுலகேற்றும் ஆற்றலுடை யவன். பாஞ்சாலன்-துருபதன். உத்தரன்-விராடராசனின் இளைய மகன். சுவேதன் - விராடனது மூத்த மகன். சராசந்தன் - மகத தேசத்துக் கிரிவிரசநகரினின்றுள்பவன்: வீமனால் கொல்லப்பட்டான். சிசுபாலன் - சேதிநாட்டரசன் : கண்ணனுக்கு அத்தைமகன் ; கண்ணனையிகழ்ந்ததனால் அவனாற் கொல்லப்பட்டான் சராசந்தன் மகன் சகதேவன் எனப்படுவன் : இவனை வீமார்ச்சுனர் கிருஷ்ணன் மூவரும் முடிசூட்டினர். கடற்கனலனிலனஞ்சிமன் - உம்மைத் தொகை : "நீர்மிகின் சிறையுமில்லை, தீமிகின் மன்னுயிர் நிழற்றும் நிழலுமில்லை, வளிமிகின் வலியுமில்லை, ஒளிமிக்கு அவற்றோரன்ன சினப்போர் வழுதி" என்ற புறநானூற்றடிகள் ஈண்டு ஒப்புநோக்குக. (செ : 51). சராசந்தன் மாலிகழ்ந்தோன், அபயன்வழுதி-தகுதி யொற்றுமை பற்றி ஒரு சேரநின்ற பெயர்கள். 'மற்றநேகர்' என்றதில், சேரனும், மற்றைய ஐம்பத்தாறு தேசத்தரசர்களும் அடங்குவர். (36)

37. இரதவெங் கயமா பதாதியக் குரோணி
ஏழெனு மலகுபட் டிருப்ப
சரதமும் பொறையுஞ் சாந்தமும் வலியுந்
தக்கதே வருளும்வாய்ந் திடுமெய்
விரதனை வெல்வோர் உளர்கொலோ வென்ன
வேந்துயிர்த் தருச்சுனன் வீமன்
கரதலத் தடல்வில் கதைகொளில் யாருங்
காலனூர் புகுவரென் றயர்ந்தான்.

(இ-ள்) இரதம்-தேர்கள் வெம் கயம்-கொடிய யானைகள், மா-குதிரைகள், பதாதி - காலாட்படையினர், (அனைத்தும் சேர்ந்து) அக்குரோணி ஏழ் எனும் அலகுபட்டு இருப்ப-ஏழு அக்ஷௌஹிணீ என்னும் எண்ணிக்கைகொண்டு (தருமனுக்குத் துணையாகச்) சித்தமாயிருப்ப, (அவற்றுக்கும் மேல்) சரதமும்-சத்தியமும், பொறை

யும்-பொறுமையும், சாந்தமும்-அமைதியும், வலியும்-உடல் வலிமையும், தக்க தேவு அருளும்-சிறந்த தெய்வமாகிய கிருஷ்ணபகவானின் கருணையும், வாய்ந்திடும்-பொருந்தியிருக்கின்ற, மெய்விரதனை-சத்திய விரதனாகிய தருமராசனை, வெல்வோர் - செயிப்பவர், உளர்கொல்-இருக்கின்றார்களோ? (இருக்கமுடியாது), என்ன-என்று சஞ்சயன் கூறிமுடிக்க, (அதனைக்கேட்ட) வேந்து-திருதராட்டிரன், உயிர்த்து-பெருமூச்சுவிட்டு, கரதலத்து-தமது கைகளில், அருச்சுனன் வீமன்-விசயவீமன் இருவரும், அடல் வில் கதை கொளில்-[முறையே[வலிய காண்டீபத்தையும் சத்ருகாதிநியையும் ஏந்தி போர்க்கு வருவராயின், யாரும்-என் பக்கத்தினர் அனைவரும், காலனூர் புகுவர்-யமலோகத்தையடைவர் (இறந்தொழிவர்), என்று அயர்ந்தான்-என்று வாய்வெருவித்தளர்ந்தான்; (எ.று.)

அக்குரோணி - அக்ஷௌஹிணீ. அது - யானை இருபத்தோராயிரத்தெண்ணூற்றெழுபது, தேர் இருபத்தோராயிரத்தெண்ணூற்றெழுபது, குதிரை அறுபத்தையாயிரத்து அறுநூற்றுப்பத்து, காலாள் லட்சத்தொன்பதினாயிரத்து முந்நூற்றைம்பது; ஆக, இரண்டு லட்சத்துப் பதினெண்ணாயிரத்து எழுநூறு கொண்டது. [இத்தொகை, வியாச பாரதத்தில் இரண்டாம் அத்தியாயத்திற்கண்டது]. பாண்டவர் சேனையின் மொத்த எண்ணிக்கை-ஏழு அக்ஷௌஹிணீ என்றவாறு. 'அருச்சுனன் வீமன் வில்கதை கொளில்' என்றவிடத்து முறைநிரனிறைப்பொருள்கோள் காண்க. காலனூர் புகுவர் - பிறிதினவிற்சி. இரதவெங்கயமாபதாதி - ரதகஜதுரகபதாதி : உம்மைத்தொகை. (37)

வேறு.

38-42 தளர்ந்த தந்தைக்குத் துரியோதனன் தன் படைவலிமை கூறல்.

ஐந்து கவிகள் - ஒருதொடர்.

நள்ளார் வலிகேட் டயர்தனன்றே
நம்பால் வலிகே ளெனத்தந்தைக்
குள்ளார் துயரம் பறியவரா
வுபர்த்தோ னுரைப்பா னரசர்குலம்
விள்ளா முடித்த மழுப்படையோன்
வென்னிட் டோட வென்றவனோர்

கள்ளா ரிதழி வேய்ந்தவனுங்
கலக்குந் தரமன் றியார்வெல்வோர்.

(இ-ள்) (திருதராட்டிரன் அயர்ந்ததுகண்டு) அரா உயர்த்தோன்-பாம்புக்கொடியையுயரத் தூக்கிய துரியோதனன், தந்தைக்கு உள் ஆர் துயரம் பறிய - தகப்பனுர்க்கு மனத்தில் நிறைந்துள்ள துன்பம் நீங்கும்பொருட்டு-"நள்ளார் வலி கேட்டு-பகைவரின் படைப் பலம் கேட்டவுடன், அயர்தல் நன்றே ?-தளர்ந்துபோதல் நல்லதோ? நம்பால் வலிகேள் - நம்பக்கத்துப் படைப் பலத்தைப்பற்றி (யான்- சொல்ல நீ) கேட்பாயாக : என-என்று பீடிகையிட்டு, உரைப்பான்- கூறுவானுயினுன் : அரசர்குலம்-க்ஷத்திரிய வமிசத்து மன்னர்களை, விள்ளா முடித்த-பிளந்துபோகும்படி வெட்டித் தள்ளியழித்த, மழுப் படையோன்-பரசுராமனையே, வெந்இட்டு ஓட-புறமுதுகிட்டிரியும்படி, வென்றவன்-செயித்தவனுகிய வீடுமன் (நம்பக்கத்தில் உள்ளான்) : நேர்-அவனுக்கு நேராக [எதிர்நின்று], கள் ஆர் இதழி வேய்ந்தவனும்-தேன்நிரம்பிய கொன்றை மாலையைச் சூடிய சிவபெருமானும், கலக்கும் தரமன்று-தோற்பிக்கும் வகையில்லை (எனில்) யார் வெல்வார் ?-அவனைச் செயிப்பவர் யாவருள்ளார் ? (எவருமிலர்) ; (எ.று)

தந்தையின் தளர்வு நீங்கத் தொடக்கத்து அவன் தந்தை முறையினனுகிய வீடுமனும் பிதாமகனின் வீரம் எடுத்துக்காட்டியமை நோக்கத்தக்கது. விள்ளுதல்-உடைத்கல், பிளத்தல் : இருபத்தொரு தலைமுறை அரசு களைகட்டனனுதலின் 'விள்ளா முடித்த' என்றது. விள்ளா-செய்யாவென்னும் வாய்பாட்டு உடன்பாட்டெச்சம். அன்றி யார்-குற்றியலிகரம்.

இதுமுதல் பதினெரு கவிகள்-பெரும்பாலும் மூன்று ஆருஞ்சீர்கள் காய்ச்சீர்களும், மற்றை நான்கும் மாச்சீர்களுமாகிய கழிநெடிலடி நான்குகொண்ட அறுசீராசிரிய விருத்தங்கள். (38)

39. பூர்வா சரியன் மறைக்கொடியோன்
புரவித் தாம னிவரேற்ற
போர்வா யமன்வென் னிடுமெனில்கான்
புகுந்தெய்த் தவரோ வெல்வர்கொடைச்
சீர்வாய்த் தவன்வென் றரசளிப்பான்
சிந்து பதிசல் லியன்சகுனி

போர்வா ளியின்வென் றிடவல்லார்
உள்ளா ரெனக்கிங் குயிர்போல்வார்.

(இ-ள்) பூர்வாசரியன்-முதற்குருவாகிய கிருபாசாரியன், மறைக் கொடியோன்-[பின்னர் குருவாகிய] துரோணுசாரியன், புரவித் தாமன்-(அவன் மகனுகிய) அசுவத்தாமன், இவர் ஏற்ற போர் வாய்-இவர்கள் ஏறிட்டுப் பொருங்களத்தில், யமன் வென் இடும் எனில்-கூற்றுவனே புறங்காட்டியோடுவானுயின், கான் புகுந்து எய்த் தவரோ வெல்வர்-காட்டிற்குச் சென்று [பன்னிரண்டாண்டுகள் வன வாசஞ் செய்து] இளைத்துப்போனவரோ செயிப்பவர்? (ஒருநாளிலு மில்லை): [மேலும்] கொடைச்சீர் வாய்த்தவன் வென்று-தானத்திற் சிறப்பு வாய்ந்த கன்னன் (போரில்) செயித்து அரசு அளிப்பான்-என் அரசாட்சியை நிலைநிறுத்துவான்: (மற்றும்) சிந்துபதி-ஸைந் தவன், சல்லியன்—, சகுனி—, (இவர்கள்) போர்-யுத்தத்தை, வாளி யின்-தங்கள் அம்பின் திறமையினுலேயே, வென்றிட வல்லார் உள்ளார்-ஜெயிக்கும் திறமையுடையவர் இருக்கின்றனர்: (அந்நால் வரும்) எனக்கு இங்கு உயிர் போல்வார்-எனக்கு இப்போது பிராணன்போல் உயிர்த்துணையாவர்: (எ.று)

முதலில் கௌரவ பாண்டவர்க்கு வில்வித்தை பயிற்றிய ஆசிரிய ராதலின், கிருபனை 'பூர்வாசாரியன்' என்றது. அது 'பூர்வாசரியன்' எனக் குறுகிற்று. வேதியர்கோனும் சுருதியாலுயர்ந்தவனுமாதலின் துரோணுசாரியனை 'மறைக்கொடியோன்' என்ருர்; பிராம்மணர்க் குத்துவசம்-வேதம் எனப்படும். மறை-வேதம்.

புரவி அசுவம் என்பன-குதிரையாகிய ஒரு பொருளைக் குறிப்பன வாதலால், அசுவத்தாமாவைப் புரவித்தாமா வென்ருர்; பரித்தாமா, இவுளித்தாமா என்றுங் கூறுவர். அசுவத்தாமன் பராக்கிரமத்தைக் கிருஷ்ணனே பாராட்டியுள்ளார் வில்லிபாரதத்தில்: "ஆனுவுன தாண் மைக்கு நிகர் அவனிதலத்தில் வேறுண்டோ, ஞானுதிபனே போர்க் களத்தில் நாகக்கொடியோன் பணிந்துன்னைச் சேனுபதி யாகென் ருலுஞ் செலுத்தேனென்று நீ மறுத்தியானுலுய்வரைவரும் மற்றவர் பாலுனக்கு மன்புண்டே" (உத்: கிருட்: செ: 225). 'கர்ணன் வென்று அரசளிப்பான்' என்றதில் துரியோதனன் அவன்பால் வைத்த நம்பிக் கையினுறுதியும் காழ்த்த நட்பின் செறிவும் அவன் வீரத்தின் மேன் மையும் நன்கு விளங்குவது காண்க. சிந்துபதி - ஸைந்தவன் (சயிந் தவன்): சயத்திரதன் எனவும் படுவன்: இவன் துரியோதனின் உடன்பிறந்தவளான துச்சளையின் கணவன்: சமரதத்தலைவன். சல்லியன்-(பகைவர்க்கு) அம்புநுனிபோல் (வருத்தஞ்செய்)பவன்:

சல்யம்-அம்புமுனை. சகுனி-காந்தார தேசத்தரசன்: திருதராட்டிரனது மனைவியான காந்தாரியின் உடன்பிறந்தவன்; ஆதலால் துரியோ தனுதியர்க்கு மாமன். இவன் வஞ்சகச்சூதில் வல்லவன். யமன் வெந்நிடுமென்னில் எய்த்தவரோ வெல்வர் என்றது-நிதர்சனவணி யின் பாற்படும். கொடைச்சீர் வாய்த்தவனுதலின், 'அளிப்பான்' என்றது. உயிர்போல்வார்-பிராண சிநேகிதர் என்றபடி, 'வெல் வரோ' என மாறுக: ஓ—எதிர்மறை. (39)

40. புகர்மா நடவும் பகதத்தன்
பூரிச் சிரவன் சோமதத்தன்
பகர்யா தவர்கள் கிருதவன்மன்
படைவேண் டாமற் பொருவர்சஞ்சத்
தகர்பே ரறுப தாயிரவர்
தகுவ ருலகே ழையுந்தகிப்பார்
நிகர்பாண் டவரோ வெனக்குதவி
நேர்வா னிவர்க ளிருக்கின்றார்.

(இ-ள்) புகர் மா நடவும் பகதத்தன்-(முகத்திற்) செம்புள்ளிகளை யுடைய (சுப்ரதீகம் என்னும்) யானையை யேறிச்செலுத்துகின்ற பகதத்தன், பூரிச்சிரவன் - பூரிசிரவா என்பவன், சோமதத்தன்- (அவன் தந்தையாகிய) சோமதத்தன், பகர்-சிறப்பித்துப் பேசப்படு கின்ற, யாதவர்கள்-யாதவ குமாரர்களாகிய நாராயண கோபாலர், கிருதவன்மன் - கிருதவர்மா என்னும் யாதவ சேனைத் தலைவன் [ஆகிய இவர்கள்] படை வேண்டாமல்-கைகளில் ஆயுதம் இல்லா மலேயே, பொருவர் - போரிடுஞ் சமர்த்தர்: (மேலும்) சஞ்சத்தகர் பேர்-சம்சப்தகர் என்ற பெயரையுடைய, அறுபதாயிரவர் தகுவர்- அறுபதினாயிரம் அசுரர்கள், உலகு ஏழையும் தகிப்பார்-ஏழுலகங்களை யும் (ஒருசேர) எரித்து அழிக்கவல்லவர்: இவர்கள்-இத்தனை பேரும், எனக்கு உதவி நேர்வான் இருக்கின்றார்-எனக்குத் துணைபுரியச் சித்தமாய் இருக்கின்றார்கள்: (ஆகவே) எனக்கு நிகர் பாண்டவரோ- எனக்குச் சமானமான வலியுடையவர் பாண்டவர்களோ? (இல்லை); (எ.று).

பகதத்தன் - பிராக்சோதிஷபுரத்தரசன்: நரகாசுரனது மகன்: பதினாயிரம் யானை வலியுடையான்: இவன் யானையின் பெயர் சுப்ர தீகம் என்பது. புகர்-[செம்] புள்ளி: யானை முகத்தில் செம்புள்ளி

களிருத்தல் உத்தம விலக்கணம், ''தீயுமிழ் சிறுகணுஞ் செம்புகரு முடைத்தாய்'' என்றது காண்க. பூரிசிரவன்-பூரிச்ரவா: என்னும் வடசொல், திரிந்தது. இவன் சோமதத்தன் என்பவனது மகன்; அதனுல், சௌமதத்தியென்றும் ஒரு பெயர் பெறுவன். இவன் துரியோதனன் பக்கத்து அதிரத வீரரில் ஒருவன். சோமதத்தன்-குருவமிசத்தவனுன பிரதீபனுடைய புத்திரர் மூவருள் ஒருவனுன பாலீகனுக்குப் புதல்வன்: கலிங்கநாட்டரசனென்பாருமுளர். யாதவர்-யதுவின் குலத்தவர்: தத்திதாந்தநாமம். யது-சந்திரவமிசத்து ஓரரசன். யாதவகுமரர் மொத்தம் பதினுருயிரம்பேராவர்: கண்ண னுக்குப் பதினுருயிரம் கோபஸ்திரீகளிடம் பிறந்தவர்களான நாராயண கோபாலர் முதலியோரைக் குறிக்கும்; துரியோதனன் கண்ணனைப் படைத்துணையழைக்கப் போனபொழுது அவனுல் துரியோதனனுக்குத் துணையாகக் கொடுக்கப்பட்டனர் இவரென அறிக. கிருதவன்மன் - இவனும் கண்ணனுல் துரியோதனனுக்குத் துணையாகத்தந்த யாதவசேனைக்குத் தலைவனுக அனுப்பப்பட்டவன்: இவன் யது குலத்தில் இருதிகனென்பவனது குமாரன். சஞ்சத்தகர்-சம்சப்தகர்: இப்பெயர் நன்ருகச் சபதஞ் செய்பவரென்று பொருள் படும். போர் தொடங்கு முன்னமே பலவகைச் சபதஞ்செய்து பின் அவ்வாறே நடத்திக்காட்டும் வீரர்கள். [இவர்கள் திரிகர்த்த ராஜ புத்திரர்களும் அவர்களை யனுசரித்தவர்களுமாகி ஒன்பது கோடித் தொகையினராவரென்று வியாச பாரதம் கூறும்.] தகுவர்-அசுரர்: சஞ்சத்தகரை அசுரர் என்றது கொடுமை நோக்கியென்க. இவரைப் பற்றி வில்லியார் கூறும்போது 'உகத்திற் கடையிற் கனல் போல் வார்'' என்று கூறியுள்ளார்: அதற்கேற்ப இங்கேயும் ''உலகேழையும் தகிப்பார்'' என்றது காண்க. எனக்கு - மத்திமதீபம். நிகரோ, ஓ-எதிர்மறை. நேர்வான்-வினையெச்சம். (40)

41. நீலாம் பரனென் பால்வருவான்
நெந்தேர் கரிமா பதாதியெனும்
நாலாம் படையாய்ந் தறிஞர்தொகை
நவின்ருர் பதினே ரக்குரோணி
காலாந் தகன்போல் யான்முனிந்து
கதைகொண் டெதிர்ந்தே னெனிற்காலன்
பாலாம் பாண்டுச் சுதருதவிப்
பட்டா ரொடுநாற் படையோடும்.

(இ-ள்) நீலாம்பரன் - நீல ஆடையைத் தரித்த பலராமன், என்பால் வருவான் - என் பக்கத்தில் வந்து சேர்வான்: அறிஞர் -

யுத்தநூல் வல்லோர், நெடுந்தேர் கரி மா பதாதி எனும் நாலாம் படை ஆய்ந்து - ரதகஜதுரகபதாதியென்கின்ற நான்கு படையின் [முழு] எண்ணிக்கையை ஆராய்ந்து பார்த்து, பதினோக்குரோணி தொகை நவின்றார் - (மொத்தம் சேர்ந்து) பதினொரு அக்ஷௌஹிணீ என்று கணக்கிட்டுள்ளார் : (அது கிடக்க) யான் - (கதைப் போரில் வல்ல) நான், காலாந்தகன் போல் முனிந்து - யமனைப்போல் கோபங் கொண்டு, கதை கொண்டு - (கையில்) கதாயுதத்தைக் கொண்டு, எதிர்ந்தேன் எனில் - எதிரிட்டுப் போர் செய்தேனெனில், பாண்டு சுதர்-பாண்டு புத்திரர்களாகிய பஞ்சவர், உதவிப் பட்டாரொடும் - (தமர்க்குத்) துணையாக ஒருப்பட்டு வந்த மன்னர்களோடும், நாற் படையோடும் - சதுரங்க சேனைகளோடும், காலன்பால் ஆம் - யம னிடத்தை யடைவர் (இறந்துபடுவர்). (எ.று).

நீல ஆடையன் பலராமன் : இவன் பீதாம்பரதாரியான கிருஷ்ணனுக்கு மூத்தவன் : அலாயுதன் : அலத்தால் யமுனையைப் பிளந்தவன். மேலும் முசலப் படையோன். துரியோதனன் தான் நான்கு அக்குரோணி சேனை பகைவர் சேனையினும் அதிகமாகக் கொண்டுள்ளான் என்பது கருதத்தக்கது. காலன்பாலாம் - பிறிதின விற்சி. பால் - ஏழனுருபு. (41)

42. துச்சா தனன்றுன் முகன்முதலாந்
துணைவர் சமரந் தொடங்குவரேல்
பச்சா லிலையிற் றுயின்மாலும்
பாண்டு சுதரு மொருபொருட் டோ
இச்சே னைகளுந் தரணிபரும்
இரிவர் சுரரு மிருப்பதலான்
மெச்சார் மெச்சுந் தம்பமுதல்
விரகு பலவுண் டவைகேண்மோ.

(இ-ள்) துச்சாதனன் துன்முகன் முதலாம் துணைவர் - துச்சா சனன் துன்முகன் முதலாகிய (என்) தம்பியர்கள், சமரம் தொடங் குவரேல் - போரினைச் செய்ய ஆரம்பித்தால், பச்சாலிலையில் துயில் மாலும் - பசிய ஆலிலையின்மேல் பள்ளிகொண்டுறங்கும் விஷ்ணு வாகிய கிருஷ்ணனும், பாண்டு சுதரும் - பாண்டு புத்திரர்களாகிய பஞ்சவரும், ஒரு பொருட்டோ - மதித்தற்குரியவரோ ? (அலட்சிய மாவர் : (மேலும்) இ சேனைகளும் - (அவரது) இந்த [ஏழு அக்கு

ரோணி]ப் படைகளும், தரணிபரும் - [அவர்க்குத் துணையாக வந்துள்ள] அரசர்களும், இரிவர் - (முதுகுகாட்டிப்) பின்வாங்குவர்; சுரரும் - [போர் காண வந்த] தேவர்களும், இருப்பது அலால் - (வானிடத்து) சும்மாவிருப்பதல்லாமல், மெச்சார் -(அப் பஞ்சவரைப்) புகழ மாட்டார்கள்: (மற்றும் என்னிடம்) மெச்சும் தம்பம் முதல் - (பலரால்) புகழப்படும் தம்பனம் முதலாகிய, விரகு பல உண்டு - மந்திரசக்தி உபாயங்கள் பல இருக்கின்றன: அவை கேள் - அவைகளைப்பற்றிச் சொல்லுகிறேன், கேட்பீராக; (எ,று), மோ - முன்னிலையசை.

துச்சாதனன் = துச்சாஸநன்: கொடிய கட்டளையுடையான் என்பது பதப்பொருள். துன்முகன் = துர்முகன்: கொடிய முகமுடையவனென்று பொருள்படும். 'முதலாம்' என்றதால் - துன்மருடன் (துர்மர்ஷணன்) முதலிய தம்பியரையும் குறிக்கும். [மொத்தம் தொண்ணூற்றெருன்பது தம்பியராவர்.] பாண்டவர் தோல்வி கண்டு தேவரும் வாய்மூடிப் போவரென்றபடி. தம்பம் - ஸ்தம்பநம்; தம்பனம்; இயக்கத்தைத் தடுத்துத் தம்பிக்கச் செய்கை; ஜலஸ்தம்பநம், அக்கினித்தம்பனம் முதலிய போல்வன. விரகு - தந்திரம், உபாயம். (42)

43. **துரியோதனன் தன் விரகுவலிமை கூறல்.**

இடியேற் றெருடுகன் மழைதருக
எங்கும் வளிவீ சாதொடுக்கப்
படியாய்த் தடத்தைச் செய்விக்கப்
பாலை தனினீர் வருவிக்கக்
கடிபா ரிடங்கள் கைகுவிக்கக்
கான்வாழ் விலங்கும் பணிசெய்ய
முடியா விரகா யினுமுடிக்க
முனிவ ரருளாற் பெற்றேன்யான்.

(இ-ள்) இடியேற்றெருடு - பேரிடியொலியோடு, கல்மழை தருக - ஆலங்கட்டி மழை பொழியவும், எங்கும் வளி வீசாது ஒடுக்க - எவ்விடத்திலும் காற்று வீசாதபடியொடுக்கவும், தடத்தை - தடாகமாகிய நீர்நிலையை, படியாய் செய்விக்க-தரையாகும்படி செய்விக்கவும், பாலைதனில் - (வற்றிய) பாலை நிலத்தில், நீர் வருவிக்க - தண்

ணீர் (ஊற்றெடுத்து) வரும்படி செய்விக்கவும், கடி - பேய்களும், பாரிடங்கள் - பூதங்களும், கை குவிக்க - (என்னைக்) கைகூப்பி வணங்கவும், கான் வாழ் விலங்கும் பணி செய்ய - காட்டு மிருகங் களும் (யான்) ஏவின தொழிலைச் செய்யவும், முடியா விரகாயினும் - (பிறரால் செய்தற்கு) இயலாத தந்திரங்களாயினும், முடிக்க-என்னால் செய்து முடிக்கவும் (ஆன உபாயங்களை) முனிவர் அருளால் யான் பெற்றேன் - ஒரு முனிவரின் கருணையால் நான் தெரிந்து கொண் டேன் ; (எ.று).

பேரிடியோடு கன்மழை பொழியவும், வாயு தம்பிக்கவும், நீரை நிலமாக்கவும், நிலத்தை நீராக்கவும், பேய் பூதங்கள் கை குவிக்கவும், கொடிய காட்டு விலங்குகள் பணி செய்யவும் செய்ய வல்லேன் என்று துரியோதனன் கூறி, மேலும் "பிறரால் செய்தற்கு முடியாத விரகினையும் முடிக்க வல்லேன்" என்றான் என்பது அறிய வேண்டு வது. அவ்விரகாவது - இறந்தவரெல்லாம் பிழைப்பிக்கச் செய்வது. இந்தச் சஞ்சீவிநி மந்திரத்தை ஒரு முனிவன் உபதேசிக்கப் பெற்றான் துரியோதனன். இங்கு அறிய வேண்டிய வரலாறு பின்வருமாறு :- தேவகுருவாகிய பிருகஸ்பதியின் மூத்த மகன் கசனென்பவன் அசுர குருவாகிய சுக்கிராசாரியரிடமிருந்து சஞ்சீவிநி மந்திர வித்தை யைக் கற்றான். அம் மந்திரத்தால் இறந்தவரைப் பிழைப்பிக்கச் செய்யலாம். பின்பு கசனிடமிருந்து பிருகஸ்பதியும் தேவர்களும் அம் மந்திரத்தை உபதேசம் பெற்றனர். அந்த மந்திரத்தைப் பிற் காலத்தில் தேவர்களிடமிருந்து முனிவர்கள் தெரிந்து கொள்ள, ஒரு முனிவரிடமிருந்து துரியோதனன் பெற்றனனென வரலாறு உணர்க. கடி - பேய் : Devil, evil spirit: "கடி வழங்காரிடை" (மணி. 9,49) பாரிடம் - பூதம் ; Goblin, Demon. "குறுந்தாட் பாரிடங் குனிப்ப (கல்லாடம் : 34, 7). கல் மழை - ஆலங்கட்டியாக விழும் மழை Shower of Hailstones. தருக - தர; எச்சத் திரிபு. தருக, ஒடுக்க, செய்விக்க, வருவிக்க, குவிக்க, பணிசெய்ய, முடிக்க என்ற வினை யெச்சங்கள் அடுக்கி 'பெற்றேன்' என்ற முற்றோடு முடிந்தன. (43)

44. துரியோதனன் தன் முடிவினைக் கூறுதல்.

உரைத்த துறுதி யாமோவென்
றுரைப்பா யெனிலோ திமமுயர்த்தோன்
வரைத்த படியே நடக்குமலான்
மாறு நடவா தவர்க்கிதம்யான்

கரைத்தே பதந்தாழ்ந் துயிர்வாழேன்
கழற லானென் துயருளத்தில்
நிரைத்த தொழிதி யென்றுரைத்தான்
நிருபன் தளர்ந்தம் மகற்குரைப்பான்.

(இ-ள்) உரைத்தது-யான் கூறிய படைவலி விரகுவலி யிவை, உறுதி ஆமோ என்று உரைப்பாயெனில்-நற்பயனளிக்குமோ என்று கூறுவாயானால் ஓதிமம் உயர்த்தோன் உரைத்தபடியே-அன்னக் கொடியையுயர்த்த பிரமன் (தலையில்) எழுதியுள்ள விதியின்படியே, நடக்கும் அலால்-நிகழுமேயல்லாமல், மாறு நடவாது-[விதிக்கு] எதிராக (எதுவும்) நிகழாது: யான்-(வணங்காமுடி மன்னனாகிய) நான், அவர்க்கு-அந்தப் பகைவராகிய பாண்டவர்க்கு, இதம்-நன்மையை-கரைத்து-(அவர்களை) அழைத்துச் சொல்லி, பதம் தாழ்ந்து [அவர்கள்] பாதங்களில் வீழ்ந்து வணங்கி, உயிர் வாழேன்-உயிர்தரித்திருக்கமாட்டேன்: (ஆகவே) கழறலான்-(நீ எனக்கு) இடித்துப் புத்தி கூறுதலால், என்-பய்னென்னை? (ஒன்றுமில்லை): உளத்தில்-உன் மனதினில், துயர் நிரைத்தது-துன்பத்தை மிகுதியாகக்கொண்டுள்ளதை, ஒழிதி-நீக்குவாயாக: என்று உரைத்தான் - என்று (துரியோதனன்) கூறிமுடித்தான்: நிருபன் - திருதராட்டிரன், தளர்ந்து-சோர்ந்து, அ மகற்கு உரைப்பான்-அந்தத் துரியோதனனாகிய பிள்ளைக்குக் கூறுவான்; (எ.று) அவன் கூறியதை மேலைக் கவியிற் காண்க.

விதியின்படியே நடக்கும் என்பதை "நீர் வழிப்படூஉம் புணை போல் ஆருயிர், முறை வழிப்படூஉம் என்பது, திறவோர் காட்சியிற் றெளிந்தனம் "என்ற புறநானூற்று வரிகளால் தெளியலாம்: (புறம்: 192). கரைத்தல்-அழைத்தல். என்?-வினா பயனின்மை குறிப்பது. நிரைத்தது - குறிப்பு வினையாலணையும்பெயர். ஒழிதி-முன்னிலை வியங்கோள். மாறு-மாறுக என்பதன் தொகுத்தல். கழறல்-தொழிற் பெயர். (44)

45. திருதராட்டிரன் தன்முடிவினைக் கூறுதல்.

தெய்வ வலிகொ ளவரைநீ
சேனை வலியால் வெல்வனென்றால்
உய்வ திலையா ரிருட்கதிர்வென்
றுறுமே வரசை யிரண்டாக்கி

ஐவர்க் கொருகூ றுனக்கொருகூ
றளிப்பன் புரத்தி யெனவஞ்சங்
கைவந் திடுமம் மகன்றுதை
கழறற் கிசையா துருத்துரைப்பான்.

(இ-ள்) தெய்வ வலி கொள் ஐவரை-தெய்வ பலம் கொண்டுள்ள பாண்டவரை, நீ—, சேனைவலியால் வெல்வன் என்றல்-படையின் வலிமைகொண்டு செயிப்பேன் என்று கூறுவையானால் [நீ] உய்வது இலை-பிழைப்பது என்பது கிடையாது: ஆர் இருள்-செறிந்த இருட்டு, கதிர்-சூரியனை, வென்று உறுமே-செயிப்பதென்பது கூடுமோ? (கூடாது.) [ஆகவே] அரசை இரண்டாக்கி-நமது அரசாட்சி நாட்டை இரு பகுதியாக்கி, ஐவர்க்கு ஒரு கூறு-பஞ்சபாண்டவர்க்கு ஒரு பகுதி, உனக்கு ஒரு கூறு-உனக்கு ஒரு பகுதி, அளிப்பன்-கொடுப்பேன்: புரத்தி-(உனது பகுதியைப்) பாதுகாப்பாய், என-என்று, வஞ்சம் கைவந்திடும் அ மகன்-வஞ்சனையிற் கைதேர்ந்த அந்தத் துரியோதனனின், தாதை-தந்தையாகிய திருதராட்டிரன், கழறற்கு-கூறிய ஆலோசனைக்கு, இசையாது-மனமொருப்படாமல், உருத்து-(தந்தையைச்) சினந்து, உரைப்பான்-கூறுவான்; (எ.று.) அவன் கூறியதை மேலிரண்டு கவிகளிற் காண்க.

தெய்வ பலத்தின்முன் சேனைபலம் என் செய்யும் என்றது-கிருஷ்ண பகவானின் துணைப் பலமிருக்கும் தருமனுக்குமுன் உன் துணைப் பலம் என்ன செய்யும் என்ற கருத்தினது. இரண்டாமடி **எடுத்துக்காட்டுவமையணி.** புரத்தி-முன்னிலையேவல். (45)

46-47 துரியோதனன் தன் ஆண்மை தோன்றப் பேசுதல்.

இரண்டு கவிகள் - ஒரு தொடர்.

வல்பா ரிழந்து போமவரை
வருவித் தனிகஞ் சிலசேர்த்து
வெல்வான் போன்மா னமை வெருட்டும்
விரகை யுணரா தெனக்குமதி
பல்கால் புகல்கின் றுயதற்குட்
பட்டாங் கவர்க்குப் பார்சிறிது
நல்கேன் வெல்வேன் வெருவலெென
நவின்றுன் இன்னந் தானவில்வான்.

(இ-ள்) வல்-சூதாட்டத்தில், பார் இழந்து-தமது நாட்டினை யிழந்து, போம் அவரை-காட்டுக்குச் சென்ற அந்தப் பாண்டவரை, வருவித்து-(தான்) அழைத்து, அனிகம் சில சேர்த்து-சில துணைப் படைகளையும் கூட்டி, வெல்வான்போல்-(நம்மைச்) செயித்திடுவான் போல, நமை வெருட்டும்-நம்மைப் பயமுறுத்தும், மால் விரகை உண ராது-கிருஷ்ணனின் தந்திரத்தையறியாமல், எனக்கு மதி பல்கால் புகல்கின்றாய் - எனக்குப் புத்தி பல தடவை சொல்லியுள்ளாய்: அதற்கு உட்பட்டு-உனது போதனைக்குக் கட்டுப்பட்டு, அவர்க்கு-அந்தப் பஞ்சவர்க்கு, பார்சிறிது நல்கேன்-நாடு சிறிதேனும் கொடுக்க மாட்டேன் : (அதற்குப் பதிலாக) வெல்வேன்-அவர்களை வென்றி கொள்வேன் : வெருவல் - நீ பயப்படாதே : என நவின்றான்-என்று கூறினான் : (பிறகு) இன்னம்-மேலும், நவில்வான்-சில கூறுவானா யினான் ; (எ.று.) ஆங்கு, தான்-அசை.

கிருஷ்ணனின் கபடத்தையுணர்ந்து கொள்ளாது நீ எனக்குப் புத்தி கூறுகின்றாயே என்று துரியோதனன் தந்தையைக் கடிந்து கொண்டானென்க. வல் என்பதன்பின் 'இல்' என்னும் ஏழனுருபு தொக்கது. வெல்வான்-வானிற்று வினையெச்சம் : தொழிற்பெயர்த் தன்மைப்பட்டு வந்தது. நமை-நம்மை: இடைக்குறை. 'சிறிது' என்பதன் பின் உம்மை தொக்கது. நல்கேன், வெல்வேன்-தன்மை யொருமை முற்றுக்கள். வெருவல் - அல்லீற்று எதிர்மறை வியங் கோள். (46)

47\. புல்லார் வலியைப் புகழ்விருத்தர்
புகல்கேட் டெமது வலியிகழ்ந்து
வெல்லா யென்றா யான்சமரம்
விளைத்தா லவை ரெனக்கெதிரே
நில்லார் நின்றாற் றுணைவேண்டேன்
நிமிடத் தடுவ லெனநிருபன்
பல்லா ரறிவ ருனதாண்மை
பகர்வ தென்கொ லெனப்பழித்தான்.

(இ-ள்) புல்லார்-பகைவரது, வலியை-படை வலி, துணைவலி முதலியவற்றை,புகழ்-சிறப்பித்துப்பேசிய, விருத்தர்-கிழஞானிகளின், புகல்-சொற்களை, கேட்டு-செவியேற்று, எமது வலி இகழ்ந்து-எங் களது படைவலி துணைவலி முதலியவற்றைப் பரிகசித்து, வெல்லாய்-நீ செயிக்கமாட்டாய், என்றாய்-என்று கூறினாய்: யான் சமரம்

விளைத்தால்-நான் போர் செய்வேனாயின், ஐவர் எனக்கு எதிரே நில்லார்-பஞ்சவர் எனக்கு எதிராக நின்று போரிடமாட்டார்கள் ; [அங்ஙனன்றி ஒருகால்] நின்றால் - எதிர்த்து நிற்பராயின், துணை வேண்டேன்-யாதொரு துணையுமில்லாமலே, நிமிடத்து அடுவல்-ஒரு நொடியில் கொன்றொழிப்பேன், என-என்று ஆண்மை பேச, (அதனைக்கேட்டு) நிருபன் - திருதராட்டிர மன்னன், உனது ஆண்மை-(மகனே !) உனது பராக்கிரமத்தை, பல்லார் அறிவர்-பல பேரும் அறிவார்கள் : (ஆதலின்) பகர்வது என்கொல்-வாய்விட்டுச் சொல்லுதல் எதற்காக ? (வேண்டுவதின்று), என-என்று குத்தலாகக் கூறி, பழித்தான்-நிந்தித்தான்; (எ.று.).

விருத்தர்-வீடுமன், கிருபன், துரோணன் போன்ற வய்து முதிர்ந்த அறிஞரைக் காட்டும். புகல்-சொல்லுக்குத் தொழிலாகு பெயர். வெல்லாய்-எதிர்மறை முன்னிலை வினைமுற்று : ஆ-எதிர் மறையிடைநிலை புணர்ந்து கெட்டது. ஐவர்-தொகைக்குறிப்பு. அடுவல்-தன்மையொருமை வினைமுற்று. என்கொல், கொல்-அசை. புல்லாா-பகைவர் : வினையாலணையும்பெயர். (47)

48. வீடுமன் கன்னனைப் பழிக்க, அவன் வெகுண்டு எழுந்து போதல்.

பரசா யுதன்வென் றவன் கன்ன !
பார்த்தன் தொடையாற் பலரெள்ளத்
தரைசாய்ந் திறப்ப தன்றியுயிர்
தப்பி மீள்வை யோயிவணீ
உரையால் வெல்வை யெனவெகுளா
வுதய னுயிர்த்தோ னுலகெல்லாம்
வருபாண் டவர்க்கீந் தேத்துமென
வல்லை யெழுந்து மனைபுகுந்தான்.

(இ-ள்) பரசாயுதன் - பரசுராமனை, வென்றவன்-ஜெயித்த வனாகிய வீடுமன், (கர்ணனைப்பார்த்து), கன்ன !-கர்ண !, பார்த்தன் தொடையால்- அருச்சுனன் விடுக்கும் பாணங்களால், பலர் எள்ள - (கண்டோர்) பலரும் ஏளனஞ்செய்யும்படி, தரை சாய்ந்து இறப்பது அன்றி-பூமியில் வீழ்ந்துமாய்வதேயல்லாமல், உயிர்தப்பி மீள்வையோ-உயிரோடு பிழைத்து மீண்டுவருவாயோ ?

(வரமாட்டாய்) : (ஆனால்) இவண் - இவ்விடத்து (சபையில்), உரையால் வெல்வை-வாய்ப்பேச்சால் ஜெயமடைவாய் ; என-என்று இகழ, (அதுகேட்டு) உதயன் உயிர்த்தோன்-சூரிய புத்திரனான கர்ணன், வெகுளா-கோபித்து, 'வருபாண்டவர்க்கு-(நம்மேல்) வரும் பாண்டவர்கட்கு, உலகெல்லாம் ஈந்து-நாடுமுழுவதையும் கொடுத்து, ஏத்தும்-(மேலும்) தோத்திரஞ்செய்யுங்கள்' எனா-என்றுகூறி, வல்லை எழுந்து - சீக்கிரமாக வெழுந்திருந்து, மனை புகுந்தான் - தன்வீடு சேர்ந்தான் ; (எ,று.).

கையாலாகாத வாய்ப்பேச்சில்வீரன் என்று கர்ணனை வீடுமன் பழிக்கவே அவன் வெகுண்டு "பாண்டவர்க்கு நாடுஈந்து துதி பாடுங்கள்" என்றுநிஷ்டுரமாகச் சொல்லிவிட்டுத் தன்வீடுபுகுந்தான் என்றார். வெகுளா-உடன்பாட்டெச்சம், மீள்வையோ, ஓ—எதிர் மறை. வெல்வை-முன்னிலை வினைமுற்று, வல்லை-விரைவுகுறிக்கும் இடைச்சொல். (48)

வேறு.

49-50 **யார்யாரைக்கொல்லச் சமைந்தனர் என்று திருதராட்டிரன் கேட்க, சஞ்சயன் கூறலுறல்.**

இருகவிகள்—ஒரு தொடர்.

செல்லு கன்னனை யந்த கன்பொருள்
செய்கி லானவர் நம்மிலே
கொல்ல யாவரை யார்கு றித்தனர்
கூறு கென்னவச் சஞ்சயன்
சொல்லு வானவ னியைச் சிகண்டிது
ரோண னைக்கனல் வந்தவன்
சல்லி யன்றனை முரச கேதனின்
றனையர் தங்களை வீமனே.

(இ-ள்) செல்லு கன்னனை-(வெகுண்டு) போன கர்ணனை, அந்தகன்-குருடனாகிய திருதராட்டிரன், பொருள் செய்கிலான்-லட்சியஞ்செய்யாதவனாய், (சஞ்சயனை நோக்கி) அவர்-அப்பாண்டவர்கள், நம்மில்-நமக்குள்ளவர்களில், யாவரை-எவ்வெவர்களை, யார் கொல்ல - (அவர்களில்) எவர் கொல்ல, குறித்தனர் - நிச்சயித்துள்ளனர், கூறுக-(எனக்குச்)சொல்வாயாக, என்ன-என்று கேட்க,

அ சஞ்சயன்-(அவன் நண்பனாகிய) அந்தச் சஞ்சயமுனிவன், சொல்லுவான்-கூறுவானாயினான்; அ வனியை அந்தப் பிரமசாரியாகிய வீடுமனை, சிகண்டி-சிகண்டி (கொல்பவன்); துரோணனை—, கனல் வந்தவன்-திட்டத்துய்மன்; சல்லியன் தனை-சல்லியனை, முரச கேதன்-முரசக்கொடியேந்திய தருமன்: நின் தனையர்தங்களை-உன் பிள்ளைகள் நூற்றுவரையும், வீமன்-வீமசேனன்; (எ.று.).

வனி - வன்னியென்பதன் இடைக்குறை. வன்னி-பிரமசாரி; வீடுமன் மணமறுத்தவனாதலின் அவனை 'வன்னி' என்றது. திட்டத்துய்மன் யாகத்தீயிற்றோன்றியவனாதலின் 'கனல்வந்தவன்' என்றது. கேதன்-கேதனன் என்பதன் குறுக்கல்.

இதுமுதல்ஆறுகவிகள்-பெரும்பாலும் ஒன்று மூன்று ஐந்தாஞ் சீர்கள் மாச்சீர்களும், மற்றையவை விளச்சீர்களுமாகிய எழுசீராசிரிய விருத்தங்கள், (49)

50\. மருக னைக்குரு மகனை கன்னனை
வரிவில் பற்குனன் சகுனியைச்
செருவின் மத்திரை மைந்தர் நின்பவுத்
திரரை வாளபி மன்னடல்
கிருத வன்மனை வல்வில் சாத்தகி
கேடி லாததீ யோர்தமை
அரவ கன்னிகு மாரன் மாயைவல்
லாரை மாருதி மைந்தனே.

(இ-ள்) மருகனை-சயத்திரதனை, குரு மகனை-அசுவத்தாமனை, கன்னனை-கர்ணனை, (இவர்களை) வரிவில் பற்குனன்-வரிந்துக டப்பட்ட (காண்டீபமென்னும்) வில்லையேந்திய அருச்சுனன்; சகுனியை - மாமனாகிய சகுனியை, செருவில்-போரில், மத்திரை மைந்தர்-மாத்திரியின்பிள்ளைகளாகிய நகுலசகதேவர்: நின் பவுத்திரரை-உன்னுடைய பேரப்பிள்ளைகளை, வாள் அபிமன்-வாளாயுதத்தில்வல்ல அபிமன்யு: அடல் கிருதவன்மனை-பலம்பொருந்திய கிருதவர்மாவை, வல் வில் சாத்தகி-வலிய வில்லையேந்திய சாத்தகி: கேடிலாத தீயோர்தமை-அழிவில்லாதிருந்த அரக்கர்களை, அரவ கன்னி குமாரன்-நாககன்னிகையாகிய உலூபியின்புத்திரனான இராவான்; மாயை வல்லாரை-மாயையில்வல்ல அரக்கர்களை, மாருதி மைந்தன்-வீமன்மகனாகிய கடோற்கசன்; (எ.று.).

மருகன் - துச்சளையின் கணவனாதலின் சயத்திரதனைக்காட்டும்: அசுவத்தாமன் சிரஞ்சீவியாதலின் அவனைப்புறங்கொடுக்கச் செய்தான் அருச்சுனன் அவ்வளவே யென்பதை "பார்த்தன்முன்புநின்று அமர்புரிந்திலன் கடற்பார் புகழ்பரித்தாமா", "மற்றவன்றனை முதுகு கண்டு" என்ற வில்லிபாரதத்தால் அறியலாம். (சல் : பதினெட்: செ : 52,53). சகுனி சகதேவனால் கொல்லப்படுகிறான். வில்லிபாரதத்தின் படி, கிருதவர்மா போரில் இறந்துபடவில்லை; போர்முடிவில் அவன் வியாசபகவானால் தன்னூர்க்குச் செல்லும்படி விடைகொடுக்கப் பட்டான். (சௌ : 34) சாத்தகி தலைதுணித்துக்கொன்றது பூரிசிரவாவை. (பதினான் : 159) அழிவில்லாதிருந்த அரக்கரையும் இராவான் அழிப்பான் என்றபடி, (வில்லியின்படி பகாசுரன் தம்பியாகிய அலம்புசனைப்புறங்காட்டச்செய்து அவனுடன்வந்த அரக்கரை இராவான் மாய்த்தமை நோக்குக: (எட்டாம் :20, 21). கடோற்கசன் அலாயுதன்போன்ற மாயையில்வல்லவரை யொழித்தனனென்பதை வில்லிபாரதத்தால் அறியலாம்: (பதினான்காம் : 203). மாருதி-வீமன் : மருத்-வாயு; அவனது குமாரன் மாருதி : தத்திதாந்தநாமம். (50)

51. சஞ்சயன் கூறிமுடித்தபின் சிலமன்னர் சல்லியனை வெல்ல முடியுமோ எனல்.

வந்த பற்பல மன்னர் தம்மெதிர்
வந்தெ திர்த்திடு வாரைபோ
ரிந்த வண்ணம் வெலக்கு றித்தன
ரென்ன மன்னரிற் சிற்சிலர்
அந்த கன்மகன் சல்லி யற்கெதிர்
ஆவ னோவென மத்திரன்
செந்த மிழ்பொடி பூத்த தொத்தவ
னைச்செ யிப்பவ ராரென.

(இ-ள்) வந்த பற்பல மன்னர்-(போரிடுதற்கு) வந்துள்ள பல மன்னர்களும், தம் எதிர் வந்து எதிர்த்திடுவாரை-தமக்கு எதிராக வந்த பொருபவரை, போரில்-தாம் செய்யும் போரில், இந்தவண்ணம்-இந்தப்படியாக, வெல குறித்தனர் - வெல்ல எண்ணி நிச்சயித்துள்ளனர் என்ன-என்று சஞ்சயன் கூறிமுடிக்க,(அப்போது அதுகேட்ட) மன்னரில் சிற்சிலர்-அரசர்களிற் சிலர், 'அந்தகன் மகன்-தருமபுத்திரன், சல்லியற்கு எதிர் ஆவனோ என-சல்லியனுக்குச் சமானமாகு

பவனே என்று வினவ, (சஞ்சயன்) 'மத்திரன்-சல்லியன், செந்தழற் பொடி பூத்ததொத்தவனை-சிவந்த நெருப்பு (மேற்புறத்து) நீறு பூத்ததுபோலிருப்பவனை, செயிப்பவர் ஆர் என-வெல்ல வல்லவர் யாவருளர் என்று கூற (எ.று) ''இளவலோதலும்'' என மேலைக்கவி யிலியையும்.

சல்லியன் அம்பின் நுனிபோல் பகைவர்க்கு வருத்தஞ்செய்து துளைப்பவனாதலின், அவனை விதந்து சிறப்பாக எடுத்துக்காட்டிச் சில மன்னர் 'தமருன் அவனுக்கு நிகராவனோ' என்ன, சஞ்சயன், 'சல்லியன் நீறுபூத்த நெருப்புப் போன்றவனாயிற்றே : அவனை வெல்வாரிலரே ''என்று கூறி, சல்லியன் வலிமை பெறவைத் தான் என்பது. இதனை இங்குக் கூறியதற்குக் காரணம்-இத்தகைய பெருவீரனான சல்லியனையே முரசகேதனனாகிய தருமன் கொல்லச்சங் கற்பித்துள்ளானே எனப் போரின் விளைவு பாண்டவர் வெற்றியில் முடியும் என நிரூபித்தபடியென்க. ஈற்றடி-உவமையணி. அந்தகன்-யமன். (51)

52. விதுரன் தன்கருத்தைத் தெரிவித்தலும், சஞ்சயனைத் துரி யோதனன் வெகுளலும்.

ஆண்டு மைந்தர்கள் பொன்று மென்றிட
 ராழு மண்ணலை யைவரை
யீண்ட ழைத்தர சீத னன்றென
 விளவ லோதலுஞ் சஞ்சய !
பாண்டு தந்தவர் வருவ ரோவெனப்
 பகரில் கொண்டடை வேனென
மூண்டு வெஞ்சினஞ் சஞ்ச யற்கிது
 மொழிகு வான்றுரி யோதனன்.

(இ-ள்) ஆண்டு-அப்போது, மைந்தர்கள்-தன் பிள்ளைகள் நூற்று வரும், பொன்றும்-(போரில்) இறந்துபடுவரே, என்று—, இடர் ஆழும் அண்ணலை-துன்பத்திலாழ்ந்த திருதராட்டிரனை, (நோக்கி) இளவல்-(அவனது) தம்பியாகிய விதுரன், 'ஐவரை - பஞ்சபாண்டவரை, ஈண்டு அழைத்து-இங்கே வரவழைத்து, அரசு ஈதல் நன்று என-[அவர்க்குரிய] அரசாட்சியை வழங்குதல் நல்லது என்று, ஓதலும்-(ஆலோசனை) கூறவும், (திருதராட்டிரன்) 'சஞ்சய!-சஞ்சயமுனி வனே! பாண்டு தந்தவர்-பாண்டுபுத்திரர்கள், வருவரோ ?-(யான்)

அழைக்க வருவார்களோ, என-என்று வினவ, (அதற்குச் சஞ்சயன்) பகரில்-நீ ஆணை கொடுப்பில், கொண்டு-(அவர்களை) உடனழைத்துக்கொண்டு, அடைவேன் என-வந்து சேருவேன் என்று கூற, (அதுகேட்ட) துரியோதனன்—, வெம் சினம் மூண்டு-கொடிய கோபங்கொண்டு, சஞ்சயற்கு - சஞ்சயமுனிவனை நோக்கி, இது மொழிகுவான்-இந்த வார்த்தையைச் சொன்னான்; (எ.று) அவன் சொன்னதை மேலைக்கவியிற் காண்க.

திருதராட்டிரனுக்குத் தம்பி விதுரன்: இதனைத் 'திருதராட்டிரனுந் தம்பியும்' (ஆதி: வாரணா: 94) என்ற வில்லிவாக்காலும் அறியலாம். தந்தவர்-வினையாலணையும்பெயர். வருவரோ, ஓ-வினா: ஐயப்பொருளது. அடைவேன்-தன்மையொருமை. (52)

53. துரியோதனன் சஞ்சயனையிகழ்ந்துபேசி அகங்கரித்தல்.

நீய ழைப்பவ னிறைகொ டுப்பவன்
நீணி லம்பெறு வாரவர்
தூயர் நின்னிலர் பக்க பாதநீ
சொ ற்று ளாயவர் பாலிலன்
பாய பேரொடு மங்கு போதிந
லங்கர் கோன்முத லோர்தமைப்
பாய மாத்துணை கொண்டு வென்றடல்
பார்பு ரப்பவ னானரோ.

(இ-ள்) நீ அழைப்பவன்-நீ பாண்டவரை அழைத்துவருபவன்: இறை - மன்னனாகிய திருதராட்டிரன், கொடுப்பவன் - (அரசாட்சியைக்) கொடுப்பவனானவன்: (அதனால்) அவர்-அப் பாண்டவர், நீள் நிலம் பெறுவார்-பெரிய பூமியைப் பெறுவார்கள்: (அனைத்தினும் மேலாக) தூயர்-பரிசுத்தமான மனமுடையவர், நின்(னில்) இலர் - உன்னைப்போன்றவர் இலர்: (ஆனால்) நீ-அப்படிப்பட்ட நீ, பக்க பாதம் சொற்றுளாய்-பட்சபாதமாகப் பேசியுள்ளாய்; அவர்பாலில்-அந்தப் பாண்டவர் பக்கத்தில், அன்பாய பேரொடும்-விசுவாசங் கொண்டுள்ளாரோடும், அங்கு போதி - அவர்களிருப்பிடத்திற்குப் போவாய்: நான்-நானே, நல் அங்கர்கோன் முதலோர்தமை-நல்ல [தோழனாகிய] கர்ணன் முதலானோரை, பாயம் மா துணைகொண்டு-(என்) மனத்துக்கு விருப்பமான சிறந்த சகாயமாகக்கொண்டு,

வென்று-(போரில்) அப்பாண்டவர்களை ஜெயித்து, அடல்-பராக்கிரமத்தோடு, பார் புரப்பவன் - பூமியை யாளுவேனுவேன் ; (எ.று.) அரோ-ஈற்றசை.

முதலிரண்டடிகள் இகழ்ச்சி பற்றியன. இறுதியடி அகங்காரந் தோன்றக்கூறியது. பக்கபாதம் - பக்ஷபாதம் : ஒருபாற்கோடுதல். பாயம்-மனத்துக்கு விருப்பமானது : ''நளிபடு சிலம்பிற் பாயம் பாடி'' (குறிஞ்சிப் : 58) நின்னிலர் - நின்னினிலர் : ஐந்தனுருபு தொக்கு நின்றது. போதி-முன்னிலையேவல். (53)

54. திருதராட்டிரன் மைந்தனோடும் சஞ்சயனோடும் காந்தாரியிடம் போதல்.

என்ற வன்றனை தந்தை சீறியி
வற்கி சைப்பதில் சஞ்சய !
ஒன்று மோபய னொழிய வோவிவ
னுய்ய வோவிதி யோர்கிலேன்
என்ற னுனொடு மைந்த னைக்கொடி
ருந்த பேரவை நீங்கியே
பொன்றி டாதகற் பணியி ருந்துள
பொலியு மாளிகை யெய்தினன்.

(இ-ள்) என்றவன்தனை-என்ற துரியோதனனை, தந்தை சீறி-திருதராட்டிரன் சினந்து, சஞ்சய !-சஞ்சயனே! இவற்கு இசைப்பதில் பயன் ஒன்றுமோ - இந்தத் துட்டனுக்குச் சொல்வதில் நல்லபயன் பொருந்துமோ ? (பொருந்தாது) ; விதி - இவனுக்குத் தலைவிதி, ஒழியவோ-இவன் இறந்தொழியவோ, (அல்லது) இவன் உய்யவோ-இவன் உயிர்தப்பியீடேறவோ ? ஓர்கிலேன் - தெரிகின்றிலேன், என்று-என்று கூறி, அனுனொடு-அந்தச் சஞ்சயனோடு, மைந்தனைக் கொடு - துரியோதனனையும் உடன்கொண்டு, இருந்த பேரவை நீங்கியே-(தாங்கள்) அமர்ந்திருந்த பெருஞ்சபையை விட்டு, பொன்றிடாத-(என்றும்) பழுதுபடாத, கற்பு அணி இருந்துள-கற்பினுக்கு ஆபரணம் போன்ற காந்தாரியிருக்கின்ற, பொலியும் மாளிகை-விளங்குகின்ற அரண்மனையை, எய்தினன்-(போய்ச்) சேர்ந்தான் ; (எ.று).

காந்தாரியிடஞ் சென்றது-அவள் கருத்தையும் அறிதற்கு என்க. 'விதி இவன் ஒழியவோ உய்யவோ ஓர்கிலேன்' என முன்னர்க் கூட்டுக. அருன்-குறிப்புவினையாலணையும்பெயர். கொடு-கொண்டு என்பதன் தொகுத்தல். கற்பணி-காந்தாரி : உருவகம். ஒன்றுமோ, ஓ-எதிர்மறை. ஒழியவோ உய்யவோ, ஓகாரம் விகற்பப்பொருளது, (54)

வேறு.

55. **காந்தாரி துரியோதனனுக்கு நற்புத்தி கூறத்தொடங்கல்.**

வரியோதிப ணிந்தாதனம் வைத்தாளவன் மயிலே !
பெரியோர்மதி யொருவிக்கதிர் பெறுவான்மதி கொண்டித்
துரியோதனன் வலியோரொடு தொடங்கச்சமர் துணிதல்
சரியோமதி யோதென்னத ணையற்கணை புகல்வாள்.

(இ-ள்) வரி ஓதி பணிந்து - கட்டிய கூந்தலையுடைய காந்தாரி வணங்கி, ஆதனம் வைத்தாள்-இருக்கை சமர்ப்பித்தாள் : அவன்-(கணவனாகிய) திருதராட்டிரன், மயிலே !—மயில்போன்ற சாயலை யுடையவளே ! இ துரியோதனன் - இந்த (நம் பிள்ளையாகிய) துரியோதனன், பெரியோர் மதி ஒருவி - சான்றோராகிய வீடும துரோண விதுரர் இவர்களது நற்புத்தி போதனையை விட்டு, கதிர் பெறுவான் மதி கொண்டு-(தன் நண்பனாகிய) சூரியபுத்திரனாகிய கர்ணனுடைய புத்தியைக்கேட்டு ஏற்றுக்கொண்டு, வலியோரொடு-பலம் பொருந்திய பாண்டவரோடு, சமர் தொடங்கத் துணிதல்-போரையாரம்பிக்க முடிவு செய்தல், சரியோ-தகுதியுடைத்தாமோ ? (ஆகாது) [எனவே] மதி ஓது என்ன-நல்ல புத்தியைச் சொல் வாயாக என்று கூற, தனையற்கு-தன் பிள்ளைக்கு, அனை-தாயாகிய காந்தாரி, புகல்வாள்-கூறலானாள் ; (எ.று.)

பெரியோர்சொற்கேளாது கதிர்சிறுவன் சொற்கேட்டுப் போர் துணிதல் சரியாகாதாதலின், காந்தாரியைப் பிள்ளைக்கு நற்புத்தி கூறும்படி திருதராட்டிரன் ஏவினனென்க. வரிதல்-கட்டுதல், ஓதி-ஆகுபெயர். மயில்-உவமையாகுபெயர். அனை-அன்னையென்பதன் தொகுத்தல்.

இதுமுதல் இச்சருக்கம் முடியுமளவுமுள்ள பத்துக்கவிகள்-பெரும்பாலும் நான்காஞ்சீரொன்று மாச்சீரும், மற்றவை மூன்றும் மாங்கனிச்சீர்களுமாகிவந்த கலிவிருத்தங்கள். (55)

56. **காந்தாரி நற்புத்தி கூறவும் மகன் மறுத்து மொழிதல்.**

மைந்தாசமர் துணிகின்றமை மதியன்றவர் தம்பான்
முந்தாடுவ லிற்கொள்புவி முதியோருரை வழிநீ
தந்தாங்கவர் நண்புப்பெறி றக்கோருறு மொக்கல்
வந்தாரொடு முய்வாயென மறுத்துச்சுதன் மொழிவான்.

(இ-ள்) மைந்தா !-மகனே ! சமர் துணிகின்றமை-போர்செய்ய முடிவுகட்டுதல், மதியன்று-நல்ல புத்தியாகாது: அவர் தம்பால்-அவரிடத்தினின்று, முந்து-முன்னர், ஆடு-விளையாடிய, வலில்-சூதாட்டத்தில், கொள்-(நீ) கைக்கொண்ட, புவி-(அவரது)நாட்டை, முதியோர் உரைவழி-பெரியோர்கள் சொற்படியே, நீ—, தந்து-(அவர்க்கு) வழங்கி, அவர் நண்பு பெறின்-அப் பாண்டவரது சிநேகத்தையடைந்தால் (அதனால்) தக்கோர்-(வீடுமன் துரோணன் போன்ற) பெரியோர்களோடும், உறும் ஒக்கல்-பொருந்திய சுற்றத்தோடும், வந்தாரொடும்-துணையாக வந்த மன்னர்களோடும், உய்வாய்-வாழ்ந்து போவாய், என-என்று (புத்தி) சொல்ல, சுதன்-மகனாகிய துரியோதனன், மறுத்து-[அன்னைகூறிய நற்போதனையை] ஏற்காது விலக்கி, மொழிவான்-(தான்) கூறலாயினான்; (எ.று). அவன் கூறியவற்றை மேலைக் கவிகளிற்காண்க. ஆங்கு-அசை.

வல்-சூதாடுகருவி: அதன் ஆட்டத்திற்கு ஆகுபெயர். ஒடு-முன்னரும் கூட்டப்பட்டது. துணிகின்றமை-தொழிற்பெயர். (56)

57. **துரியோதனன் தன் அன்னையிடம் கூறுதல்.**

இரண்டு கவிகள்—ஒரு தொடர்.

இருதாடொழு திறைமன்னரி டப்பார்புரந் திடுவேன்
பொருபோரினில் வெருவேன்சுரர் புகினும்வய முறுவேன்
திருமாமுடி வளையேன்புகழ் செத்தாயினும் பெறுவேன்
தரையீந்தவ ரடிதாழ்ந்துயிர் தரியேன்வசை புனையேன்.

(இ-ள்) இருதாள் தொழுது-(என்னுடைய) இரண்டு பாதங்களையும் வணங்கி, மன்னர்-பிற அரசர்கள், இறை இட-வரிகட்ட, பார்-இந்தப் பூமியை, புரந்திடுவேன் - பாதுகாத்து ஆட்சி செய்வேன்: பொருபோரினில்-இடும் போரிலே, வெருவேன் - அஞ்சமாட்டேன்:

சுரர் புகினும்-தேவர்கள் போரிடவரினும், வயம் உறுவேன்-(அவர்களைவென்று) ஜயம்பெறுவேன் : திரு மா முடி - சிறந்த என் சென்னியை, வளையேன்-குனித்து வணங்கமாட்டேன் : செத்தாயினும் - இறந்துபட்டாயினும், புகழ் பெறுவேன்-கீர்த்தியை யடையேன் : (இவையன்றி) தரை ஈந்து-பூமியை வழங்கி, அவர் அடி தாழ்ந்து-அந்தப் பாண்டவர்களின் பாதங்களில் வீழ்ந்து, உயிர்தரியேன் - உயிர்தாங்கியிருக்கமாட்டேன் : வசை புனையேன் - பழிச்சொல்லையேற்க மாட்டேன் ; (எ.று).

இறை-வரிப்பணம் : 'இறைவற் கிறையொருங்கு நேர்வது நாடு' (குறள், 733). வளைதல்-குனித்தல், வணங்குதல். துரியோதனனுக்கு வணங்காமுடி மன்னன் என்றொரு பெயருண்டு. செத்தாயினும் - அமங்கலச்சொல். வயம்-வெற்றி. புரந்திடுவேன், உறுவேன், பெறுவேன் - தன்மையொருமை உடன்பாட்டு முற்றுக்கள். வெருவேன், வளையேன், தரியேன், புனையேன்-தன்மையொருமை எதிர்மறை முற்றுக்கள். (57)

58. ஈந்தேனெனி லஞ்சிப்புவி யீந்தானெனும் வசையே
வேந்தாதிய ரென்பாலுள விறலோர்கில ரெனவக்
காந்தாரியம் மொழிமெய்யெனக் கணவன்றனைத் தேற்றச்
சாந்தார்புயன் றேருதுசஞ் சயனோடுரை செய்வான்.

(இ-ள்) ஈந்தேன் எனில்-[நாட்டை அப்பாண்டவர்க்கு] வழங்குவேனென்றால், அஞ்சி-(அவர்களுக்குப்) பயந்து, புவி ஈந்தான் எனும் வசையே-நாட்டைக் கொடுத்திட்டான் என்னும் பழிச்சொல்லே (ஏற்படும்) : வேந்தாதியர்-மன்னர் முதலானவர்கள், என்பால் உள விறல்-என்னிடத்துள்ள வலிமையை, ஓர்கிலர்-அறிந்தாரிலர்: என-என்று கூற, அ மொழி-அந்த வார்த்தையை, அ காந்தாரி-அந்தக் காந்தாரியானவள், மெய் என-உண்மையெனக்கொண்டு, கணவன்தனைத் தேற்ற-திருதராட்டிரனைத் தெளிவிக்க முயல, சாந்து ஆர் புயன்-சந்தனம் பூசிய தோள்களையுடைய திருதராட்டிரன், தேருது-(மனம்) தெளியாமல், சஞ்சயனோடு உரைசெய்வான்-சஞ்சயமுனிவனோடு கூறுவானாயினன் ; (எ.று).

'வசையே' என்பதன்பின் 'ஏற்படும்' என்ற இசையெச்சம் எஞ்சி நின்றது. (58)

59. வியாசமுனிவன் அங்கு வருதல் கூறும்.

அவராற்றலு மிவராற்றலு மறிவாயமர் வெல்வோர்
எவரோதென வவன்மன்னவ யானேதுவ தலவே
தவியாசனே துவனுன்னெனத் தானுன்னின னவன்வந்
துவனல்வர்செய் கடன்கொண்டர சுளமோர்ந்திது
சொல்வான்.

(இ-ள்) அவர் ஆற்றலும்-அந்தப் பாண்டவர்களுடைய வல்லமையும், இவர் ஆற்றலும்-இந்தத் துரியோதனாதியருடைய வல்லமையும், அறிவாய்-நீ தெரிந்துள்ளாய்: அமர் வெல்வோர்-போரில் வெற்றி பெறுபவர், எவர் ஓது என-எந்தக் கட்சியினர் என்பதை [எனக்குச்] சொல்வாயாக என்று வினவ, அவன்-அந்தச் சஞ்சயன், மன்னவ அரசனே! யான் ஓதுவது அல-நான் சொல்லவேண்டியதில்லை; வேத வியாசன் ஓதுவன்-வேதங்களை வகுத்த வியாசபகவான் (தெரிந்து) கூறுவன் : [ஆகவே அவனை] உன் என-நினைப்பாயாக என்று கூற, (அச்சொற்படியே) தான் உன்னினன்-திருதராட்டிரன் நினைத்தான் : (உடனே) அவன் வந்து அந்த வியாசபகவான் எழுந்தருளி, உவன் நால்வர் செய்த கடன்கொண்டு - முன்நிற்பவராகிய நான்குபேரும் செய்த உபசாரங்களை யேற்றுக்கொண்டு, அரசு உளம் ஓர்ந்து-திருதராட்டிர மன்னனது மனமறிந்து, இது-இந்த வார்த்தைகளை, சொல்வான்-கூறுவானாயினான் ; (எ.று). வியாசன் கூறியவற்றை மேலிரண்டு கவிகளிற் காண்க.

'யான் ஓதுவது அல' என்றது-முன்னரே நீ என்னைப்பார்த்து "மிக்க மெய்ம்பு ஐவர்க்கு யாது விளம்பு" (செ: 34) என வினவ, நான் தெளிவாகக் கூறிவிட்டேன் : ஆதலின் உனக்கு நான் கூறிப் பயனில்லை யென்றபடி. 'நினைத்தபோது வருவேன்' என்று சொல்லிப் போந்தவன் வியாசனாதலின், திருதராட்டிரனைச் சஞ்சயன் நினைக்கச் சொன்னான் : உவன்-முன்னிடம் காட்டும் சுட்டுப்பெயர். நால்வர்-சஞ்சயன், திருதராட்டிரன், துரியோதனன், காந்தாரி யென்பவர். செய்கடன் - வினைத்தொகை : இறந்த காலங்கரந்தது. வேதவியாசனே-வகையுளி. (59)

60-61 வியாசபகவான் கூறுவன.

இரண்டு கவிகள் - ஒருதொடர்.

அறமுற்றவர் பாலைம்படை யானுற்றிடு மக்கார்
நிறமுற்றவ னருளுற்றுநி லைத்தோங்குமவ் வருளின்

திறமுற்றலின் விந்தைப்பெயர் திருவுற்றறம் வழுவி
மறமுற்றவர் தமைச்செற்றமர் வயமுற்றிட வருளும்.

(இ-ள்) அறம் உற்றவர்பால் - தருமம் பொருந்தியுள்ள பாண்டவரிடத்து, ஐம்படையான் உற்றிடும்-பஞ்சாயுதங்களையுடைய திருமாலாகிய ஸ்ரீகிருஷ்ணன் பொருந்தியிருக்கின்றான் : அ கார்நிறம் உற்றவன் அருளுற்று-அந்த மேகநிறவண்ணனாகிய கிருஷ்ணனின் கருணையைப் பெற்று, (மேலும்) நிலத்து ஓங்கும் அ அருளின் திறம் முற்றலின் - நிலையாக நின்று சிறக்கும் அந்தக் கருணையின் வகை பூரணமாயிருத்தலின், விந்தை பெயர் திரு உற்று - ஞானம் புகழ் செல்வம் இவைகளைப்பெற்று, (மற்றும்) அறம் வழுவி மறம் உற்றவர் தமை செற்று அமர் வயம் உற்றிட-தரும நெறி விலகி அதருமநெறியில் செல்லும் துரியோதனாதியரையழித்துப் போரில் வெற்றியும் பெற்றிட, அருளும்-(கிருஷ்ணன்) அருள்செய்வன்; (எ.று.)

தர்ம ஸம்ஸ்தாபனத்திற்காக அவதரித்துள்ள பஞ்சாயுதனாகிய கிருஷ்ணன் தர்மவான்களான பாண்டவர்பக்கல் நின்று அதர்மத்தில் ஊன்றிய நின்மைந்தர்களைச் செற்று அவர்களுக்கு ஜெயம் அருளுவன் : மேலும் அவனிருக்குமிடத்தில்தான் ஞானம் புகழ் செல்வம் அனைத்தும் ஓங்கும்.

''பரித்ராணாய ஸாதூநாம் விநாசாயச துஷ்க்ருதாம்
தர்மஸம்ஸ்தாப நார்த்தாய ஸம்பவாமி யுகேயுகே''

என்ற கீதா ஸ்லோகம் இங்குக் கருதத்தக்கது. ஐம்படை-பஞ்சாயுதம் : சங்கு சக்கரம் வாள்வில் கதை என்பன. ''வெங்கதை வாளஞ் சங்கு நேமிகோதண்டமெனும் படையும்'' என்றார் வில்லியும். (பதினேழாம் : கன்ன : 247). விந்தைப் பெயர் திரு - உம்மைத்தொகை. விந்தை-வித்தையென்பதன் மெலித்தல். வித்தை-வித்யா : அறிவு ; ஞானம். அருளும்-செய்யுமென்முற்று. (60)

61. இப்பான்மையெங் குளதங்குறு மிகல்வென்றி
வினைளவும்
அப்பார்கலி யெழுநாள்பல வண்டங்கள கட்டில்
வைப்பானையுள் வைப்பார்செயல் வயமாகுமவ்
வரிதாள்
தப்பாதுனி கதியெய்தெனத் தனையன்னிது
சொல்வான்.

(இ-ள்) இ பான்மை - இந்த மேன்மையாந் தன்மை, எங்கு உளது - எங்கேயிருக்கின்றதோ, அங்கு-அந்தப் பக்கத்து, இகல் வென்றி உறும்-பகையிடத்து வெற்றிகிட்டும்: [ஆகவே] விண் அளவும்-ஆகாயம்வரையில், ஆர்கலி அப்பு எழுநாள்-சமுத்திரஜலம் பொங்கியெழுகின்ற மகா பிரளயகாலத்து, பல அண்டங்கள்-(அழிந்துபோகாமல்) பல லோகங்களையும், அகட்டில் வைப்பானை-வயிற்றினில் வைத்துக் காப்பாற்றிய திருமாலை [கிருஷ்ணனை], உள் வைப்பார் செயல்- மனத்தினுள் தியானிப்பவருடைய காரியங்கள், வயம் ஆகும்-வெற்றியடையும்: (எனவே) அ அரி தாள் தப்பாது உனி-அந்தத் திருமாலாம் கிருஷ்ணனின் திருவடிகளைத் தவறாது தியானித்து, கதி எய்து என-நற்கதியாகிய மோட்சத்தையடைவாய் என்று நற்போதனை செய்ய, (அதுகேட்ட) தனையன் - மகனாகிய திருதராட்டிரன், இது சொல்வான்-இந்த வார்த்தைகளைக் கூறுவானாயினான் ; (எ.று).

முதலடியில், "யத்ரயோகேச்வர : க்ருஷ்ணோ- × × × தத்ர ஸ்ரீர்விஜயோ பூதி :" என்றது நினைக. **அண்டங்கள் அகட்டில் வைத்த கதை :** — பிரமன் முதலிய சகலதேவர்களுமுட்பட யாவும் அழிந்துபோகின்ற யுகாந்த காலத்திலே ஸ்ரீமகாவிஷ்ணு அண்டங்களை யெல்லாம் தன் வயிற்றில் வைத்து அடக்கிக்கொண்டு சிறு குழந்தை வடிவமாய் ஆதிசேஷனது அம்சமானதோர் ஆலிலையின்மீது பள்ளி கொண்டு யோகநித்திரை செய்தருளுகின்றனனென்பதாம். ஈற்றடியில் "கண்ணன் கழலிணை நண்ணு" என்ற கருத்துக் காண்க. ஆர்கலி-கடலுக்கு அன்மொழித்தொகை. அப்பு-நீர். விணளவு-விண்ணளவு என்பதன் தொகுத்தல். வைப்பானை-யுள்வைப்பார்-சொன்னயம் காண்க. (61)

62. **திருதராட்டிரன் சொன்னதை மகன் எள்ளுதல்.**

மருளுற்றிடு மகராசையும் மாமாயையு மற்றே
தெருளுற்றறி வரியப்பொரு டெரிவுற்றிட புகனின்
அருளுற்றலு முய்ந்தேனரி யடிபற்றின னெனலும்
இருளுற்றம னத்தம்மக னெள்ளாவெதிர் சொல்வான்.

(இ-ள்) மருளுற்றிடும்-மயக்கத்தையுண்டாக்குகின்ற, மகர் ஆசையும்-பிள்ளைகள் மேல்வைத்த பாசமும், மா மாயையும்-(நீக்கமுடியாத) பெரிய மாயையும், அற்றே - நீக்கியே, தெருள் உற்று-தெளிந்த

மனத்தையடைந்து, அறிவு அரிய-[எவராலும் எளிதில்] அறிதற்கு இயலாத, அ பொருள்-அந்தப் பரம்பொருளாகிய கிருஷ்ணனை, தெரிவுற்றிட - யான் நன்கு தெரிந்துகொள்ளும்படி, புகல் - உபதேசித்தருளிய, நின் அருள் உற்றலும்-உமது கருணையைப் பெற்றவுடன், உய்ந்தேன்-நான் ஈடேறிப்போனேன் : (நீர் உபதேசித்தபடியே) அரி அடி பற்றினன்-திருமாலாம் [அந்தக்] கிருஷ்ணனின் திருவடிகளை (ச்சிக்கென)ப்பிடித்தேன், எனலும்-என்று திருதராட்டிரன் கூறியவுடனே, இருளுற்ற மனத்து-அஞ்ஞானம் நிறைந்த மனத்தையுடைய, அ மகன் - அந்தத் துரியோதனன், எள்ளா-(எள்ளி) நகைத்து, எதிர்சொல்வான்-பதில் கூறுவான் ; (எ.று). அதனை மேலைக்கவியிற் காண்க.

''மக்களென்றும் நோயே பட்டொழிந்தேன்'' என்றார் மங்கை மன்னனும். 'மாமாயையும் அற்று' என்றவிடத்து - ''மம மாயா துரத்யய'', ''மாயா மேதாம் தரந்திதே'' முதலிய கீதாவாக்யங்கள் நினைக.;(7,14) 'அடிபற்றினன்'—'மாமேகம் சரணம் விரஜ' என்றான் கண்ணனும். சேதநனுக்குப் பற்றுதற்கு வகுத்த விஷயம் திருவடியே. வள்ளுவனார் தமது 'கடவுள் வாழ்த்தில்' ஏழுகுறள்களால் இத்தத்துவத்தை வற்புறுத்துகிறார். எள்ளா-உடன்பாட்டெச்சம். (62)

63. திருதராட்டிரன் தன்மகனை வெறுத்துப்பேசுதல்.

மலைதாங்கரி யெனினும்பிர மற்றந்தவ னெனினுஞ்
சிலைதாங்கருச் சுனனண்புள திறலாறுதி யேனுஞ்
சொலைதாங்கல னெனமைந்தனைத் துணைகட்புல
னிலனின்
தலைதாங்கெழுத் திதுவோவெனத் தவனேதுவ னரசே.

(இ-ள்) மலை தாங்கு அரி எனினும் - கோவர்த்தனகிரியைத் தூக்கிப் பிடித்த திருமாலேயாயினும், பிரமன் தந்தவன் எனினும்-(படைத்தற் கடவுளாகிய) பிரமதேவனையே படைத்த விஷ்ணுவாயிருப்பினும், (அந்தக் கிருஷ்ணன்) சிலை தாங்கு அருச்சுனன் நண்பு உள திறலால்-வில்லைப்பிடித்த அருச்சுனனின் சிநேகத்தைப் பெற்றிருக்கும் தன்மையினால், துதியேன்-அவனைப் போற்றி வணங்கேன் : (மேலும்) நும் சொலைத் தாங்கலன்-உம்முடைய வார்த்தையை ஏற்கமாட்டேன், என-என்று கூற, மைந்தனை-தன் மகனை, துணை கண் புலன் இலன்-இரண்டு கண்பார்வையும் இல்லாத (பிறவிக்குருடனாகிய) திருதராட்டிரன், (நோக்கி) நின் தலை தாங்கு எழுத்து

இதுவோ ?—உன் தலையிலெழுதியுள்ள எழுத்து (தலையெழுத்து) இப்படித்தோ?, என-என்று [வெறுத்துக்] கூற, (அப்போது) தவன்-சஞ்சயமுனிவன், ஓதுவன்-கூறலாயினன் : அரசே !—திருதராட்டிர மன்னனே ! (எ.று.) சஞ்சயன் கூறியதைமேலைக்கவியிற் காண்க.

''நான்முகனை நாராயணன் படைத்தான்'' என்றார் திருமழிசைப் பிரானும். 'பார்த்தனுக்குச் சகாயன்'' என்றதால் 'துதியேன்' என்றதில் இருவர்மாட்டும் துரியோதனன் கொண்டுள்ள காழ்த்த வயிரத்தைக் காணலாம். திறலால்+துதியேன் = திறலாறுதியேன் : ''லள வேற்றுமையில் றடவும் வலிவரின்'' என்பது விதி. (நன் : மெய் : 24) இலன்-குறிப்பு வினையாலணையும்பெயர். 'தலையெழுத் திதுவோ' என்றது-விதியிப்படியமைந்துளதோ? என்று வெறுத்த படி. (63)

64. **மூவரும் பிரிந்து போதல்.**

உனையா தரி யாரிச்சுத ரொழிவார்புயல் வணனை
நினைவாயென முனியேகினன் நினைவின்படி யெல்லாந்
தனையா ! புரி போவென்றுசஞ் சயனோடும் விடுத்தம்
மனைபாலர சுற்றானினி வருமாறுரை செய்வாம்.

(இ-ள்) உனை ஆதரியார் இச் சுதர்-உன் வார்த்தையைக்கேட்டு நடக்கமாட்டார்கள் இந்த (உன்) பிள்ளைகள் : ஒழிவார்-இறந்து போவார்கள் : (நீ) புயல்வணனை நினைவாய்-மேகநிறவண்ணனாகிய கிருஷ்ணனைத் தியானிப்பாய், என-என்று கூறி, முனி ஏகினன்-சஞ்சயமுனிவன் போகலானான் ; அரசு - திருதராட்டிர மன்னன், 'தனையா !—மைந்தனே ! நினைவின்படியெல்லாம் - நீ நினைத்த படியேயனைத்தையும், புரி-செய்வாயாக ; போ-(என்னெதிரில் நிற்காதே) போ, என்று - என்று (வெறுத்துக்)கூறி, சஞ்சயனோடும் விடுத்து-சஞ்சயனையும் பிரிந்து, அம் மனைபால் உற்றான்-அந்தத் தன் அரண்மனையைச் சேர்ந்தான், இனி வருமாறு-இனி நிகழ்ந்தவைகளை, உரைசெய்வாம்-கூறுவோம் ; (எ.று).

தந்தை சொன்மிக்க மந்திரமில்லை யாதலின், அத் தந்தை சொற் கேளாதவர் அழிவர் என்பது பெறவைக்கப்பட்டது. புரி, போ-முன்னிலையேவல் வினைமுற்றுக்கள். (64)

சஞ்சயன் தூது சருக்கம் முற்றிற்று.

மூன்ருவது

கிருஷ்ணன் தூது சருக்கம்

ஸ்ரீ கிருஷ்ணபகவான் பாண்டவர்க்காகத் துரியோதன னிடத்துத் தூதுசென்ற வரலாற்றையுணர்த்தும் பாகம். க்ருஷ்ணன் என்ற வடமொழிப்பெயர்-கருநிறமுடையவனென்றும், (யாவர்மனத் தையும்) கவர்பவனென்றும், (எல்லாத்தொழில்களையும்) செய்பவ னென்றும், அசுரர்களுயிரைப் பறிப்பவனென்றும், மற்றும் சிலவகை யாகவும் பொருள்படும். கிருஷ்ணனது தூது என ஆரும்வேற்றுமைத் தொகை. கிருஷ்ணன்-திருமாலின் ஒன்பதாம் அவதாரமூர்த்தி.

வேறு.

1. சஞ்சயன் சென்றபின்பு தருமன் கண்ணனை நோக்கிச் சொல்ல, அவன் ஐவர்கருத்தையும் ஆய வினவல்.

துறவுரைத்தோ னகன்றபினர் சூழ்ச்சிநான்குங்
கொடுபுகலுந் தூது மாலென்
றறமுடையா னுளத்தாய்ந்தவ் வரியிணைப்பார்த்
தமரின்றி யரசு யாங்கள்
உறவருளோய் ! உய்யமதி யொன்று புகல்
எனவினவ வுலக முண்டோன்
விறலினரா மைவருளம் வெவ்வேருய்
வானவரை வினவ லானுன்.

(இ-ள்) துறவு உரைத்தோன் - தவத்தைமேற்கொள்ளும்படி (தருமனுக்குச்) சொல்லிய சஞ்சயன், அகன்றபினர்-போய பின்பு,

அறமுடையான்-தருமன், சூழ்ச்சி நான்கும் கொடு-சாமபேததான தண்டம் எனும் உபாயங்கள் நான்கும் மேற்கொண்டு, புகலும் தூது-சொல்லவல்ல தூதுவன், மால் என்று-கிருஷ்ணன் தானுவனென்று, உளத்து ஆய்ந்து-(தன்) மனத்தினுலாராய்ந்து, அ அரியினைப் பார்த்து - அந்தக்கிருஷ்ணனைப்பார்த்து, 'அருளோய் !- (எங்கள் பால்) அருளுடையவனே ! யாங்கள்-நாங்கள், அமர் இன்றி-போரில்லாமல், அரசு உற-(எங்கட்குரிய) அரசாட்சியைப்பெற, உய்யமதி ஒன்று புகல்-ஈடேறும்வகையோர் ஆலோசனை கூறுவாயாக, என-என்று, வினவ-கேட்க, (அதற்கு) உலகம் உண்டோன்-(மகா பிரளயகாலத்தில்) உலகங்களையெல்லாம் உண்டு (வயிற்றில் வைத்துக்) காத்தவனுகிய கிருஷ்ணன், விறலினராம் ஐவர் உளம்-பராக்கிரமசாலிகளாகிய பாண்டவரைவரின் மனத்திலுள்ள கருத்துக்களை, வெவ்வேறு-தனித்தனியாக (ஒவ்வொருத்தரதாக) ஆய்வான்-ஆராய்ந்து அறியும்பொருட்டு, அவரை-அந்தப் பஞ்சவரை, வினவல் ஆனுன்-(தனித்தனியே) கேட்கலானுன் ; (எ.று.).

சூழ்ச்சி-உபாயம் : சாமபேததான தண்டம் என்னும் நான்கு. சாமம்-இன்சொற்சொல்லல். பேதம்-மென்மையாலும் வன்மையாலும் பகைவர் மனத்தை வேறுபடுத்தல். தானம்-பகைவர் மனமகிழும்படி கொடுத்தல். தண்டம்-பகைவரைப் போர்செய்து அழித்தே விடுதல். சாமம் முதலிய முதல் மூன்று உபாயங்களாற் பகைவரை வழிப் படுத்தி அடக்கமுடியாத பொழுதே இறுதியுபாயமான தண்டத்தை உபயோகிக்க வேண்டுமென்பது, அரசநீதி. கொடு - கொண்டு என்பதன் தொகுத்தல். உளம்-கருத்துக்கு ஆகுபெயர். ஆய்வான்-வினையெச்சம்.

இதுமுதல் எட்டுக்கவிகள்-பெரும்பாலும் ஈற்றுச்சீர் இரண்டும் மாச்சீரும், மற்றைநான்கும் காய்ச்சீர்களுமாகிய கழிநெடிலடி நான்கு கொண்ட அறுசீராசிரிய விருத்தங்கள். (1)

2. கண்ணன் வினவியதற்குத் தருமன் தன்கருத்துக் கூறுதல்.

மண்டமரிற் பொரநினைவோ வனத்திற்றிரி
தரநினைவோ வளங்கொ ணுடு
கொண்டுபுரந் திடநினைவோ கூறுமெனத்
தருமன்மகன் குறிப்பான் வெம்போர்
திண்டிறலாற் பொருதிலிரு திறத்தோரும்
மாய்ந்திடுவேம் செங்கண் மாலே !

வண்டுலவு மலருமதின் மணமுமென
வாழ்வானென் மனது கண்டாய்.

(இ-ள்) மண்டு அமரில் பொர நினைவோ-நெருங்கிய போரில் சண்டையிட எண்ணமோ ? வனத்தில்-காட்டில், திரிதர-சஞ்சரிக்க, நினைவோ-எண்ணமோ ? வளம் கொள் நாடு கொண்டு-வளப்பம் பொருந்திய குருநாட்டைக் கைக்கொண்டு, புரந்திட நினைவோ-ஆட்சிசெய்து காக்க எண்ணமோ ? கூறும் என-சொல்வீராக என்று (கிருஷ்ணன்) வினவ, தருமன்மகன்-யமதருமனுக்குப்புத்திரனாகிய யுதிஷ்டிரன், குறிப்பான்-கூறத்தொடங்கினான் : வெம்போர்-கொடிய போரை, திண் திறலால் பொருதில் - மிக்கவலிமையினால் செய்வோமாயின், இருதிறத்தோரும்-(துரியோதனாதியரும் நாங்களுமாகிய) இரண்டு பக்கத்தாரும், மாய்ந்திடுவேம் - அழிந்து போவோம் : (ஆகவே) செங்கண் மாலே ! -சிவந்த திருக்கண்களையுடைய திருமாலென்னுந் திருநாமமுடையவனே ! வண்டு உலவும் மலரும் அதின் மணமும்என-வண்டுகள் சஞ்சரிக்கின்ற பூவும் அதனது மணமும் போல(பிரியாநண்புகொண்டு) வாழ்வான்-(ஒன்றி) வாழ்வதற்கு, என் மனது-எனது எண்ணம் ; (எ.று.). கண்டாய்-முன்னிலையசை: தேற்றமுமாம்.

ஓகாரம் மூன்றும்-ஐயவினா. பூவும் மணமும் போல என்பது இணைபிரியாநட்புக்கு எடுத்துக்காட்டாகும் : உலகவழக்கு : **உவமையணி**. மனது-எண்ணத்திற்கு ஆகுபெயர். செங்கண்மால்-புண்டரீகாக்ஷன். (2)

3. கண்ணனுக்குத் தருமன் தூது பேசும் விதம் கூற, அதுகேட்டு வீமன் வெகுளல்.

ஆதலினால் நீதூதங் கடைந்தவருக்
கெமதெண்ண மறிவித் தர்த்த
மேதினிகேள் நல்கிலனேல் வேண்டூரைந்
ததுமறுக்கி னவிலைந் தில்லம்
ஏதுமளித் திடவிசையா னெனிலமர்வேண்
டெனக்கதையோ னெழுந்து சீறி
மாதவன் ! மு னிந்தவண முரைத்தால
தற்கியான் வகுப்ப தென்னே.

(இ-ள்) ஆதலினுல்-ஆகையால், நீ—, தூது அங்கு அடைந்து-தூதஞக அவ்விடத்துச்சென்று, அவருக்கு-அந்தத் துரியோதனுதியர்க்கு, எமது எண்ணம் அறிவித்து-எமது கருத்தைத் தெரிவித்து, அர்த்தம் மேதினி கேள்-பாதிபாகம் பூமிகேட்பாயாக : நல்கிலனேல்-கொடானுயின், ஐந்து ஊர் வேண்டு-(எங்கள் ஐந்து பேர்க்குமாக) ஐந்து ஊரை விரும்பிக் கேள் : அது மறுக்கின்-அவ்வேண்டுகோளையும் மறுப்பனுயின், ஐந்து இல்லம் நவில்-ஐந்து வீடுகளைக் கேள் : ஏது அளித்திட இசையான் எனில்-எதையும் கொடுப்பதற்கு உடன்படானுயின், அமர் வேண்டு-யுத்தத்தை விரும்பி வருக, என-என்று தருமன் கூற, (அதனைக்கேட்டு) கதையோன் - வீமசேனன், சீறி எழுந்து-கோபித்தெழுந்து, மாதவன் !—கிருஷ்ணனே ! முன்-எனது அண்ணன், இந்த வணம் உரைத்தால்-இந்தவகை செய்தி சொல்லியனுப்புவாஞனுல், அதற்கு யான் வகுப்பது என்-அதனுக்கு நான் செய்வது யாது ; (எ..று)

இராச்சியத்திற் பாதிபாகம் கேட்பாயாக ; கொடுக்கச் சம்மதியானுல், எங்களைவருக்கும் தலைக்கு ஓர்ஊராக ஐந்து ஊரையாவது கேள் : அதுவும் இல்லையென்ருல் தலைக்கு ஒரு வீடாக ஐந்து வீட்டையாவது கேள் : ஐந்துவீடு தானும் கொடுத்திடேனென்ருல், அப்பொழுது நாம் போர் செய்யக்கடவோமாக முடிவுகூறி வருவாய் என்பதாம். அர்த்தம்-பாதி: வடசொல். முன்-முன்பிறந்தவனுக்குக் காலவாகு பெயர். கேள், நவில், வேண்டு - முன்னிலைவியங்கோள் வினைமுற்றுக்கள். மாதவன்-அண்மைவிளி. (3)

4. வீமன் கிருஷ்ணனைநோக்கிச் சொல்லியது.

கற்புடையாள் குழலலையக் கழறியவஞ்
சினமலையக் கதையோ டென்றேண்
மற்பலமுந் தானலைய மண்ணிரந்தங்
கவன்குடைக்கீழ் வாழ் வெண்ணல்
பொற்பலவின் றெனைத்தூது போக்கிடிலந்
நூற்றுவர்வான் புரப்ப விப்பார்
சொற்பழுதி லான்புரப்பச் செய்வலெனச்
சொலவிசயன் றெழுது சொல்வான்.

(இ-ள்) கற்புடையாள்-கற்பினிற் சிறந்த திரௌபதி, குழல் அலைய-(தனது) கூந்தல் குலைய, கழறிய-கூறிய, வஞ்சினம்-சபத

வார்த்தை, அலைய-நிலைகெடும்படியும், கதையோடு-என் கதாயுதத்தின் பலத்தோடு, என் தோள் மல் பலமும்-மல்யுத்தஞ்செய்யும் எனது தோள்களின் பலமும், அலைய-நிலைகெடும்படியும், மண் இரந்து-பூமியை யாசித்து, அங்கு-அவ்விடத்து, அவன் குடைக்கீழ் வாழ்வு எண்ணல்-அந்தத் துரியோதனன் ஆட்சியின் கீழ்ப் பணிந்து வாழ்தலையெண்ணுதல், பொற்பு அல-(நமக்கு) அழகாகாது : இன்று-இப்போதே, எனைத் தூது போக்கிடில்-என்னைத் தூதாக அனுப்புவானால், அ நூற்றுவர் வான் புரப்ப - அந்தத் துரியோதனாதியர் நூறுபேரும் [இந் நிலவுலகத்தினும் மேலான] வீரசுவர்க்க லோகத்தை யாளும்படியும், இ பார்-இந்த நிலவுலகத்தை, சொற்பழுதிலான்-சத்தியம் பேசுபவனாகிய தருமன், புரப்ப-ஆளும்படியும்,செய்வல்-செய்வேன், என-என்று, சொல-கூற, (பிறகு) விசயன்-அருச்சுனன், தொழுது-(கண்ணனை) வணங்கி, சொல்வான்-கூறுவானானான் ; (எ.று.) தான்-அசை. அருச்சுனன் கூறியதை மேலைக்கவியிற் காண்க.

வீமன் கதாயுதம் பகைவர்களைத் தவறாது கொல்லும் இயல்பினதாய்ச் சத்ருகாதிநியென்று பெயர் பெறும் : இக் கதை வீமனுக்கு அசுரத்தச்சனான மயனால் அளிக்கப்பட்டது. அலைதல்-நிலைகெடுதல், பழுதுபடுதல். எண்ணல் - தொழிற்பெயர். நூற்றுவரைக் கொல்வேன் என்ற பொருளை 'வான் புரப்ப' என வேறு வாய்பாட்டினாற் கூறியது, **பிறிதினவிற்சியணி.** சொற்பழுதிலான் பார்புரப்ப நூற்றுவர் வான் புரப்பச் செய்வல் என்றதில், **மாற்றுநிலையணி** யென்னும் பரிவர்த்தநாலங்காரம் தோன்றுதலும் காண்க. (4)

5. அருச்சுனன் கூறுவது.

அடிநாளிற் பொறுத்ததெலா மமையாதென்
றறமுரைத்தா லரிவை யோதி
முடியாதிங் கெமதுபகை முற்றாது
தருமன்மொழி மூட னெஞ்சிற்
படியாதின் றுரியபுவிப் பலியாதங்
கவர்நூறிப் பார்வேந் தோர்வெண்
குடையாளத் தருமென்கைக் கோலிருப்பப்
புவியிரந்து கொளலென் னென்றான்.

(இ-ள்) அடிநாளில்-கீழ் நாட்களில், பொறுத்தது எலாம்-(துரியோதனன் செய்த கொடுமைகளைப்) பொறுத்துக்கொண்டமையெல்லாம், அமையாது என்று-போதாதென்று (இன்னமும் பொறுமை வேண்டும் என்று), அறம் உரைத்தால்-தருமத்தை யுபதேசஞ்செய்தால், அரிவை-திரௌபதியானவள், ஓதி முடியாது-(தனது) கூந்தலை முடிக்க மாட்டாள் : இங்கு-இவ்விடத்து, எமது பகை முற்றுது-எங்களுடைய பகைமை தீராது (நீடிக்கும்) ; தருமன் மொழி-தருமராசனின் நல்வார்த்தை, மூடன் நெஞ்சில் படியாது-துரியோதனனுகிய அறிவிலியின் மனத்தில் பதியாது: இன்று உரிய புவி-இந்நாளில் நமக்கு உரித்தாய பூமி, பலியாது-கிட்டாது : (இங்ஙனிருத்தலால்) அங்கு-அந்தப்போரிடத்து, அவர் நூறி-அந்தத் துரியோதனுதியரை யழித்து, வேந்து-(நமது) தருமராசன், பார்-இந்நிலவுலகத்தை, ஓர் வெண்குடை ஆள-ஒரு வெண்கொற்றக்குடையின் கீழிருந்து அரசாளும்படி, தரும்-தருவதற்கென, என் கை கோல் இருப்ப-என்னுடைய கையில் (காண்டீபம் என்னும் வில்லில் வைத்தெய்யும்) அம்பு சித்தமாய் இருக்க, (அத்துரியோதனனிடத்துத் தாழ்ந்து) புவி இரந்து கொளல் - பூமியை யாசித்துப் பெறுதல், என்-எதற்கு? (யாசிக்க வேண்டுவதின்று) என்றுன்-என்று அருச்சுனன் கூறினுன்; (எ.று).

தாங்கள் செய்த சபதங்களுக்கெல்லாம் திரௌபதியினது பரிபவமே காரணமாதலால், அவள் பிரதிஜ்ஞையையே பிரதானமாக எடுத்துக் கூறுவான் 'அரிவையோதி முடியாது' என்றுன். பொறுத்ததெலாம்-ஒருமைப்பன்மை மயக்கம். கோல்-அம்பு. தரும்-பெயரெச்சம். என்-வினுவினைக் குறிப்புமுற்று. (5)

6. நகுலன் கூறுவது.

பற்குனனீ துரைத்திடலும் பரிநகுலன்
பதம்பணிந்து பச்சை வண்ணு !
நற்பயன்சொற் றிரந்தாலும் நாடளிப்ப
திலையாரும் நகைப்ப ரந்த
அற்பமதி யான்வலியு மடியன்வலி
யுஞ்சமர்வாய் அறிமி னென்னப்
பிற்பிறந்தோன் றெழுதந்தப் பெருமான்றன்
மனமுருகப் பேசு மன்றே.

(இ-ள்) பற்குனன் ஈது உரைத்திடலும்-அருச்சுனன் இவ்வார்த்தைகளைச் சொன்னவுடன், பரிநகுலன்-குதிரை புரத்தலில்வல்ல நகுலன், பதம்பணிந்து-பாதங்களை வணங்கி, பச்சை வண்ணா! பசுமை நிறத்தையுடைய கிருஷ்ணனே! நற்பயன் சொற்று-(நீ) நல்ல பயன்களை விளைக்கும் வார்த்தைகளைச் சொல்லி, இரந்தாலும்-யாசித்தாலும், நாடளிப்பதிலை-நாட்டினை [த்துரியோதனன்] கொடுக்கமாட்டான்: யாரும் நகைப்பர்-(இராச்சியத்தைப் பகைவனிடம்) யாசித்தோம் என்று [நம்மையிகழ்ந்து] அனைவரும் பரிகசித்துச் சிரிப்பர்: அந்த அற்ப மதியான் வலியும்-அந்த மூடனின் வலிமையும்; அடியன் வலியும்-என்னுடைய வலிமையும், சமர்வாய் அறிமின்-போரிடத்துக் கண்டு தெளியுங்கள்; என்ன-என்று நகுலன் கூறிமுடிக்க, பின் பிறந்தோன்-அவனுக்குப்பின் பிறந்த தம்பியாகிய சகாதேவன், தொழுது-வணங்கி, அந்தப் பெருமான்றன்-அந்தக் கிருஷ்ண பகவானுடைய, மனமுருகப் பேசும்-உளங்கரையும்படி பேசலானான்; (எ.று) மன், ஓ—ஈற்றசை.

நகுலன் பெரு வலியுடையனென்பதை, "நகுலன் பறியேறினொன்று மூன்று, புவனங்களேழும் புடைபோய்-இகலும், அவனுடைய வில்லு மதிரதரு மெல்லாம், இவனுடைய முன்னில்லாரீங்கு'. என்று பாரதவெண்பாவிற் கண்ணன் கூறியதனால் உணர்க அறிமின்-முன்னிலை வியங்கோள். பேசும்-செய்யுமென்முற்று. (6)

7. **சகதேவன் கூறுவது.**

முடிந்தாலென் விரித்தாலென் மூளழலுற்
பவியளக மூட னுடு
கொடுத்தாலென் றடுத்தாலென் குறித்தவைநீ
முடித்தாலென் குலைந்தா லென்கற்
பிடித்தான்காத் துறைதடுத்த பெருமானே!
நின்மாயை பிறர்கா ணார்யான்
திடத்தோர்வேன் நினதுளத்திற் சிந்தித்த
படியெனக்குஞ் சிந்தை யென்றான்.

(இ-ள்) மூள் அழல் உற்பவி-மூண்டெரியும் யாகத்தீயினின்று தோன்றிய திரௌபதி, அளகம் - தன் கூந்தலை, முடித்தாலென்–எடுத்து முடித்து அலங்கரித்தால் என்ன? விரித்தாலென்-(அங்ஙனம் முடிக்காமல்) விரித்தபடியேயிருந்தால் என்ன? மூடன்-துரியோ

தனன், நாடு கொடுத்தாலென் - இராச்சியத்தை (எங்களுக்குக்) கொடுத்தால் என்ன ? தடுத்தாலென்-கொடுக்காமலிருந்தால் என்ன? நீ—, குறித்தவை-நினைந்த தூதுபோதலை, முடித்தாலென்-செய்து முடித்தாலென்ன ? குலைந்தாலென்-தூது போகாமலிருந்தாலென்ன ! கல் பிடித்து - கோவர்த்தனகிரியைக் குடையாகப்பிடித்து, ஆன் காத்து-பசு நிரைகளைக் காப்பாற்றி, உறை தடுத்த பெருமானே !-(கல்) மழையைத் தடுத்தருளிய பெரியோனே ! நின் மாயை-உனது மாயை, பிறர் காணார்-பிறர் எவருக்கும் தெரியாது : (ஆனால்) யான்-நான், திடத்து ஓர்வேன்-திண்ணமாக [உள்ளபடி] அறிவேன் : (ஆகை யால்) நினது உளத்தில் சிந்தித்தபடி-உனது மனத்தில் எண்ணிய படியே, எனக்கும் சிந்தை-எனக்கும் எண்ணமாகும், என்றான்-என்று கூறி முடித்தான் ; (எ.று).

கல்பிடித்து ஆன்காத்தது போலக் கோல்பிடித்து எங்களையும் காப்பாற்றுதல் வேண்டும் என்ற குறிப்பினது விளியென்க. தத்துவ ஞானமுடைமை தோன்ற, சகதேவன் தானே கண்ணனை நோக்கித் தன்னைப்பற்றி 'நின் மாயை பிறர் காணார் யான் ஓர்வேன்' என்றான். (7)

8. **கிருஷ்ணன் 'யுத்தம் நேராதிருப்பதற்கு உபாயம் யாது ?' என்ன, சகதேவன் உத்தரம் கூறத்தொடங்கல்.**

இரண்டு கவிகள்—ஒருதொடர்.

முன்னவர்போல் சகதேவன் மொழியாமல்
மொழிவிரகை முகுந்த னோர்வான்
அன்னவனோ டோர்கூடத் தடைந்தடுபா
ரதப்போர்செய் யாத சூழ்ச்சி
பன்னுகென வவன்பணிந்தப் பாரதப்போர்
விளைத்துபுவி பாரந் தீர்ப்பான்
இன்னிலத்துற் றவதரித்த நீயல்லால்
அதுதவிர்க்க யார்வல் லாரே.

(இ-ள்) முன்னவர்போல் - மற்றைப் பாண்டவர்கள் (கூறின அந்தப்படி) போல, சாதேவன்-சகதேவன், மொழியாமல்-கூறாமல், மொழிவிரகை-தந்திரமாகக் கூறியதை, ஓர்வான்-(மேலும்) ஆய்ந்தறி யும் பொருட்டு, முகுந்தன்-கிருஷ்ணன், அன்னவனோடு-அந்தச் சக தேவனோடு, ஓர் கூடத்து அடைந்து-ஒரு மண்டபத்தைச் சேர்ந்து,

(அவனை நோக்கி) 'அடு பாரதப் போர் செய்யாத சூழ்ச்சி பன்னுக' என-அழியச்செய்யும் பாரத யுத்தம் நிகழாதபடி யாவதோர் உபாயத்தைச் சொல்லுவாயாக என்று வினவ, அவன் பணிந்து-அந்தச் சகதேவன் வணங்கி, "அ பாரதப்போர் - அந்தப் பாரதயுத்தத்தை, விளைத்து-நிகழச்செய்து, புவி பாரம் தீர்ப்பான்-பூமிதேவியின் சுமை மிகுதியையொழிக்க, இ நிலத்து உற்று-இந்தப் பூவுலகத்துப்பொருந்தி, அவதரித்த-தோன்றிய, நீ அல்லால்-நீயே அல்லாமல், அது தவிர்க்க-அதனையொழிக்க, யார் வல்லார்-வேறு திறலுடையார் யாவர்? (எவருமில்லையென்றபடி) ; (எ.று.) ஏ—ஈற்றசை.

தனது கருத்தை வெளியிடாதிருக்க வேண்டி இங்ஙனம் கிருஷ்ணன் சகதேவனைத் தனியே வினவுமாறு ஏகாந்தமாக அழைத்துச் சென்றனனென்க. 'மொழிவிரகை' என்ற விடத்து கிருஷ்ணனது மாயையை யெடுத்துக் கூறியதை எனலுமாம். பாரதப் போர் - பாரத வம்சத்தாருள் நிகழும் போர். 'நீயல்லால் அது தவிர்க்க யார் வல்லார்' என்றது-பாரதயுத்தத்தை நடத்தி முடித்திடுமாறு சங்கற்பித்துக் கொண்டுள்ள நீயே அது நிகழவொட்டாது தடுப்பதற்கும் வல்லமையுடையாய் என்பதைக் குறிக்கும், பூ பாரம் தீர்த்தல்-பூமியில் நிறைந்த துஷ்ட அசுரர்களையும் கெட்ட அரசர்களையும் ஒழித்து இதனால் பூமிக்கு நேர்ந்த பாரத்தைப் போக்குதல். பன்னுகென-வியங்கோளின் அகரவீறு தொகுத்தல். தீர்ப்பான்-வினையெச்சம். 'இந்நிலம்' என்பது 'இன்னிலம்' என எதுகை நோக்கி நகரம் னகரமாயிற்றென்க. (8)

வேறு.

9. மண்ணுளக் கன்னன்மக வான்சுதனைக்
கொன்றணங்கின்
தண்ணார் குழல்களைந்து தாளிற் றளைசூட்டிக்
கண்ணு நினையானுங் கட்டுவனேல் பாரதப்போர்
நண்ணு தெனவுரைத்தான் நகுலன் றனக்கிளை
யோன்.

(இ-ள்) கன்னன்-கர்ணன், மண் ஆள-பூமியை அரசாட்சி செய்யும்படி, மகவான் சுதனைக் கொன்று-(அவனிடத்துப் பகைமையையுடைய) அருச்சுனனை (முன்னே) கொலைசெய்து, (பின்னர்) அணங்கின்-சிறந்த மகளான திரௌபதியினது, தண் ஆர் குழல் களைந்து-குளிர்ச்சி பொருந்திய கூந்தலை அரிந்துவிட்டு, (மேலும்)

கண்ணு!—,தாளில் தளை சூட்டி-(நினது)கால்களிலே விலங்கையிட்டு, யானும்-நானும், நினை கட்டுவனேல்-உன்னைக் கட்டிவைப்பேனுனல், பாரதப்போர்-பாரதயுத்தம், நண்ணுது-வாராது, என-என்று, நகுலன் தனக்கு இளையோன்-நகுலன் தம்பியாகிய சகதேவன், உரைத்தான்-சொன்னுன் ; (எ.று),

இங்ஙனம் சகதேவன் தம்மவரென்றும் பிறரென்றும் வேறுபாடு கொள்ளாது நடுவுநிலைமையாகத் தனது உள்ளக்கிடையைச் சிறிதும் ஒளியாமல் வெளியிட்டனனென்க. தருமன் எங்ஙனமாயினும் அரசாளவேண்டுமென்பதும், அருச்சுனன் கர்ணனைக் கொல்வேனென்ற சபதமும், விரித்த கூந்தலை முடிக்குமாறு திரௌபதி கூறிய பிரதிஜ்ஞையும், கண்ணனது சங்கல்பமுமே பாரதயுத்தம் நடப்பதற்கு மூலமாதலால், இங்ஙனம் கூறப்பட்டது. வீமசேனனது பெரிய பிரதிஜ்ஞைகள் திரௌபதியின் பிரதிஜ்ஞையை நிறைவேற்றுவதற்கு அங்கமாய் முடிதலால், அப்பிரதானமாக்கி அதில் அடக்கப்பட்டன. நகுல சகதேவர்களது சபதங்கள், பிரதானமல்லவென்று நீக்கப்பட்டன. இங்குக் கூறிய இக்காரியங்களெல்லாம் செய்து முடிக்கக் கூடாதனவாதலால், பாரதப்போர் வாராமற் காத்தலும் முடியாதெனக் குறிப்பித்தபடியாம். 'கன்னன் மண்ணுள' என்றது துரியோதனனது தீச்செயல்களெல்லாவற்றிற்கும் அவனே பெரிய உதவியாய் நிற்பதனுலும், பாண்டவ துரியோதனுதியர் அனைவரிலும் மூத்தவனுதலாலும், துரியோதனனுக்கு மிக நண்பனும் பாண்டவர்க்கு மிகப் பகைவனுமாதலாலும், ஈகைக் குணமுடைய அரசனுதலாலுமென்க. அணங்கு - திரௌபதிக்கு உவமவாகுபெயர். கன்னன்-கர்ணன் என்ற வடசொல்லின் விகாரம் : இப்பெயர், கர்ணகுண்டலங்களோடு பிறந்தமை பற்றியது என்பர் : காதின் வழியே பிறந்ததனுல் வந்த பெயரென்றுங் கூறுவர். ஆனுல், 'ஆதபன் இவனையாருங் கன்னனென்றழைக்க வென்றுன், தாதையும் விசும்பிற் சொன்ன நாமமே தக்கதென்றுன்'' என்ற வில்லி பாரதத்தின்படி சூரியன் அசரீரிவாணியாகச் சொன்ன நாமம் இது என்பது பெறப்படும். (உத். கிருட் : 154) இனி 'குழல் களைந்து' என்பதற்குக் ''கூந்தலைக் கூட்டி முடித்து'' என்றும் பொருள் கூறுவர். ''களைதல்'' என்ற சொல் 'கூட்டி முடித்தல்', என்ற பொருளில் வருதலைக் ''குடுமி களைந்த புகழ் சாற்றுநிலை'' என்ற புறப்பொருள்வெண்பாமாலைத்துறையால் அறியலாம். ஆங்குக்காட்டப்பட்ட உதாரண வெண்பாவில் ''குடுமி களைந்தான் எங்கோ'' என்ற தொடர்க்கு-''குடுமியைக் கூட்டி முடித்தான் எம்கோ'' என்றே பழையவுரை. திரௌபதியும் ''விரித்த கூந்தலை முடிக்கேன்'' என்றுதான் சபதஞ்செய்தனளாதலின், கூந்தலை முடிச்சுபோட்டு விட்டால் சபதம் நிறைவேருது போகின்றதென்பது உணர்க. ''நல்லாய் உன் பைங்கூந்தல்நானே முடிக்கின்றேன்''

என்ருன் கண்ணனும் (வில்லி. உத் : கிருட் : 49) ''பந்தார் விரலாள் பாஞ்சாலி கூந்தன் முடிக்கப் பாரதத்துக், கந்தார்களிற்றுக் கழல் மன்னர் கலங்கச் சங்கம் வாய் வைத்தான்'' என்ருர் திருமங்கை மன்னனும். இந்த உரை அவலந் தவிர்ப்பது.

இதுமுதல் பதினைந்து கவிகள் -காய்ச்சீர்களும் மாச்சீர்களும் விளச் சீர்களுமாக விரவிவந்த அளவடி நான்கு கொண்ட **கலிவிருத்தங்கள்;** சீர்கள் அளவொத்து வராமையாலும், தாழம்பட்ட ஓசையுடைமை யாலும், நாற்சீர் நான்கடித் தரவுகொச்சகமெனினும் அமையும். (9)

10. கண்ணன் சகதேவனது திறத்தைப் பரீட்சித்தல்.

இன்னவைநீ செய்திடினும் எனைவிசிப்பை யோவென்ன
நின்னுருவைக் காட்டுவையேல் நேராய்ப் பிணிப்பனென
என்னைநீ கட்டுகவென் றெண்ணீரா யிரம்வடிவாய்
முன்னின்ருன் உளக்கயிற்ருன் மூலமுணர்ந்
தடிவிசித்தான்.

(இ-ள்) நீ இன்னவை செய்திடினும்-நீ இப்படிப்பட்ட காரியங் களை நிறைவேற்றிஞலும், எனை விசிப்பையோ-என்னைக் கட்டு வையோ? என்ன-என்று வினவ, (அதற்குச் சகதேவன்) நின் உருவைக் காட்டுவையேல்-உனது திவ்வியசொரூபத்தைக் காட்டு வாயாஞல், நேராய்ப் பிணிப்பன்-(உன்னை) நேராக நின்று கட்டு வேன், என-என்று கூற, (கண்ணன்) என்னை நீ கட்டுக என்று- என்னை நீ கட்டுவாயாக என்று சொல்லி, எண் ஈராயிரம் வடிவாய்- பதினருயிரம் திருவுருவங்களை ஒருங்கேயுடையவனுய், முன் நின்ருன்-எதிரே நின்ருன் : (அப்பொழுது சகதேவன்) மூலம் உணர்ந்து - (அவ்வடிவங்கட்கெல்லாம்) முதன்மையான திருவுரு வத்தை (இன்னதென்று தனது தத்துவ ஞானத்தால்) அறிந்து, அடி-அவனது இரண்டு பாதங்களையும், உளக்கயிற்ருல் விசித்தான்- (தனது) மனமாகிய கயிற்றிஞற் கட்டிஞன் ; (எ.று).

இன்னவை-கர்ணனை அரசாள்வித்தல், அருச்சுனனைக் கொல்லு தல், திரௌபதியின் குழலைக்களைதல் என்பன. செய்திடினும் என்ற உயர்வு சிறப்பும்மை, செய்திடுதலின் அருமை தோன்ற நின்றது. சகதேவன் கடவுளின் அருளால் உண்மையறிவையடைந்துள்ளாஞதை லால், பகவானது சொரூபத்தைத் தனது மனத்திஞல் உறுதியாகத் தியானித்தான் என்பதாம். பதினருயிரவர் கோபஸ்திரீகளோடும்

பதினாறுயிரவர் இராச கன்னிகைகளோடும் தனித்தனி சேர்தற்கு இவ்வவதாரத்தில் திருமாலுக்குப் பதினாறுயிரம் வடிவம் அமைந்தன வாதலால், 'எண்ணீராயிரம் வடிவாய்' என்றார். ['பத்துடையடியவர்க் கெளியவன்' என வைஷ்ணவத்திலும், 'பத்திவலையுட்படுவோன்' எனச் சைவத்திலும் அடியார்கள் அருளிச்செய்தபடி] கடவுள் அன்புக்கு வசப்பட்டவராதலால், உளத்தினால் விசிக்கலாம் படியாயிற்று. உளக்கயிறு-உருவகம். (10)

11. கண்ணன் 'என் காலைவிடுக' என்று சொல்ல, சகதேவன் வரம் வேண்ட, கண்ணன் வரமளித்தல்.

ஒருவடிவ மாகிமா லோர்ந்துபிணித் தனையென்
திருவடியை விடுதியெனச் செய்பா ரதவமரின்
மரணமுறு தைவரையும் வாழ்வா னருளுகவென்
றிருகழலங் கவன்பணிந்தா னெந்தை வரமருளி.

(இ-ள்) ஒரு வடிவமாகி-ஒரு நிஜரூபமாகி, மால் ஓர்ந்து-திருமாலாகிய நான் இருப்பதையறிந்து, பிணித்தனை-கட்டினாய்: என் திருவடியை விடுதி என - எனது கால்களை விட்டிடுவாயாக என்று சொல்ல, (அதற்குச் சகதேவன் கண்ணனை நோக்கி) 'செய் பாரத அமரில்-செய்யப் போகின்ற பாரதயுத்தத்தில், ஐவரையும்-எங்களை வரையும், மரணமுறுது - இறந்துபடாதபடி, வாழ்வான்-உயிரோடு வாழுமாறு, அருளுக-திருவருள் செய்வாயாக, என்று-என்று பிரார்த்தித்து, அவன்-அந்தச் சகதேவன், அங்கு-அவ்விடத்திலேயே, இரு கழல் பணிந்தான்-உபய பாதங்களையும் வணங்கினான்: (அப்போது) எந்தை-எமது கிருஷ்ண பகவான், வரம் அருளி-அந்தப்படியே வரத்தைக்கொடுத்து; (எ.று). 'இயம்பேல் என' என்பதனோடு மேலைக் கவியிற் குளகமாய்த் தொடரும்.

மால்-மாலின் தன்மை, விடுதி-வியங்கோள். ஐவர்-தொகைக் குறிப்பு. வாழ்வான்-வினையெச்சம். அருளுக-வியங்கோள். கழல்-தானியாகுபெயர். எந்தை-ஆசிரியரின் பக்தி குறிப்பது. (11)

12. நடந்ததை இரகசியமாக வைத்துக்கொள்ளும்படி கண்ணன் சகதேவனுக்கு நியமித்து, திரௌபதியை நோக்கிச் சொல்லுதல்.

இவ்வுரைக ளியார்க்கு மியம்பே லெனமீண்டும்
அவ்விடலை யோடும் அறன்மகன்முன் வந்தெய்தி

மௌவற்குழல்சோர மாழ்கியழும் பாஞ்சாலி
செவ்வி முகநோக்கிச் சீதரனுஞ் செப்புவான்.

(இ-ள்) இ உரைகள் - (நாமிரண்டுபேரும் இப்போது தனியே பேசிக்கொண்ட) இந்த வார்த்தைகள், யார்க்கும் இயம்பேல்-எவருக்கும் சொல்லாதே, என-என்று நியமித்து, மீண்டும் - மறுபடியும், அ விடலையோடும்-அந்தச் சகதேவனோடும், அறன் மகன் முன்வந்து எய்தி-தருமபுத்திரன் முன்னர் வந்தடைந்து, (அங்கு) மௌவல் குழல் சோர-முல்லைப்பூச்சூடிய கூந்தல் அவிழ்ந்து விழமாழ்கி அழும்-துயருற்றுக் கண்ணீர் பெருக்கும், பாஞ்சாலி-திரௌபதியின், செவ்வி முகம் நோக்கி-அழகிய முகத்தைப் பார்த்து, சீதரனும்-கிருஷ்ணனும், செப்புவான் - கூறுவானானான்; (எ.று). கிருஷ்ணன் கூறியதை மேலைக்கவியில் முதலிரண்டடிகளிற் காண்க.

முல்லை கற்புக்குச் சூடுதல். சீதரன்-இலக்குமியைத் தரிப்பவன் எனத் திருமாலைக் காட்டும்: இங்கு கிருஷ்ணனுக்காகியது. இயம்பேல்-முன்னிலையேவல் எதிர்மறை வினைமுற்று. விடலை-ஆண்பாற் சிறப்புப் பெயர். அறன்மகன் - நான்கனுருபு தொக்கது. அழும் போதே செவ்விமுகமாயின், அவள் பேரழகு விளங்கும்படி. (12)

13-14 கண்ணனும் உடன்வாழ்தலே தனது கருத்து என்ன, திரௌபதி வருந்திக்கூறுதல்.

இரண்டு கவிகள் - ஒரு தொடர்.

தரும னுரைத்தபடி சாதேவன் றானுரைத்தான்
மருவி யுடன்வாழ்வான் மனதெனக்கு மென்றலுமா
தரசவைதுச் சாதனனீர்த் தைவர்களும் பார்த்திடத்தூ
சுரிதருநா ளென்மான மொழியா தளித்தருணீ.

(இ-ள்) தருமன் உரைத்தபடி - தருமராசன் சொன்னபடியே, சாதேவன்தான் உரைத்தான்-சகதேவனும் தன் அபிப்பிராயத்தை வெளியிட்டான்: எனக்கு-எனக்கும், மருவி-அத்துரியோதனுதியர் களோடு கூடி, உடன் வாழ்வான்-சேர்ந்து (ஒற்றுமையுடன்) வாழ்தலே, மனது-கருத்தாகும். என்றலும்-என்று[தன்அபிப்பிராயத்தைக்] கூறலும், மாது-திரௌபதி, அரசவை-ராஜசபையில், துச்சாதனன் ஈர்த்து-துச்சாசனன் (என் குழலைப் பிடித்து) இழுத்து வந்து, ஐவர் களும் பார்த்திட-ஐந்து கணவன்மார்களும் பார்த்துக்கொண்டிருக்கும் போதே, தூசு உரிதரும் நாள்-(என்னைத்) துகிலுரிந்த காலத்து,

என் மானம் ஒழியாது-என்னுடைய மானத்தை நீங்காதபடி, அளித்தருள் நீ-காத்தருளிய நீ; (எ.று.) தான்-அசை. '××× 'மாசறிந்து ××× இரந்திடில்'' என மேலேக்கவியிற் குளகமாய்த் தொடரும்.

சகதேவனும் சமாதானம் நல்லது என்று கூற, கண்ணபிரானும் அக்கருத்தையே நாடுவதாகக் கூறியதனுல், திரௌபதி தனக்கு மானபங்கம் நேரவிருந்த காலத்து மானங்காத்தமையைச் சுட்டிக் காட்டிக் கிருஷ்ணனை மேலும் வேண்டுகிருளென்க. ஆபத்து நேர்ந்த காலத்து மகளிர்க்குத் தம் கணவர் குறை நீக்குவார்கள்; எனக்கோ கணவர் ஒருவர்க்கு ஐவராயிருந்தும் ஆபத்துக் காலத்தில் உதவுமாறு இல்லையென்பது முன்னமே நடந்த வரலாற்ருல் விளங்குவதால், இப்பொழுது நீ காப்பாற்றினுலுண்டு; இல்லாவிட்டால் இல்லை; எனது சாபத்தையும் சபதத்தையும் நிறைவேறச்செய்து என் மானத்தைக் காக்கவேண்டுவது உனது பாரமே'' என்று குறைவேண்டினளென் பதாம். ஐவர்களும், உம்மை-உயர்வு சிறப்பு: அந்த ஐவரும் மானத்தைக் காக்கவேண்டிய உரிமையும் புயவலிமையும் உடையாரென்ற பொருளைத்தரும். (13)

14. மருவா ரெனக்கிழைத்த மாசறிந்து மற்றவர்பால்
அரியே றினைநிகர்க்கும் ஐவருரைப் படிபோய்
குருநா டிரந்திடில்யான் குழன்முடிப்ப தெக்காலம்
பெருமானே யென்றலுமாற் பின்னோ னுருத்
துரைப்பான்.

(இ-ள்) மருவார்-பகைவராகிய துரியோதனுதியர், எனக்கு இழைத்த-எனக்குச் செய்த, மாசு அறிந்து - (மானபங்கமாகிய) குற்றத்தையறிந்து வைத்தும், பெருமானே!—, மற்றவர்பால்-அந்தப் பகைவரிடத்து, அரியேறினை நிகர்க்கும் ஐவர்-ஆண் சிங்கத்தை யொத்த பஞ்சவரின், உரைப்படியே-வார்த்தையின்படியே, போய்-அத்தினபுரிசென்று, குருநாடு இரந்திடில்-குருநாட்டின் பகுதியை யாசித்துப் பெற்ருல், யான்-(அபலையாகிய) நான், குழல் முடிப்பது எக்காலம்-(விரித்த) கூந்தலை முடிப்பது எப்போது, என்றலும்-என்று (புலம்பிக்) கூறலும், மால் பின்னோன்-கிருஷ்ணனுக்குத் தம்பியாகிய சாத்தகி, உருத்து-கோபித்து, உரைப்பான்-கூறுவானுயினுன்; (எ.று) சாத்தகி கூறியதை மேலேக்கவியிற் காண்க.

'அறிந்து' என்றதன்பின் உம்மை தொக்கது. ஐவர்-தொகைக் குறிப்பு. 'பெருமான்' என்பதில் பெரு என்னும் பண்படி-பகுதி:

மான்-ஆண்பாற்பெயர் விகுதி ; ஆன்-விகுதியென்ருல், பண்புப் பெயர் ஈற்றைகாரம் மாத்திரம் கெட்டதென்க. (14)

15. சாத்தகி 'சமாதானங்கூடாது' என்றல்.

வீமன்கைக் கதையிருக்க விசயன்கை வில்லிருக்க
சோம னிகர்வதனிச் சுரிகுழன்மேல் மாசிருக்க
மாமதுரைக் கைவிடுத்த மான்மதியோ வுற்பலப்பூந்
தாமன் மதிகொல்லோ தரியலர்பா லூரிரத்தல்.

(இ-ள்) வீமன் கை கதை இருக்க-இந்த வீமசேனனது கையிலே (சத்துருகாதினியென்னும் சிறந்த) கதாயுதம் இருக்க, விசயன் கை வில் இருக்க-அருச்சுனன் கையிலே (காண்டீபமென்னுஞ் சிறந்த) வில் இருக்க, சோமன் நிகர் வதனி-சந்திரனையொத்த முகத்தினை யுடையவளும், சுரிகுழல் - சுருண்ட கூந்தலையுடையவளும் ஆகிய திரௌபதியின், மேல்-மேலே, மாசு இருக்க - (மானபங்கமாகிய) பழிப்பு நிலைத்துநிற்க, (இவற்றையொன்றும் எண்ணிப் பாராமல்) தரியலர்பால் ஊர் இரத்தல்-பகைவரிடத்துச் சென்று இராச்சியத்தை யாசித்தல்,-மா மதுரைக் கைவிடுத்த மால் மதியோ ?-(தனது) சிறந்த மதுராபுரியை முழுவதும் விட்டு நீங்கின கண்ணனது அறிவின் காரியமோ ? (அல்லது) உற்பலம் பூ தாமன் மதிகொல் - குவளைமலர் மாலையைத் தரித்த தருமபுத்திரனது அறிவின் காரியமோ ? (எ.று).

நண்பர் பக்கலிலும் யாதோரியல்புமில்லாத பிறர் பக்கலிலுமே ஏதாயினுமொன்றை யிரந்து வாழ்தல் மிக்க இளிவரவுக்கு இடமாயிருக்க, பகைவர் பக்கல் இரந்து வாழக் கருதுவது என்ன பேதைமை ! என்றபடி. கதையிருக்க, வில்லிருக்க என்றவை-அவையிருந்தும் பயனற்றவையாயின என்பதோடு அவர்கள் பகைமுடிக்க வல்லவராயினும் தருமன் பொறுமைக்கு அஞ்சி அடங்கியிருந்தார்களென்பதையும் தெரிவித்தன. குழல்மேல் மாசிருக்க-கூந்தல்மேற் பழிப்புள்ளதென்னும்படி அது விரிக்கப்பட்டிருக்க என்றபடி. 'மாமதுரைக் கைவிட்ட மால்'—என்றதால், பகைவர்க்குப் பயந்தோடுகிறவனென்று கண்ணனது பராக்கிரமத்தை இகழ்ந்து கூறியபடி. சராசந்தனும் காலயவனனும் கூடி மதுரையை முற்றுகையிடவர, அத்தருணத்தில் கண்ணன் யாதவசேனைக்கு நாசமுண்டாகக் கூடுமென்று நினைத்து, மேற்கில் நடுக்கடலில் துவாரகா நகரத்தை நிருமித்து, மதுரையிலிருந்த சனங்களையெல்லாம் அந்நகரத்திற் கொண்டு சேர்த்துத் தானும் வெளியேறினன் என்பது அறியவேண்டிய விவரம். பாண்டவர்க்குக் குவளைப் பூமாலை யுரியதாதலால், "உற்பலப் பூந்தாமன்" என்ருன்

தருமனை : உற்பலம் - குவளை : "தாதவிழ் குவளைமாலைத் தருமன்" என்றார் வில்லியும் (சபா : சூது : 6) (15)

16. கண்ணன் திரௌபதியைத் தேற்றுதல்.

என்ன நெடுமால் இளையானைப் பார்த்தறன்சேய்
சொன்ன முறைப்படியே தூதேகி மீண்டதற்பின்
துன்னலர்க டங்குலமும் தூயோர்சொல் வஞ்சினமும்
நன்னுதலாய் நின்குழலும் நானே முடிக்கின்றேன்.

(இ-ள்) என்ன-என்று சாத்தகி கூற, நெடுமால்-கிருஷ்ணன், இளையானைப் பார்த்து-(தனக்குத்) தம்பியான அவனைப் பார்த்து, அறன்சேய் - தருமபுத்திரன், சொன்ன முறைப்படியே - கூறிய வகையே, தூது ஏகி-தூதனாகச்சென்று, மீண்டதற்பின்-திரும்பிவந்த பின்பு, [என்று கூறி, பின் திரௌபதியை நோக்கி) நன்னுதலாய்!-நல்ல அழகிய நெற்றியையுடையவளே! துன்னலர்கள் தம் குலமும்-பகைவர்களது குலங்களையும், தூயோர் சொல் வஞ்சினமும்-பாண்டவர் கூறிய சபதங்களையும், நின் குழலும்-உன்னுடைய கூந்தலையும், நானே முடிக்கின்றேன்-நானே முடித்திடுவேன் ; (எ.று).

தருமபுத்திரனின் கருத்துப்படி நான் பாண்டவ தூதனாய்ச் சென்று வந்தவுடனே விரைவில் துரியோதனாதியரைக் கொல்வித்து உன் சபதத்தையும் பாண்டவர் சபதத்தையும் தவறாமல் நிறைவேற்றுவேனென்று திரௌபதிக்கு அபயமளித்தனனென்க. குலம் முடித்தல்-குலத்தையழித்தல். வஞ்சினம் முடித்தல்-சபதத்தை நிறைவேற்றுதல். குழல் முடித்தல்-கூந்தலை முடிச்சிடுதல். இம்மூன்று பொருளிலும் பொதுவினையாக 'முடிக்கின்றேன்' என்றான். முடிப்பேன் என எதிர்காலமாகக் கூறவேண்டுமிடத்து முடிக்கின்றேன் என நிகழ் காலத்தாற் கூறியது, விரைவும் தெளிவும் பற்றிய காலவழுவமைதி. (16)

17. கண்ணன் தூதுசெல்லத் தேரேறுதல்.

கவலேலெனத்தேற்றிக் கண்ணீர் துடைத்திடுமா
தவனேக்கி மெய்விரதன் தகுநாளி லேகுதிநின்
பவநாட்குத் தாரா பலமுளதின் றேகுகென
துவர்வாய்த் திருநெடுமால் தூதேகத் தேரிவர்ந்தான்.

(இ-ள்) கவலேல்-நீ கவலைப்படாதே, என-என்று, தேற்றி-சமாதானப்படுத்தி, கண்ணீர் துடைத்திடும்-(திரௌபதியின்) கண்களின் நீரைப்போக்கிடும், மாதவன்-கிருஷ்ணனை, நோக்கி-பார்த்து, மெய் விரதன்-தருமன், தகு நாளில் ஏகுதி-தக்க நல்ல நாளில் புறப்படுவாய்: நின் பவ நாட்கு-நீ பிறந்த நாளுக்கு [ஆவணி அஷ்டமி திதிக்கு தாரா பலம் உளது-நட்சத்திர பலன் நல்லதாக அமைந்துள்ளது : (ஆகையால்) இன்று-(ரோஹிணி நட்சத்திரமாகிய) இன்றைத்தினமே, ஏகுக-செல்வாயாக, என-என்றுகூற, (அதுகேட்ட) துவர் வாய் திரு நெடுமால் - பவளம்போற் சிவந்த (அதரங்களைக்கொண்ட) வாயினையுடைய ஸ்ரீகிருஷ்ணன், தூது ஏக-தூதனுகச் சென்றுவர, தேர் இவர்ந்தான்-தேரின் மீது ஏறியருளினான் ; (எ. று).

கண்ணீர் - சோகக் கண்ணீர். பவ நாள் - அவதரித்த நாள். தாராபலம் - ஜன்ம நட்சத்திரத்தின் சுபமாகிய பலன். ஏகுகென- வியங்கோளின் அகரவீறு தொகுத்தல். துவர்வாய் - உவமைத் தொகை. கவலேல்-முன்னிலையெதிர்மறை. (17)

18. கண்ணனுக்குத் தருமன் கூறியது.

தந்தை முதல்யார்க்கும் தனுமறைவல் லாரியர்க்கும்
குந்தி தனக்குங் குறித்தசெய லோடெமது
வந்தனஞ் சொற் றன்னூர் மனதறிந்து மீளுகெனப்
பைந்துளவ னுக்குற் பலத்தா ரவன் பகர்ந்தான்.

(இ-ள்) தந்தை முதல் யார்க்கும் - திருதராட்டிரன் முதலாய அனைவர்க்கும், தனுமறை வல் ஆரியர்க்கும்-வில் வித்தையில் வல்ல பெரியோர்க்கும், குந்தி தனக்கும் - (தாயாகிய) குந்திதேவிக்கும், குறித்த செயலோடு-நீ குறித்துவந்த காரியத்தோடு, எமது வந்தனம் சொற்று-எங்களுடைய வணக்கத்தையும் தெரியப்படுத்தி, அன்னூர் மனது அறிந்து - அவர்களுடைய கருத்தையும் தெரிந்துகொண்டு, மீளுக-திரும்பி வருவாயாக, என-என்று, உற்பலத் தாரவன் -குவளை மாலையைத் தரித்த தருமபுத்திரன், பைந் துளவனுக்கு பசிய திருத் துழாய் மாலையையணியும் கிருஷ்ணனுக்கு, பகர்ந்தான் - சொல்லினான்; (எ.று.)

ஆரியர் என்றது துரோணன் கிருபன் அசுவத்தாமன் போன்ரேர். மனது - கருத்துக்கு ஆகுபெயர். மீளுக - வியங்கோள். குவளை மாலையான் திருத்துழாய் மாலையானுக்குக் கூறினனென்றது நயம். (18)

19. கண்ணனுக்கு அருச்சுனன் கூறியது.

கண்ணநீ யவர்மனமாங் கற்கரையப் பேசுவதின்
மண்ணு டிசைந்தளிக்க மாட்டா ரெனிலைவர்
விண்ணு டுமக்குதவல் மெய்யெனச்சொற் றெய்துகென
எண்ணார்க் கிடியே றெனும்பற் குனனுரைத்தான்.

(இ-ள்) கண்ண !—கண்ணனே ! நீ—, அவர் மனம்-அந்தத் துரியோதனுதியருடைய உள்ளம், கல் கரையப் பேசுவதின்—கல்லும் உருகும்படி பேசுவதினுல், (உருகாது ஒரு வேளை அவர்) மண் நாடு-இந்தவுலகில் [நமக்குரிய] நாட்டினை, இசைந்து அளிக்க மாட்டார் எனில்-மனமொப்பிக்கொடுக்க மறுத்தாரெனில், உமக்கு-உங்களுக்கு ஐவர்-பஞ்ச பாண்டவர்கள், விண் நாடு-வீரசுவர்க்கம், உதவல்-அளிப்பது, மெய்-உண்மையாகும், என-என்று. சொற்று-சொல்லி, எய்துக என-மீண்டு வருவாயாக என்று, எண்ணார்க்கு-பகைவர்க்கு, இடி ஏறு எனும் பற்குனன்-பேரிடியென்னும்படி (வருத்தும்) அருச்சுனன், உரைத்தான்-கூறினன் ; (எ.று) ஆங்கு-அசை.

விண்ணுடு உதவல் - **பிறிதினவிற்சியணி.** எய்துகென-வியங்கோளின் அகர வீறு தொகுத்தல். எ்ண்ணார்-பகைவர். ஆங்கு + கற்கரைய = ஆங்கற்கரைய : குற்றியலுகரம் மெய்யொடுங் கெட்டது பேசுவதின், இன்-ஐந்தனுருபு ஏதுப் பொருளது. (19)

20. கண்ணனை ஐவரும் விடை கொடுத்தனுப்பல்.

சொல்லுவசொற் றன்னோர் துணிபுமனங்
கொண்டடைவன்
நில்லு மெனப்புகலும் நெடியோன் றனையைவர்
செல்லு மெனவிடுத்தத் திறன்மச்சர் கோன்முதலாங்
கொல்லுலைவேன் மன்னர் குழாஞ்சூழ மீண்டனரால்.

(இ-ள்) சொல்லுவ சொற்று-(நீங்கள்) சொல்லிய செய்திகளைச் சொல்லி, அன்னோர் துணிபு மனம் கொண்டு அந்தத் துரியோதனுதியரின் முடிவான பதிலை மனத்தில் பதியவைத்து, அடைவன்-திரும்பி இங்கு வருவேன், நில்லும்-நீங்கள் நில்லுங்கள், என-என்று, புகலும்-கூறும், நெடியோன் தனை-கிருஷ்ணனை, ஐவர் - பாண்டவர்கள், செல்லும் என விடுத்து-போய்வாரும் என்று விடைகொடுத்தனுப்பி, (பின்பு) அ திறல் மச்சர்கோன் முதலாம்-அந்த வலிமைமிக்க விராட

ராசன் முதலாகிய, கொல் உலை வேல் மன்னர் குழாம் சூழ-கொல் லனது உலைக்களத்தில் காய்ச்சிக் கூராக்கப்பட்ட வேலாயுதத்தை யேந்திய அரசர்கள் கூட்டம் சுற்றும் வர, மீண்டனர்-தத்தம் இருப் பிடத்திற்கு வந்து சேர்ந்தனர் ; (எ.று). ஆல்-ஈற்றசை.

'நில்லும்' எனவே, வழிவிடப் பின்சென்றனரென்பது பெறப்படும். சொல்லுவ - பலவின்பாற்பெயர். அடைவன் - தன்மையொருமை. நில்லும்-முன்னிலைப் பன்மை. செல்லும்-முன்னிலையொருமை. கொல்-கொல்லனுக்குத் தொழிலாகுபெயர். 'வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே' என்ற புறம் நினைக. (செ : 312) அன்னோர்-வினையாலணையும்பெயர். (20)

21. கண்ணன் தேரேறிச் செல்லுதல்.

வாரேறு முரசுமுதல் வார்ச்சியங்கள் தான்முழங்கத்
தாரேறு புயத்திளவல் தானைகடற் காத்தெய்த
ஏரேறு குடைநிழற்ற இலங்கியசா மரையிரட்ட
தேரேறிச் சென்றான் திரிவிக் கிரமன்னே.

(இ-ள்) வார் ஏறு முரசு முதல்-வாரினாற்கட்டப்பட்ட முரசங்கள் முதலான, வாச்சியங்கள் முழங்க-இசைக்கருவிகள் ஒலிக்கவும், தார் ஏறு புயத்து இளவல்-மாலையைத் தோளில் தரித்துள்ள தம்பியாகிய சாத்தகி, தானை கடல் காத்து எய்த-(பரந்த) சேனைக்கடலைப் பாது காத்து உடன்வரவும், ஏர் ஏறு குடை நிழற்ற-அழகுமிக்க வெண் கொற்றக் குடை நிழலைச் செய்யவும், இலங்கிய சாமரை இரட்ட-விளங்குகின்ற சாமரைகள் [பக்கங்களில்] வீசவும், திரிவிக்கிரமன்-ஸ்ரீகிருஷ்ணன், தேர் ஏறிச் சென்றான்-தேரின் மேலேறிப் போனான் ; (எ.று).

"முரசொலியுஞ் சங்கொலியு மூரித்தேர்த்தானை, திரைசெய் கருங் கடல்போற் செல்ல" என்றார் பெருந்தேவனாரும், முழங்க, எய்த, நிழற்ற, இரட்ட இந்நான்கு செயவெனச்சங்களும் - உம்மைகள் தொக்கு நின்றதனால், வினைச்செவ்வெண். ஓங்கியுலகளந்தவனாதலின் திரிவிக்கிரமனெனப்பட்டான். திரிவிக்கிரமன்னே-மிகுத்தல். (21)

22. கண்ணன் தான் செல்லும் வழியில் முனிவரைக் கண்டு பணிதல்.

அண்ண னெறித்தன்னே ரடையுஞ் சமதக்கினி
கண்ணுவனு ரதன்முதலோர் கழற்பணிந்து வரல்வினவ
புண்ணியநிற் காணியவும் புரவலன்பா னீகுறிக்கும்
வண்ணமொழி கேட்டிடவும் வந்தோ மெனப்புகன்ருர்.

(இ-ள்) அண்ணல்-கிருஷ்ண பகவான், தன் நெறி நேர் அடையும்-தான் செல்லும் மார்க்கத்தின் நேராக வந்து சேர்ந்த, சமதக்கினி கண்ணுவன் நாரதன் முதலோர் கழல் பணிந்து-ஜமதக்னி கண்வர் நாரதர் ஆகிய முனிவர்களின் பாதங்களை வணங்கி, வரல் வினவ-[அவர்கள் ஆங்கு] வந்த காரணத்தைக் கேட்க, (அம் முனிவர்கள்) 'புண்ணிய! - புண்ணியனே! நின் காணியவும்-உன்னைத் தரிசிக்கவும், புரவலன்பால் நீ குறிக்கும்-துரியோதனராசனிடத்தில் நீ கூறப் போகும், வண்ணமொழி கேட்டிடவும்-நேர்த்தியான வார்த்தைகளைக் கேட்டு இன்புறவும், வந்தோம்-(இங்கு) வந்துள்ளோம், என புகன்ருர்-என்று கூறினுர்கள் ; (எ.று.)

புண்ணிய! என்ற விளி நோக்கத்தக்கது. 'ஆய்க்குலத்து உன்றன்னைப் பிறவிபெறுந்தனை புண்ணியம் யாமுடையோம்'' என்ருள் கோதையும் திருப்பாவையில் (செ: 28). ஆங்கு ஆருயிரப் படிகாரர் ''சாக்ஷாத் புண்ணியத்துக்குப் பாலும் சோறும் இட்டன்றோ வளர்க்கிரும்'' என்று ரஸமாகப் பணித்தமை நோக்குக. ''கிருஷ்ணம் தர்மம் ஸநாதநம்''. புண்ணியன் - தர்மஸ்வரூபன் என்றபடி. 'நீ குறிக்கும் வண்ண மொழி கேட்டிட' என்றது-பின்னர் வரப்போகும் கீதோபதேசத்துக்கு முற்சூசகமாய் அமைந்ததெனலாம். அண்ணல் - ஆண்பாற் சிறப்புப்பெயர். கழல்-தானியாகுபெயர். வரல்-தொழிற்பெயர். (22)

23. கண்ணன் அத்தினுபுரியைக் காணுதலைக் கூறும்.

அன்னுர் மொழிக்குவந்தங் கச்சுதனும் வம்மினெனப்
பின்னுல் வருதும் பெருமவெனத் தேர்கடவிப்
பன்னுடுங் கானகமும் பகலிரண்டிற் கடந்தேகிப்
பொன்னு டுறழத்தி புரமா நகர்கண்டான்.

(இ-ள்) அன்னுர் மொழிக்கு உவந்து-அந்த முனிவர்கள் கூறிய வார்த்தைக்கு மகிழ்ந்து, அச்சுதனும் கிருஷ்ணனும், வம்மின் என

(என்கூடவே) வாருங்கள் என்றுகூற, (அவர்கள்) பெரும!-பெருமையுடையோனே ! பின்னல் வருதும் - (நாங்கள்) உனக்குப் பின்னல் வருகின்றேம் (நீர் முன்னஞ் செல்வீர்), என - என்று கூற, (கிருஷ்ணன்) தேர்கடவி-தேரினைச் செலுத்தி, பல்நாடும் கானகமும்-பல (இடைப்பட்ட) நாடுகளையும் காடுகளையும், பகல் இரண்டில்-இரண்டு நாளில், கடந்து ஏகி-தாண்டிச்சென்று, (மூன்றும் நாளில்) பொன் நாடு உறழ்-இந்திரலோகத்தையொத்த, அத்திபுரம் மாநகர்-அத்தினபுரமாகிய பெரிய நகரத்தை, கண்டான்-பார்த்தான்; (எ.று.)

உபப்பிலாவியத்துக்கும் அத்தினபுரிக்கும் இடையிலுள்ள வழி இரண்டு நாள் பிரயாணத்துக்குமேல் உள்ளதென்று தெரிகிறது. நகர்க்குப் (பொன்) நாட்டினையொப்புக் கூறியது-அதன் பரப்பும் போகவளமும் தெரித்தற்கென்க. வம்மின் - முன்னிலைப்பன்மை. வருதும்-தன்மைப் பன்மை. (23)

வேறு.

24-27. இதுமுதல் நான்கு கவிகளில் அத்தினபுரியின் அமைதி வருணிக்கப்படுகிறது. இது அந்நகரத்து வயல் நீர்நிலைகள் இவற்றின் வருணனை.

குலவளைத்திடு கதலியும் குளிர்பணை தோறும்
தலைவளைத்திடு சாலியுந் தாழ்ந்தன போலும்
அலைவளைத்தர ளங்களைக் கையுறை யாக
நிலைவளைத்தட நேர்ந்தன போலுமா தவற்கே.

(இ-ள்) குலை வளைத்திடும் கதலியும்-குலைகளைச் சாய்த்துள்ள வாழை மரங்களும், குளிர்பணை தோறும்-குளிர்ச்சிபொருந்திய வயல்களிலெல்லாம், தலை வளைத்திடும் சாலியும்-[நெற்கதிர்ப் பாரத்தால்] தலையைச் சாய்த்துள்ள செந்நெற்பயிர்களும், மாதவற்கு-ஸ்ரீகிருஷ்ணனுக்கு, தாழ்ந்தன போலும்-(தலை) வணங்குவனபோல் இருந்தன ; (மற்றும்) நிலை வளை தடம்-தரையிடங்களை வளைந்துள்ள நீர்நிலைகள், அலை - (தமதிடத்துச்) சஞ்சரிக்கின்ற, வளை-சங்குப்பூச்சிகள் ஈன்ற, தரளங்களை-[வெள்ளிய] முத்துக்களை, கையுறையாக-காணிக்கைப் பொருளாக, மாதவற்கு—, நேர்ந்தன போலும்- சமர்ப்பித்தனபோல் இருந்தன ; (எ.று).

குலைப்பாரத்தால் கதலி தலைசாய்த்தலும், கதிர்ப்பாரத்தால் சாலி தலை சாய்த்தலும் இயற்கை: இந்நிகழ்ச்சியை ''மாதவற்குத் தாழ்ந்தன போலும்'' என்றதற்குறிப்பேற்றவணிபடக் கூறியபடியென்க. அஃதே

போல் தடம் வளையீன்ற தரளங்களைக் கையுறையாக நேர்ந்தன போலும் என்றதும் அவ்வணியின் பாற்படும். நிலை-பூமி, இடம். தடம் - தடாகம், நீர்நிலை. போலும் - ஒப்பில்போலி. 'மாதவற்கு' என்பது ஈரிடத்தும் இயலும்.

இதுமுதல் பதினறு கவிகள்-பெரும்பாலும் முதற்சீரும் ஐந்தாஞ் சீரும் மாச்சீர்களும், மற்றை மூன்றும் விளச்சீர்களுமாகிய நெடிலடி நான்கு கொண்ட கலிநிலைத்துறைகள்; விருத்தக் கலித்துறை யெனவும், காப்பியக் கலித்துறையெனவும் படுபவை இவையே. (24)

25. அந்நகரையடுத்துள்ள சோலைகளின் தன்மையைக் கூறும்,

ஆடு வார்களிற் றோகைநின் றாடின அளிகள்
பாடு வார்களிற் பாடின படருமா தவனேர்
நீடு வாய்க்குயி லழைப்பன கூவின நீண்ட
கோடு வாய்ப்பொழில் பந்தரிற் குலவின வன்றே.

(இ-ள்) ஆடுவார்களில்-நடனமாடும் மாதர்கள்போல, தோகை-மயில்கள், நின்று ஆடின-தமது கால் தூக்கி நின்று ஆடின: (அந்த மயிலின் ஆட்டத்துக்கேற்ப) அளிகள்-வண்டுகள், பாடுவார்களில்-பாடும் பாடகர்கள்போல, பாடின-ரீங்காரஞ் செய்தன: மாதவன் படரும் ஏர் நீடுவாய்-கிருஷ்ணன் வருகின்ற அழகிய நீண்ட வழியில், குயில் அழைப்பன கூவின-குயிற்பறவைகள் (அவரை) வரவேற்பன போல (இனிமையாகக்) கூவின: (இந்த மயில்கள் வண்டுகள் குயில்கள் இவைகளைக்கொண்டுள்ள) நீண்டகோடுவாய் பொழில்-நீளமான கிளைகள் பொருந்திய சோலைகள், பந்தரின் குலவின-பந்தல்கள்போல விளங்கின; (எ.று) அன்றே-ஈற்றசை: தேற்றமுமாம்.

நீண்ட கோடுகளைக்கொண்டு மேலடர்ந்து இரவியின் கதிர்கள் நடுவில் நுழைய இடங்கொடாது நிழல்செய்தலால், மரச்சோலைகள் பந்தல் போன்றன எனக்கொள்க. மயிலாடின, வண்டு பாடின, குயில் கூவின என்றவிடத்து 'வண்டுபாட மயிலால' என்ற சம்பந்தர் வாக்கும், ''குயில்கூவ மயிலாலும்'' என்ற அப்பர் வாக்கும் நினைக. தோகை-மயிலுக்குச் சினையாகுபெயர். நீடு-நீண்டவழி. அழைப்பன கூவின-முற்றெச்சம். பந்தரின், இன் - உவமவுருபு. ஈற்றடி உவமையணி. (25)

26. அந்நகரத்து மதில் அகழி இவற்றின் வருணனை.

சீரின் மிக்கவர்க் கண்டலார் செருக்கொடு நிமிர்ந்தாங்
கேரின் மிக்கமாற் கெதிருறுஞ் சிகரியை யிழித்தே
ஓரின் மிக்கது தாழ்தலென் றுரகர்நா டண்மி
நீரின் மிக்கவர் போன்றது நெடுந்திரைக் கிடங்கு.

(இ-ள்) சீரின் மிக்கவர்க் கண்டு - பலவகைச் சிறப்புக்களும் பொருந்தி மேன்மையடைந்தவரைப் பார்த்து, அலார்-அந்தச் சீர்மை யில்லாத சிறியோர், செருக்கொடு நிமிர்ந்தாங்கு - இறுமாப்போடு (தம்) தலையை நிமிர்த்தியதுபோல, ஏரின் மிக்க மாற்கு எதிர் உறும் சிகரியை-அழகிற் சிறந்த கிருஷ்ணனுக்கு எதிராக [அவன் வரும் வழியில்] ஓங்கியிருந்த மலைபோன்ற மதிலை, இழித்து-[தனது ஆழத் தால்] கீழ்ப்படுத்தி, ஓரின்-[நீவிர் மதிலின் ஓக்கத்தையும் அகழியின் தாழ்ச்சியையும்] ஒப்பிட்டு ஆய்வீரானால், தாழ்தல் மிக்கது- தாழ்ச்சியே (ஆழமே) உயரத்தினும் அதிகமானது, என்று-என்று சொல்லும்படி, நெடுந்திரை கிடங்கு - பெரிய அலைகளை வீசுகின்ற அகழியானது, உரகர் நாடு அண்மி - நாகலோகமாகிய பாதாளம் வரையில்கிட்டி, நீரின் மிக்கவர் போன்றது-குணத்தினால் மேன்மை யுற்றவர் போன்றது; (எ.று).

சிகரி-மலை: இங்கே மலைபோலோங்கிய மதிலைக்காட்டி வந்தது. அற்பர்கள் சீருடையோரைக் கண்டால் செருக்குற்றுத் தலைநிமிர்தல் போல, கிருஷ்ணனைக்கண்டு அவன் வரும்வழியில் செருக்குற்று அத்தினபுரிமதில் ஓங்கி நின்றதென்க. அந்த மதிலின் உயரத்தையும் கீழ்ப்படச் செய்து அந்த நகரின் அகழி பாதாளலோகம் வரையில் ஆழ்ந்து தாழ்ந்து சென்றுள்ளதாதலின், 'மதிலோக்கத்தினும் மிக்கது தாழ்தல்' என்றார். அவ்வகழி மிகவும் ஆழ்ந்து தெளிவாகவும் இனி தாகவுமுள்ள நீரையுடைமையின், 'நீரின் மிக்கவர் போன்றது' என்றார். நீர்-குணம்' (Nature, disposition); 'அன்ன நீரார்க்கேயுள (குறள், 527). முதலிரண்டடிகள்-கண்ணனைக் கண்டுசெருக்கோடு பொங்கியெழுந்த துரியோதனன் செயலை மதில் சூசிப்பிக்கும் என்பது அறியவேண்டுவது. அங்ஙனமே தாழ்தலே[பணிதலே] நிமிர்தலினும் சிறந்தது என்பதை நன்னீர்மையுடையராகிய வீடும துரோண விதுரர் செயலைச் சூசிப்பிக்கும் அகழியென்பது அறியவேண்டுவது. கிடங்கு - அகழி. உரகர் நாடு - பாதாளலோகம்: உரகர்-நாகர். அண்முதல் - நெருங்குதல், கிட்டுதல். சீரலார், நீரின்மிக்கவர் இவர்கள் செய்கையைக் காட்டித் தெரிவித்தலால், இது-காட்சியணி யாகும். (26)

27. அந்நகரத்து மாளிகைக் கொடிகளின் வருணனை.

விண்ணு யர்ந்தமா ளிகைக்கொடி வீசியாடுவவக்
கண்ணன் வந்திட லாலுளங் களித்துநீ ணெறிபால்
நண்ணும் வேடையை யொழித்தலை நாககே துனது
ளெண்ணி னுக்கிட மீவன் வம்மெனலையு மேய்க்கும்.

(இ-ள்) விண் உயர்ந்த மாளிகைக் கொடி-ஆகாயத்தில் ஓங்கிய மாளிகைகளின்மேல் நாட்டப்பட்ட கொடிகள், வீசி ஆடுவ-தமது சீலைகளைவீசி யசைதலானது, அ கண்ணன் வந்திடலால் உளம் களித்து-அந்தக் கிருஷ்ணன் (தம் நகரத்துக்கு) வருதலால் மன மகிழ்ந்து, நீள் நெறிபால்-அவன் வருகின்ற நெடிய வழியிடத்து, நண்ணும் - நெருங்கியுள்ள, வேடையை - வெப்பத்தை, ஒழித்தலை-போக்குதலையும், (மேலும்) 'நாககேது-துரியோதனன், உனது-உன்னுடைய, உள் எண்ணினுக்கு-மனத்திலுள்ள கருத்தினுக்கு, இடம் ஈவன்-தான் இசைந்து இடங்கொடுப்பன், வம்-வருவாயாக', எனலையும்-என்று வரவேற்றலையும், ஏய்க்கும்-ஒத்திருக்கும்; (எ.று).

மாளிகை மீதுள்ள கொடிச் சீலைகள் அசைந்தாடுதல் நெறிபாலுள்ள வேடையை யொழித்தலையும், வம்மென வரவேற்றலையும் ஏய்க்கும் என்றபடி. தற்குறிப்பேற்றவுவமையணி. 'ஒழித்தலை' யென்றதன் பின் உம்மை தொக்கது. நாககேது-சர்ப்பக்கொடியை யுடையவன்: துரியோதனன். உனது உள் எண்ணினுக்கு இடம் ஈவன் என்றது-நீ கருதியுள்ள பாரதப் போருக்கு ஏற்பவே அவனும் போரிட இசைவன் என்றபடி. ஆடுவ(து), ஒழித்தல், வம்மெனல்-தொழிற்பெயர்கள். (27)

28. கண்ணன் அந்நகரததுத் தென்புறந்துச் சோலையில் தங்குதல்.

தந்த தாயகந் தானெனச் சலசைவீற் றிருக்கும்
அந்த மாநகர் தனக்குதெக் கணத்தகிற் சம்ப
கந்த மாலங்கோங் காசினி கமுகுசந் தடருஞ்
சந்த மாமலர்ப் பொழிலிறுத் தனன்பரந் தாமன்.

(இ-ள்) தந்த-பிறந்த, தாயகம் என-தாய் வீடு என்னும்படி, சலசை-இலக்குமிதேவி, வீற்றிருக்கும்-தனிச்சிறப்போடு எழுந்தருளியிருக்கும், அந்த மா நகர் தனக்கு-அந்தச் சிறந்த அத்திணபுரிக்கு,

தெக்கணத்து-தெற்குப் பக்கத்தில், அகில்-அகில்மரங்களும், சம்பகம்-சண்பக மரங்களும், தமாலம்-பச்சிலை மரங்களும், கோங்கு-கோங்க மரங்களும், ஆசினி-பலாமரங்களும், கமுகு-பாக்கு மரங்களும், சந்து-சந்தன மரங்களும், அடரும்-செறிந்துள்ள, சந்தம் மா மலர்ப்பொழில்-அழகிய சிறந்த மலர்களைக் கொண்டுள்ள சோலையில், பரந்தாமன் கிருஷ்ணன், இறுத்தனன்-எழுந்தருளியிருந்தான் ; (எ.று).

அத்தினபுரி இலக்குமிக்குப் பிறந்தகம்போல் சகலமங்களங்களோடும் பொலிந்தது என்றார். சலசை - ஜலஜா : இலக்குமி, கோங்கு முள்ளிலவு என்பர். அகில்-சந்தனம்போல நறுமணமுடையதொரு மரவிசேடம் : சம்பகம்-வண்டுணா மலர்மரங்களில் ஒன்று. (28)

29. திருதராட்டிரன் கண்ணனை வரவேற்க எண்ணுதல்.

விரைசெய் தண்டுள வோன்வரல் விழியிலான் வினவித்
தெரிச னைக்கரி யோன்வரச் செய்தவம் யாதோ
குரவர் வைத்துள நவமணிக் கலன்முடிக் குடையோ
டரிய யாவையு மளிப்பனென் றலும்பினோ னறைவான்.

(இ-ள்) விரைசெய்-வாசனை வீசுகின்ற, தண் துளவோன்-குளிர்ச்சி பொருந்திய திருத்துழாய் மாலையையுடைய கிருஷ்ணன், வரல்-(அத்தினபுரிக்கு) வருதலை, விழியிலான் - குருடனாகிய திருதராட்டிரன், வினவி-கேட்டறிந்து, தெரிசனைக்கு அரியோன் காண்பதற்கு அரியனாகியவன், வர செய் தவம் யாதோ ? —(ஈண்டு) எழுந்தருளும்படி (யான்) செய்த தவம் ஏதோ? (என்று மகிழ்ந்து), குரவர் - என் தந்தை முதலாகிய பெரியோர்கள், வைத்துள – சேமித்து வைத்திருக்கின்ற, நவமணிக்கலன் - நவரத்தின மாலை, முடி-கிரீடம், குடை - வெண்கொற்றக் குடை,ஓடு-இவைகளோடு, அரிய யாவையும் - (கொடுத்தற்கரியவான) எல்லாவற்றையும், அளிப்பன்-வழங்கி வரவேற்பேன், என்றலும் - என்று கூறியவுடன், (அது கேட்ட) பின்னோன் - தம்பியாகிய விதுரன், அறைவான் - கூறுவானாயினன், (எ.று.)

தான் விழியிலானாதலின், தன் தரிசனத்துக்கு அரியோன் என்றதோடு பிறர் தரிசனத்துக்கும் அரியோன் என்ற நயம் பாராட்டத்தக்கது. தரிசனம் - தெரிசனம் : முதற்போலி. அது தரிசனை என வந்தது ; அர்ச்சனம் என்பது அர்ச்சனையென வருதல் போல.

'குரவர் வைத்துள' என்றது - குலமுறையாக (பாரம்பரியமாக) வருகின்ற சிறப்பினைக் காட்டுதற்கு. வரல் - தொழிற்பெயர். செய்தவம் - வினைத்தொகை : இறந்த காலம் கரந்து வந்தது. (29)

30. விதுரன் திருதராட்டிரனை யிடித்துரைத்தல்.

கடங்க லந்துமீண் டடைந்தநின் காளையர்க் கிருக்க
இடங்கொ டுத்திடா யிழையரிக் கீந்திட விசைந்தாய்
அடங்கொ ணாப்புகழ் நினையல தியார்வையி னடுக்கும்
தடங்கொண் மாலையினா யெனமணந் தணந்தவ
னுரைப்பான்.

(இ-ள்) கடம் கலந்து - காட்டிற்குச் சென்று, மீண்டு - திரும்பி, அடைந்த - உன்னை வந்தடைந்த, நின் காளையர்க்கு - உன் மைந்தர்களாகிய பாண்டவர்க்கு, இருக்க - தங்கியிருக்க, இடம் கொடாய் - வீடு கொடுக்க மாட்டாய் : [ஆனால் அதே சமயத்தில்] அரிக்கு - கிருஷ்ணனுக்கு, இழை - ஆபரணங்கள் முதலானவற்றை, ஈந்திட - கொடுத்திட, இசைந்தாய் - உடன்பட்டுள்ளாய் : (இதனால்) தடங்கொள் மாலையினாய் - பெரிய மாலையைத் தரித்தவனே! அடங்க ஒணா புகழ் - (அளவுக்கு) அடக்க முடியாத பெரும்புகழ், நினையலது - உன்னைத் தவிர, யார்வையின் அடுக்கும் - யாரிடத்துச் சேர்வதற்குத் தகும் : (நீயே தகுதியுடையவன்) என - என்று (இடித்துக்) கூற, (அப்போது) மணம் தணந்தவன் - வீடுமன், உரைப்பான் - கூறுவானாயினான் ; (எ-று).

வனவாசம் செய்து உயிருடன் மீண்டு வந்து உன்னையடைந்த தம்பி மைந்தர்களுக்கு இருக்க இடம் கொடுக்க மாட்டாய் : அதே சமயத்தில் அவர்களுக்காக வருகின்ற கிருஷ்ணனுக்குச் சிறந்த வரவேற்பளிக்க முயல்கின்றாய் : இத்தகைய பெரும் புகழ் நினக்கன்றி வேறு எவர்க்குத் தகும் என்று விதுரன் திருதராட்டிரனைக் குத்திக் காட்டிச் சொல்லினானென்க. மணம் தணந்தவன் - பிரமசாரியாகிய வீடுமன். அடங்கொணா-ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். (30)

31. வீடுமனும் திருதராட்டிரனை யிழித்தல்.

நிதிப டைத்தவை யிழைவுறு நின்னைமுன் படைத்த
விதிப டைத்தவன் விளங்கிழை முதலிய பொருணீ

துதிப டைத்தளித் திடினுமேற் றிடுவனோ கொல்லிம்
மதிப டைத்தமை நன்றென மறைமுனி வகுப்பான்.

(இ-ள்) நிதி படைத்து - மிக்க செல்வத்தைப் பெற்று, அவைவுழைவுறும் - அந்தச் செல்வத்தை மேலும் பெருக்க ஆசை கொள்ளும், நின்னை - உன்னை, முன் படைத்த விதி -முன்னாலே பிறப்பித்த (அந்தப்) பிரமனை, படைத்தவன் - சிருட்டித்த திருமாலாகிய கிருஷ்ணன், விளங்கு இழை முதலிய பொருள் - பொலிகின்ற ஆபரணம் கிரீடம், குடை முதலிய பொருள்களை, நீ - பேரரசனாகிய நீ, துதி படைத்து அளித்திடினும் - தோத்திரஞ் செய்து வழங்கினாலும், ஏற்றிடுவனோ? - (அந்தப் பரமன்) அங்கீகரிப்பானோ? [அங்கீகரிக்க மாட்டான்]: இ மதி படைத்தமை நன்று-இத்தகைய புத்தி நீ கொண்டிருத்தல் (சால) அழகிது!, என - என்று கூற, மறைமுனி - துரோணாசாரியன், வகுப்பான் - கூறலானான் ; (எ.று.) கொல் - அசை.

தன் பக்தர்களாகிய பாண்டவர்க்கு இடங்கொடுக்க மனமில்லாத உன்னிடம் ஸ்ரீ கிருஷ்ணன் நீ போற்றிக் கொடுக்க விரும்பும் சிறப்புக்களை யேற்பனோ என வீடுமன் கூறி, அவன் மதியை யிகழ்ந்தவாறு, பெருஞ்செல்வம் உடையனாயிருந்தும் மேலும் பணவாசை பிடித்தவன் திருதராட்டிரன் என்பது முதலடியால் பெறப்படும். விதி-பிரமதேவன்: அவனைப் படைத்தவன் திருமால்: "நான்முகனை நாராயணன் படைத்தான்" என்றார் திருமழிசைப்பிரான். 'உன்னைப் படைத்த பிரமனைப் படைத்த திருமாலாம் கிருஷ்ணன் பணவாசை பிடித்த உன்னிடம் ஒரு பொருளை யெதிர்பார்ப்பனோ என்பது கருத்து. நன்று - இகழ்ச்சிக் குறிப்பு. (31)

32. துரோணன் கூறிய வார்த்தை.

ஆழி யான்வரி னின்னுளக் கமைந்தவா வவனி
பழி யார்புயப் பாண்டவர்க் களிப்பிலப் பரமன்
ஊழி காலநீர் வாழ்வுற வுவந்தருட் புரிவன்
சூழி யானையா யென்னலுஞ் சுயோதனன் சொல்வான்.

(இ-ள்) சூழி யானையாய்! - முகபடாத்தை யணிந்த யானையையுடையவனே! ஆழியான் வரின் - கிருஷ்ணன் உம்மிடம் வந்தால், நின் உளக்கு அமைந்த ஆ-உம்முடைய மனத்துக்குப் பொருந்திய வகையே, அவனி - பூமியை, பாழி ஆர் புயம் பாண்டவர்க்கு - வலிமை நிறைந்த தோள்களையுடைய பாண்டவர்களுக்கு, அளிப்

பில் - கொடுப்பாயானுல், அ பரமன் - அந்தக் கிருஷ்ணன், ஊழி காலம் - யுகாந்த காலம் வரையில், நீர் வாழ்வு உற - நீங்கள் நல் வாழ்ச்சி பெறும்படி, உவந்து – மனமகிழ்ந்து, அருள் புரிவன் - கருணை செய்வான், என்னலும் - என்று சொன்னவுடன், சுயோத தனன் சொல்வான் - துரியோதனன் கூறுவானுயினுன் : (எ.று.) அவன் கூறியதை மேலேக் கவியிற் காண்க.

யானையாய் - யானை போன்றவனே ! என்னவுமாம் : பதினுயி ரம் யானை பலமுடையவன் திருதராட்டிரன் என்பர். "கராசலம் பதினுயிரம் பெறுவலிக் காயமொன்றினிற் பெற்ருேர் இராசகுஞ்சரம்" என்ருர் வில்லியாரும். (ஆதி : சம்பவ : செ : 13) பாண்டவர்க்கு அவனி அளிப்பின் கிருஷ்ணன் உவப்பன் என்றபடி. (32)

33. துரியோதனன் கண்ணனைச் சிறையிடலாம் எனத் திருதராட்டி ரன் கடிதல்.

அச்சு தன்வரி லிருபுய மார்த்தருஞ் சிறையில்
வச்சி டிற்கட மைவர்பேர் மன்னரென் நண்பிற்
கிச்சித் தெய்துவர் மந்திர மிதுவென வீன்ருேன்
பச்சை மால்வயப் படுவனே விசித்திடப் பாவி.

(இ-ள்) அச்சுதன் வரில் - கிருஷ்ணன் வருவானுயின், இரு புயம் ஆர்த்து-(அவனது) இரண்டு தோள்களையும் பிணித்து, அரும் சிறையில் வச்சிடில் - கடிய சிறைச்சாலையில் வைப்போமாயின், கடம் - தமது கடமையாக, ஐவர் - பாண்டவரைவரும், பேர் மன்னர் (அவர்கட்குத்துணையான) பேரரசர்களும், என் நண்பிற்கு இச்சித்து - என்னுடைய சிநேகத்தினை விரும்பி, எய்துவர் - என்னையடைவர்; இது - இந்த வகையே, மந்திரம் - என் எண்ணம், என - என்று கூற, ஈன்ருேன் - தந்தையாகிய திருதராட்டிரன், (அவனை நோக்கி) பாவி - தீயனே!, விசித்திட - நீ கட்டும்படி, பச்சை மால் வயப்படுவனே - பசிய நிறமுடைய திருமாலாம் கிருஷ்ணன் (உன்) அதீனமாவனே? (ஆகான்); (எ.று.).

கண்ணனைச் சிறையிட்டால் பாண்டவரும் அவர்க்குத் துணை யாக வந்துள்ள மன்னர்களும் என் நண்பினை நாடிச் சமாதானத் திற்கு வருவரென்ருன் துரியோதனன். வச்சு - வைத்து : போலி :

உலக வழக்குமாம். கடம் - முறைமை, நீதி, கடமை : duty. மந்திரம் - ஆலோசனை, எண்ணம். ஈன்றேன்-வினையாலணையும்பெயர். (33)

34. தந்தை சொற்படி துரியோதனன் கிருஷ்ணனை வரவேற்க நகரத்தை அலங்கரித்தல்.

நிந்தை கூறலை யொரீஇக்கடி நீணக ரணிவித்
தந்த மாறனை யெதிர் கொடிங் கழைத்துநீ வருதி
மைந்த வென்றுரைத் திடவவன் மனங்கொடு நகரா
மிந்தி ரைக்கணி யியற்றுவித் தியமெழ வெழுந்தான்.

(இ-ள்) நிந்தை கூறலை ஓரீஇ - இகழ்ந்து பழிச்சொல் கூறுதலை நீத்து, இ கடி நீள் நகர் அணிவித்து - இந்தக் காவல் பொருந்திய நீண்ட அத்தினபுரியை அலங்கரித்து, அந்த மால்தனை எதிர்கொடு இங்கு அழைத்து - [பெருமை பொருந்திய] அந்தக் கிருஷ்ணனை எதிர்கொண்டு சென்று இவ்விடத்திற்கு வரவழைத்துக் கொண்டு, மைந்த - மகனே ! நீ—, வருதி - வருவாயாக, என்று உரைத்திட - என்று சொல்ல, அவன் மனங்கொடு - அந்தத் துரியோதனன் மனத்திற்கொண்டு, நகராம் இந்திரைக்கு-அத்தினபுரியாகிய இலக்குமிக்கு, அணி இயற்றுவித்து - அலங்காரங்களைச் செய்து, இயம் எழ - வாத்தியங்கள் முழங்க, எழுந்தான் - புறப்படலானான் ; (எ.று.)

'மனங்கொடு' என்றவிடத்து, கண்ணன் தனக்குப் படைத்துணையாகப் பல சேனைகளைக் கூட்டியருளிய உபகாரத்தைக் கருதியும், அரசர்க்குள் ஒருவர்க்கொருவர் செய்யவேண்டும் மரியாதைக் கிரமம் பற்றியும் மனத்துக் கொண்டு என்னவுமாம். இந்திரை - இலக்குமி. ஓரீஇ - ஒருவி : சொல்லிசையளபெடை. கடி - காவல்: உரிச்சொல், மால்+தனை = மாறனை : 'லள வேற்றுமையில் றடவும்' என்பது விதி (நன் : மெய்யீற் : 24) வருதி - முன்னிலையேவல். கொடு - கொண்டு என்பதன் தொகுத்தல். (34)

35. துரியோதனனைச் சகுனி தடுத்தல்.

இழந்த கண்ணின னன்றிமற் றியாரொடு மருகன்
எழுந்த போதுநீ யேகுத லென்கொலென் றறச்சீர்
கழிந்த சௌபலன் தகைந்திடக் காவலன் போதல்
ஒழிந்தி ளைஞர்முன் னவர்தொழ வுற்றனன் தவிசில்.

(இ-ள்) இழந்த கண்ணினுன் அன்றி - குருடனுகிய திருதராட்டிரனைத் தவிர, மற்று யாரொடும் - மற்றையெல்லாரோடும், மருகன் எழுந்தபோது - (தனது) மருமகனுகிய துரியோதனன் புறப்பட்டபோது, சீர் அறக் கழிந்த சௌபலன் - சிறப்பு என்பது முற்றிலும் இல்லாத சகுனி, நீ ஏகுதல் என் - நீ எதிர்கொள்ளப் போகுதல் ஏன்? (போகாதே) என்று - என்று சொல்லி, தகைந்திட - தடுத்திட, காவவன் - துரியோதனன், போதல் ஒழிந்து -போதலை நிறுத்தி, இளைஞர் - தம்பியர்களும், மன்னவர் - அரசர்களும், தொழ - வணங்க, தவிசில் உற்றனன் - ஆசனத்தில் அமர்ந்திட்டான் ; (எ.று)

சௌபலன் - சுபலன் மகன்: இவன் காந்தாரியுடன் பிறந்தவன்: ஆதலால் துரியோதனுதியர்க்கு மாமன். சூதில் மிக வல்லவனுயிருத்தலோடு, இப்போது இம்மை மறுமைகளில் எண்ணிறந்த நன்மைகளைத் தருதற்கு ஏற்ற கண்ணனை யெதிர்கொள்ளுதலைத் தடுத்த தீவினையுடைமை பற்றி 'அறச்சீர் கழிந்த சௌபலன்' என்ருர். என் - வினுவினைக்குறிப்புமுற்று. கொல்-அசை. ஏகுதல், போதல் - தொழிற்பெயர்கள். (35)

36. வீடுமன் முதலியோர் கண்ணனை யெதிர்கொள, கண்ணன் விதுரனது மாளிகையினுட் செல்லுதல்.

காங்க யன்மறை யாரியர் காவல ரனேகர்
வாங்கு வெஞ்சிலை விதுரனு மெதிர்கொள மாயோன்
ஆங்க வர்க்கினி தியம்பியப் பொழிறணந் தூர்புக்
கோங்கு நற்புகழ் விதுரன்வாழ் வுறுமனை யுற்ருன்.

(இ-ள்) காங்கயன்-கங்காபுத்திரனுகிய வீடுமன், மறை ஆரியர் - வேதம் வல்ல துரோணர், காவலர் அனேகர் - அநேக அரசர்கள், வாங்கு வெஞ்சிலை விதுரனும் - வளைந்த கொடிய வில்லினையேந்திய விதுரன் முதலிய அனைவரும், எதிர்கொள - எதிர்கொண்டு வர வேற்க, மாயோன் - கிருஷ்ணன், ஆங்கு - அப்போது, அவர்க்கு - எதிர்கொண்ட அனைவருக்கும், இனிது இயம்பி - இனிமையாகப் பேசி, அ பொழில் தணந்து - அந்தச் சோலையை விட்டு நீங்கி, ஊர் புக்கு—அத்திருபுரியுட் புகுந்து, ஓங்கு நல் புகழ் விதுரன் வாழ்வுறும் - மிக்க நல்ல கீர்த்தியையுடைய விதுரன் வாழ்கின்ற, மனை உற்ருன் - திருமாளிகையினுட் சென்ருன் ; (எ.று.)

'வெற்றி விதுரன்கை வில்லிருக்க மேதினியின், மற்றவனை வெற்றிகொள்ளு மாறுண்டோ' என்று வில்லியாரும் கூறினபடி விதுரன் வில்வித்தையிற் சிறந்தவனுதலால் 'வாங்கு வெஞ்சிலை விதுரன்'' என்றார். விதுரன் பரமபாகவதனுதலாலும், பாண்டவர் பக்கல் மிக்க பிரியமுடையவனுதலாலும், கண்ணன் அவன் மனைக்கே சென்றனன். வெஞ்சிலை விதுரன் எதிர்ப்பக்கத்தில் வந்து போர்செய்து பாண்டவர்களை வெற்றியடைய வொட்டாமற் செய்யா திருத்தற்கு ஓர் உபாயத்தை உத்தேசித்தும், விதுரன் வீட்டிற் புகுந் தனனென்க. இங்ஙனம் புகுந்தது, துரியோதனனுக்கு விதுரனிடத் தில் வெகுளியையும், விதுரனுக்குத் துரியோதனனிடத்தில் வெறுப் பையும் உண்டாக்குவதை மேலே காண்க. (36)

37, விதுரன் கண்ணனைச் சிங்காதனத்தில் வீற்றிருக்கச்செய்து முகமன் கூறுதல்.

வந்து ளார்தமை விடுத்தலு மாயனை விதுரன்
அந்த மாளிகை நடுவணோ ரரித்தவி சிருத்தி
எந்தை யெய்தயான் செய்தவம் யாதென வியந்து
புந்தி யன்பொடு பொற்கழ றொழுதுபோற் றினனே.

(இ-ள்) விதுரன்—, வந்துளார்தமை விடுத்தலும்-[கிருஷ்ணனை யெதிர்கொள்ள] வந்தவர்களை விடைகொடுத்து அனுப்பியபின், மாயனை-கிருஷ்ணனை, அந்த மாளிகை நடுவண்-தன்னுடைய மனை யின் நடுவிலே(யிருந்த), ஓர் அரி தவிசு இருத்தி-ஒரு சிங்காதனத்தில் அமரவைத்து, 'எந்தை எய்த-என் தந்தை போன்ற தேவரீர் இங்கு வர, யான்-அடியேனுகிய நான், செய்தவம்-செய்துள்ள தவம், யாது-எதுவோ? என-என்று, வியந்து - அதிசயித்து, புந்தி அன்பொடு-தத்துவஞானம் (தலையெடுக்கப்பட்டுக்) கூடிய பக்தியோடு, பொன் கழல் - [அக் கிருஷ்ணனது] அழகிய திருவடிகளை, தொழுது-கைகூப்பி வணங்கி, போற்றினன்-துதித்திட்டான் ; (எ.று).

புந்தி-தத்துவ ஞானம்: அஃதாவது, கண்ணனைப் பரம்பொரு ளாக உணர்ந்திருந்தமை. கழல் தானியாகுபெயர். (37)

38. விதுரன் விருந்தளிக்கக் கிருஷ்ணனும் அவனுடன் வந்தோரும் உண்டு மகிழ்ந்திருக்க, சூரியன் அத்தமித்தல்.

வருந்த ராதிபர் யாவர்க்குந் தானைக்கு மாற்கும்
விருந்து செய்தனன் விதுரன்மால் விழைவொடு மருந்தி

தருந்தண் சந்தொடு மலரடைக் காய்முதற் றரித்தங்
கிருந்த போதுமேற் கடற்புகுந் தொளித்தன னினனே

(இ-ள்) வரும் தராதிபர் யாவர்க்கும்-(கிருஷ்ணனோடு) வந்த மன்னரனைவர்க்கும், தானைக்கும்-(அவனது) சேனைக்கும், மாற்கும்-கிருஷ்ணனுக்கும், விதுரன் —, விருந்து செய்தனன்-விருந்திட்டான்: மால் - கிருஷ்ணன், விழைவொடும் - விருப்பத்தோடும், அருந்தி-உண்டு, தரும்-(விதுரன்) தந்த, தண் சந்தொடு-குளிர்ந்த சந்தனத்தோடு, மலர் அடைக்காய் முதல் தரித்து - பூமாலை தாம்பூலம் முதலியன தரித்து, அங்கு-அவ் விதுரன் மனையில், இருந்தபோது-எழுந்தருளியிருந்தபோது, இனன்-சூரியன், மேல் கடல் புகுந்து ஒளித்தனன்-மேற்குக் கடலில் அத்தமித்தான்; (எ.று.)

"விதுரன் சாலைக்கரும் புது விருந்தாம் மருந்தே" என்றது அழகர்கலம்பகம். 'முதல்' என்றது-வாசநீர், வாசனைப்பொடி முதலியவற்றை. ஈற்றடியில் பிறிதினவிற்சியணி. (38)

39. சந்திரன் உதயம் கூறல்.

பூணும் வெம்பழிப் புயங்ககே தியற்றிய புகர்நீத்
தியாணர் மீக்கொளத் தன்குலம் விளக்கவந் திறுத்த
மாணு றும்புக ழைவர்தூ தாகமால் வரலுங்
காண வந்ததை யொத்தெழுந் தனன்கதிர்த் திங்கள்.

(இ-ள்) வெம்பழி பூணும் புயங்ககேது - கொடிய பழியினைத் தனக்கு அணிகலமாகக் கொண்டுள்ள பாம்புக்கொடியோனாகிய துரியோதனன், இயற்றிய - (தமக்குச்) செய்துள்ள, புகர்-இடையூறாகியுள்ள குற்றங்களையெல்லாம், நீத்து-விலக்கிக் கடந்து, யாணர் மீக்கொள-(தமது) செல்வத்தை (த்திரும்பப்பெற்று) மிகுவிக்கவும், தன் குலம் விளக்க-தன்னுடைய சந்திரகுலத்தைப் பொலியச் செய்யவும், வந்து - உபப்பிலாவியம் வந்து, இறுத்த-தங்கியுள்ள, மாண் உறும் புகழ் ஐவர் - மாட்சிமை பொருந்திய புகழைப் பெற்றுள்ள பாண்டவரின், தூதாக-தூதுவனாக, மால் வரலும் காண-கிருஷ்ண பகவான் வந்துள்ளமையையும் காண்பதற்கு, வந்ததை ஒத்து-வந்துள்ளமை போன்று, கதிர்த்திங்கள் - கிரணங்களையுடைய சந்திரன், எழுந்தனன்-தோன்றினான்; (எ.று.)

தாம் இழந்த செல்வத்தை மீண்டும் பெற்று அதனை மிகுவிக்கவும், தாம் பிறந்துள்ள குலமாகிய தனது குலத்தை மேலும் பொலியச் செய்யவும் உபப்பிலாவியம் போந்து தங்கியுள்ள பாண்டவர்களின் தூதுவனுய்க் கிருஷ்ண பகவான் வந்திருத்தலைத்தானும் காணும் பொருட்டுச் சந்திரன் தோன்றினுன் என்று ஏதுத்தற்குப்பேற்றவணி படக்கூறினர். துரியோதனனுக்கு வெம்பழியே பூணுயிற்று. புகர்-குற்றம் : தீச்செயல்கள். யாணர்-செல்வம் : ''வெல்போர் வீயா யாணர்'' (பதிற்றுப் : 35, 10) மீக்கொளல் - மிகுவித்தல். பாண்டவர் சந்திரவமிசத்தினர். மீக்கொள விளக்க வந்து என இயையும். வரல், வந்தது- தொழிற்பெயர். (39)

வேறு.

40. விதுரன் கண்ணனையெழுந்தருளிய காரணத்தை வினவ, அவன் தான் தூதுவந்தமை கூற, விதுரன் சமாதானத்தில் துரியோதனன் அரசுகொடான் என, ஐவர் போரிட்டுப் பெறுவர் எனக்கூறிப் பள்ளியணைதல்.

தேசுறுமா மணித்தீப மனேகங் கோடித்
தெரிவையரேந் திடத்தவிசிற் றிகழா நின்ற
கேசவனை யிங்கடைந்த வாறே தென்று
கேட்டலுமற் றவனுரைப்பக் கிளர் விதுரன்
பூசலிழைத் துயிரீவ தன்றி வெய்யோன்
புவிநல்கா னெனநாளைப் போரி லைவர்
நாசமுறப் படுப்பரென வவனை யுய்த்து
நாரணன்போ தணைப்பள்ளி நண்ணி னுனே.

(இ-ள்) தேசு உறும் மா மணித் தீபம்-ஜொலிக்கின்ற சிறந்த மணிகளாலாகிய விளக்குகள், அநேகம் கோடி-பல கோடிகணக்கின வற்றை, தெரிவையர் ஏந்திட-[பரிவார] மகளிர் எடுத்து நிற்க, தவிசில் திகழ நின்ற-சிம்மாதனத்தில் விளங்க வீற்றிருந்த, கேசவனை-கிருஷ்ணனை, இங்கு அடைந்த ஆறு-இவ்வத்தினபுரிக்கு வந்த காரணம், ஏது என்று-என்னவென்று, கேட்டலும்-வினவலும், அவன் உரைப்ப-அந்தக் கிருஷ்ணன் [தான் தூதுவந்தமை] கூறலும், கிளர் விதுரன் - மகிழ்ந்த விதுரன், வெய்யோன்-கொடிய துட்டனுகிய துரியோதனன், பூசல் இழைத்து - சண்டையையுண்டாக்கி,

(அதனில்) உயிர் ஈவதன்றி-உயிர் விடுவானேயன்றி, புவி-பூமியை, நல்கான்-கொடுக்கமாட்டான், என-என்று கூற, நாளைப் போரில்-நாளை நிகழப்போகும் போரில், ஐவர்-பாண்டவர்கள், (அத்துரியோதனன் முதலாயினோரை) நாசமுற-அழியும்படி, படுப்பர்-கொல்வர், என-என்றுகூறி, அவனை-அந்த விதுரனை, உய்த்து-அனுப்பிவிட்டு, நாரணன் - கிருஷ்ணன், போது அணைபள்ளி - பூம்படுக்கையை, நண்ணினான்-சேர்ந்தான் (துயிலலானான்); (எ.று) மற்று-அசை.

இறுதியிரண்டடிகளில்-''பெற்றார் பிறந்தார் பெருநாட்டார் பேருலகில், உற்றா ருகந்தாரென வேண்டார்-மற்றோர், இரணங் கொடுத்தாலிடுவ ரிடாரே, சரணங் கொடுத்தாலும் தாம்'' என்ற செய்யுளின் கருத்து ஒருசார் ஒப்புநோக்கத்தக்கது. கேசவன்-பிரமனையும் உருத்திரனையும் தன் அங்கத்திற் கொண்டவனென்று பொருள்படும்: க-பிரமன், ஈச-சிவன்; ''பிறைதங்கு சடையானை வலத்தே வைத்துப் பிரமனைத் தன்னுந்தியிலே தோற்றுவித்து'' என்றார் திருமங்கையாழ்வாரும். இனி, இதற்கு-அழகிய மயிர் முடியையுடையவனென்றும், கேசியென்னும் அசுரனைக் கொன்றவனென்றும் பொருள்கள் உண்டு. விதூரன்-விதுரன் என்பதன் நீட்டல்.

இதுமுதல் மூன்று கவிகள்-பெரும்பாலும் ஒன்று இரண்டு ஐந்து ஆருஞ்சீர்கள் காய்சீர்களும் மற்றைய நான்கும் மாச்சீர்களுமாகிய கழிநெடிலடி நான்கு கொண்ட எண்சீராசிரிய விருத்தங்கள். (40)

41. சூரியோதயம் ஆனபின் துரியோதனன் அன்றைக்குச் சபையில் அரசு வீற்றிருத்தல்.

பாம்புயர்த்தோன் றுயரெய்த வடல்கொ ளைவர்
பரிவெய்த மாற்றாது படர்தல் போல
ஆம்பல்குழாம் துயரால்வா யடங்கக் கஞ்ச
மலர்ந்தின்ப மெய்தவின னடைந்தான் கீழ்பால்
தேம்பனைக்கே தாசிரியர் விதுரன் றுதை
தினகரன்சேய் முதலியபல் தேய வேந்தர்
தாம்புடைசூழ் தரத்துரியோ தனனுஞ் சிங்கா
தனத்திருந்தான் புரந்தரன்போற் சபையின் மன்னே.

(இ-ள்) பாம்புயர்த்தோன்-துரியோதனன், துயரெய்த-துன்பமடையவும், அடல் கொள் ஐவர்-வலிமைகொண்ட பாண்டவர்கள்,

பரிவு எய்த-இன்பம் அடையவும், மால் தூது படர்தல் போல-கிருஷ்ணன் தூதுவனுக வந்ததுபோல, ஆம்பல் குழாம் துயரால் வாய் அடங்க-ஆம்பல் மலர்கள் துன்பத்தால் (மலராது) கூம்பவும், கஞ்சம் மலர்ந்து இன்பம் எய்த-தாமரை மலர்கள் விகசித்து இன்பத்தை யடையவும், கீழ்பால்-கிழக்குத்திக்கில், இனன் அடைந்தான்-சூரியன் தோன்றினன்: (அப்போது) துரியோதனனும்-, தேம் பனைக்கேது-இனியபனைக்கொடியையுடைய வீடுமன், ஆசிரியர்-துரோணசாரியர், விதுரன் —, தாதை-திருதராட்டிரன், தினகரன்சேய்-சூரியபுத்திரனுன கர்ணன், முதலிய பல் தேய வேந்தர்-முதலியவரோடு பல தேசத்து மன்னர்கள், புடைசூழ்தர-பக்கங்களில் சூழ்ந்திருப்ப, சபையில்-கொலுச்சபையில், புரந்தரன்போல் - இந்திரனைப்போல (ச்சம்பிரமத்துடன்), சிங்காதனத்து இருந்தான்-சிம்மாதனத்தில் வீற்றிருந்தான்; (எ.று.) மன், ஓ-ஈற்றசை.

சூரியன் வரவுக்கு-மால் தூதுவருதலை ஒப்புமை குறித்தார். **உவமையணி.** சூரியனைக் கண்டால் தாமரை மலரும், ஆம்பல் குவியும். அஃதேபோல் கிருஷ்ணன் தூதுவரவால் பாண்டவர் மகிழவும், துரியோதனன் வருந்தவும் நேர்படுதல் குறித்தார். முதலிரண்டடிகளில் - முறைநிரனிறைப்பொருள்கோள் காண்க. வீடுமனுக்குக் கொடி-பனை. 'ஆசரியர்' என்றும் பாடம். சூழ்தர, தா-துணைவினை. (41)

42. கண்ணனை எதிர்கொள்ளக் கூடாதென்று துரியோதனன் அரசர்க்குக் கட்டளையிட்டுச் சபையிலிருப்பக் கண்ணன் அங்கு எழுந்தருளுதல்.

இருந்தவைமன் னவர்தமைப்பார்த் தைவர் தூதாய்
  எய்துமிடை யன்சவைக்க ணெய்தி னேர்போய்
பரிந்துதொழு துபசார முரைக்கி லுங்கட்
  பதியையுதா சனற்கூட்டப் படுமென் றன்பு
கரந்தவன்மிக் குருத்துரைத்தங் கிருந்தான் கன்றிற்
  கனியுதைத்தோன் துயிலுணர்ந்து காலைக் கேய்ந்த
அருங்கடன்க ளினிதாற்றி வேந்தர் மொய்த்த
  அரசவையிற் சாத்தகியோ டடைந்தான் மன்னே.

(இ-ள்) அவை இருந்த மன்னவர்தமை பார்த்து-சபையிலிருந்த அரசர்களை நோக்கி. ஐவர் தூதாய் எய்தும் இடையன்-பாண்டவர்

களின் தூதனுய் வரப்போகின்ற ஆயனும் கண்ணன், சவைக்கண் எய்தின்-(நமது) சபையினிடத்து வருவானுயின், நேர்போய்-அவனுக்கு நேரே (எதிர்கொள்ளச்) சென்று, பரிந்து-அன்போடு, தொழுது-வணங்கி, உபசாரம் உரைக்கில்-முகமன் வார்த்தைகள் கூறிவரவேற்பீராயின், உங்கள்பதியை-உங்களுடைய தலைநகரத்தை, உதாசனற்கு ஊட்டப்படும்-அக்னிதேவனுக்கு உணவாகக் கொடுக்கப்படும், என்று—, அன்பு கரந்தவன்-அன்பில்லாத துரியோதனன், மிக்கு உருத்து-மிகவும் சினந்து, உரைத்து - ஆணையிட்டு, அங்கு இருந்தான் - அச்சபையில் வீற்றிருந்தான்: (இஃது இங்ஙனுக) கன்றின் கனி உகுத்தோன்-மாயக்கன்றைக்கொண்டு [ஒரு வஞ்சனை விளாமரத்தின்] பழங்களைக் கீழ்ச்சிந்துவித்தவனுகிய கண்ணபிரான், துயிலுணர்ந்து - தூக்கத்தினின்றெழுந்து, காலைக்கு ஏய்ந்த அருங் கடன்கள்-உதயகாலத்திற் செய்தற்கு உரிய சிறந்த கடமைகளை, இனிது ஆற்றி-நன்ருகச் செய்து முடித்து, வேந்தர் மொய்த்த அரசவையில்-அரசர்கள் கூடியிருந்த அரசசபையில், சாத்தகியோடு-தன் தம்பியாகிய சாத்தகியுடன், அடைந்தான் - வந்து சேர்ந்தான்; (எ.று.) மன், ஓ—ஈற்றசை.

இடையர் மனையில் வளர்ந்தது மாத்திரத்தைக்கொண்டு இடையனென இகழ்ந்தான். இங்ஙனம் பாண்டவர் மேலுள்ள கோபம், அவர் தூதனுன கண்ணபிரான் மேலுஞ் சென்றது. உபசாரம் உரைத்தலாவது-உறவுமுறைகூறி வரவேற்றல். உதாசனன்-அக்னி: ஹுதாசநன் என்ற பெயர் - ஹுத அசந என்று பிரிந்து, (தன்பக்கல்) ஹோமஞ் செய்யப்பட்ட பொருளை உணவாகக் கொள்பவனென்று பொருள்படும். கன்றின், இன் - ஐந்தனுருபு ஏதுப் பொருளது. **கன்றின் கனியுகுத்த கதை**:- கம்சனுல் ஏவப்பட்ட கபித்தாசுரன், விளாமரத்தின் வடிவமாய், கண்ணன் தன் கீழ்வரும் பொழுது மேல் விழுந்து கொல்வதாக எண்ணி வந்து நிற்க, அதனை யறிந்த கிருஷ்ண பகவான், அவ்வாறே தன்னை முட்டிக்கொல்லும் பொருட்டுக் கன்றினுருவங் கொண்டுவந்த வத்ஸாசுரனைப் பின்னிரண்டு கால்களையும் பிடித்து எடுத்துச் சுழற்றி விளாமரத்தின்மேல் எறிய, இருவரும் இறந்து தமது அசுர வடிவத்துடனே விழுந்தனர் என்பது. கன்று-பசுவின் இளமைப் பெயர். "யானையுங் குதிரையுங் கழுதையுங் கடமையுமானேடைந்துங் கன்றெனற்குரிய" என்பது தொல்காப்பியம். கன்றிற் கனியுகுத்தோன்-கருத்துடையடைகொளி. காலைக் கேய்ந்த கடன்கள் - சந்தியாவந்தனம் முதலிய நித்திய வைதிகச் சடங்குகள். சவை-அவை: போலி. உகுத்தோன்-வினையாலணையும்பெயர். (42)

வேறு.

43. **வீடுமன் முதலியோர் எதிர்கொண்டு சென்று வணங்க, நீசர் எண்ணம் பழுதுபடல்.**

கண்ணி லாதவனல் விதுர ஞசிரியர்
கங்கை மைந்தனிவர் கண்டெதிர்
மண்ணில் யாதவர்த மரபில் வந்தவனை
வந்து பொன்னடிவ ணங்கினுர்
விண்ணி லாதவன ளித்த மாமதலை
மேவி னன்றலைக விழ்ந்தழன்
றெண்ணி லாதவிர கெண்ணி னன்சகுனி
யீன ரெண்ணமுடி வெய்துமோ.

(இ-ள்) கண்ணிலாதவன் - திருதராட்டிரன், நல்விதுரன் - நல்ல நீதியுடைய விதுரன், ஆசிரியர் - துரோணர், கங்கை மைந்தன் - வீடுமன், இவர்-இவர்கள், மண்ணில்-பூவுலகில், யாதவர்தம் மரபில் வந்தவனை-யதுகுலத்தில் அவதரித்தவனுகிய கிருஷ்ணனை, கண்டு-தரிசித்து, எதிர் வந்து - நேராக வந்து, பொன்னடி - (அவனது) அழகிய திருவடிகளை, வணங்கினுர் - நமஸ்கரித்தார்கள், விண்ணில் ஆதவன் அளித்த மா மதலை-ஆகாயத்தில் சஞ்சரிக்கும் சூரியன் பெற்ற சிறந்த குமாரனுகிய கர்ணனேவெனில், தலை கவிழ்ந்து மேவினன் -(ஒன்றுந் தோன்ருது) தலையிறங்கி உட்கார்ந்திருந்தான். சகுனி-சகுனியோ, அழன்று-(தமது ஏற்பாட்டின்படியன்றி எல்லாரும் கண்ணனைக் கௌரவித்ததைப்பார்த்துப் பொருது) மனம்கொதித்து, எண்ணிலாத விரகு-பல சூழ்ச்சிகளை, எண்ணினன் - (மனத்தினில்) திட்டமிட்டான் : ஈனர் எண்ணம்-நீசர்களுடைய கருத்து, முடிவு எய்துமோ - நன்கு நிறைவேறுமோ ? (நிறைவேருது) (எ.று).

துரியோதனனது கருத்துக்கு மாருக எழுந்து உபசரிக்கவும், தன் மனச்சாட்சிக்கு மாருக எழுந்து உபசரியாதிருக்கவும் மாட்டாது, கன்னன் தலை கவிழ்ந்திருந்தான். அன்றிக்கே, தன் உயிர்த்தோழனது கட்டளை சிறிதும் பயன்படாததை நோக்கி நாணித்தலைகவிழ்ந்தானென்றுங்கொள்க. கண்ணனைக்கண்டமாத்திரத்தில் யாவரும் தம் வசமின்றிப் பரவசப்பட்டு எழுந்து விட்டதனுல், துரியோதனனதுகட்டளை சிறிதுஞ்செல்லாது பறந்தது. துரியோதனனது அக்கிர

மங்களுக்கெல்லாம் சகுனி மூலமாதலால், அவன் அழன்று விரகெண்ணினன். நீதிபுனைவிதுரனாதலின் நல்விதுரன் என்றது. துட்டர்களாதலின், ஈனர் என்றது.எய்துமோ, ஓ—எதிர்மறை. ஈற்றடி, வேற்றுப் பொருள்வைப்பணி.

இதுமுதல்ஏழுகவிகள் - பெரும்பாலும் ஒன்றுமூன்றுஐந்தாஞ்சீர்கள் மாச்சீர்களும், இரண்டுநான்குஆருஞ்சீர்கள் விளங்காய்ச்சீர்களும், ஏழாவது விளச்சீருமாகிய கழிநெடிலடிநான்கு கொண்ட எழுசீராசிரியவிருத்தங்கள். (43)

44. கண்ணபிரான் சபையிற்சென்று ஆசனத்தில் இருக்க, விண்-வழியே முனிவர் மூவர் வந்து அமர்தல்.

வந்து தம்பியொடு முன்னி ருந்தவர்கள்
வைத்த பீடமிசை பத்தர்கள்
சிந்தை தங்கியரு ளெந்தை மேவவெதிர்
சீர ருந்தவர்கள் மூவரும்
அந்த ரத்தினெறி வந்து நின்றவையு
ளார்செய் பூசனைகொ டாசிகள்
தந்து வந்துபயி லந்த வேலையரி
தன்னை மன்னர்பதி நோக்கியே.

(இ-ள்) தம்பியொடுவந்து - சாத்தகியாகியதம்பியோடு எழுந்தருளி, முன்னிருந்தவர்கள் - முன்னிடத்து இருந்தவர்கள், வைத்த-(கொண்டுவந்து) சமர்ப்பித்த, பீடமிசை-ஆசனத்தின்மீது, பத்தர்கள் சிந்தை தங்கி - (தன்னைத்) தியானிப்பவர்களுடைய மனத்திலே கோயில்கொண்டு, அருள்-கிருபையைச்செய்கின்ற, எந்தை-எமது பிரானாகிய கிருஷ்ணன், மேவ-பொருந்தியிருப்ப, (அப்போது) எதிர்-அவருக்கு நேராக, சீர் அருந் தவர்கள் மூவரும்-சிறப்புப்பொருந்திய அரியதவத்தைச்செய்த முனிவர்கள் மூன்றுபேரும், அந்தரத்தின் நெறி வந்து நின்று-ஆகாயவழியாகவந்துநின்று, அவையுளார் செய் பூசனை கொடு-சபையிலிருந்தோர் செய்த வழிபாட்டுபசாரங்களை யேற்று, ஆசிகள் தந்து-ஆசீர்வாதங்களைமொழிந்து,வந்து பயில்-வந்து அமர்ந்த, அந்த வேலை-அந்தச்சமயத்தில், அரி தன்னை-கிருஷ்ணனை, மன்னர்பதி-துரியோதனராசன், நோக்கி-பார்த்து ; (எ.று.) 'என' எனமேலைக்கவியிலியையும்.

இருந்தவர்கள் என்ற பன்மை-ஒருவர்முன் ஒருவராய்ப் பலர் விரைந்து ஓடிவந்து அன்போடு பீடமிடலுற்றனரென்பதை விளக்கும். 'எந்தை'-ஆசிரியர் பக்தி தெரிக்கும். மூவர் முனிவர்கள்-பரசுராமன், கண்வர், நாரதன் என்போர். நல்லாப்பிள்ளையும் "முனிவர் மூவரு மடைந்து **விண்வழி** முராரிகண்ணெதிரினிற்றலும்" என்றார். (கிருட் : தூது : 140). முனிவர்கள் வந்தமை வில்லியார் கூறிற்றிலர். இது கொண்டே இந்நூலாசிரியராகிய கச்சாலையார் நல்லாப்பிள்ளையைத் தழுவியுள்ளார் என அறியலாம். (44)

45. துரியோதனன், கண்ணன் தனது அரண்மனையிலிறங்காமைக்குக் காரணம வினவ, அவன் கூறுதல்.

எம்மி லூர்நெருந லண்மி யும்வரவி
கந்த தென்னையென வண்ணலும்
உம்மி லெம்மிலொரு பேத மென்னைநெறி
யுற்றெ திர்ந்துவில் விதூரனும்
வம்மி னென்னவவன் மனையி லுற்றசெயன்
மற்று மைவர்விடு தூதனாய்
நும்மில் வந்தனமி சைந்து நுந்தமன
நோவ வேமொழித் னீதியோ.

(இ-ள்) நெருநல்-நேற்றையதினம், ஊர் அண்மியும்-அத்தினாபுரிக்கு வந்திருந்தும், எம் இல்-எனது கிருஹத்திற்கு, வரவு-வருதலை, இகந்தது என்னை-நீக்கியது எக்காரணம் பற்றி? என-என்று வினவ, அண்ணலும்-கண்ணபிரானும், உம் இல்-உனது வீடு, எம் இல்-எனது வீடு (என்று) ஒரு பேதம் என்னை?-ஒரு வித்தியாசம் எதற்கு : (உன் வீடு என் வீடு, என் வீடு உன் வீடு) : (என்றாலும்) வில் விதூரன்-வில்லில் வல்ல விதுரன், நெறி உற்று-(யான்) வரும் வழியில் வந்திருந்து, எதிர்ந்து-எதிர்கொண்டு, வம்மின்-வாருங்கள், என்ன-என்று அழைக்க, அவன் மனையில் உற்ற செயல்-அவனது கிரஹத்திற்குப் போனதாகும் : மற்றும்-மேலும், ஐவர் விடு தூதனாய்-பஞ்சபாண்டவர் அனுப்பிய தூதுவனாய், நும் இல் வந்து - உனது வீட்டிற்கு வந்து, அனம் மிசைந்து - நீயிடும் உணவுண்டு, (பின்பு) நுந்தம் மனம் நோவ-உனது மனம் வருந்தும்படி, மொழிதல்-(யான்) கூறுதல், நீதியோ-முறைமையாகுமோ ? (ஆகாது); (எ.று.)

'எம் இல்' என்றதில் துரியோதனனது அகங்காரமமகாரங்கள் நன்கு விளங்கும். உம்மில் எம்மில் ஒரு பேதமென்னை என்பதற்கு- எனக்கும் உனக்கும் ஒரு வித்தியாசமில்லையென்றும் உரைக்கலாம். விதுரனுக்கு 'வில்' என்ற அடைமொழி கொடுத்ததனுல், அவன் படையை ஞாபகத்துக் கொண்டன்றோ யான் அங்கு உற்றது என்ற கருத்து ஒலி வகையால் தோன்றும். விதூரன்-விதுரன் என்பதன் நீட்டல். வம்மின் - முன்னிலைவியங்கோள். 'உண்ட வீட்டுக்கு இரண்டகம் நினைக்கலாகாது' என்பது நான்காமடிக்கு ஏற்ற பழமொழி. நீதியோ, ஓகாரம்-எதிர்மறை. (45)

46. தூதுவந்தகாரியம் யாது என வினவ, கண்ணபிரான் பாண்டவர்க்கு நாடு கொடுக்கும்படி துரியோதனனுக்குக் கூறுதல்.

என்ன மாலுமிவை பன்ன மன்னவனி
சைத்தி தூதுவரு மியல்பென
மன்ன நின்றுணைவ ரான பஞ்சவர்வ
குத்த நாள்பலவ னத்திலுற்
றின்ன லெய்தியிவ ணுற்று ளாரவரை
யினித ழைத்துபுவி யீந்துடன்
துன்னி வாழ்தனல னென்ன லும்முறுவல்
தோன்ற தோன்றலிது சொல்லுவான்.

(இ-ள்) என்ன-என்று, மாலும்-கிருஷ்ணனும், இவை பன்ன- இவ்வார்த்தைகளைச் சொல்ல, மன்னவன் - துரியோதனராசன், (நீ) தூதுவரும் இயல்பு இசைத்தி-'தூதனுய் வந்த தன்மையைச் சொல்வாயாக', என-என்று கேட்க, (அதற்குக் கிருஷ்ணன்) மன்ன !- அரசனே ! நின் துணைவரான பஞ்சவர்-உன் உடன்பிறந்தவரான பாண்டவர்கள், வகுத்த நாள் பல வனத்தில் உற்று-(முன்னே) குறிப்பிட்ட அநேக நாட்கள் காட்டிலே சென்றிருந்து, இன்னல்எய்தி- துன்பங்களையடைந்து யநுபவித்து, இவண் உற்றுளார்-இப்போது) இங்கு வந்துள்ளார்கள் : அவரை இனிது அழைத்து-அப் பாண்டவர்களை இனிமையாக வரவழைத்து, புவி ஈந்து-நாட்டினைக்கொடுத்து, உடன் துன்னி வாழ்தல் - அவர்களோடு நெருங்கிக் கலந்து [ஒருமித்து] வாழ்தல், நலன்-நன்மையுடைத்து, என்னலும்-என்று கூறியதும், தோன்றல்-துரியோதனன், முறுவல் தோன்ற-[பரிகாசத்தால்]

புன்சிரிப்புத் தோன்றும்படி, இது சொல்லுவான்-இவ்வார்த்தைகளைக் கூறுபவனானான்; (எ.று.) அவன் கூறியதை மேலைக்கவியிற் காண்க.

முறுவல் தோன்றியது அலட்சியம் பற்றியதுமாம். இசைத்தி-முன்னிலையேவல். (46)

47. துரியோதனன் 'பாண்டவர்க்குப் பாகங்கொடேன்' என்று கூறுதல்.

அன்று சூதரசி ழந்து போனவரை
யாத ரத்தொடும ழைத்துவந்
தின்று நீகவர வெண்ணி னுலவரி
லெளிய னேதரவ னத்திலே
சென்று மேவனல மன்றி யின்சொல்பல
செப்பி னும்மனம தொப்பியான்
என்று மீவதிலை யீயி ருக்குமிட
மேனு மென்றுநனி சீறினான்.

(இ-ள்) அன்று-அக்காலத்தில், சூது-சூதாட்டத்தில், அரசு இழந்து போனவரை - தமது அரசாளும் நாட்டைத் தோற்றுக் கைவிட்டுச் சென்றவர்களை, இன்று-இப்பொழுது, ஆதரத்தொடும் அழைத்து வந்து-மிக்க அன்போடும் கூட்டிவந்து, நீ கவர எண்ணினால்-நீ (அந்நாட்டினை என்னிடத்தினின்று) பறிக்க நினைத்தால், தர-அங்ஙனமே கொடுக்க, அவரில் எளியனோ-(நான்) அவர்களைக் காட்டிலும் (வலிமை முதலியவற்றிற்) குறைந்தவனோ? (அப் பாண்டவர்) வனத்தில் சென்று மேவல் - காட்டிற்குப் போய்ப் பொருந்தி வசித்தல், நலம் அன்றி - நன்மைதருவதாகுமன்றி, இன்சொல் பல செப்பினும்-(நீ) இனியவார்த்தைகள் பலசொன்னாலும், யான்-நான், மனமது ஒப்பி-மனப்பூர்வமாக, ஈ இருக்கும் இடம் ஏனும்-ஈ தங்குவதற்கு வேண்டிய அளவு இடமாயினும், என்றும் ஈவது இலை-எக்காலத்தும் வழங்கப்போவது இல்லை, என்று-என்று சொல்லி, நனி சீறினான்-மிகக் கோபித்தான்; (ஈ.று.)

அவரில் எளியனோ - அவர்கள் போல எளிதிற் கவர்ந்து கொள்ளத்தக்கவனோ? என்று உரைப்பாரும் உளர். மேவல்-தொழிற் பெயர். இன்சொல் - இனிய சமாதான வார்த்தைகள் என்றபடி.

போனவர்-வினையாலணையும்பெயர். எளியனே, ஓ-எதிர்மறை. (47)

48-49. **கண்ணபிரான் திருதராட்டிரனிடம் கூறுதல்.**

இரண்டு கவிகள்—ஒரு தொடர்.

வெகுளி செய்யகரி யவன வைக்கணுறு
வேந்தர் தம்மையர சின்மொழி
தகுதி கொல்லெனலு மூமர் தம்மிலவர்
தங்கல் கண்டுபினு மம்பிகை
மகன் முகங்கணுறி யமரில் யாரிறினும்
மன்ன! இன்னலது நின்னதாம்
சகம ளிக்கலுனை யார்த டுப்பர்புகழ்
தங்கு மும்மையுல கெங்குமே.

(இ-ள்) வெகுளி செய்ய-துரியோதனன் கோபிக்க, கரியவன்-கிருஷ்ணன், அவைக்கண் உறு வேந்தர் தம்மை-சபையிலிருந்த மன்னர்களை நோக்கி, அரசின் மொழி-துரியோதனராசன் கூறிய வார்த்தை, தகுதிகொல் - முறைமையானதோ ? எனலும் - என்று வினவவும், அவர்-அந்த மன்னர்கள், ஊமர்தம்மில் - ஊமைகளைப் போல மௌனமாய், தங்கல் கண்டு-அமர்ந்திருத்தலைப் பார்த்து, பினும்-மேலும், அம்பிகை மகன் முகம் கணுறி-அம்பிகையின் குமாரனாகிய திருதராட்டிரனின் முகத்தைநோக்கி, அமரில்-(நிகழப்போகும்) போரில், யார் இறினும் - எவர் இறந்தாலும், மன்ன!-அரசனே! இன்னல் அது நின்னது ஆம்-(அதனாலேற்படும்) வருத்தம் நின்னைச் சாரும்: (ஆதலால்) சகம் அளிக்கில் - (அப்பாண்டவர்க்குரிய) பூமியை (நீ) கொடுக்கின், உனை யார் தடுப்பர் - உன்னைத் தடை செய்பவர் யாவர்? (ஒருவருமிலர்): [மற்றும்] மும்மை உலகு எங்கும்-மூன்றுலகங்களில் முற்றும், புகழ் தங்கும்-உன் கீர்த்தி நிலைபெற்று நிற்கும்; (எ-று).

இருதிறத்தினரும் நின்மக்களாதலின் 'யாரிறினும் இன்னல் நின்னது' என்றான்: 'புகழல்லால் பொன்றாது நிற்பதொன்றில்' ஆகலின், 'புகழ் தங்கும்' என்றான். மும்மையுலகு - சுவர்க்கம், மத்திமம், பாதாளம் என்பன. கொல்-வினா இடைச்சொல். தங்கல்-தொழிற்பெயர், பினும்-பின்னும் என்பதன் இடைக்குறை, கண்ணுறி என்பது 'கணுறி' எனக் குறைந்தது. இறுதல்-இறத்தல். (48)

49. உன்றன் மைந்தனயர் வஞ்ச னைக்குளவர்
ஒழித லின்றியுன தருளினால்
இன்றி யம்பவதி முற்ற வுற்றனர்கள்
நீணி லந்தரம றுப்பையேல்
வென்று கொள்வரிஃ துண்மை பின்புவரல்
மேவு முன்புகல்வ தறனதாம்
என்ற டைந்தனனி தன்று மக்கவரி
சைத்த வாய்மைசில வுண்டுகேள்.

(இ-ள்) உன்தன்-உன்னுடைய, மைந்தன்-பிள்ளையாகிய துரியோதனன், அயர்-செய்த, வஞ்சனைக்குள் - சூழ்ச்சியில், அவர்-அந்தப் பாண்டவர்கள், ஒழிதல் இன்றி-(அகப்பட்டு) இறந்துபடுதலின்றி, உனது அருளினால்-உன்னுடைய கிருபையினால் (ஆசியினால்), இன்று - இப்போது, இயம்பு அவதி முற்ற – (நீங்கள் சொன்ன) காலவெல்லை முடிய, உற்றனர்கள்-வெளிப்பட்டு வந்துள்ளனர் : (ஆகவே முன்னர் நிர்ணயித்தபடி) நீள் நிலம்-நீண்ட இராச்சிய பாகத்தை, தர-கொடுக்க, மறுப்பையேல்-மறுத்தாயேயானால், (அப்பாண்டவர்கள்) வென்று கொள்வர் - [போரில் உங்களைச்] செயித்துக் கைக்கொள்வர் : இஃது உண்மை - இது சரதமாகும் : (ஆகவே) பின்பு வரல் மேவு முன்-பின்னால் வரப் போவது நிகழ்வதற்கு முன்னமேயே, புகல்வது - எச்சரித்துச் சொல்லுவது. அறனது ஆம் - தருமநெறியாகும், என்று - என்று எண்ணி, அடைந்தனன் - (யான் தூதனாய்) வந்துள்ளேன் : இது அன்று-இது தவிர, (மேலும்) உமக்கு-உம்மிடத்து, அவர் இசைத்த வாய்மை-அவர்கள் சொல்லியனுப்பிய வார்த்தைகளும் (செய்திகளும்), சில உண்டு-சில உள : கேள் -அவற்றைக் கேட்பீராக ; (எ.று.)

'மந்திரிக்கழகு வரும் பொருளுரைத்தல்' என்பதுபோல, நான் பின்னால் வரப்போகும் ஆபத்தினை முற்கூட்டியே தெரிவிக்க வந்துள்ளேன் என்றான் கிருஷ்ணன் என்க. ஒழிதல்-இறந்துபடுதல். அவதி - பதின்மூன்றாண்டுகள் என்ற காலவெல்லை. வரல், புகல்வது-தொழிற்பெயர்கள். கேள்-முன்னிலை வியங்கோள். (49)

வேறு.

50. உமது கருத்தை யறிந்துவரச் சொல்லினர் என்று கண்ணபிரான் திருதராட்டிரனிடம் கூறுதல்.

ஆரிய ரவன்ரு யவனிபன் முதலோர்
அடிச்சர ணென்றனர் உவரிப்
பாரினி லருத்தம் அன்றெனி லிசைவு
பட்டெனைத் துதவினும் பண்பே
போரினுக் கிசைவு படினுநன் றடவி
புக்கில மெனப்புகன் றவர்தங்
காரிய முணர்ந்தெய் தென்றனர் உந்தங்
கருத்துள துரைத்திடு மென்ருன்.

(இ-ள்) ஆரியர் - துரோணர் கிருபர் போன்றவர்கள், அவன் தாய்-தருமனது தாயாகிய குந்திதேவி, அவனிபன்-திருதராட்டிரன், முதலோர்-மற்றுமுள்ள விதுரன் முதலோரது, அடி-திருவடிகளே, சரண்-எனக்குப் பாதுகாப்பாகும், என்றனர்-என்று வந்தனம் தெரிவித்தனர்: (அதற்குமேல்) உவரிப்பாரினில்-கடல் சூழ்ந்த உலகத்தில், அருத்தம்-பாதிபாகம் (கேட்கவும்): அன்று எனில்-(அதுகொடுக்க) மறுத்தால், இசைவுபட்டு - மனமொப்பி, எனைத்து உதவினும்-சிறிது கொடுத்தாலும், பண்பு ஏ-தகுதியே : (ஏற்றுக்கொள்வேன்): [அங்ஙனன்றி] போரினுக்கு இசைவு படினும்-போர் செய்தற்குச் சம்மதம் தெரிவித்தாலும், நன்று-நல்லது : (வரவேற்கத்தக்கதே) : அடவி புக்கிலம்-(மீண்டும்) காட்டிற்குப் போகமாட்டோம், என புகன்று-என்று (உறுதியாகக்) கூறி, அவர்தம்-அந்தத் துரியோதனுதியருடைய, காரியம் உணர்ந்து-செய்கையைத் தெரிந்துகொண்டு, எய்து-(மீண்டு) வருவாய். என்றனர்-என்று கூறி (என்னை) அனுப்பினர் : (ஆகவே) உந்தம்-உம்முடைய, உளது கருத்து-மனத்திலுள்ள எண்ணத்தை, உரைத்திடும்-சொல்லுவீராக, என்ருன்-என்று கண்ணபிரான் கூறினுன் ; (எ.று.)

'எமது வந்தனஞ்சொற்று அன்ஞர் மனதறிந்து மீளுக' எனத் தருமன் கூறியதை நினைக. (செ: 18) 'திருவடிகளே சரண்' என்பது வழக்குமுறை. அருத்தம்=அர்த்தம், பாதி. எனைத்து-எத்தனைத்து என்பதன் மரூஉ. எனைத்து என்பதில், வினு-சிறுமைப்

பொருள் குறித்தது. புக்கிலம் - தன்மைப் பன்மை வினைமுற்று. எய்து - முன்னிலை வியங்கோள். உளது - உள்ளத்தது என்றபடி. உவரி-கடல்.

இதுமுதல் நான்கு கவிகள்-இரண்டு நான்கு ஏழாஞ்சீர்கள் மாச்சீர்களும், மற்றை நான்கும் விளச்சீர்களுமாகி வந்த எழுசீராசிரிய விருத்தங்கள். (50)

51. பாண்டவர்க்கு நாடுகொடுத்துக் கலந்து வாழும்படி மீண்டும் துரியோதனனுக்குக் கண்ணபிரான் கூறுதல்.

கேசவ னுரைப்ப வந்தக னென்சொற்
கேட்கிலன் தெளிவுற வின்னும்
நீசொலென் றுரைப்பச் சுயோதனற் கமலன்
நேரிலா வாழ்வுநீ ரடைந்தே
மாசுறத் துணைவர் வனம்புகுத் திடுதல்
மன்னற னன்றுமற் றவர்க்குக்
காசினி யளித்துக் கலந்துவா ழுதியேற்
கருதலர் பொருசம ரென்றான்.

(இ-ள்) கேசவன் உரைப்ப-கண்ணபிரான் சொல்ல, அந்தகன்-குருடனாகிய திருதராட்டிரன், என் சொல் கேட்கிலன்-எனது வார்த்தையைச் செவியேற்பதில்லை: (ஆதலின்) இன்னும்-மறுபடியும், தெளிவுற-(அத் துரியோதனன்) நன்கு தெரிந்து கொள்ளும்படி, நீ சொல் என்று உரைப்ப - நீயே சொல்வாயாக என்று கூற, அமலன் - கண்ணபிரான், சுயோதனற்கு - துரியோதனனுக்கு, 'நீர்-நீங்கள், நேரிலா - இணையில்லாத, வாழ்வு அடைந்து - நல் வாழ்ச்சியைப்பெற்று, (அதே சமயத்தில்) துணைவர்-(உங்களுடைய) உடன்பிறந்தோர், மாசுற-பழுதுறும்படி, வனம் புகுத்திடுதல்-காட்டிற்கு ஓட்டுதல், மன் அறன் அன்று - அரசநீதியாகாது: அவர்க்கு-அந்தப் பாண்டவர்க்கு, காசினி அளித்து - (அவர்க்குரித்தாய) பூமியைக் கொடுத்து, கலந்து வாழுதியேல்-(மனமொருமித்துக்) கூடி வாழ்வாயேயானால், [அவர்கள்] பொரு சமர்-போரிடுதலை, கருதலர்-நினைக்கவும் மாட்டார்கள், என்றான்-என்று கூறி முடித்தான்: (எ.று.) மற்று-வினைமாற்று: அசையெனினுமாம்.

அமலன்-ஹேயப்ரத்யனிகன் என்றபடி, மாசுற-நீ பழுதுபடும்படி எனினுமாம். நேரிலா - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். கருதலர்-எதிர்மறை வினைமுற்று. (51)

52. துரியோதனனுக்குத் திருதராட்டிரனும் வீடுமனும் அறிவுறுத்தல்

அவையினிற் பெரியோர் மொழியுமால் மொழியும்
ஐய ! வென் மொழியையும் நிறுவிப்
புவியளித் தவரோ டொத்துவாழ்ந் திடுதல்
புகழெனத் தாதைகட் டுரைத்தான்
கவரர சுரியோர்க் குதவிடி லிழிவு
காணுமோ கலந்துவாழ்ந் திசைகொள்
இவைமறுத் தமருக் கிசையினுங் குலம்பொன்
றிடுமென வீடும னிசைத்தான்.

(இ-ள்) (பிறகு திருதராட்டிரன் மைந்தனை நோக்கி) ஐய !-ஐயனே ! அவையினில்-சபையினில், பெரியோர் மொழியும்-சான்றோர்களாகிய குரவர் சொன்ன வார்த்தைகளையும், மால் மொழியும்-திருமாலாகிய கண்ணபிரான் சொன்ன வார்த்தைகளையும், நிறுவி-சத்தியமாக்கி, புவி அளித்து-நாட்டினைக் கொடுத்து, அவரோடு ஒத்து வாழ்ந்திடுதல்-அந்தப் பாண்டவரோடு ஒருமித்து வாழ்தல், புகழ் - கீர்த்தி பயப்பதாகும், என - என்று, தாதை - தந்தையாகிய திருதராட்டிரன், கட்டுரைத்தான் - உறுதி கூறினான் : (பிறகு) வீடுமன் - பீஷ்மன், கவர் அரசு உரியோர்க்கு உதவிடில்-(நீ) கவர்ந்த அரசாட்சியை அதற்கு உரியவரிடத்துத் திருப்பிக் கொடுத்தால், இழிவு காணுமோ ?-(அதனால்) இழுக்கு ஏற்படுமோ ? (அதற்கு மாறாகப் புகழுண்டாகும்) : (எனவே) கலந்து வாழ்ந்து-(அப்பாண்டவர்களோடு) கூடி வாழ்ந்து, இசை கொள்-புகழினைக் கைக்கொள்வாய் : இவை மறுத்து-இந்த என் மொழிகளை மறுத்து, அமருக்கு இசையின்-போர்க்குச் சம்மதிப்பாயாயின், நும் குலம் பொன்றிடும்-உன்னுடைய குருகுலம் அழிந்துபோகும், என-என்று, இசைத்தான்-(நற்புத்தி) கூறி முடித்தான் ; (எ.று.)

தாதை கட்டுரைத்ததும் வீடுமன் இசைத்ததும் மிகவும் போற்றத் தக்கவை கட்டுரை-பொருள் பொதிந்த சொல். காணுமோ, ஓ-எதிர்மறை. கொள்-முன்னிலையேவல். (52)

53. துரோணன் கூறிய வார்த்தை.

தண்ணறைக் கமலன் முதலியர்க் கரிய
  தாமரை நாபன்மைத் துனனாய்
நண்ணியீண் டின்சொல் லுய்யுமா றுனக்கு
  நவிலநின் செய்தவம் யாதோ ?
கண்ணன்வா சகங்கேட் டெவ்வள வேனுங்
  காசினி யளித்துவா ழலையேல்
திண்ணநா மடிதன் மன்னவர் மன்ன !
  தேறெனத் துரோணனு முரைத்தான்.

(இ-ள்) தண் நறை கமலன்-குளிர்ச்சியோடு தேன்சொரியும் தாமரையில் எழுந்தருளியிருக்கும் பிரமன், முதலியர்க்கு - முதலிய தேவர்களுக்கும், அரிய-(காண்பதற்கு) அரியவனான, தாமரைநாபன்-பத்மநாபனாகிய திருமால் [கண்ணபிரான்] மைத்துனனாய்-(உன்னை) மைத்துனனாகிய முறைமைகொண்டு ஈண்டு-இவ்விடத்து, நண்ணி-(உன்னிடம்) வந்து, உய்யுமாறு நீ ஈடேறும்படி, உனக்கு இன்சொல் நவில - உனக்கு இனிமையான இதமொழிகளைச் சொல்ல, நின் செய்தவம் யாதோ ? - (முற்பிறப்பிற்) செய்துள்ள தவப்பேறு எத்தன்மையதோ ? (ஆகவே) கண்ணன் வாசகம் கேட்டு-கிருஷ்ணனுடைய மொழிகளைக் கேட்டு, (அதன்படி) எவ்வளவு ஏனும்-சிறிதளவாயினும், காசினி அளித்து பூமியைக் கொடுத்து, வாழலை ஏல்-வாழாமற் போனால், மன்னவர் மன்ன ! - ராஜாதிராஜனே !, நாம் மடிதல் திண்ணம் - நாமனைவரும் இறந்தொழிதல் நிச்சயம் ; தேறு-இதனைத் தெளிவுறத் தெரிந்துகொள்வாயாக, என - என்று, துரோணனும் - துரோணாசாரியரும், உரைத்தான்-கூறி முடித்தார் ; (எ.று.)

முதலியர் என்பதில், சிவன் (முதலிய) பிறதேவரும் அடங்குவர். தாமரைநாபன்-பத்மநாபன் நாபியில் கமலத்தையுடைய திருமால், மைத்துனன்-அத்தைமகன் ; பாண்டவர்க்குக் கண்ணன் மைத்துனனாதல் போலத் துரியோதனனுக்கும் மைத்துனனாவன் என்று கொள்க. அத்தை மைந்தனை 'மைத்துனன்' என்பது முற்காலத்து வழக்கம் போலும். தேறு முன்னிலையேவல். யாதோ, ஓகாரம்-சிறப்பு. (53)

வேறு.

54. **துரியோதனன் போரிடத்துணிய, பரசுராமன் அவனுக்கு உறுதி கூறத் தொடங்கல்.**

பெரியோ ருரைக்க வுளநொந்து மன்னர்
பெருமன் குலுங்க நகையா
கரியோ னைநோக்கி யமராண்மை காணல்
கடனாகு மார்க்கும் உழுவை
யுரியார்க் கும்நம்ப னுரைசெய்யி னும்ம
ணுதவே னெனப்பு கலவத்
துரியோ தனற்கு சமதக்கினி நாம
துறவோ னெடுத்து மொழிவான்.

(இ-ள்) உளம் நொந்து - மனவருத்தத்தோடு, பெரியோர் உரைக்க-(திருதராட்டிரன் வீடுமன் துரோணன் முதலாய) பெரியோர்கள் [உறுதி] சொல்லவும், மன்னர் பெருமன்-துரியோதனராசன், குலுங்க நகையா-உடல் குலுங்கக் குலுங்கச் சிரித்து, கரியோனை நோக்கி-கிருஷ்ணனைப் பார்த்து, அமர்-போரில், ஆண்மை காணல்-வீரத்தைப் பரிசோதித்தல், ஆர்க்கும் கடனாகும் - யார்க்கும் முறைமையாகும்: உழுவை உரி ஆர்க்கும் நம்பன்-புலித்தோலை (அரையில்) கட்டியிருக்கும் சிவபெருமான், உரை செய்யினும்-உறுதி மொழி கூறினாலும், (நான்) மண் உதவேன்-பூமியைக் கொடுக்க மாட்டேன், எனப் புகல-என்று கூற, அப்போது அ துரியோதனற்கு-அந்தத் துரியோதனனுக்கு, சமதக்கினி நாம துறவோன்-ஜாமதக்னி யென்ற பேரையுடைய முனிவன் பரசுராமன், எடுத்து மொழிவான்-உதாரணங்காட்டிக் கூறுபவனானான்; (எ.று.)

திருமால் கூறியது ஒருபுறமிருப்ப, சிவனே வந்து கூறினாலும் நாடு கொடேன் என்றபடி. புலித்தோலை அரைக்கசைத்தவனாதலின், சிவனை 'உழுவையுரி ஆர்க்கும் நம்பன்' என்றான். உழுவை புலி. உரி-தோல். ஆர்த்தல்-உடுத்தல், கட்டுதல். சமதக்னி முனிவன்மகன் பரசுராமன்: எனவே சாமதக்னி (ஜாமதக்னி) எனப்படுவன். எடுத்து மொழிதல்-பரசுராமன் தம்போத்பவன் கதையை உதாரணங் காட்டி மொழிதலை மேலைச்செய்யுள்களிற் காண்க. நகையா-உடன்பாட்டெச்சம். அமர் என்பதன் பின் ஏழனுருபு தொக்கது. ஆர்-யார் என்பதன் மரூஉ. செய்யினும், உம்-உயர்வுசிறப்பு.

இது முதல் மூன்று கவிகள்-பெரும்பாலும் மூன்ருஞ்சீரொன்று காய்ச்சீரும் ஏனைய ஆறுசீர்கள் மாச்சீருமாய் வந்த எழுசீராசிரிய விருத்தங்கள். (54)

55—56. பரசுராமன் தம்போத்பவன் கதையைச் சொல்லி, அவனை வென்ற நரநாராயணர்கள் கிருஷ்ணார்ச்சுனர்களாக அவதரித்-துள்ளனர் எனல்.

இரண்டு கவிகள் - ஒருதொடர்.

நவில்கந் தமாதன மதிற்றவஞ்செய் நர
நார ணர்க்க ணணுகி
அவனிக் குடம்பொற் பவனென்னு மன்னன்
அமருக் கழைப்ப வவரும்
தவமுய்ய வின்சொல் பலசொல்ல வெள்ளி
தனுகோ லிவெய்யன் வெகுளா
சிவனென் னநின்று நரனெய்யு மம்பின்
திறல்கேட் டகன்ற னனரோ.

(இ-ள்) நவில் கந்தனமாதனம் அதில்-சிறப்பித்துப் பேசப்படுகின்ற கந்தனமாதனமலையில், தவம் செய்-தவத்தை மேற்கொண்டுள்ள, நரநாரணர்க்கண் - நரநாராயணர் என்ற தவசிகளை, அணுகி - நெருங்கி, அவனிக்குள் - பூமிக்குள், தம்பொற்பவன் என்னும் மன்னன் - தம்போத்பவன் என்ற பெயருடைய அரசன், (அவ்விருவரையும்) அமருக்கு அழைப்ப-போருக்கு அழைக்க, அவரும்-அந் நரநாராயணரும், தவம் உய்ய-தமது தவப்பயன் குறையாதிருப்ப, இன்சொல் பல சொல்ல-இனிய சொற்கள் பலவற்றை [இதமாகச்] சொல்லவும், [கேளாமல்] வெய்யன்-கொடியனுகிய தம்போத்பவன், எள்ளி-நகைத்து, தனு கோலி-வில்லை வளைத்து, வெகுளா-கோபித்து, (பின்பு) சிவன் என்ன நின்று நரன் எய்யும் அம்பின்-சிவபெருமான் என்னும்படி கனன்று நின்று நரன் என்ற தவசி விடுகின்ற அம்பினது, திறல் கேட்டு - வலிமையைக் கேள்விப்பட்டு, அகன்றனன்-(போரொழிந்து) போயினன்; (எ.று.) அரோ-ஈற்றசை.

பூமிக்குள் அரசன்-பூமி முழுவதுக்கும் அரசன்: ஸார்வபௌமன் என்றபடி. தம்போத்பவன் என்ற மன்னன் யுத்தத்தில் தனக்கு யாரும் ஸமானமில்லையென அகங்கரித்து நிற்ப, அதனைக் கண்ட

பிராம்மணர்கள் 'அரசனே! நரரென்றும் நாராயணரென்றும் இரண்டு தவசிகள் மானிடவுலகத்தில் வந்து கந்தமாதன பர்வதத்தில் கோர மான தவத்தைச் செய்கின்றனர். அவர்களோடு யுத்தம் செய்' என்ன, அவனும் அங்ஙனமே அவ்விருவருடன் போர் தொடங்க, நரர் என்ற தவசி சீழ்கம்புல்லினாலான ஈர்க்குகளை இறைத்து, ஐஷீகாஸ்திரத்தைவிட, அவன் அதனைத் தடுக்கமுடியாமல் அவர் பாதங்களில் விழுந்தான். அந் நரரும் அவனை ஆசீர்வதித்து அனுப் பினார். அவரைக் காட்டிலும் பன்மடங்கு அதிகமான குணங்களிலே நாராயணர் சிறந்தவராயிருந்தார். (அந்த நரநாராயணர்கள் தான் இப்போது கிருஷ்ணார்ச்சுனராக வந்துள்ளனர். ஆகவே அவர்களை உன்னால் வெல்லமுடியாது என்பது மேலைக்கவியால் விளங்கும்).

தம்பொற்பவன் - தம்போற்பவன் என்றதன் குறுக்கல். சினங் கொண்டு சபித்தாலும் அழித்தாலும் தவப்பயன் குன்றுமாதலின், 'தவமுய்ய இன்சொல் பல சொல்ல' என்றது. வெகுளா-உடன்பாட் டெச்சம். சிவனென்ன நின்றவன் நரன் என்க. 'அம்பின் திறல் **கேட்டே** அகன்றனன்' என்றதால், நரன் வில்லின் திறம் விளங்கும். (55)

56. கண்வர் மாதலிகதையைக் கூறத்தொடங்கல்.

அன்னா னைவென்ற நரநார ணாரிவ்
வரிபார்த் தனுகு மிவரை
உன்னா லென்வேற லரிதாகு மைவ
ருலகா ளவைத்தி யெனலும்
மன்னா னனங்க னுவனேக்கி யோதும்
மாசற் றதிங்கள் மரபோய்!
முன்னா ளிலும்ப ரிறைதேர்ந டத்து
மொழிமா தலிப்பெ யரினான்.

(இ-ள்) அன்னானை வென்ற - அந்தத் தம்போத்பவனைச் செயித்த, நரநாரணார் - நரநாராயணர்கள், இ அரி பார்த்தனுகும்- இந்தக் கிருஷ்ணார்ச்சுனராவர்: இவரை-இந்தக் கிருஷ்ணார்ச்சுனர் களை, உன்னால்-(அகங்கரிக்கும்) உன்னால், என் வேறல்-எப்படி வெல்லமுடியும்? அரிதாகும் - வெல்ல முடியாது: (ஆகவே) ஐவர் உலகாள வைத்தி - பாண்டவரைவரும் உலகையாளும்படி (நீயே)

செய்துவிட்டாய், எனலும்-என்று பரசுராமன் கூறிமுடித்தவுடன், கணுவன்-கண்வ மகரிஷி, மன் ஆனனம் - துரியோதனராசனது முகத்தை, நோக்கி-பார்த்து, ஓதும்-பின்வருமாறு சொல்லலானான் : 'மாசற்ற திங்கள் மரபோய் !-குற்றமற்ற சந்திரவமிசத்திற்றோன்றிய வனே ! முன் நாளில்-முன்னொரு காலத்து, உம்பர் இறை தேர் நடத்தும்-தேவேந்திரனுடைய தேரைச் செலுத்துபவனாகிய, மாதலிப் பெயர் மொழியினான் - மாதலியென்ற பெயரையுடைய சாரதியான வன் ; (எ.று.) "தன் மகளையளிப்பனென" என மேலைக்கவியிற் றொடரும்.

வேறல் - தொழிற்பெயர் : வெல்-பகுதி, தல் - விகுதி. ஐவர்-தொகைக்குறிப்பு, கணுவன் - கண்ணுவன் என்பதன் சிதைவு : கண்வ முனியைக் காட்டும் வைத்தி-முன்னிலை வினைமுற்று. (56)

வேறு.

57. மாதலி தன்மகளைச் சுமுகன் என்ற நாகனுக்கு வதுவை செய்வித்தலும், கருடன் கோபமுறலும்.

அன்னவனுந் தன்மகளை யுரக சுமுக
    னாரியனுக் களிப்பனென வவன்கேட் டெய்தி
என்னையிக லாற்கலுழன் செகுப்ப நின்றான்.
    எனக்களிப்ப லொழிகவென விவன்மீட் டும்பர்
மன்னனுபேந் திரராலீந் தவனுக் காயு
    வதுவைபுரிந் திடவறிந்து வயினை னிந்திரன்
முன்னணுகி யீதுரைப்பான் உலகேழுண்ட
    முராரிசுமந் திடுமென்றோண் மொய்ம்போராமல்.

57. (இ-ள்) அன்னவனும் - அந்த மாதலியும், தன் மகளை - தன் புத்திரியாகிய குணகேசியை உரக சுமுகன் ஆரியனுக்கு அளிப்பன் என-நாகனாகிய சுமுகன் என்னும் சிறந்தோனுக்கு மணஞ் செய்து கொடுப்பேன் என்று நிர்ணயிக்க, அவன் கேட்டு எய்தி-அந்தச் சுமுகன் (இதனைக்) கேட்டு (மாதலியிடம்) வந்து, என்னை இகலால்-என்னைப் பகைமையினால், கலுழன் - கருடனானவன், செகுப்ப நின்றான் - கொல்லச் சித்தனாயிருக்கிறான் : (ஆகவே) எனக்கு

அளிப்பல் ஒழிக என-எனக்கு (உன் மகளை)க் கொடுத்தலைத் தவிர்க என்று கூற, இவன் - இந்த மாதலி, மீட்டு-மறுபடியும், உம்பர் மன்னன் - இந்திரனுலும், உபேந்திரரால் - உபேந்திரனுலும் (விஷ்ணுவினுலும்), அவனுக்கு-அந்தச் சுமுகனுக்கு. ஆயு ஈந்து-ஆயுள் கொடுக்கச் செய்து, வதுவை புரிந்திட-திருமணஞ் செய்து வைக்க. (அதனை) வயினன் கருடன், அறிந்து-தெரிந்து கொண்டு, இந்திரன் முன் அணுகி-இந்திரனுக்கு முன்னே வந்து, ஈது உரைப்பான்-இந்த வார்த்தைகளைச் சொல்லலானுன் : 'உலகு ஏழ் உண்ட முராரி - ஏழுலகங்களையும் (மகாபிரளய காலத்தில்) விழுங்கிய விஷ்ணுவை, சுமந்திடும்-தாங்கிச் செல்லும், என் தோள் மொய்ம்பு ஓராமல்-என்னுடைய தோளின் வலிமையை ஆராய்ந்து பாராமல் ; (எ.று.)" × × × மன்றலியற்றினை" என் மேலைக்கவியிற் குளகமாய்த் தொடரும்.

சுமுகன்-ஆர்யகன் என்ற நாகனின் பேரன், இவன் தந்தை சிகுரன் என்கிற நாகன் : அவனைக் கருடன் கொன்றதுமன்றி 'மற்ருெரு மாஸத்தில் சுமுகனையும் பட்சிப்பேன்' என்று கூறியுள்ளான். அதனுல் 'கலுழன் செகுப்ப நின்ருன்' என்றது. உபேந்திரன்-இந்திரன் தம்பி : இவன் விஷ்ணுவாவன் : இந்த விஷ்ணு இந்திரனை நோக்கிச் சுமுகனுக்கு அமிருதபானஞ் செய்வித்துத் தேவர்களுக்குச் சமமாகச் செய்யச் சொல்ல, இந்திரன் அமிருதத்திற்குப்பதில் சிறந்ததான ஆயுளைக் கொடுத்திட்டான் என்பது அறிய வேண்டிய விவரம். முராரி-முரனைக் கொன்றவன் என்றபடி. முரன்-நரகாசுரன் மந்திரியும் திருமாலாற் கொல்லப்பட்டவனுமான பேராற்றலுடைய ஓர் அரக்கன். ஏழுலகும் உண்டவனையே தாங்கும் தோள் வலிமை பாராட்டியபடி. மகள்-குணகேசியென்பவள் : இவள் ரூபத்தாலும் சரீரத்தினுலும், காந்தியினுலும் ஏனைய பெண்களை மிஞ்சியிருந்தனள். மாதலிக்கும் அவன் மனைவி சுதர்மைக்கும் பிறந்தவள்.

இது முதல் ஏழு கவிகள்-பெரும்பாலும் ஒன்று இரண்டு ஐந்து ஆருஞ்சீர்கள் காய்ச்சீர்களும் மற்றைய நான்கும் மாச்சீர்களுமாகிய கழிநெடிலடி நான்கு கொண்ட எண் சீராசிரிய விருத்தங்கள் (57)

58. செருக்குற்ற கருடன் திருமாலால் சோர்வுற்றமையை எடுத்துக்காட்டிச் செருக்குற்றிருந்த துரியோதனனைக் கண்வமுனிவர் தெருட்டுதல். பின்பு நாரதர் கூறலுறல்.

என்னிகலா ரியற்காயு வளித்து மன்றல
    இயற்றினை நின் னுயிர்கவர்தும் எனமா லென்னைச்
சொன்னவண மெடுத்தியெனச் சுமக்கிலானாய்ச்
    சோர்வுற்றான் அகந்தையினாற் சுகமா ருற்றார்
அன்னவயி னற்குவலி தருமா னின்பால்
    அடைந்திரப்ப மகிழ்ந்துதவ லழகீ யாயேல்
மன்னகுலத் தொடுமடித றிண்ண மென்றே
    வகுத்தனனின் யாழ்முனிவன் வகுப்பான் மன்னோ.

(இ-ள்) என் இகல் ஆரியற்கு ஆயு அளித்து-என்னுடைய பகைவனாகிய சுமுகனுக்கு ஆயுளைக் கொடுத்து, மன்றல் இயற்றினை-(மேலும் குணகேசியோடு) திருமணமும் செய்து வைத்தாய்: (ஆதலின்) நின் உயிர் கவர்தும்-உன் உயிரைப்பறிப்பேன், என-என்று [இந்திரனை] வெகுள, (அப்போது) மால்-உபேந்திரனாகிய விஷ்ணு, என்னைச் சொன்ன வணம் எடுத்தி என-என்னை நீ சொன்னபடியே சுமந்திடு என்றுகூற, (அப்போது அந்தக்கருடன் அவ்விஷ்ணுவைச்) சுமக்கிலானாய் - தாங்கமுடியாதவனாய், சோர்வுற்றான் - தளர்ச்சியடைந்தான் : (எனவே) அகந்தையினால் - செருக்கினால், சுகம் ஆர் உற்றார்-சுகத்தையடைந்தவர் யாவருளர்? (ஒருவருமிலர்) : அன்னவயினற்கு-(சோர்வுற்ற) அப்படிப்பட்ட கருடனுக்கு, வலி தரு மால்-வலிமையை (மீண்டும்) அளித்த விஷ்ணுவாகிய கிருஷ்ணபகவானே, நின்பால் அடைந்து-உன்னிடம் (தூதுவனாய்) வந்து, இரப்ப-நாடு யாசிப்ப, (நீ) மகிழ்ந்து உதவல் அழகு-சந்தோஷமாகக் கொடுத்தல் நலமாகும்: ஈயாயேல் - கொடாமற் போவாயாயின், மன்ன !-துரியோதனராசனே !, குலத்தொடும் மடிதல் திண்ணம்-(உன்னுடைய) வமிசத்தோடும் (அடியோடு) அழிந்து போதல் நிச்சயம், என்று வகுத்தனன்-என்று கண்வர் வகைபடக் கூறிமுடித்தனர்: (பிறகு) இன் யாழ் முனிவன்-இனிய வீணையில்வல்ல நாரதமுனிவன், வகுப்பான்-(துரியோதனனை நோக்கி) கூறுவானாயினான் ; (எ று). மன், ஓ—ஈற்றசை.

அகந்தையினால் கருடன் சோர்வுற்ற கதையையெடுத்துச் சொல்லித் துரியோதனனைக் கர்வத்தைவிட்டுப் பாண்டவர்களுடன்

நட்புக்கொள்ளக் கண்வர் சொல்லியதும், அவன் கர்ணனைப்பார்த்து உரக்கச் சிரித்து தொடைதட்டி நகைக்க, 'தொடையிலேயே உனக்கு மரணம் நேரும்' என்று கண்வர் அவனைச் சபித்தமை ஈண்டு உணரவேண்டிய விவரம். 'அகந்தையினால் சுகம் ஆருற்றார்' என்றது-வேற்றுப்பொருள்வைப்பணி. கவர்தும் - தன்மையொருமை வினைமுற்று. வணம்-வண்ணம் என்பதன் இடைக்குறை. எடுத்தி-முன்னிலையேவல். உதவல் தொழிற்பெயர். (58)

59-63. நாரதர் காலவர் கதையைச் சொல்லி, பெரியோர் சொல்லை எதிர்மறுத்து நிர்பந்தித்தல் கூடாது என்று காட்டித் துரியோதனனைப் பாண்டவருடன் ஸமாதானம் செய்து கொள்ளச் சொல்லுதல்.

ஐந்து கவிகள் ஒரு தொடர்.

59, விசுவாமித்திரர் நிர்ப்பந்தஞ்செய்த தன் சீடன் காலவரைக் கருமையான காதுள்ள குதிரைகள் எண்ணூறு தக்கிணையாகத் தரச்சொல்லுதல்,

கோசிகன்பால் விஞ்ஞையுணர் கால வன்றான்
கொடுப்பான்தக் கிணையாது கூறென் றேத்த
தேசிகனு மளித்தனபோ லாஞ்செல் கென்னச்
சீடன்மறுத் தளிப்பனெனச் சினந்தெண் ணூறு
வாசிகருங் காதுருவம் வெண்மை யாக
வழங்கெனப்போந் துலகிலம்மா வாய்த்தி லாமல்
மாசிரம முறநண்பாங் கலுழன் கேட்டிம்
மாவிண்ணுண் டெய்தெனத்தோள் வைத்தெ
ழுந்தான்.

(இ-ள்) கோசிகன்பால்-விசுவாமித்திர முனிவரிடத்து, விஞ்ஞை உணர் காலவன்-வித்தைகளைக் கற்றுத்தேர்ந்த காலவராகிய சீடர், தான் கொடுப்பான் தக்கிணை யாது-தான் கொடுப்பதற்கான குரு தட்சிணை எது? கூறு-சொல்வீராக, என்று ஏத்த-என்று சொல்லித் துதிக்க, தேசிகனும்-குருவாகிய விசுவாமித்திரனும், அளித்தன போலாம் செல்க என்ன-(நீ) கொடுத்த மாதிரிதான் போவாய் என்று சொல்ல, சீடன்-காலவர், மறுத்து-குரு சொன்னதையேற்காது, அளிப்பன் என-(நான்) தட்சிணை கொடுப்பேன் என்று நிர்ப்பந்திக்க

சினந்து-கோபங் கொண்டு, (குரு) கருங்காது-கரியகாதுகளையும், உருவம் வெண்மையாக-நிறம் வெளுப்பாகவும் உள்ள, எண்ணூறு வாசி எண்ணூறு குதிரைகளை, வழங்கு -கொடுப்பாயாக, என-என்று ஆணையிட, போந்து-(சீடனுகிய) காலவர் [குருவின் ஆசிரமத்தி னின்று] வெளிவந்து, உலகில் - இந்நிலவுலகத்தில், அ மா வாய்த்தி லாமல் - அத்தகைய குதிரைகள் இல்லாமையால், மா சிரமம் உற-மிகவும் கஷ்டப்பட, நண்பாம் கலுழன் கேட்டு-அவனுடைய சிநேகித னுகிய கருடன் கேள்விப்பட்டு, இ மா-இத்தகைய குதிரைகள், விண் உண்டு-தேவலோகத்திலுள்ளன, எய்து என-(அங்கு) வருவாயாக, என-என்றுகூறி, தோள் வைத்து-(தனது) தோளிலே காலவரையேற் றிக்கொண்டு, எழுந்தான் - ஆகாயத்தில் பறக்கலானுன் ; (எ.று.)

'குருவின் காணிக்கையைக் கொடுக்க மறந்தேனே? என்றபடி, காணிக்கை கொடுக்க வேண்டியது நியாயம் தான் ; அதற்காகக் குருவைக் கேட்கும்படி நிர்ப்பந்திக்கக் கூடாது என்பது அறிய வேண்டுவது. 'மறுத்து அளிப்பேன்' என்றதில் செருக்கும் நிர்ப்பந் தமும் தோற்றுதல் காண்க. (59)

(0. காலவர் கருடனுடன் யயாதியிடம் சென்று குதிரைகளை யாசிக்க, அவன் அவைகளுக்குப் பிரதியாகத் தன்மகள் மாதவியைக் கொடுத்து அவளுக்குச் சுல்கமாக வைத்துக் குதிரைகளைப் பெறச் சொல்லுதல்.

பறந்தபொழு தவன்வழுவ விழாமுன் காலிற்
பற்றியெழுந் தேகலும்விண் படரே னென்னச்
சிறந்தபுவி மிசைப்பரிமா நாடி யன்னோர்
சென்றுபிர திட்டைநகர் சேர்ந்திய யாதிக்
கறைந்தனரங் கதுகேட்டப் பரிமற் றின்றி
ஆரியனுக் கவன்மகளை யளித்தே யிந்த
குறைந்தவிடை யாற்பெறுதிர் பரியென் றுய்ப்பக்
கொம்பனையோ டகன்றவர்மாக் குலநே டுற்றே.

(இ-ள்) பறந்தபொழுது-(ஆகாயத்தில்) பறக்கும்போது, அவன் வழுவ-அந்தக் காலவர் நழுவிப்போக, விழாமுன் [அவர்] தரையில் விழுவதற்கு முன்னே, காலிற்பற்றியெழுந்து - தனது கால்களால் (அவரை) இறுகப்பிடித்துக்கொண்டே மேலெழுந்து, ஏகலும்-செல்ல வும், (காலவர்) விண்படரேன் என்ன-[நான் இனி] ஆகாய மார்க்

கத்தில் வரமாட்டேன் என்றுகூற, அன்னோர்-அவ்விருவரும், சிறந்த புவிமிசை பரிமா நாடி சென்று-சிறப்புற்ற பூமியிலே குதிரைகளைத் தேடிக்கொண்டுபோய், பிரதிட்டை நகர் சேர்ந்து-பிரதிஷ்டானம் என்கின்ற நகரத்தையடைந்து, (அந்த நகரின் அரசனாகிய) யயாதிக்கு-யயாதி ராஜனுக்கு, அறைந்தனர்-விஷயங்களைச் சொல் லினர் : அங்கு-அவ்விடத்து, அதுகேட்டு-அந்த விஷயங்களைச் செவி யேற்று, அ பரி இன்றி-அவன்கேட்டபடி குதிரைகள் இல்லாமற்போக, (அவற்றுக்குப் பிரதியாக) ஆரியனுக்கு-அந்தக் காலவர்க்கு, அவன்-அந்த யயாதி, மகளை அளித்து-தன் பெண்ணாகிய மாதவியென் பாளைக்கொடுத்து, 'இந்த குறைந்த இடையால்-நுண்ணிய இடையை யுடைய இந்தப் பெண்ணால், பரி பெறுதிர் - [நீங்கள் நாடிவந்த எண்ணூறு] குதிரைகளையும் பெறுவீராக, என்று உய்ப்ப-என்று சொல்லி அவளை (அவர்களோடு) அனுப்ப, அவர்-(காலவர் கருடன் ஆகிய) அந்த இருவரும் கொம்பு அனையோடு-பூங்கொம்பு போன்ற அந்த மாதவியோடு, அகன்று-(யயாதியை) விட்டு நீங்கி, மா குலம் நேடுற்று - குதிரைக் கூட்டங்களைத் தேடிக்கொண்டு ; (எ.று.) ''இறைவர்பால் மாக்கலந்திடலோர்ந்து'' என மேலைக்கவியிற் றொடரும்.

யயாதி குதிரைகளுக்குப் பதிலாகப் பொருள்கள் கொடுக்கலா மென்றாலோ அவன் யாகங்களில் பொருள்களையெல்லாம் செலவிட்டு விட்டபடியால், பொருளுக்குப் பிரதியாகத் தன்மகள் மாதவியைக் கொடுத்து அவளைக்கொண்டு எண்ணூறு குதிரைகளைப் பெறச் சொல்லினான் என்க. பிரதிட்டை - பிரதிஷ்டானம் என்பதன் சிதைவு. சேர்ந்திய யாதி-குற்றியலிகரம் அலகு பெறவில்லை. அனை-அன்னவள் என்றபடி. படரேன் - தன்மையொருமையெதிர்மறை வினைமுற்று. (60)

61. மாதவி குதிரைகளைப் பெற உபாயங் கூறுதல்.

காசிகோ சலபோசர் இறைவர் பான்மாக்
கலந்திடலோர்ந் தெவ்வாறு கவர்வ தென்று
பேசலுமா தவிபிறர்தோய்ந் துறினுஞ் சேய்கள்
பின்னருங்கன் னிகையாகிக் கொண்கன் பாங்கர்
நேசமுற வரும்வரமோர் முனிகட் பெற்றேன்
நீவிரங்கங் களித்தொருசேய் நேர்த லோடும்
மாசமர்வெல் லிவுளியுமொவ் வொருவர் மாட்டு
வாங்குதிரிவ் விருநூறு வரவென் னேடே.

(இ-ள்) காசி கோசலம் போசர் இறைவர் பால்-காசிநகரத்தவர் கோசல நாட்டவர் போசர் இவர்களுக்கு மன்னர்களாயிருப்பவரிடம், மா கலந்திடல் ஓர்ந்து-குதிரைகள் இருப்பதையறிந்து, கவர்வது எவ்வாறு என்று பேசலும்-அவைகளைப் பெற்றுவருதல் எப்படியென்று [காலவரும் கருடனும் தம்முள்] ஆலோசித்துப் பேசவும், (அதனைக் கண்ட) மாதவி—, (நான்) பிறர் தோய்ந்து-அயல் ஆடவரைப் புணர்ந்து, சேய்கள் உறினும்-பிள்ளைகளைப் பெற்றாலும், பின்னரும்-மறுபடியும், கன்னிகையாகி - கன்னிப்பருவத்தையடைந்தவளாகி, கொண்கன் பாங்கர்-(என்) கணவன் பக்கல், நேசம் உற வரும் ஓர் வரம்-அன்பு பொருந்த வந்து சேர்கின்ற ஒரு வரத்தை, ஓர் முனிகண் பெற்றேன் - ஒரு முனிவனிடத்துப் பெற்றுள்ளேன் : நீவிர் - நீங்கள், (என்னை) அங்கு அங்கு அளித்து-அந்தந்த மன்னரிடத்துக் கொடுத்து, ஒரு சேய் நேர்தலோடும்-ஒவ்வொரு பிள்ளையை (அன்னவரிடத்துப்) பெற்றவுடன், ஒவ்வொருவர் மாட்டு-ஒவ்வொரு மன்னரிடமும், என்னுடே-என்னை (நீவிர்) பெறுதலோடு, மா சமர் வெல் இவுளியும் இவ்விருநூறு வரவு-மிக்கபோரில் வெல்லுந்தன்மையுள்ள குதிரைகள் இருநூறு இருநூறு சுல்கமாக வருதலை, வாங்குதிர்-வாங்கிப்பெற்றுக் கொள்வீர் ; (எ.று).

மாதவிபெற்ற வரமாவது - ஒரு பிரம்மவாதி 'நீ பிரஸவத்தின் முடிவு தோறும் கன்னியாகவே ஆவாய்' என்றது. அந்த வரத்தைப் பயன்படுத்தி மூவரசர்களிடம் சென்று ஒவ்வொருவரிடம் இருநூறு குதிரைகள் பெற்றார் என்றபடி, காசிராசன் பெயர்-திவோதாஸன், கோசலராசன் பெயர்-ஹர்யச்வன், போசர்ராசன் பெயர்-உசீநரன். முதனூலின்படி முதலில் ஹர்யச்வனையண்டி மாதவியைக் கொடுத்துக் காலவர் இருநூறு குதிரைகளைப் பெற்றார் : ஹர்யச்வன் மாதவியிடம் வஸுமனஸ் என்னும் புத்திரனைப் பெற்றுப் பிறகு மாதவியைக் காலவரிடம் கொடுக்க, அவர் மீண்டும் கன்னிகையாகிய அவளுடன் காசிநகர திவோதாஸனிடம் சென்றார். அவன் மாதவியைப் பெற்று இருநூறு குதிரைகளைக் கொடுத்தான் : பின்னர் மாதவியிடம் பிரதர்த்தனன் என்னும் புத்திரனைப்பெற்று, அவளைத் திருப்பிக் காலவரிடம் கொடுத்துவிட்டான். அவர் கன்னிகையாகிய மாதவியைப் போஜநகரத்தரசன் உசீநரனுக்குக் கொடுத்து இருநூறு குதிரைகளைப் பெற்றார். அவன் சிபியென்னும் குமாரனைப்பெற்றுக் காலவரிடம் மாதவியைத் திரும்பக்கொடுத்துவிட்டான். [குறிப்பு :- இங்ஙனம் பெற்றவை அறுநூறு குதிரைகள். இன்னும் இருநூறு குதிரைகள் வேண்டும். அவற்றிற்குக் காலவர் கருடன் சொற்படி செய்த செயலை மேலைக்கவிகளிற் காண்க]. கவர்வது - தொழிற் பெயர். வாங்குதிர்-முன்னிலைப்பன்மை. (61)

62. காலவர் இருநூறு குதிரைகள் குறைவாயிருப்பதைக் கண்டு வருந்தியிருப்பக் கருடன் சொற்படி விச்வாமித்திரரையே நெருங்குதல்.

என்றலுமீ தழகிவ்வா றெய்தென் றன்பன்
ஏகினன்கா லவனிசைத்த விறைவர்க் கந்த
மன்றறகக் குழறந்தங் கொவ்வோர் சேயை
வழங்கியபின் னிவுளியொடு மாதை வேள்வி
வன்றிறல்சேர் இருசதமா விற்க வாட
வயினனடைந் திப்புவிமேல் வாயா தேதம்
வென்றதவக் கவுசிகனுக் கிவண்முன் போல
விடுக்கிலவன் மகிழ்ந்திடும்பின் மீட்டி டென்றான்.

(இ-ள்) என்றலும்-என்று (மாதவி) சொன்னவுடன், அன்பன்-கருடன், அழகு-[அவள் சொன்ன உபாயம்] நேர்த்தியானது, இவ்வாறு எய்து-இந்தப்படியே நீ குதிரைகளையடைவாய், என்று ஏகினன் - என்றுகூறிச் சென்றான் : (பிறகு) காலவன்-காலவர், இசைத்த இறைவர்க்கு-மேற்சொன்ன (காசிகோசல போச) மன்னர்களாகிய மூவர்க்கும், அந்த மன்றல் தக குழல் தந்து-அந்த மண வேள்விக்கேற்ப மாதவியைக் கொடுத்து, அங்கு-அவர்களிடத்து, ஒவ்வோர் சேயை வழங்கியபின்-(ஒவ்வொருவர்க்கு) ஒவ்வொரு குழந்தையை அவள் பெற்றுக்கொடுத்த பின்னர், இவுளியொடு-அம்மூன்று மன்னரிடத்தும் தான் பெற்றுக்கொண்ட அறுநூறு குதிரைகளோடு, வன்திறல் இருசதமா-வலிய பராக்கிரமம் பொருந்திய இருநூறு குதிரைகளை, சேர்-(மேலும்) சேர்க்க வேண்டி, மாதை-மாதவியை, வேள்வி விற்க-மணஞ்செய்து (அதன் மூலம்) விற்பதற்கு, வாட-(இயலாமல்) வருந்தியிருப்ப, (அப்போது) வயினன் அடைந்து-கருடன் (காலவரிடம்) வந்து, இ புவி மேல் வாயாது-இந்தப்பூமியில் இத்தகைய இருநூறு குதிரைகள் கிடைக்காது : (ஆகவே நீர்) ஏதம் வென்ற தவக் கவுசிகனுக்கு-துன்பங்களைச் செயித்த தவத்திற் சிறந்த விசுவாமித்திரனுக்கே, இவள்-இந்த மாதவியை, முன்போல விடுக்கில்-முன்னர் (அந்த மூன்று மன்னர்களிடத்தும் சுல்கங் கூறிக் கொடுத்தது) போலக் கொடுப்பீரானால், அவன் மகிழ்ந்திடும்-அந்த விசுவாமித்திரன் சந்தோஷமடைவான் : பின் மீட்டிடு - பின்பு (அவரிடமிருந்து) அவளை மீண்டும் பெற்றுக்கொள்வாய், என்றான்-என்று கூறினான் ; (எ.று).

கருடன் இருநூறு குதிரைகள் இப்பூமியில் கிடைக்காது என்று சொன்னதற்கு இங்கு அறியவேண்டிய விவரம்:-முற்காலத்தில் ரிசீகர் என்பவர் காதியின் புத்திரியாகிய ஸத்யவதியென்பவளை மனைவியாக வரித்தார். அப்பொழுது அந்தக் காதி ரிசீகரைநோக்கி 'எனக்கு நீர் ஒருகாது பசுமைநிறமுள்ளவைகளும் சந்திரனுக்கு நிகரான காந்தியுள்ளவைகளுமான ஆயிரம் குதிரைகளைக் கொடுக்க வேண்டும்' என்று சொன்னான். ரிசீகரும் அப்படியே ஆகட்டும் என்று சொல்லிவிட்டு வருணனிடம் சென்று அச்வதீர்த்தத்தில் குதிரைகளையடைந்து அரசனுக்குக் கொடுத்தார். அரசன் புண்டரீகம் என்கிற யாகம் செய்து அவைகளைப் பிராம்மணர்களுக்குக் கொடுத்தான். அப்பொழுது அந்தப் பிராம்மணர்களிடமிருந்து காசி கோசலபோச நாட்டரசர்கள் ஒவ்வொருவரும் இருநூறு இருநூறு குதிரைகளை விலைக்கு வாங்கி அடைந்தார்கள். ஓட்டிச் செல்லப்பட்ட நானூறு குதிரைகளும் விதஸ்தையென்னும் ஆற்றைக் கடக்கும்போது அதனால் இழுத்துக்கொண்டு போகப்பட்டன. இவ்விதமானதால் அடையமுடியாத அக்குதிரைகளை இனி ஓரிடத்திலும் பூமியில் அடைதற்கு இயலாது என்றான் கருடன். எனவே, விச்வாமித்திரருக்கு அறுநூறு குதிரைகளோடு மற்ற இருநூறு குதிரைகளுக்காக மாதவியை அவரிடம் ஒப்புவிக்கும்படி கருடன் காலவரிடம் கூறினான் என்பது. குழல் - குழலையுடையாளுக்குச் சினையாகுபெயர். வாயாது - வினைமுற்று. மகிழ்ந்திடும் - செய்யுமென்முற்று. மீட்டிடு - முன்னிலையேவல். (62)

63. விச்வாமித்திரர் அறுநூறு குதிரைகளையும் மாதவியையும் பெற்று, அவளிடம் பிள்ளையைப் பெற்றபின் அவளைத் திரும்பவும் காலவரிடம் கொடுக்க, அவன் அவளை யயாதியிடம் சேர்ப்பித்துத் தவஞ்செய்யப் போதல். இக் கதையின் மூலம் நாரதர் துரியோதனனைக் கழறிய சொல் காப்பாற்றச் சொல்லித் தெருட்டல்.

கேட்டபரி யறுசதமீந் திருநூ றுக்கா
    கிளிமொழியை யளிப்பமுனி கிருபை செய்தவ்
வாட்டங்கண் டனைப்புணர்ந்தா னவளோர் மைந்தன்
    ஈழங்கியபின் கணவனுழை வந்தாள் அன்னோன்
காட்டினிற்புக் கருந்தவஞ்செய் திருந்தான் தூயோர்
    கழறியசொற் கெதிர்மறுத்தல் கடனே மன்ன!
நாட்டிலவர்க் கருத்தமளித் துய்தி யென்ன
    நண்பனைப்பார்த் தரவுயர்த்தோன் நகைத்துப்பின்னும்.

(இ-ள்) கேட்ட பரி அறுசதம் ஈந்து-விசுவாமித்திர முனிவன் [குருதட்சிணையாகக்] கேட்ட அறுநூறு குதிரைகளையும் கொடுத்து, (எஞ்சிய) இருநூறுக்கா-இருநூறு குதிரைகளுக்காக, கிளிமொழியை-கிளிபோன்ற பேச்சினிமையையுடைய மாதவியை, அளிப்ப-காலவர் கொடுக்க, முனி கிருபைசெய்து-விசுவாமித்திரர் அவைகளைக் கருணையோடு அங்கீகரித்து, அ வாள் தட கண் தனைப் புணர்ந்து - அந்த ஒளிபொருந்திய விசாலமான கண்களையுடைய மாதவியைக்கூடி, அவள் ஓர் மைந்தன் வழங்கிய பின்-அந்த மாதவி ஒரு பிள்ளையைப் பெற்றுக்கொடுத்த பின்னர், (விசுவாமித்திரன் திரும்பவும் காலவரிடம் கொடுக்க அவள்) கணவன் உழை வந்தாள்-காலவரிடம் வந்து சேர்ந்தாள்: அன்னோன்-அவன், [அவளை யயாதியிடம் கொணர்ந்து விட்டு] காட்டினில் புக்கு-கானகஞ்சேர்ந்து, அருந்தவம் செய்திருந்தான்-அரியதவத்தை மேற்கொண்டிருந்தான் : [எனவே] மன்னா!— துரியோதன ராசனே !, தூயோர் கழறிய சொற்கு-பெரியோர்கள் சொன்ன வார்த்தைக்கு, எதிர்மறுத்தல் கடனோ ?-எதிர்த்து ஏற்காது மறுத்தல் நியாயமாகுமோ ? (ஆகாது) [ஆகவே] அவர்க்கு-அந்தப் பாண்டவர்க்கு, நாட்டில் அருத்தம் அளித்து-(உனது) நாட்டினில் பாதிகொடுத்து, உய்தி-வாழ்ந்துபோவாயாக, என்ன-என்று (நாரதன்) கூறிமுடிக்க, அரவுயர்த்தோன் - பாம்புக்கொடியையுயரத் தூக்கிய துரியோதனன், நகைத்து-பரிகாசச் சிரிப்புச்செய்து, நண்பனைப் பார்த்து-கர்ணனைக் குறிப்பாகப் பார்த்து, பின்னும்-மேலும், (எ.று.) 'பன்னும்' என மேலைக்கவியிற் குளகமாய்த் தொடரும்.

விச்வாமித்திரன் அறுநூறு குதிரைகளைப்பெற்று மற்ற இருநூறு குதிரைகளுக்குப் பதிலாக மாதவியையேற்று அவளிடம் அஷ்டகனென்னும் பிள்ளையைப்பெற்று அவளைத் திரும்பவும் காலவரிடம் கொடுத்தார். காலவரைக் கணவன் என்றது-அவனிடம் தன் மகளை (மாதவியை) யயாதியொப்புவித்தமையால் என்க. 'தூயோர் கழறிய சொற்கு எதிர்மறுத்தல் கடனாகாது' என்றவிடத்து வேற்றுப் பொருள்வைப்பணி. அருத்தம் - அர்த்தம் : பாதி : வடசொல். உய்தி-முன்னிலைவியங்கோள். நண்பனைப்பார்த்து நாரதனை நகைத்தது-இவன் நகைப்பை ரசிப்பவன் அவனே எனப்பெறவைத்தற்கு. ஈண்டு 'வறு மொழியாளரொடு...நெடுநகைபுக்கு' என்ற சிலப்பதிகாரவடி நினைக. கிளிமொழி-உவமைத்தொகையன்மொழி. வாட்டடங்கண்-அடையடுத்த சினையாகுபெயர். கடனோ, ஓ—எதிர்மறை. (63)

வேறு.

64. **துரியோதனன் முனிவர்களை நிஷ்டூரமாகப் பேசியனுப்புதல்.**

பன்னு மாமுனிவர் காளெ மக்குமதி
படரு மாறுறுதி பகருமின்
என்ன வேண்டியுமை யீண்டி லேம்விதியை
யாவர் வென்றுமதி யாறிரு
மன்னி னுருலக மைவ ரெய்ததிரு
மால்ப றித்துதவு வன்கதி
துன்னு மாதவ மியற்று வானுமது
சூழல் போமினெனச் சொல்லினான்.

(இ-ள்) பன்னும் - (துரியோதனன்) கூறுவான்: 'மா முனிவர் காள்! - சிறந்த முனிவர்களே! எமக்குமதி படருமாறு-எங்களுக்கு நல்லபுத்தியுண்டாகும்படி, உறுதி பகருமின் - நல்லுபதேசம் செய்யுங் கள், என்ன-என்று, வேண்டி-பிரார்த்தித்து, உமை-உங்களை, ஈண்டி லேம் - இங்கே வரவழைக்கவில்லை: விதியை - [அவரவர்க்குள்ள] தலைவிதியை, வென்று-செயித்து, மதியால்-தமது புத்தி சாதுரியத் தால், திரு மன்னினர்-செல்வமடைந்தவர், யாவர்-எவருளர்? (ஒரு வருமிலர்): ஐவர்-பஞ்சவர். உலகம் எய்த-நிலவுலகாட்சியைப்பெற, திருமால்-கிருஷ்ணன், பறித்து-(எங்களிடமிருந்து) கவர்ந்து, உதவு வன்-(அவர்களுக்கு) வழங்குவான்: (ஆகவே நீங்கள்) கதி துன்னும் மா தவம் இயற்றுவான் - நல்ல மோட்சத்தையடையும் வழியான சிறந்த தவத்தைச் செய்யும் பொருட்டு, நுமது சூழல் போமின்- உங்களது ஆசிரமங்களுக்குச் செல்லுங்கள், என-என்று, சொல் லினான்-கூறினான்; (எ.று.)

முனிவர்களை நோக்கி 'உங்களை யார் இங்கே புத்திகூற அழைத் தது: விதியை மதியால் வென்று செல்வமடைந்தவரிலர். அந்தக் கபடனான கிருஷ்ணன் என் நாட்டினைப் பறித்துப் பாண்டவர்க்கு வழங்கமுயலுகிறான்: நீங்கள் நற்கதிபெறத் தவமியற்ற உங்கள் ஆசிர மங்களுக்குச் செல்லுங்கள்'' என்று துரியோதனன் பேசிய பேச்சில் அவனது கயமை புலப்படுதல் காண்க. ஈண்டுதல்-நெருங்குதல், அண்டுதல்: இங்கே அழைத்தல் என்றபடி. மதி-கூரிய அறிவு: சூழ்ச்சியுமாம். 'பறித்து உதவுவன்' என்றவிடத்து 'அதற்கு யான்

எளியனே?' என்பது குறிப்பெச்சம். இயற்றுவான் - வினையெச்சம்.

இதுமுதல் பதினொரு கவிகள்—பெரும்பாலும் ஒன்று மூன்று ஐந்தாஞ்சீர்கள் மாச்சீர்களும், இரண்டு நான்கு ஆறுஞ்சீர்கள் விளங்காய்ச் சீர்களும் ஏழாவது விளச்சீருமாகிய கழிநெடிலடி நான் கொண்ட எழுசீராகிய விருத்தங்கள். (64)

65. தனக்கு இனிமையாவதைச் செய்யும்படி கிருஷ்ணன் துரியோ னுக்குக் கூறுதல்.

முனிவர் மூவரிக ழரசு மீதுகொளு
முனிவு கங்கைமக னாற்றவும்
வனச நாபனகி துவச வீணில்பல
மகிப ரொக்கல்குல மொடுவரு
தினியெ லாமமரி லழிவ தோமகிழ்
சிறந்து யர்ந்துபுவி வாழ்வதோ
இனிய தியாவதது புரிதி யென்றிருகை
யேந்தி னனுலகை மாந்தினன்.

(இ-ள்) மூவர் முனிவர் - மூன்று முனிவர்களையும், இகழ் அரசு மீது - இகழ்ந்து பேசிய துரியோதனன்மேல். கங்கை மகன் - கங்கா புத்திரனாகிய வீடுமன், ஆற்றவும் - மிகுதியாக, முனிவு - வெறுப்பை, கொளும் - கொண்டான் ; (அப்போது) வசன நாபன் - பத்மநாபனா கிய ஸ்ரீ கிருஷ்ணன், (துரியோதனனை நோக்கி) அகி துவச - சர்ப் பக்கொடியுடைய துரியோதனனே ! பலமகிபர் - பல மன்னர்கள், ஒக்கல் - சுற்றத்தார், குலமொடு - வமிசத்தோடு, வருதினி எலாம் - படைகளெல்லாம், அமரில் - (நிகழப்போகும்) போரில், வீணில் அழிவதோ - வீணாக (யாதொரு பயனுமின்றி) அழிந்து போவதோ? (அன்றி) மகிழ்சிறந்து - மகிழ்ச்சி மிகக் கொண்டு, உயர்ந்து - மேலோங்கி, புவி வாழ்வதோ - பூமியில் நல்வாழ்ச்சி பெறுவதோ? (இவ்விரண்டனுள்) இனியது யாவது அது புரிதி - இனிமை கொடுப் பது எதுவோ அதனைச் செய்வாய், என்று - என்று கூறி, உலகை மாந்தினன் - [மகாபிரளயகாலத்தில்] இந்த நிலவுலகமுழுவதையும் உண்டவனாகிய ஸ்ரீ கிருஷ்ணன், இருகை ஏந்தினன் - தனது இரண்டு கைகளையும் நீட்டி யாசித்தான் ; (எ.று.)

உலகங்களையெல்லாம் தனதாகக்கொண்டு உண்டு காத்தவன் இப்போது உலகுக்காக (நாட்டுக்காக) கைநீட்டியிரந்தான் என்றுர். முனிவு - வெறுப்பு, கோபம், கொளும் - செய்யுமென்முற்று. வனசம்-தாமரை. புரிதி - முன்னிலை வியங்கோள். ஈற்றடியில் **பிராசம்** காண்க. (65)

66. துரியோதனன் கோபத்துடன் கூறுதல்.

இரக்க வும்மனதி ரங்கி லாதரசி
யாவர் மாட்டுதம துள்ளம்வைத்
திருக்கு மன்பினவ ராற்று செய்கையற
னென்ப ருண்மையெவர் செப்புவோர்
செருக்க ளத்தறமு மல்ல தானவொரு
செய்கை யுந்தெரியு மெனவுருத்
துரைக்க வண்டுளப மௌலி யைவர்தம
துரிமை நல்கமன தில்லையேல்.

(இ-ள்) இரக்கவும் - கிருஷ்ணன் யாசிக்கவும், அரசு-துரியோதனன், மனது இரங்கிலாது - மனம் நெகிழாது, (கூறுவான்): 'யாவர்' மாட்டு - எவரிடத்து, தமது உள்ளம் வைத்திருக்கும் அன்பின் - தங்களது மனதைச் செலுத்துகின்ற அந்த அன்பின் காரணமாக, அவர் ஆற்றுசெய்கை - அவர்கள் செய்கின்ற காரியங்களெல்லாம், அறன் என்பர் - தருமச்செயல்களென்பர் : (இது உலகியற்கை) : உண்மை செப்புவோர் எவர் - நிஜமானதைச் சொல்லுவோர் எவருளர்? (ஒருவருமிலர்) : (ஆகவே) செருக்களத்து - போர்க்களத்தில், அறமும் - தருமச் செய்கையும், அல்லதான ஒரு செய்கையும் - அதருமமானதோர் செய்கையும், தெரியும் - விளங்க வரும், என-என்று, உருத்து உரைக்க - கோபித்துக் கூற, (அதுகேட்டு) வண் துளப மௌலி - வளப்பம் பொருந்திய திருத்துழாய் மாலையைத் தலையிற் சூடியுள்ள கிருஷ்ணன், ஐவர் தமது - பஞ்சபாண்டவர்களுடைய, உரிமை - உரியதாகிய நாட்டை, நல்க - கொடுக்க, மனது இல்லையேல் - உளக் கருத்து இல்லையானுல்; (எ.று.) ''அருத்தம்......அளித்தி'' என மேலைக்கவியில் குளகமாய்த் தொடரும்.

நட்பின் காரணமாகத் தம்மால் அன்பு செய்யப்பட்டவர் எதைச் செய்தாலும் அதை அறச்செயல் என்பர் : உண்மையைச் சொல்லு

பவர் யாவருளர் ? போர்க்களத்தில் தர்மாதர்மம் காணலாம் என்று துட்ட சதுட்டரிற்றலையாய துரியோதனன் கூறுவது ரசிக்கத்தக்கது. இலக்கியத்தில் வரும் இத்தகைய இடங்களை "Bathos" என்பர் ஆங்கிலத்தில். துளபமௌலி - அடையடுத்த ஆகுபெயர். ஐவர் - தொகைக்குறிப்பு. (66)

67. கண்ணன் துரியோதனனை வேண்ட அவன் மறுத்தல்.

அருத்த மென்னினும் அளித்தி யென்றனன்
அதற்கு மன்னவன் மறுத்தலும்
கருத்த னைந்துநக ரேனும் நல்கிபுகழ்
கைக்கொள் ளென்னவது கைக்கொளா
துரைத்த லிங்குதவ வேணு மோவவ
ரில்லொன் றளிக்கினும் வெறுப்பரோ
விரித்து ரைத்திடுவ தென்கொல் நீயிதனை
விடுக வென்றவன் விளம்பினான்.

(இ-ள்) (கண்ணபிரான்) அருத்தம் என்னினும் - பாதி நாடாயினும், அளித்தி என்றனன் - கொடுப்பாயாக என்று வேண்டினான்: அதற்கும் - அந்த வேண்டுகோளுக்கும், மன்னவன் - துரியோதனன், மறுத்தலும்—, கருத்தன் - (யாவர்) மனத்திலுமிருக்கும் பிரான், ஐந்து நகரேனும் - ஐந்து ஊர்களேனும், நல்கி - கொடுத்து, புகழ் கைக்கொள் என்ன - கீர்த்தியைப் பெறுவாயாக என்றுரைப்ப, அது கைக்கொளா - அதனையும் பெற விரும்பாது, உரைத்தல் - நீ சொல்லியதை, இங்கு - இப்போது, உதவ வேணுமோ - (அவர்களுக்குக்) கொடுக்க வேண்டுமோ? அவர் - அந்தப் பாண்டவர்கள், இல் ஒன்று அளிக்கினும் வெறுப்பரோ - ஒரு வீட்டைக் கொடுத்தாலும் (அதனை வேண்டாமென்று) வெறுத்திடுவார்களோ? (மாட்டார்களென்றபடி): விரித்து உரைத்திடுவது என் - விவரித்துச் சொல்லுவதில் என்ன பயன்? (ஒன்றுமில்லை) : நீ இதனை விடுக - நீ (என் பக்கல் சிறிதேனும் இடம் பெறும்) இக்கருத்தை (இனி) விட்டொழிவாயாக, என்று அவன் விளம்பினான் - என்று அத்துரியோதனன் கூறினான்; (எ.று.) கொல் - அசை.

'கருத்தன்' என்பதில் சர்வவியாபகத்வமும், அளித்தி, நல்கு, என்பவற்றில் சௌலப்பியமும் தோன்றுதல் காண்க. அளித்தி, கைக்கொள் - முன்னிலை வியங்கோள். விடுக - முன்னிலையேவல், (67)

68. கண்ணன் துரியோதனனுக்கு அறிவு கூறுதல்.

தந்தை காதலுறு தன்மை கண்டுசிறு
　　தாய்ப யந்தவனு சர்க்குபார்
தந்த வீடும னிருக்க விங்குரிய
　　தார ணிக்குளொரு மரபிலே
வந்து ளார்கள்பெற வைந்து மாநகர்
　　வழங்கி டா'தொழியின் முன்சொலும்
உந்தன் மாண்பரசு மென்ன தாமென
　　வுரைத்து ளானென துளத்துளான்.

(இ-ள்) தந்தை - தனது பிதா, காதல் உறு - ஆசை மிகுந்த, தன்மை - தன்மையை, கண்டு - பார்த்து, இளைய தாய் பயந்த அனுசர்க்கு- (தனது) சிறிய (மாற்றுத்) தாய் பெற்ற புதல்வரான தனது தம்பிமார் இருவருக்கு, பார் தந்த - இந்தக் குரு நாட்டரசாட்சியைக் கொடுத்த, வீடுமன் இங்கு இருக்க - பீஷ்மன் இவ்விடத்திலே (இப்பொழுது)இருக்க, உரிய தாரணிக்குள் - (பழைமையாகப்) பாத்தியதையையுடைய பூமியில், ஒரு மரபிலே - ஒரே குலத்திலே, வந்துளார்கள் - உடன்பிறந்துள்ள பாண்டவர்கள், பெற - அடையும்படி, ஐந்து மாநகர் வழங்கிடாது ஒழியின் - ஐந்து பெரிய ஊர்களையாயினும் கொடாமல் விடுவாயானால், முன் சொலும் - முன்னர் நீ கூறியுள்ள வார்த்தையும், உந்தன் மாண்பும் அரசும் - உன்னுடைய பெருமையும் அரசாட்சியும், என்னது ஆம் - என்ன நீதியுடையதாம்? (நீதி சிறிதுமில்லாததாம்), என - என்று, எனது உளத்து உளான் - என்னுடைய மனத்தினில் கோயில் கொண்டுள்ள கண்ணபிரான், உரைத்துளான் - மொழிந்தனன்; (எ.று.).

தந்தை - சந்தனு. இளைய தாய் - பரிமளகந்தி. அனுசர் - இரு தம்பியர் : சித்திராங்கதனும் விசித்திரவீரியனும். பீஷ்மன், தந்தைக்குப் பரிமளகந்தியை மணஞ்செய்வித்தற்பொருட்டு, தான் மணஞ்செய்துகொள்வதில்லையென்றும், இராச்சியத்தைத் தனது தம்பிக்கே கொடுப்பேனென்றும், தேவர்கள் முன்னிலையில் பயங்கரமான சபதஞ்செய்து, அந்தப் பரிமளகந்தியைத் தந்தைக்கு மணஞ்செய்வித்து, பின்பு அவளுக்குப் பிறந்த சித்திராங்கதன், விசித்திரவீரியன் என்பவர்க்கே முன்னைய வாக்குப்படி அரசாட்சியைக் கொடுத்தானென வரலாறு அறிக. 'நகர்' என்பதன் பின் உம்மை தொக்கது. 'மாண்பு' என்பதனோடு உம்மை கூட்டிக்கொள்க. ஆம் - ஆகும்

என்பதன் தொகுத்தல். ஈற்றடியில் சொன்னயம் காண்க. 'என துளத்துளான்' என்றதால் ஆசிரியரின் காழ்த்த கிருஷ்ணபக்தியை யுணரலாம். (68)

69. **பீஷ்மதுரோண திருதராட்டிரர் துரியோதனனுக்கு அறிவு கூற, துச்சாதனன் கூறலுறல்.**

மாய னுன்னை நக ரைந்தி ரக்கவும்
வழங்கி லாய்குரவர் வாசகம்
ஞாய மென்பது முணர்ந்தி லாய்பொருது
ஞாட்பு ணர்ந்தவரி லோதுவாய்
தீயர் சொற்கிசையு முன்ற னிச்சைப்படி
செய்தி யென்றுகுரு வீடுமன்
ஏய தந்தைமுத லோரு ரைக்கவர
சிளவல் வெம்பியிது கழறுவான்.

(இ-ள்) மாயன் - கிருஷ்ணன், உன்னை - [அகங்கரிக்கும்] உன்னை, நகர் ஐந்து இரக்கவும் - ஐந்து ஊர்களை யாசிக்கவும் வழங்கிலாய் - நீ கொடுக்காதவனாய் இருக்கிறாய்: (மற்றும்) குரவர் வாசகம் - பெரியோர்களுடைய உறுதிமொழிகள், ஞாயம் என்பதும் - நியாயமானவையென்பதையும், உணர்ந்திலாய் - அறியாதவனாய் இருக்கிறாய்: ஞாட்பு - போரினை, பொருது - செய்து உணர்ந்தவரில் - அனுபவம் தெரிந்தவர்போல, ஓதுவாய் - உபதேசஞ்செய்வாய்: (ஆகவே) தீயர் சொற்கு இசையும் - கொடிய துட்டர்களுடைய மொழிக்கு உடன்படும், உந்தன் இச்சைப்படி - உன்னுடைய விருப்பப்படி, செய்தி - (நீ) காரியம் செய், என்று - குரு, துரோணன், வீடுமன் - பீஷ்மாசார்யன், ஏய தந்தை முதலோர் - பொருந்திய திருதராட்டிரன் முதலானவர், உரைக்க - (வெறுத்துச்) சொல்ல, (அப்போது) அரசு இளவல் - துரியோதனன் தம்பியாகிய துச்சாசனன், வெம்பி - கோபித்து, இது கழறுவான் - இந்த வார்த்தைகளைச் சொல்லலானான்: (எ.று.) அவன் கூறியவற்றை மேலைக் கவியிற் காண்க.

தீயர் - துட்டசதுட்டரில் துரியோதனன் நீங்கலாக மூவர்: கர்ணன், சகுனி, துச்சாசனன் ஞாட்பு - போர். வழங்கிலாய், உணர்ந்திலாய் - முன்னிலையெதிர்மறை. ஓதுவாய் - முன்னிலைவினை முற்று. செய்தி - முன்னிலையேவல். ஞாயம் - நியாயம் என்பதன் போலி. (69)

70. **துச்சாசனன் கூறியது கேட்டு அவன் தந்தையும் தமையனும் சபையினின்று போதல் கண்டு கண்ணபிரான் கூறுதல்.**

மால டைந்ததுமி ருந்த சீரியர்கள்
மனமு நாடிலுனை மற்றவன்
பால ளிக்குநினை வாமெனத் தரணி
பால னோடரவ கேதனன்
ஏலு மவ்வவை தணத்தல் கண்டுகணி
லானை மாமருதி றுத்தவன்
ஆல மன்னமக னகலு மாறகலுன்
அறிவு நன்றெனவி ளம்பலும்.

(இ-ள்) மால் அடைந்ததும் - கிருஷ்ணன் தூதனாக வந்தமையும், இருந்த சீரியர்கள் - சபையிலிருந்த பெரியோர்களின், மனமும் - கருத்துக்களும், நாடில் - ஆராய்ந்து பார்த்தால், உனை - ராசனான உன்னை, மற்றவன் பால் - (பகைவனாகிய) தருமனிடத்து, அளிக்கும் நினைவாம் - ஒப்படைக்கும் எண்ணத்தினாலாகும், என - என்று துச்சாசனன் கூற, (அதுகேட்ட) தரணி பாலனோடு - திருதராட்டிரனோடு, அரவகேதனன் - சர்ப்பக்கொடியையுடைய துரியோதனனும், ஏலும் அ அவை தணத்தல் கண்டு - பொருந்திய அந்தச் சபையைவிட்டு நீங்குதலைப் பார்த்து, மாமருது இறுத்தவன் - பெரிய மருத மரங்களைச் சாய்த்த கண்ணபிரான், கணிலானை - குருடனாகிய திருதராட்டிரனை (நோக்கி), ஆலம் அன்ன மகன் அகலும் ஆறு - விஷத்தையொத்த (உன்) பிள்ளை துரியோதனன் சபையைவிட்டுப் போனதுபோலவே, அகல உன் அறிவு (அவனைத் தொடர்ந்து) போகின்ற உன்னுடைய புத்தியும், நன்று என-நேர்த்தியானதே என்று, விளம்பலும் - சொல்லவும்; (எ.று.)

அவன் பாலளித்தல் - தருமனிடம் கைதியைப்போல் துரியோதனனை யொப்படைத்தல் என்ற குறிப்பினது. இருவரும் சபையை விட்டு நீங்கியது துச்சாசனன் கூறிய சொல் பொறுக்காமையால் வெறுப்பும் சினமும் கொண்டு என்க. கொடிய விஷம் போன்ற துட்டனான துரியோதனனைப் பின்தொடர்ந்து குருடனாகிய தந்தையும் சென்றதுகண்டுகண்ணபிரான் 'தந்தையும் புத்தி தடுமாறுவதே!' என இரங்கியிகழ்ந்தவாறு. நன்று - பிறகுறிப்பு. ஆலம் - விஷம். ஆலகாலம் எனின், அது சிவபிரான் கண்டத்து அடக்கும் சிறப்புப் பெற்றதாதலின், அந்தக் கொடியனுக்கு ஒப்பாகாது என்க'. தணத்

தல் - நீங்குதல். கணிலான் - கண்ணிலான் என்பதன் தொகுத்தல். அரவகேதனன், ஆலமன்னமகன் என்பன துரியோதனனின் கொடுமையை விளக்கவந்த பெயர்கள் என்னலாம். (70)

71. கண்ணன் இறுதியாகத் துரியோதனனைப் போர்க்குச் சபதஞ் செய்துதர வேண்டுதல்.

திருக்கி லாதவ னழைக்க மீண்டுமுறு
　　செம்ம லோடுமரி யாவருஞ்
செருக்கி வாழநினை யென்ன வெம்பிபுவி
　　தீர ருக்குரிய தென்னலும்
செருக்க ளத்திலமர் செய்வ தற்குறுதி
　　செங்கை நல்குகென வங்கெதிர்
இருக்கு மாமணிசெய் தூணை மோதியிகழ்
　　வெய்த மன்னர சியம்புமே.

(இ-ள்) (கண்ணன் கூறியதைக்கேட்டு) திருக்கு இலாதவன் - மாறுபாடில்லாத திருதராட்டிரன், அழைக்க - (தான் மீண்டதோடு) துரியோதனனையும் கூப்பிட, (அதன்படி) மீண்டு உறும் செம்மலோடும் - திரும்பிச் சபைக்கு வந்த துரியோதனனோடும், அரி - கண்ணபிரான், யாவரும் செருக்கி வாழ நினை என்ன - அனைவரும் தழைத்து [நல்வாழ்வு] வாழும்படி எண்ணங்கொள்வாய் என்று சொல்ல, (அது கேட்ட துரியோதனன்) வெம்பி - கோபித்து, புவி தீரருக்கு உரியது - பூமி வீரர்களுக்குரிய பொருளாகும், என்னலும் - என்று கூறியவுடன், (கண்ணபிரான் அங்ஙனமாயின்) 'செருக்களத்தில் - போர்க்களத்தில், அமர் செய்வதற்கு - போரிடுவதற்கு, உறுதி- சபதத்தை, செங்கை நல்குக-அழகிய கை தட்டிக் கொடுப்பாயாக', என - என்று கேட்க, மன் அரசு - அரசர்க்கரசனாகிய துரியோதனன், அங்கு-அந்தச் சபாமண்டபத்தில், எதிர் இருக்கும் - தனக்கு எதிரிலே யிருந்த, மா மணி செய் தூணை - சிறந்த இரத்தினங்களால் (செய்யப்பட்ட) கம்பத்தை, மோதி-அறைந்து, இகழ்வு எய்த இயம்பும் - (தனக்குப்) பழிநேரும்படி (சிலவார்த்தைகளைச்) சொல்லினான் : (எ.று.)

'புவி தீரருக்குரியது'— நீ சொல்லுகிறபடி பாண்டவர்கள் உரியவராயினும், நாங்கள் வீரர்களாதலால் நாங்களே ஆளத்தக்கவரென்பதாம். துரியோதனன் பொய்யனாதலின், அவன் வார்த்தையைக்

கண்ணபிரான் நம்பாமல் அவனைக் கையால் தன் கையை அடித்துச் சபதஞ்செய்து தரும்படி கேட்டருளினன் என்பதாம். தூணை மோதியது - சினமிகுதியாலென்க. நிலை - முன்னிலையியங்கோள் : (71)

72-73. துரியோதனன் பலவாறு பழித்துரைத்தல்.

இரண்டு கவிகள்—ஒரு தொடர் :

நிரைது ரந்தளை க வர்ந்து கட்டுபடு
நின்ம திக்கொடுகை நேரெனு
புரைது றந்தவெனை வினவ னல்லழகு
போர்க்கி பம்புகில் புறங்கொடா
அரிபு றந்தரினு மைவ ருக்கமரி
லஞ்சி டேன்மனைவி யறுவைதொட்
டுரித ரும்பொழுதி லாத வன்றிறலும்
இன்ற டைந்தனர்க ளோவேனு.

(இ-ள்) நிரை துரந்து - பசுக்கூட்டங்களை மேய்வதற்காக ஓட்டிச் சென்று, அளை கவர்ந்து - வெண்ணெயைத் திருடித் தின்று, கட்டுபடு - ஆய்ச்சியர் கையில் தாம்பினால் கட்டுண்டு கிடந்த, நின் மதிக்கொடு- உன்னுடைய மந்த புத்தியைக்கொண்டு, கை நேர் எனு—கையையடித்துச் சபதஞ்செய்துதா என்று, புரை துறந்த எனை - குற்றம் சிறிதுமில்லாத என்னைப் பார்த்து, வினவல் - (நீ) கேட்குதல், நல் அழகு - மிக்க அழகுதான்! (அழகன்று) போர்க்கு இபம் புகில் - போரிடுதற்கு யானை முற்படுமாயின், புறங்கொடா அரி புறந்தரினும் - (என்றைக்கும்) பிற்காலிடாத சிங்கம் முதுகு காட்டிப் பிற்காலிட்டாலும், அமரில் - போரில், ஐவருக்கு - பஞ்சவர்க்கு, அஞ்சிடேன் - பயப்படமாட்டேன் : மனைவி அறுவை தொட்டு - (அவர்களது) மனைவியாகிய திரௌபதியின் ஆடையைக் கையால் தீண்டி, உரிதரும் பொழுது - துகிலுரிந்த காலத்து, இலாத வன்திறலும் - காணப்படாத வலிய பராக்கிரமமும், இன்று அடைந்தனர்களோ-இன்றைய தினம் பெற்றுவிட்டார்களோ? (பெற்றிருக்க முடியாது) எனு - என்று கூறி (எ.று.) இது ‘என்னை......உரைசெய்வதென்னை’ என மேலைக் கவியில் குளகமாய்த் தொடரும்.

அரசனாகிய என்னை ஆயனாகிய நீ இங்ஙனம் மதிப்பிட்டுக் ‘கை நேர்’ என வினவியது சிறிதும் தகாது என்றவாறு. மிருகேந்திரனாகிய சிங்கமொன்று யானைகள் பலவற்றிற்குப் பயப்படாமல் அவற்றை

எளிதில் வென்று அழித்தல்போல, ராஜராஜனு அவர்களை வென்று அழித்திடுவேனென்பதாம். இது எடுத்துக்காட்டுவமை. பாண்டவர்களது மனைவியை ஆடையைத் தீண்டியிழுத்து வந்து அவமானமுண்டாதற்குக் காரணமான வஸ்திராபஹரணத்தைச் செய்த காலத்தில் அந்தப் பாண்டவரைவரும் யாதொன்றுஞ்செய்ய முடியாமல் பக்கத்திலிருந்து பார்த்துக்கொண்டிருந்தவர்களன்றோ! அப்படிப் பட்ட வலியிலார்க்கு இப்போது திடீரென்று பலமும் பராக்கிரமமும் சேர்ந்துவிட்டனவோ எனத்துரியோதனன் பழித்துரைத்தானென்க. வினவல் - தொழிற்பெயர். அறுவை - ஆடைக்குத் தொழிலாகுபெயர். கொடு - கொண்டு என்பதன் தொகுத்தல். அடைந்தனர்களோ, ஓகாரம் - எதிர்மறை. (72)

73. ஐவர் தந்தையர்க ளாமொ ருத்திபெறு
மன்னை யர்மனைவி யாகுவாள்
சைவ லக்குழலொ ருத்தி யாமகித
லத்தி னுக்குரிய ராவராம்
உய்வ ரும்மவரொ டென்னை யிச்சபையி
லோர்கு லத்தரச னென்றுரை
செய்வ தென்னமதி யென்ன மைத்துனர்கள்
சிந்தை முற்றுமென வெண்ணியே.

(இ-ள்) தந்தையர்கள் ஐவர் ஆம் - (பாண்டவராகிய) இவர்களைப் பெற்ற பிதாக்கள் ஐந்துபேராம்: பெறும் அன்னையர் - பெற்ற தாய்மார்கள், ஒருத்தி (ஆம்) - ஒருத்தியாவளாம். சைவலம் குழல் ஓருத்தி - பாசிபோல்படர்ந்த கூந்தலையுடைய ஒருத்தி, மனைவியாகுவாள் ஆம் - பத்தினியாவளாம்: மகிதலத்தினுக்கு - பூமியையாளுதற்கு, உரியர் ஆவராம் - பாத்தியதையையடைந்தவராவார்களாம். உய்வு அரும் அவரொடு - தப்பிப் பிழைத்தலரிதாகப் பெற்ற அந்தப் பஞ்சவரோடு, என்னை - (ஒரு குற்றமுமில்லாத) என்னை, இ சபையில் - இந்தப் பேரவையில், ஓர் குலத்து அரசன் என்று உரைசெய்வது - (அவர்களோடு ஒப்ப) - ஒரு குலத்திற்பிறந்த அரசனென்று சொல்வது, என்னை - எப்படிப் பொருத்தமாகும்? மதி - (நீ) எண்ணி ஆராய்ந்து பார், என்ன - என்று (துரியோதனன்) கூற, (கண்ணபிரான்) மைத்துனர்கள் சிந்தை முற்றும் என எண்ணி - தனக்கு மைத்துனமுறைமையுடையரான பாண்டவர்களது எண்ணம் முடிவு பெறும் என்று எண்ணி; (எ.று.) 'போதலும்' என மேலைக்கவியில் இயையும்.

இதில் 'ஆம்' எனப் பலவிடத்தும் வந்த சொல் - அலட்சியந் தோன்ற நின்றது. தந்தையர் ஐவர் - யமன், வாயு, இந்திரன், அசுவிநீ தேவரிருவர் என்பவர். (பேருக்குத் தந்தையானவன் பாண்டு என்றபடி). அன்னையர் உண்மையில் குந்தி, மாத்திரி யென்ற இருவராயினும், 'ஒருத்தி'யென்றது - குந்தியுபதேசித்த மந்தி ரத்தைக் கொண்டே மாத்திரி அசுவிநீ தேவர்களை வரவழைத்தனளா தலின் என்க. சைவலம் - பாசி: கூந்தலுக்குப் பசுமையில் ஒப்பு. மதி - முன்னிலையேவல். தந்தையாகிய வசுதேவருக்கு உடன்பிறந் தவளாதலால், குந்தி கண்ணனுக்கு அத்தையாவள். அவள் பிள்ளை களாதலால், பாண்டவர்கள் கண்ணனுக்கு மைத்துனராயினர்: அத்தை மைந்தனை 'மைத்துனன்' என்பது, முற்காலத்து வழக்கம் போலும். (73)

74-75. இரண்டு கவிகள் - துரியோதனன் விதுரனைப் பழித்துக் கூறுதல்.

பொருந்த னுக்கைவிது ரன்னி ருக்கையரி
போத லும்மவை பொலிந்துற
இருந்த மன்னரெதிர் மன்னர் மன்னன்
விழியி ணைசிவந்தர சிழந்துமெய்
வருந்து மைவர்விடு தூத னுகியுமென்
மனையி லுண்டியை மறுத்தவன்
அருந்து மாறுநல் விருந்து செய்யுமுற
வார்க ளிக்கவென வறைகுவான்.

(இ-ள்) பொரும் தனு கை - போரிடுதற்கான வில்லினையேந்திய கைகளையுடைய, விதுரன் - விதுரனது, இருக்கை - மனைக்கு, அரி போதலும் - கண்ணபிரான் சென்றவுடன், அவை பொலிந்துற இருந்த மன்னர் எதிர் - சபை விளக்கமுறும்படி அமர்ந்திருந்த அரசர் களின் முன்னிலையில், மன்னர் மன்னன் - துரியோதனராசன், விழி யிணை சிவந்து-இரண்டு கண்களும் (சினத்தினால்) சிவப்பேற, அரசு இழந்து - (தமக்குரிய) அரசாட்சியை (சூதில்) இழந்து, மெய் வருந் தும் ஐவர் - உடம்பு வருந்தும்படி திரிந்த பஞ்சபாண்டவர்கள், விடு- அனுப்பிய, தூதனுகியும் - தூதுவனாயிருந்தும், என் மனையில் உண்டியை மறுத்தவன் - எனது வீட்டில் உணவு கொள்ளுதலை யொழிந்த கண்ணன், அருந்துமாறு - (இனிமையாக) உண்ணும்படி,

நல் விருந்து செய்யும் உறவு – நல்ல விருந்துபசாரஞ் செய்தற்குரிய சம்பந்தம், ஆர் களிக்க - எவர் மகிழ்வதற்காக, என - என்று நிந்தித்து, அறைகுவான் - (மேலும்) கூறுவானுயினுன், (எ.று.)

விதுரனுக்கும் கண்ணனுக்கும் நெருங்கின உறவில்லையென்பான் 'ஆர்'களிக்க என்ருன்- 'வில்விதுரன்' என்னும்படி விற்ருெழிலில் மிக சமர்த்தன் விதுரன் என்பதுணர்க. உண்டி - உண்ணப்படுவது- (74)

வேறு.

75. எந்தையொடுற் பவித்துமிற்றை யளவு மென்சோ
றினிதுண்டு மென்பகைஞர்க் கிதவே செய்தான்
சிந்தையிலன் பின்றிபுற நட்டொ ருத்தன்
செழும்பொருண்மேல் முழுவன்பு செலுத்துஞ் சூளை
தந்தமக ஞதலினுன் மரபிற் கேற்ற
தகையன்ருே வென்றிகழ்வு சாற்ற வாற்ரு
நிந்தைபுக ஞவினெடு முடிது ணிப்பன்
நின்னையென வெகுள்விதுர னின்னுஞ் சொல்வான்.

(இ-ள்) எந்தையொடு - என் தந்தையாகிய திருதராட்டிரனேடு, உற்பவித்தும் - (தம்பியாகப்) பிறந்திருந்தும், இற்றை அளவு இன்றைத்தினம் வரையில், என் சோறு இனிது உண்டும் - என்னுடைய சோற்றை இனிமையாகப் புசித்தும், என் பகைஞர்க்கு-என்னுடைய விரோதிகளாகிய பாண்டவர்க்கு, இதவு செய்தான் - நன்மையை விளைவித்தான் : சிந்தையில் அன்பு இன்றி - மனத்தினில் விசுவாசம் சிறிதுமில்லாமல், புறம் நட்டு - வெளிக்கு விசுவசிப்பது போல்காட்டி, ஒருத்தன் செழும்பொருள்மேல் - ஒருத்தனுடைய மிக்க செல்வத்தின்மேல், முழுவன்பு செலுத்தும் - முழுவிசுவாசத்தையும் செய்கின்ற, சூளை - வேசியானவள், தந்த மகனுதலின் - பெற்ற பிள்ளையாதலால், (இந்த விதுரன் செய்கை) மரபிற்கு ஏற்ற தகை அன்ருே - (அவன்) இழிகுலத்திற்கேற்ற தன்மையுடையதல்லவா, என்று இகழ்வு சாற்ற - என்று இழித்துக் கூற, ஆற்ரு - (இச் சுடுசொல்) பொருது, வெகுள் விதுரன் - கோபித்த விதுரன், 'நின்னை - உன்னை, நிந்தை புகல் நாவினெடு, (என்னைப்) பழித்துப்

பேசிய நாக்கிறேடு, முடி - (உன்) சிரசையும், துணிப்பன்-வெட்டி டவல்லேன், என - என்று கூறி, இன்னும் சொல்வான் - மேலும் கூறுவான் ; (எ.று).

பாண்டவர் ஐவர்க்குப் பாண்டு சொந்த தந்தையல்லனெனக் கீழ்க் கூறினறுதலால், விதுரனை அவர்கள் தந்தையோடு பிறவாமல் தன் தந்தையோடு மாத்திரம் பிறந்தவனுகப் பேசினன் துரியோதனன் என்க. இதவு - இதம் : நன்மை, 'இதவார் குலசேகரன்' (அழகர்கல: காப்பு, 3) சூலை-வேசி; ''பலர்ப்புணர்ந்து முயங்கு சூலையாய் முடிந்தனள்'' (உபதேச :உருத்திரா. 113) தாயின் குணம் மகனைத்தொடர்ந்தது என இழித்துப் பழித்தான்.

இதுமுதற் பதின்மூன்று கவிகள் - பெரும்பாலும் ஒன்று இரண்டு ஐந்து ஆருஞ்சீர்கள் காய்ச்சீர்களும், மற்றைய நான்கும் மாச்சீர்களுமாகிய கழிநெடிலடி நான்குகொண்ட எண்சீராசிரிய **விருத்தங்கள்.** (75)

76. விதுரன் தக்க மறுமொழி கூறி வில்லை முறித்துப் போகட்டுச் சபையை விட்டுச் செல்ல, அங்குள்ள அரசர் வருந்த, அப்போது வீடுமன் கூறலுறல்.

குருகுலத்தி லொருவன்மகற் கொன்ருனென்னுங்
கொடுமைதனக் கஞ்சியுயிர் கொடுத்தேனைவர்க்
குரியதுணை யாகிலெனைப் பழிப்பார் யார்போர்
உஞற்றிலனென் றடல்வில்லை யொடித்தில் புக்கான்
அரனரிவிற் கனையவிலை முறித்த தென்றே
அருச்சுனன்விற் கெவ்விலிநே ராவ னென்று
தரணிபரங் கிரங்கினர்மூ தாதை மன்னன்
றனை முனிந்தன் புடன்சிலசொல் சாற்று கின்ருன்.

(இ-ள்) குருகுலத்தில் - (சிறந்த) குருவமிசத்தில், ஒருவன் மகன் கொன்ருன் என்னும் - ஒருத்தன் புதல்வனைக் கொன்றுவிட்டானென்னும், கொடுமை தனக்கு அஞ்சி - பழிச்சொல்லுக்குப் பயந்து, உயிர் கொடுத்தேன் - (உன்னை) உயிரோடு வாழ விட்டுள்ளேன் : ஐவர்க்கு உரிய துணையாகில் - பாண்டவர்க்கு யான் (வெளிப்படையாகப் போரில்) உரிய உதவியாளனுகில், எனைப் பழிப்பார் யார்? - என்னை நிந்திப்பார் யாவருளர்? (எவரும் நிந்தியார்) : (எனினும் இன்று முதல்) போர் உஞற்றிலன்-போர் செய்ய மாட்டேன், என்று-

என்று சபதங்கூறி, அடல் வில்லை ஒடித்து - வலிய (தனது) வில் லினைமுறித்துப் போகட்டு, இல் புக்கான் - (சபையை நீங்கித்) தன் மனைக்குச் சென்றான்: (அப்போது) தரணிபர் - (ஆங்கிருந்த) அர சர்கள், அரன் அரி விற்கு அனைய விலை - சிவன் விஷ்ணு இவர் களுடைய வில்லுக்குச் சமானமாய் ஒத்த (தனது) வில்லை, (விதுரன்) முறித்தது என்னோ?- ஒடித்தெறிந்தது ஏனோ? (இனி) அருச்சுனன் விற்கு - அருச்சுனனுடைய காண்டீபத்துக்குச் சமானமான, எ விலி நேராவன் - வில்லையுடைய எந்த வீரன் ஒப்பாகச் சொல்லத் தக்க வன் (ஒருவருமிலரே), என்று - என்று வாய்விட்டுக்கூறி, அங்கு - அந்தச் சபையிடத்து, இரங்கினர் - மனம் வருந்தினார்கள் : (அவ்வம யம்) மூதாதை - வீடுமன், மன்னன்தனை முனிந்து-துரியோதனனைக் கோபித்து, அன்புடன் - பரிவோடு, சில சொல் சாற்றுகின்றான் - சில வார்த்தைகளைச் சொல்லலானான்; (எ.று) வீடுமன் கூறியதை மேலைக் கவியிற்காண்க.

"பாண்டவதூதனுக்கு உதவினதற்கு, நீ இப்பொழுது என்னைப் பழித்திட்டாயே : அப்பாண்டவர்க்கே உதவினாலும் குற்றமில்லை யாதலின், என்னைப்பழிப்பார் யார் என்பது கருத்து. பிரசித்தமான சிவ வில் விஷ்ணு வில் என்ற இரண்டினுக்கும் ஒத்த வில் விதுரனது வில் என்றபடி. இனி, விதுரன் முறித்தது அரிவில்லே என்பர்; அது மேலை 80-ஆம் செய்யுளிற் காண்க. வில்லியாரும் "விசயன் வந் தமரின் முடுகினால், எந்த வில்லியெதிர் நிற்கும் வில்லியினியென்று காவலரிரங்கினார்" என்றார். கொடுத்தேன், உளூற்றிலன் - தன்மை யொருமைவினைமுற்றுக்கள், விலி-வில்லியென்பதன் தொகுத்தல். (76)

77. வீடுமன் துரியோதனனைக் கண்டிக்க, அவன் விதுரனைப் பற்றி அலட்சியமாகக் கூறுதல்.

உம்பர்முனை புகுந்திடினும் வெல்வில் லோனை
உதாசினஞ் சொற் றடற்சிலையை யொடிப்பித் திந்த
அம்புவிபஞ் சவராளச் செய்து வித்துன்
அபிதான மழித்தனையென் றறைய வண்ணல்
வெம்பரிதி மகன்வில்லொன் றமையு மற்றும்
வேதியர்வில் லுனதடல்வில் வேந்தர் வில்லும்
இம்பரிருந் திடவிதுர னொருவில் லின்றேல்
யாதுகுறை யெனக்கன்ன னிதனைச் சொல்வான்.

(இ-ள்) உம்பர் முனை புகுந்திடினும் - தேவர்கள் போர்க்களத்து வந்தெதிர்த்தாலும், வெல் - செயிக்கும் வல்லமை படைத்த, வில்லோனை - விற்றொழிலில் வல்ல விதுரனை, உதாசினம் சொற்று - அலட்சியமான வார்த்தைகளைப் பேசி, அடல் சிலையை ஒடிப்பித்து - (தன்னுடைய) வலிய வில்லை முறித்தெறியும்படி செய்வித்து, இந்த அம்புவி-இந்த பூவுலகத்தை பஞ்சவர் ஆளச்செய்வித்து - பாண்டவர்கள் ஆளும்படி (நீயே) செய்வித்து, உன் அபிதானம் அழித்தனை - உன்னுடைய பெயரைக் கெடுத்துக் கொண்டாய், என்று அறைய - என்று சொல்ல, அண்ணல் - துரியோதனன், வெம் பரிதி மகன் வில்லொன்று அமையும்-வெப்பமுள்ள சூரியனின் புத்திரனான கர்ணனின் (கையிலுள்ள) வில்லொன்றே (அருச்சுனனை வெல்லப்) போதுமானது, மற்றும் - மேலும், வேதியர்வில் - துரோணாசாரியர் வில்லும், உனது அடல் வில் - உன் கையிலுள்ள வலிய வில்லும், வேந்தர் வில்லும்- (துணையாக வந்துள்ள) அரசர்களின் கைவில்லும், இம்பர் இருந்திட - இங்கே நம்பக்கல் இருக்க, விதுரன் ஒரு வில் இன்றேல் - விதுரனது வில்லொன்று இல்லாமற்போனால், யாதுகுறை - என்ன குறை வந்துவிட்டது? (ஒரு குறையும் இல்லை) என - என்று கூற, (அப்போது) கன்னன் - கர்ணன், இதனைச் சொல்வான் - இந்த வார்த்தைகளைச் சொல்லலானான் ; (எ.று).

முன்னமே அழிந்த் புகழ்போக மற்றதும் இப்பொழுது அழிந்து விட்டதென்ற கருத்தில் 'உன் அபிதானம் அழித்தனை' என்றார். அபிதானம் - பேர். கர்ணனது வில்லுக்குக் காலபிருஷ்டமென்றும், விஜயமென்றும் பெயர். இது இந்திரன் பொருட்டு விசுவகர்மா நிருமித்தது. இதைக்கொண்டு முன்னே இந்திரன் பல அசுரர்களை யும் பரசுராமர் பல அரசர்களையும் வென்றார். இதனோசையாற் பகைவர்கள் பலர் மூர்ச்சிப்பர். பரசுராமரிடத்தினின்று கர்ணன் இந்த வில்லைப் பெற்றான். வில்லிபாரதத்தில் கன்னன் கூற்றாக வந்த செய்யுளை நோக்குக. "மேகவாகனன்பாற்பெற்ற வெயிலவனியமதங்கியாகிய முனிவற்கீந்த வரும் பெருஞ்சாபம் பெற்றேன்" (கன்ன : பதினேழாம் : 35). விதுரன் கோபித்துப் போனதனால் நமது துணை வலிக்கு யாதொரு குறைவுமில்லையெனத் துரியோதனன் செருக்கிக் கூறியவாறு. உம்பர் - தேவர்க்கு இடவாகுபெயர். உதாசினம் - அலட்சிய வார்த்தை , "உற்றாரை யுதாசினங்கள் சொல்ல வேண்டாம்" என்றது உலகநீதி. அண்ணல் என்றது இகழ்ச்சிக் குறிப்பினது. (77)

78. கர்ணன் செருக்கிக்கூற, வீடுமன் அவனைக் கண்டித்துக் கூறுதல்.

நானிருக்க தானைவெல்வ ரினியா ரென்றாய்
    நாரணன்றேர் நடத்தினுமென் னாக புங்கந்
தானிருக்க வவனெங்ங னுய்வான் வெம்போர்
    தனிற்காண்மின் னென்வின்மை தன்னை யென்ன
வூனிருக்கும் படையசுர ரிகுத்தீன் றோனுக்
    கும்பருத வியவிசயற் குவமை நீயோ
வானிருக்கு மதிக்குநிக ருடுவோ வின்மை
    வல்லைகொலோ வெனக்கங்கை மகன் சொன்னானால்.

(இ-ள்) கர்ணன் நான் இருக்க - நான் (உங்களது பக்கத்தில்) இருக்க, தானை வெல்வர் (பாண்டவரது) சேனையை செயிப்பவர், இனி யார் என்றாய் - இனி எவர் இருக்கின்றனர் என்று நீ கூறினாய்: நாரணன் தேர் நடத்தினும் - கண்ணன் [பார்த்தனது] தேரைச் செலுத்தி வந்தாலும், என் நாகபுங்கம்தான் - எனது (கொடிய) நாகாஸ்திரந்தான், இருக்க - என் கைவசம் இருக்க, அவன் - அந்த அருச்சுனன், எங்ஙன் உய்வான் - எப்படி உயிர் தப்பிப் பிழைப் பான்? (இறந்தேபடுவன்): என் வின்மை தன்னை - என்னுடைய வில்லின் வல்லமையை, வெம்போர்தனில் காண்மின் என்ன - கொடிய போரினிடத்துக் காணலாகும் என்று (தற்புகழ்ச்சி செய்து) சொல்ல, (அது கேட்ட) கங்கை மகன் - கங்காபுத்திரனாகிய வீடுமன், ஊன் இருக்கும் படை அசுரர் - மாமிசச் தசையோடிருக்கும் ஆயுதங் களையுடைய அசுரர்களாகிய நிவாதகவசர் காலகேயர் என்பவர்களை, இகுத்து - அழித்து, ஈன்றோனுக்கு- (தன்னைப்) பெற்ற தந்தையாகிய இந்திரனுக்கு, உம்பர் - விண்ணுலகத்தை, உதவிய - வழங்கிய, விசயற்கு - அருச்சுனனுக்கு, உவமை - ஒப்பாகுபவன், நீயோ - நீதானோ? வான் இருக்கும் மதிக்கு - ஆகாயத்தில் விளங்கும் சந்திர னுக்கு, நிகர் உடுவோ - ஒப்பாகுவது நட்சத்திரமோ? வின்மை வல்லைகொலோ - வில்வித்தையும் பயின்றவனோ? என - என்று, சொன்னான் - கூறினான்; (எ.று) ஆல் - ஈற்றசை.

காண்டவதகன காலத்தில் தக்ஷகனென்னும் நாகராசனது மனைவி தன் குழந்தையாகிய அசுவசேனன் என்னும் சிறு நாகத் தைத் தன் வாயினுள் மறைத்து வைத்துக் கொண்டு ஆகாய மார்க் கத்தில் எழும்ப, அதுகண்டு அருச்சுனன் தன் பாணத்தால் அந்த

நாக கன்னிகையின் தலையைத் துணித்துவிட, அதன் வாயிலிருந்த நாக குமாரன் வால் மாத்திரம் அறுப்புண்டு பிழைத்தெழுந்து, தன் தாயைக் கொன்ற அவன்மீது கறுக்கொண்டு, அவனுக்குப் பகைவன் யாரென்று விசாரித்து, அஸ்திர வடிவமாகிக் கன்னனை யடைந்தனனென்பது 'நாகபுங்கம் தானிருக்க' என்ற விடத்து அறியவேண்டிய வரலாறு. [இதனை அருச்சுனனைக் கொல்ல வொட்டாதபடி கண்ணன் தந்திரமாகத் தடுத்துவிடுந் தன்மையை மேல் கன்னபருவத்திற் காண்க.] அசுரர் - தோயமாபுரவாசிகளான நிவாதகவசர் என்னும் மூன்று கோடி பேரையும், இரணியபுரவாசி களான காலகேயர் என்னும் அறுபதினாயிரவரையும் குறிக்கும். இவ் வசுரர்களை யழித்து ஒழித்து ஈன்ரோனுக்கு உம்பர் உதவியதை, கீழ் ஆரணிய பருவத்துக் காலகேயர் நிவாதகவசர்தம் வதைச்சருக் கத்திற் காணலாம். ஒளியில் சந்திரனது பெருமைக்கும் நட்சத் திரத்தினது சிறுமைக்கும் எவ்வளவு வேறுபாடு உண்டோ அவ்வளவு வேறுபாடு உண்டு, பல பராக்கிரமங்களில் அருச்சுனனது பெருமைக் கும் கர்ணனது சிறுமைக்கும் என்பதாம். இது எடுத்துக்காட்டுவமை யணி. ஈன்ரோன் - வினையாலணையும் பெயர். நீயோ, உடுவோ, வல்லையோ, ஓ-எதிர்மறை. கொல் - அசைநிலை. கங்கை மகன் - நான்கனுருபு தொக்கது. (78)

79. கர்ணன் வீடுமனை நோக்கி நிஷ்டூரமாகச் சிலகூற, யாவரும் தம்தம் இருப்பிடங்கட்குச் செல்லுதல்.

அம்மொழிதன் செவிப்படலு மங்கர் கோமான்
　　அருகிருந்தின் றளவுமமு தயின்று மன்னர்
செம்மலிக லவராண்மை புகழ்ந்தா யென்னைச்
　　செலுத்தியுணர் சிவனெனினு செயிப்ப னென்ன
வெம்முனையி லறிவமென் வன்னி போனன்
　　வேந்தருக்கங் கரவுயர்த்தோன் விடைதந் தேக
மும்மையுணர் முனிவரெழுந் தரிமா டெய்தி
　　மூரிசிலை யிறுத்தன்முதன் மொழிந்து போனர்.

(இ-ள்) அ மொழி தன் செவிப்படலும் - அவ்வீடுமன் சொன்ன வார்த்தை தனது காதில் நுழைந்தவளவிலே (அதனைக் கேட்ட மாத்திரத்தில் என்றபடி) அங்கர்கோன் - அங்க தேசாதிபதியாகிய கர்ணன், அருகிருந்து - (எப்பொழுதும் துரியோதனனது) சமீபத் திலேயிருந்து, இன்று அளவும் - இன்றைய தினம் வரையில்,

அமுது அயின்று - (அவனது) அன்னத்தையுண்டு, மன்னர் செம்மல் அந்தத் துரியோதனராசனது, இகலவர் - எதிரிகளாகிய பாண்டவர்களது, ஆண்மை - பராக்கிரமத்தையே, புகழ்ந்தாய் - பாராட்டிப் பேசுகிறாய்; (அது கிடக்க) என்னைச் செலுத்தி உணர் - என்னைப் போர்க்கு அனுப்பி [நீ] தெரிந்துகொள்: சிவன் எனினும் - சிவபெருமானே எதிர்த்தாலும், செயிப்பன் - (நான்) வெல்வேன், என்ன - என்று கூற, வன்னி - வீடுமன், வெம்முனையில் அறிவம் - போர் முகத்தில் தெரிந்துகொள்வோம், என - என்று கூறி, போனான் - (அச்சபையை விட்டுச்) சென்றான்: (பிறகு) அரவுயர்த்தோன் - துரியோதனன், அங்கு வேந்தருக்கு விடை தந்து ஏக - அங்கிருந்த மன்னர்களுக்குச் செலவு கொடுத்து அனுப்பித் தான் போக, மும்மை உணர் முனிவர் எழுந்து - மூன்று காலத்து வரலாறுகளையும் அறிய வல்லமுனிவர்களாகிய பரசுராமர் கண்வர் நாரதர் இவர்களெழுந்து, அரி மாடு எய்தி - (விதுரன் இல்லிலிருந்து) கண்ணபிரானிடம் வந்து, மூரிசிலை இறுத்தல் முதல் - விதுரன் (தனது) வில்லை முறித்துப் போகட்ட செய்தி முதலாகியவற்றை, மொழிந்து போனார் - (அக்கண்ணபிரானிடம்) சொல்லிப் போயினார்; (எ.று).

சிவன் என்ற சொல்லுக்கு - (யாவர்க்கும்) மங்களத்தைச் செய்பவன் என்று பொருள்: சிவம் - சுபம். உம் - உயர்வு சிறப்பு: அது - அப்பிரானது வெகுண்டு உலகமழிக்கும் ஆற்றலையும், முன் அருச்சுனன் வில் நாணற்றுத் திகைக்கும்படி எதிர்த்துப் போர் செய்த திறமையையும் குறிக்கும். வன்னி - பிரமசாரி: வீடுமனுக்காகியது. இகலவர் - பகைவர். இகல் - பகைமை. உணர் - முன்னிலையேவல், அறிவம் - தனித்தன்மைப் பன்மை; உளப்பாட்டுத் தன்மைப் பன்மை யெனினுமாம். மும்மை - பண்பாகுபெயர். மாடு - ஏழனுருபு. இறுத்தல் - தொழிற்பெயர். (79)

80. விதுரன் வில்லை முறித்த காரணத்தைக் கண்ணன் வினவ, அவன் கூறிய உத்தரம்.

குரிசிலைவில் லிறுத்துமுனிந் தவன்வந் தில்லிற்
குறுகுபுமா லடிதொழலுங் குடையாக் கொண்டோர்
கிரிசிலையின் மழைதடுத்தோ னிருவி லன்றிக்
கிடையாதென் றிவ்வுலகிற் கிளத்தா நின்ற
வரிசிலையி லொருசிலைநீ துணித்த சீற்றம்
வழங்கென நீ வந்தேற்றும் வணங்கிப் பாரீ
பரிசிலையென் றவனெனைச்சொல் புன்சொல் தானே
படுத்தியதென் றானறனே படிவ மானான்.

(இ-ள்) வில் இறுத்து - வில்லை முறித்துப் போகட்டு, குரிசிலை முனிந்தவன் - துரியோதனனைக் கோபித்த விதுரன், வந்து -(சபையினின்று நீங்கி) வந்து, இல்லில் குறுகுபு - (தன்) மனையில் புகுந்து, மால் அடி தொழலும் - கண்ணபிரானது திருவடிகளை வணங்கவும்,— ஓர் கிரி சிலையின் - கல்லினாலாகிய மலையொன்றினால், குடையாகக் கொண்டு - (அதனைக்) குடையாகத் தூக்கிப் பிடித்து, மழை தடுத்தோன் - இந்திரன் பெய்வித்த கல்மழையைத் தடுத்து (ஆநிரைகளையும் ஆயர்களையும்) காப்பாற்றிய கண்ணபிரான்,—இவ்வுலகில் - இந்தப் பூலோகத்தில், இரு வில் அன்றி கிடையாது - சிவ வில் திருமால் வில் என்று இரண்டு விற்கள் (சிறந்தனவே) தவிர வேறு (நிகரான) வில் கிடையாது, என்று—,கிளத்தா நின்ற - பேசப்படுகின்ற, வரி சிலையில் ஒரு சிலை - வரிந்து கட்டப்பட்ட இரண்டு விற்களில் ஒரு வில்லை, நீ—, துணித்த - முறித்துப் போகட்ட, சீற்றம் - கோபம், வழங்கு - யாது காரணம்பற்றி யெனச் சொல்வாயாக,' என - என்று வினவ, (அதற்கு உத்தரமாக) அறனே படிவம் ஆனான் - தருமமே வடிவெடுத்து வந்தாற் போன்ற விதுரன், 'நீ - (நினைக்கவும் தொழவும் எட்டாத) நீ, வந்து - தூதனாக வந்து, ஏற்றும் - கையேந்தியிரந்தும், வணங்கி - உன்னை நமஸ்கரித்து, பார் - (நீ கேட்ட) இராச்சியத்தை, ஈ பரிசு இலை என்றவன் - கொடுக்கும் வகையில்லை யென்று மறுத்தவன், எனைச் சொல் - என்னைப் பார்த்துச் சொன்ன, புன் சொல்தான் ஏ-இழிவான பழிச் சொல்லே, படுத்தியது - வில்லை முறித்துப் போகட்டது,' என்றான் - என்று (கண்ணனை நோக்கிக்) கூறினான் ; (எ.று).

ஒரு சிலையென்றது – திருமால் வில்லை. திருமால் தன் வில்லை இரிசிகற்கு ஈந்து போக, அந்த இரிசிகன் ஜமதக்னிக்கு ஈய, அவர் தன் மகன் பரசுராமனுக்குத் தர, அந்த வில்லைப் பரசுராமரிடமிருந்து இராமபிரான் வாங்கிக் கொள்ள, இங்ஙனம் பரம்பரையாக இராமபிரானிடம் வந்து சேர்ந்த திருமால்வில் பின்பு வழிமுறையாக விதுரனளவும் வந்து சேர்ந்திட்டது போலும் என்பர். சீற்றம் - தொழிற்பெயர் : சீறு - பகுதி, அம் - விகுதி, ற் - விரித்தல் விகாரம். புன் சொல்தானே படுத்தியது - அவனுரைத்த புன்சொல் பொறாமல் சிலையிறுத்தேனென்றபடி. ஈ பரிசு - வினைத்தொகை. பரிசு விதம், வகை. கிரி - கோவர்த்தனமலை, அதனைக் குடையாக் கொண்டு மழை தடுத்த கதை : திருவாய்ப்பாடியில் ஆயர்களெல்லாரும் கூடி மழையின் பொருட்டாக இந்திரனையாராதித்தற்கென்று சமைத்த சோற்றைக் கண்ணன் அவனுக்கிடாதபடி விலக்கிக் கோவர்த்தன மலைக்கு இடச் சொல்லி, தானே ஒரு தேவதா ரூபமாய் அமுது செய்தருள, அவ்விந்திரன் கோபத்தோடு புஷ்கலாவர்த்தம் முதலிய

மேகங்களையேவிக் கண்ணன் விரும்பி மேய்க்கிற கன்றுகளுக்கும் பசுக்களுக்கும் கண்ணனுக்கு இஷ்டரான இடையருக்கும் இடைச்சி யருக்குந் தீங்கு தரும்படி கல்மழையை ஏழுநாள் இடைவிடாது பெய்வித்தபொழுது, கண்ணன் கோவர்த்தனமென்னும் மலையை யெடுத்துக் குடையாகப் பிடித்து மழையைத் தடுத்து எல்லா உயிர் களையும் இடையூறு சிறிதுமின்றிக் காத்தருளினனென்பது. குறுகுபு - செய்பு என்னும் வாய்ப்பாட்டு வினையெச்சம். என்றவன் - வினை யாலணையும்பெயர். (80)

81. கண்ணன் விதுரனைச் சாந்தப்படுத்தி, குந்தி மாளிகைக்கு எழுந்தருள, அவள் மகிழ்ந்து வந்த காரியம் வினவ, அவன் நடந்த வரலாறு கூறுதல்.

நின்றனுபொன் றியதைவர்க் கன்றே வெற்றி
நிருபன்மொழி வசைபொறுத்தி நீயென்றம்மால்
சென்றுகுந்தி யகம்புகுந்தான் அவள்கான் வைகுஞ்
செல்வரைக்கண் டெனமகிழ்வு சிறந்து நோக்கி
இன்றிந்நகர் புகும்பரிசியா தென்ன வன்னோன்
இயம்புவனின் சுதரரசை யெய்தத் தூதிங்
கென்றனையுய்த் தனரகிகே திதய மோர்ந்தேன்
இதற்கிசைந்தா னதற்கிசைந்தே னின்னங் கேணீ.

(இ-ள்) நின் தனு பொன்றியது - உன்னுடைய வில் முறிந்தழிந் தது : (அது) ஐவர்க்கு வெற்றி அன்றே - பாண்டவர்களுக்கு ஜெயம் நல்குவதாகுமே ; (இனி) நிருபன் மொழி வசை - துரியோதன ராசன் கூறிய பழிச் சொற்களை, நீ பொறுத்தி - நீ பொறுத்துக் கொள்வாய், என்று-என்று கூறி. (பிறகு) அ மால் - அந்தக் கண்ணபிரான், குந்தி அகம் சென்று புகுந்தான் - குந்திதேவியின் மனைக்குப் போய் நுழைந்தான் : அவள் - அந்தக் குந்திதேவி, கான் வைகும் செல் வரைக் கண்டென - (கண்ணனைக் கண்ட மாத்திரத்தில்) வன வாசஞ் செய்த தன் புத்திரரைப் பார்த்தவள்போல, மகிழ்வு சிறந்து - மகிழ்ச்சிமிக்கவளாய், நோக்கி - கண்ணனைப் பார்த்து, இன்று - இப்போது, இ நகர் புகும் பரிசு - இந்த அத்தினபுரம் வரும்படியான காரணம், யாது - என்ன ? அன்னோன் - அந்தக் கண்ணன், இயம்பு வன் - (பின்வருமாறு) கூறுவானாயினான் : நின் சுதர் - உன்னு டைய மைந்தர்கள், அரசை எய்த - (தாங்கள் இழந்த) அரசாட்சியை [மீண்டும்] பெறுதற்காக, இங்கு- இவ்வத்தினபுரத்திற்கு, என்தனை -

என்னை, தூது உய்த்தனர் - (தங்கள்) தூதுவனாக அனுப்பியுள்ளனர்: (அதற்கேற்பத் தூதனாக வந்து) அகி கேது - பாம்புக் கொடியை யுடைய துரியோதனனின், இதயம் ஓர்ந்தேன் - மனக்கருத்தையறிந் தேன் : (அவன்) இதற்கு - போரிடுதற்கு, இசைந்தான் - சம்மதித் தான் : அதற்கு-அங்ஙனமே போரிடுதற்கு, இசைந்தேன்-(யானும்) சம்மதித்தேன் : இன்னம் - மேலும், நீ கேள் - நீ [நன்கு உற்றுக்] கேட்பாயாக ; (எ.று).

துரியோதனனது வெற்றிக்கு ஏற்ற சாதனமாயிருந்த விதுரன் வில் முறிந்து போயினமையால் அவன் உதவியில்லாமற் போனது : எனவே, ஐவர் வெற்றி நிச்சயம் என்றபடி. இரண்டாமடியால், தன் மக்களிடத்து எவ்வளவு அன்போ அவ்வளவு அன்பு குந்திக்குக் கண்ணனிடமென்பது விளங்கும். அன்றியும், அவயவியான கண்ணனை நோக்கின மாத்திரத்தில், அவயவமான பாண்டவரைப் பார்த்தாற்போன்றவளானாள் ; ''மாலோனுயிர்போல்வான்'' என் றிறே பாண்டவரைக் கூறுமாறு. இதயம் - மனக்கருத்துக்கு இலக் கணை. இகல் - பகைமை : எனவே, போராயிற்று, பொறுத்தி முன்னிலை வியங்கோள். என - உவமவுருபு. பரிசியாது - குற்றிய விகரம். (81)

82. கண்ணன் கர்ணனது பிறப்பு முதலியவற்றைக் குந்திக்குக் கூறுவன.

கதிரவனுக் குயிர்த்துநதி விடுத்த சேயே
கன்னனு மவனையந் தகன்றேர்ப் பாகன்
அதிரதன்கண் டெடுத்துவளர்த் தான்வில் விஞ்சை
யறிவித்தான் மழுப்படையோன் அகிகே தங்கர்
பதியெனச்செய் தனனவன்பால் நண்பாய்ச் சேர்ந்து
பணிக்கணைபற் குனனடுவான் படைத்தா னச்சந்
ததியவற்கீ துரைத்தைவ ரேவ லாற்றத்
தரைபுரப்பான் வருகெனச்சொற் றடைசொல்
வானேல்.

(இ-ள்) கதிரவனுக்கு - ஆயிரங்கிரணங்களையுடைய சூரிய னுக்கு, உயிர்த்து - (அவனது கருணையினால் நீ) பெற்று, நதி விடுத்த சேயே - கங்கா நதியில் [பேழையில் பொதிந்து] விட்ட குழந்தையே, கன்னனும் - கர்ணனுவான் : அவனை - அந்தக் குழந்தையை,

அந்தகன் தேர்ப்பாகன் - குருடனாகிய திருதராட்டிரராசனது இரதத்தைச் செலுத்தும் பாகனான, அதிரதன்-அதிரதனென்பவன், கண்டெடுத்து - (அக்கங்கையாற்றிடத்துக்) கண்டு [கையில்] எடுத்துச் சென்று, வளர்த்தான் - (தன் புத்திரனாகப் பாவித்து) வளர்த்து வந்தான் : (மற்றும்) மழுப்படையோன் - பரசுராமன், வில் வித்தை அறிவித்தான் - வில்வித்தையைப் பயிற்றுவித்தான் ; (பிறகு) அகிகேது-துரியோதனன் அங்கர்பதியென - அங்க தேசத்தார்க்கு அரசனென, செய்தனன், முடிசூட்டினான். (ஆகவே) அவன்பால் - அத்துரியோதனனிடத்து, நண்பாய்ச் சேர்ந்து-(உயிரோடொத்த) தோழனாய்ச் சேர்ந்து, பணிக்கணை-நாகாஸ்திரத்தை, பற்குனன் அடுவான்-அருச்சுனனைக் கொல்வதற்காக, படைத்தான் - (தன்வசம்) கொண்டுள்ளான் : அவற்கு - அந்தக் கன்னனுக்கு, அ சந்ததி - அந்தக் குலவுறவுமுறைமையை, ஈது உரைத்து - இப்படித்தெனச் சொல்லித் தெளிவித்து, ஐவர் ஏவல் ஆற்ற - (தம்பியராகிய) பாண்டவரைவரும் பணிவிடை புரிய, தரை புரப்பான் - பூலோகத்தை ஆட்சி புரிந்து காக்கும்படி, வருக எனச் சொல் - [உன் பக்கல்] வருவாயாக என்று சொல் ; தடை சொல்வானேல் - (உனது வார்த்தைக்கு இசையாமல்) மறுத்திடுவானானால் ; (எ.று).

அகி - பாம்பு : கேது - கொடி. துரியோதனன் கர்ணனை அங்கர்பதியாக்கியது - அவன் பரசுராமனிடத்துக்கற்ற படைத்தொழில் பலவும் கண்டு. பணிக்கணை - நாகாஸ்திரம். அடுவான் - வினையெச்சம். சந்ததி - குலவரலாறு. சொல் - முன்னிலையேவல், விஞ்ஞை - வித்தை யென்பதன் போலி. (82)

83. **நாகக்கணையை இரண்டாமுறை விடாதபடி வரம் வேண்டச் சொல்ல, குந்தி வருந்தக் கண்ணன் அவளைத் தேற்றுதல்.**

தனஞ்செயன்மேன் மறுகணைதொட் டிடாம னல்வர்
தமைவதைசெய் யாமல்வரந் தரக்கொள் ளென்ன
மனஞ்சலித்துக் கன்னனுக்கா யரற்றி நின்றாள்
மடியானே லவனைவர் மடிவ ரம்ம
முனஞ்செய்தவ மிவ்வளவென் றெண்ணி யந்த
மொய்ம்பனைக்கூட் டுதியெனவே முராரி யன்பே
தினஞ்செய்விது ரன்றனக மடைந்தான் மேலைத்
திசையடைந்தான் கதிர்பினிகழ் செய்கை
சொல்வாம்.

(இ-ள்) தனஞ்செயன்மேல் - அருச்சுனன்மீது, மறு கணை தொட்டிடாமல் - இரண்டாம் முறை நாகாஸ்திரம் பிரயோகியாத படியும், நால்வர்தமை வதை செய்யாமல் - [ஏனைய பாண்டவர்] நால்வரையும் போரிற் கொல்லாதபடியும், வரம் தரக் கொள் என்ன - (கர்ணன்) வரம் தரும்படி செய்து பெற்றுக்கொள்வாயாக என்று கண்ணன் குந்தியிடம் சொல்ல, (அக் குந்தி) மனம் சலித்து - மனந் தளர்ந்து, கன்னனுக்கா - (தன் மூத்தமகனாகிய) கர்ணனுக்காக, அரற்றி நின்றாள் - கதறியழுது நின்றாள் ; (அது கண்ட கண்ண பிரான்) அம்ம - தாயே ! அவன் மடியானேல் - அந்தக் கர்ணன் இறவாமற் போனால், ஐவர் மடிவர் - (இந்தப்) பாண்டவர் ஐவரும் [போரில்] அவனால் இறந்து போவர் : (ஆகவே) முனம் செய் தவம் இ அளவு என்று எண்ணி - முன்னால் (நாம்) செய்த நற்பயன் இவ்வளவே என்று நினைத்துச் சாந்தி கொண்டு, அந்த மொய்ம் பனைக் கூட்டுதி - அந்த வலிய கர்ணனை (ப் பாண்டவரோடு) சேர்ப் பிப்பாயாக, என - என்று கூறி, முராரி - கண்ணபிரான், அன்பே தினம் செய் விதுரன்தன் - பிரியத்தோடு நாடோறும் உபசாரஞ் செய் கின்ற விதுரனுடைய, அகம் அடைந்தான் - மனையினைச் சேர்ந்தான் : (அப்போது) கதிர் - சூரியனும், மேலைத் திசை அடைந்தான் - மேற் குத் திக்கில் அத்தமிக்கலானான் : பின் - பிறகு, நிகழ் - நடந்த, செய்கை சொல்வாம் - செயல்களைச் சொல்லுவேன் ; (எ.று).

உன் மக்கள் அறுவருள் கர்ணனாவது அர்ச்சுனனாவது இறத்தல் திண்ணம் : அவ்விருவருள் அருச்சுனன் இறப்பானாயின் அது, மற்றை நால்வர் பாண்டவரும் அழிதற்குக் காரணமாய் முடியும் : ஆதலால் அதனிலும் கர்ணனொருவன் இறப்பதே மேல் : இவை யெல்லாம் முன்னை செய்த தவத்தின் அளவேயாகும் என எண்ணி யமைதி கொள்வாய். ஆகையால் அவனைப் பாண்டவரோடு கூட்டு தற்கும், கூட்டமுடியாவிடின் நாகாஸ்திரத்தை அருச்சுனன்மேல் இரண்டாமுறை செலுத்தாதபடியும், ஏனைய தம்பியர் நால்வரையும் போரிற் கொல்லாதபடியும் வரங்கேட்டு வருதலே தகுதியுடைத்து எனக் கண்ணன் உறுதி கூறினனென்க.

ஆ - ஆக என்பதன் ஈறுகெட்டது. கொள், கூட்டுதி-முன்னிலை யேவல். ஈற்றடியில் கவிக்கூற்று காண்க. சொல்வாம் - கவிகளுக் குரிய இயற்கைத் தன்மைப்பன்மை. (83)

84. துரியோதனன் முதலியோர் இரவிற் சதியாலோசனை செய்ய, விகர்ணன் தடுத்துக் கூறுதல்.

கங்குலிடைச் சுயோதனன்றன் அனுசர் மாமன்
கன்னனெடோர் மண்டபத்திற் கலந்து மாயோன்
இங்குதனித் தனன்செய்வ தியம்பு மென்ன
இளவல்வரு தினியொடுசூழ்ந் திருள்போ முன்னர்
அங்கவனை யடுவதுவே கரும மென்ன
அதற்கிளைய விகருணன்றூ தடைந்தோர் கோறற்
பங்கமுறு நரகரசர்க் காண்மை யன்று
படையொடுசூழ்ந் திடினுமகப் படான்மா லென்றான்.

(இ-ள்) கங்குலிடை - இராத்திரிப்போதில், சுயோதனன் - துரியோதனன், தன் அனுசர் - தன்னுடைய தம்பிமார்கள், மாமன் - சகுனி, கன்னனெடு - கர்ணன் இவர்களோடு, ஓர் மண்டபத்தில் கலந்து - ஒரு மண்டபத்தில் கூடியிருந்து, 'மாயோன் - கிருஷ்ணன், இங்கு - இவ்விடத்து. தனித்தனன் - தனியனாக வந்துள்ளான், செய்வது - (நாம் இப்பொழுது) செய்யவேண்டிய காரியம் இன்னது என, இயம்பும் - சொல்லுங்கள்,' என்ன - என்று வினவ, இளவல் - தம்பியாகிய துச்சாதனன், வருதினியொடு சூழ்ந்து -(நமது) சேனை யுடனே [சென்று] சூழ்ந்து கொண்டு, இருள்போம் முன்னர் - இருட்டு கழியுமுன்னமே, அங்கு அவனை அடுவதுவே-(அவன் தங்கி யுள்ள) அவ்விடத்து அந்தக் கிருஷ்ணனைக் கொன்று விடுவதே, கருமம் என்ன-செய்யத்தக்க தொழில் என்று கூற, அதற்கு-அவன் கூறிய வார்த்தைக்கு எதிராக, இளைய விகருணன்-(அவனுக்குத்) தம்பியாகிய விகர்ணன், 'தூது அடைந்தோர் கோறல்-தூதர்களாக வந்தவர்களைக் கொல்லுதல், பங்கம் நரகு உறும்-சேறு நிறைந்த நரகத்தில் புகுத்தும்; (மேலும்) அரசர்க்கு ஆண்மை அன்று - மன்னர்க்கு ஆண் தன்மைக்கு உரியதாகாது; (இது நிற்ப) படை யொடு சூழ்ந்திடினும் - (இராத்திரியில்) சேனையோடு சென்று சுற்றிக் கொண்டாலும், மால் - (அந்தக்) கண்ணபிரான், அகப்படான் என்றான்-(கொல்லக்) கிடைக்கமாட்டான்' என்று கூறினான்; (எ -று)

பகலிற் கொல்லமுடியாது என்பான் 'இருள்போம் முன்னர்' என்றும், தனியே கொல்ல முடியாதென்பான் 'வருதினியொடு சூழ்ந்து' என்றும் கூறினான். தூதரைக் கொல்லுதல் கூடாது என்பதை "மாதரைக் கொலை செய்தார்க ளுளரெனவரினும் வந்த,

தூதரைக் கொன்றுளார்க ளியாவரே தொல்லை நல்லோர்'' என்ற கம்பராமாயணத்தாலும் அறிக. (சுந்தர: பிணிவீட்டு: 113) பங்கம்-சேறு. உறும்-உறுவிக்கும். 'மால் அகப்படான்' என்றது-கண்ணனது வெல்லுதற்கரிய மாயைநிலையை வெளியிட்டவாறு, அடுவது வே - வகரவுடம்படுமெய்பெற்று வந்தது, கோறல் - தொழிற்பெயர். (84)

85. **மீண்டும் துச்சாதனன் தன் கருத்தைச் சொல்ல, கர்ணன் தற்புகழ்ச்சி பேச, சகுனி கண்ணனைப் படுகுழி பாய்ச்சிச் சிறையிட வேண்டும் எனல்.**

மந்தணஞ்சொல் லிடத்திளைஞர் யாதுக் கென்று
 மற்றவனை முனிந்திறைபின் வந்தோன் வீட்டிற்
செந்தழலிட் டரியொடுமவ் விதுரன் றன்னைச்
 செகுத்திடுவ மெழுமினெனச் செப்ப வப்போ
தந்தணருக் கருள்கொடையா னிஃதென் யானோ
 ரம்பினடு வேனெனவே யறைய வம்மான்
சந்தணவ வந்தவனைக் குழியில் வீழ்த்தித்
 தளைபடுத்திச் சிறையிடுதல் தகுவ தென்றான்.

(இ-ள்) இறைபின் வந்தோன்-துரியோதனனின் தம்பியாகிய துச்சாதனன், மந்தணம் சொல் இடத்து-இரகசியமான ஆலோசனை சொல்லும் இடத்தில், இளைஞர் - [அறிவு முதிராத] சிறியோர்கள், யாதுக்கு-எதற்காக வரவேண்டும்', என்று - என்று கூறி, மற்றவனை முனிந்து - விகர்ணனைக் கோபித்து, (பிறகு) 'வீட்டில் - விதுரனது மனையில், செந்தழல் இட்டு-சிவந்த நெருப்பினை வைத்து, அரியொடும்-கிருஷ்ணனோடும், அ விதுரன் தன்னைச் செகுத்திடுவம்-அந்த விதுரனையும் ஒருசேர அழித்துவிடுவோம், எழுமின்-எழுத் திருங்கள்' என-என்று, செப்ப-சொல்ல, அப்போது - அவ்வமயம், அந்தணருக்கு அருள் கொடையான்-பிராம்மணர்களுக்குத் தானங் கொடுக்கும் வள்ளலான கர்ணன், 'இஃது என்-இது எதற்கு? யான்-(வீரனாகிய) நான், ஓர் அம்பின் அடுவேன்-ஒரு பாணத்தாலே அந்தக் கிருஷ்ணனைக் கொல்வேன்,' என அறைய - என்று (தற் புகழ்ச்சி தோன்றச்) சொல்ல, (அதுகேட்டு) அம்மான்-மாமனாகிய சகுனி, 'சந்து அணவ வந்தவனை-சமாதானஞ் செய்து வைக்கும் தூதனாக வந்த கிருஷ்ணனை, குழியில் வீழ்த்தி-பெரும்பள்ளத்தில் தள்ளிவிழச் செய்து, தளைபடுத்தி-விலங்கைப் பூட்டி, சிறையிடுதல்-

சிறைச்சாலையிலே வைத்திடுதல், தகுவது-செய்தற்குரிய தண்டனை' என்றான் - என்று சொன்னான்; (எ-று)

"துன்று பிணியோர் துறந்தோர் அடங்காதோர், கன்று சின மனத்தோர் கல்லாதவர் இளையோர், ஒன்று முறைமை யுணராதவர் மகளிர், என்று மிவர் மந்தணத்தின் எய்தப் பெறாதாரே" என்றான் தருமனும் வில்லி பாரதத்தில் (உத்தி : கிருட் : தூது : 52). விதுரன் மீதுள்ள கோபத்தாலும், இருவரும் ஒரு மனையில் வசித்தலாலும், அவனையும் உடன் கொல்லவேண்டுமென்ற துச்சாதனனது மிக்க கொடுமை தன்கு விளங்கும். கர்ணன் எப்பொழுதும் தனது பல பராக்கிரமங்களை மிக்கனவாகத் தானே மதித்தவனாதலால், இங்ஙனங் கூறினான். தூதரைக் கொல்லுதல் தக்கதன்றாதலின், சகுனி சிறை யிடுதல் தகுவதென்றான். செகுத்திடுவம் - உளப்பாட்டுத் தன்மைப் பன்மை. எழுமின்-முன்னிலையேவல். அடுவேன்-தன்மையொருமை. வந்தவன் - வினையாலணையும்பெயர். நிலத்திற் குழிந்துள்ளது, குழி. (85)

86. துரியோதனன் படுகுழியமைத்ததைக் கூறும்.

நலமறுமா துலனுரைத்த வண்ண மண்ணல்
நள்ளிருளிற் பள்ளமவை நடுவண் டொட்டு
பலமறைக்கு மறிவரிய வரியைப் பற்றப்
பலவரக்கர் மல்லர்கள்பப் பரரை யந்த
நிலவறையில் வில்வேல்வாள் வயவ ரோடு
நிறுவிவெதிர்ப் பிளவ்தனு னிரைத்து மூடி
இலகொளிமா மணிப்பீட மதன்மே லாக்கி
யேற்றிமலர் விதானமுமா றிலதாச் செய்தான்.

(இ-ள்) நலம் அறு மாதுலன் உரைத்த வண்ணம்-நன்மையற்ற (தீமையே புரியும்) மாமனாகிய சகுனி கூறியபடியே, அண்ணல் - துரியோதனன், நள் இருளில் - நிசிராத்திரியில், அவை நடுவண்- சபையினடுவில் (சபா மண்டபத்தின் நடுவில் என்றபடி), பள்ளம் தொட்டு - (பெரிய) பள்ளத்தைத் தோண்டி, (அதன்பின்) பலமறைக்கும் அறிவு அரிய அரியை - பல வேதங்களின் அறிவுக்கும் எட்டாது அருமையான கிருஷ்ண பகவானை, பற்ற-சிறை பிடிக்க, பல அரக்கர் - பல இராட்சசர்கள், மல்லர்கள்—, பப்பரரை - பப்பரர்கள்

முதலானவர்களை, அந்த நிலவறையில்-அந்தப் படுகுழியில், வில்வேல் வாள் வயவரோடு நிறுவி-வில்லையும் வேலையும் வாளையும் ஏந்திய வீரர்களோடு இருக்கவைத்து, வெதிர்ப் பிளவு அதனுல் நிரைத்து மூடி-மூங்கில்களின் பிளப்புக்களினுல் மேலே வரிசையாய்ப் பரப்பி மூடி, இலகு ஒளி மா மணி பீடம் அதன்மேல் ஆக்கி - மிக்க பிரகாச முள்ள சிறந்த இரத்தினங்களாலாகிய பீடமொன்றை அந்தப் பிளப் புக்களுக்கு மேலே சித்தஞ்செய்து, மலர் விதானமும் ஏற்றி-பூமாலை கள் தொங்கவிடப்பட்ட மேற்கட்டியையும் (அவ்வாசனத்திற்கு மேல்) உயரத்தில் அமைத்து, மாறு இலதா - வேறுபாடில்லாதபடி தோன்ற, செய்தான் - (எல்லாவற்றையும்) அமைத்து வைத்தான்; (எ-று)

மாதாவினுடன் பிறந்தவன் மாதுலன். "யதோவாசோ நிவர்த் தந்தே அப்ராப்யமனஸாஸ :" எனப் பிற்காலிட்டது வேதமும். மல்லர்கள்-மற்போரில் வல்லவர். பப்பரர் - பப்பர நாட்டிலுள்ளவர் - இவர் மிலேச்ச சாதிவகையினுட்பட்டவர். நிலவறை - பூமிக்குள் வெட்டப்படும் பள்ளம். வெதிர்-மூங்கில். பிளவு-பிளப்பு : பிளக்கப் பட்ட பொருளுக்குத் தொழிலாகு பெயர்; வு-விகுதி. விதாநம் - வட சொல். மாறிலாது - (நிலவறையின்மேல் அமைத்து வைத்தது) தோன்ருதபடி. தொட்டு, தொடு-பகுதி : தொடுதல் - தோண்டுதல். வில்வேல்வாள் - உம்மைத்தொகை. (86)

87. தூதுவர் வந்து அழைக்க, கண்ணன் துரியோதனனரண்மனை சேர, அவன் பொய்யாசன மளித்தல்.

இரவிறுயி லொருவியவேந் தியாவ ரோடும்
இருந்தவைக்கச் சுதற்கொணர்வா னேவு மொற்றர்
பரிதிதொழு கடனிரப்பி யிருந்த மாலைப்
பணிந்தழைப்ப விரைந்தவன்போய்ப் படைஞ ரோடும்
வருமினைஞன் றனை நிறுவி நகைத்து மள்ளர்
வைகியபே ரவைபுகுத வஞ்சஞ் செய்வான்
கருதியமன் னவனதன்மே லிருத்தி யென்னக்
கலந்துற்ருன் றன்மகிமை காட்டு கிற்பான்.

(இ-ள்) இரவில்-இராத்திரியில், துயில் ஒருவிய வேந்து - தூக்கம் நீங்கிய துரியோதனராசன், யாவரோடும் இருந்த அவைக்கு - எல்லா ரோடும் கூடியிருந்த சபைக்கு, அச்சுதன் கொணர்வான் ஏவும்;

கிருஷ்ணனை யழைத்து வரும்படி கட்டளையிட்ட, ஒற்றர் - தூதுவர், பரிதி தொழு கடன் நிரப்பி இருந்த மாலே-(உதய காலத்தில்) சூரியனைத் தொழுதற்குரிய (ஸ்நாநம், ஸந்தியாவந்தநம் முதலிய) கடமையான அநுஷ்டானங்களைச் செய்து முடித்து எழுந்தருளி யிருந்த கிருஷ்ணனை, பணிந்து அழைப்ப-நமஸ்கரித்து அழைக்க, அவன்-அந்தக் கிருஷ்ணன், விரைந்து போய்-துரிதமாகப்புறப்பட்டுப் போய், (துரியோதனன் கட்டளையை வாயிற்காவலாளர்கூறியதனால்) படைஞரோடும் வரும் இளைஞன் தனை நிறுவி-சேனையிலுள்ளா ரோடும் வருகின்ற தம்பி சாத்தகியையும் [வெளியிலேயே] நிற்க வைத்து, நகைத்து - புன்சிரிப்புச் செய்து, மள்ளர் வைகிய பேரவை புகுத - வீரர்கள் தங்கியுள்ள பெரிய சபையில் நுழைய, வஞ்சம் செய்வான் கருதிய மன்னவன் - வஞ்சனையைச் செய்ய எண்ணிய துரியோதனராசன், அதன்மேல் இருத்தி என்ன-'அந்த ஆசனத்தின் மேல் வீற்றிருப்பாயாக' என்று சொல்ல, (கிருஷ்ணனும்) தன் மகிமை காட்டுகிற்பான் - தனது ஆற்றலின் பெருமையை (யாவரும் அறிய)க் காட்டுதற்காக, கலந்துற்றான்-அந்த ஆசனத்தின்மேல் எழுந்தருளினான்; (எ-று).

துரியோதனனை 'இரவில் துயில் ஒருவிய வேந்து' என்றது- அவன் அவ்விரா முழுவதிலும் பெரிய சதியாலோசனையில் இருந்தன னாதலால். ஒற்றர் - இங்கே தூதுவர். இளைஞன்-கிருஷ்ணனுக்குத் தம்பியாகிய சாத்தகி. கிருஷ்ணன் நகைத்தது-தன்னை வஞ்சிக்க நினைத்த பேதமையை நோக்கி யென்க. அதன்மேல் - இரவில் வெகு சிரமப்பட்டு அமைத்த ஆசனத்தின்மேல். மகிமையாவது - வேண்டு மாயின் மிகப் பலரையும் அழிக்கக்கூடிய ஆற்றல். செய்வான், காட்டு கிற்பான் - வினையெச்சம். இருத்தி-முன்னிலைவியங்கோள். (87)

வேறு.

88-92. இது முதல் ஐந்து கவிகள்—கண்ணன் விசுவரூபங் கொள்ளுதலும், அதனால் மற்றையோர் படும் பாடுகளும் கூறும்.

நிலவெறி யத்தவி சரியுற வக்கண
நெறுநெ றெனக்கொடுதாழ்
பிலவறை யிற்புக வுரகரொ டும்பர்கள்
பேதுறு மல்லர்பொரும்

பலபடை யினர்கணி சாசரர் பப்பரர்
படவுமி தித்தடிபா
தலமுற வம்பர முடியுற வெங்கணுந்
தானென நின்றனனே.

(இ-ள்) நிலவு எறிய - ஒளிவீச, அ தவிசு - அந்த (ப் பொழு) ஆசனத்தில், அரி உற-கிருஷ்ணன் அமர, அ கணம் - அப்பொழுதே, நெறுநெறென - (அந்நிலவரையை மூடிய மூங்கிற் பிளப்புக்கள்) நெறு நெறு என்று ஒலிபட முறிய, தாழ் பிலவறையில் கொடு புக - அவ் வாசனம் உள்ளிறங்கித் தன்னை நிலவறையிற் கொண்டு செல்ல, (அப்போது) உரகரொடு - நாகர்களோடு, உம்பர்கள் - தேவர்களும், பேதுறும் - அச்சத்தினால் துன்பத்தையடைந்தனர் : மல்லர் - மல்லர் களும், பொரும் பலபடையினர்கள்-போரிடவல்ல பல ஆயுதமேந்திய வீரர்களும், நிசாசரர் - இராக்கதர்களும், பப்பரர் - பப்பர நாட்டு வீரர் களும், பட - இறக்கும்படி, மிதித்தும் (அழுத்தித்) துவைத்தும், அடி பாதலம் உற - திருவடி பாதாளத்தில் செல்லவும், முடி - (தனது) திரு முடி, அம்பரம் உற-வானத்திற் செல்லவும், எங்கணும் - எல்லாவிடங் களிலும், தான் என - தான் ஒருத்தனே வியாபித்திருப்பவன் என்று சொல்லும்படி, நின்றனன் - (உயர்ந்து) நின்றருளினான் : (எ - று) என்றது, விசுவரூபங்கொண்டானென்றதாம்.

அடி பாதலமுறவே, உரகர் பேதுற்றனர் : முடி அம்பரமுறவே, தேவர்கள் பேதுற்றனர். படவும் மிதித்து - உம்மை பிரித்துக் கூட்டப்பட்டது. நெறுநெறென - ஒலிக்குறிப்பு ! சப்தாநுகரணம்.

இது முதல் ஏழு கவிகள் - பெரும்பாலும் ஈற்றுச் சீரொன்று விளங்காய்ச்சீரும், மற்றையைந்தும் விளச்சீர்களுமாகிய கழிநெடி லடி நான்கு கொண்ட அறுசீராசிரிய விருத்தங்கள். (88)

89. மகிபனி யற்றிய விரகிது நன்றென
மாயன்வெ குண்டடியால்
உகிரினு மூக்கலி னெற்றலி னக்குழி
யுட்பயில் பப்பரர்கள்
மிகுவலி மல்லர ரக்கரொ டெப்படை
வீரர்க டம்முடலம்
அகிதல முற்றும ழிந்தன சென்னிக
ளம்பர முற்றனவே.

(இ - ள்) மகிபன் இயற்றிய விரகு இது - துரியோதனராசன் செய்த வஞ்சனையிதுவாகும்: நன்று - மிகவும் அழகிது! என என்று [திருவுள்ளத்திலறிந்து], மாயன் வெகுண்டு - கண்ணபிரான் கோபங்கொண்டு, அடியால் உழக்கலின் - திருப்பாதங்களால் உதைத்து மிதித்தலினலும், உகிரின் எற்றலின்-தனது திருவடி நகங்களால் தூக்கியெறிதலினலும், அ குழியில் பயில் பப்பரர்கள் - அந்த நிலவறையிலிருந்த பப்பரர்களும், மிகு வலி மல்லர் - மிக்க பலம் பொருந்திய மல்லர்களும், அரக்கரொடு - இராட்சசர்களோடு, எ படை வீரர்கள் - படைதாங்கிய எல்லா வீரர்களும், தம் உடலம் - தமது தேகங்கள், அகிதலம் உற்று அழிந்தன - நாகங்கள் வசிக்கிற பாதாள லோகத்தில் வீழ்ந்து சிதைந்தொழிந்தன: சென்னிகள் - [அவர்களது] தலைகள், அம்பரம் உற்றன - ஆகாயத்தில் வீசியெறியப்பட்டன; (எ - று).

நன்று - பிறகுறிப்பு. அடியால் உழக்கலின் உடலம் அகிதலமுற்று அழிந்தன எனவும், உகிரின் எற்றலின் சென்னிகள் அம்பரம் உற்றன எனவும் இயைத்துப் பொருள்கொள்ள வேண்டுதலால், இது முறைநிரனிறை. வில்லிபுத்தூரரும் ''வன்பதபற்ப நகங்கொடெடுத் துயர் வண்ககனத்திடலான் என்றும், ''மலர்க்கழலால் உந்தியுதைத் துடலம் புதையப் பிலமொன்றியொளித்திடலால்'' என்றும் கூறியுள்ளமை காண்க. (உத்தி : கிருட் தூது : 197, 198). அகிதலமுற்று மழிந்தன, உம் - இசைநிறை. (89)

90\. உம்பர்ம லர்த்தரு வைந்துமு றித்தன
வொன்றுப டக்கடலின்
அம்புமு கந்தன வெண்கிரி யெற்றின
அம்பொனெ டுங்கிரியைப்
பம்பர மாடின திக்கிப மோதின
பைம்புயன் மேனிகொளுஞ்
செம்பொன ணிக்கல னங்குதி ருத்தின
சிற்சில கைத்தலமே.

(இ - ள்) சிற்சில கை தலம் - சில சில கைகளினிடங்கள், உப்பர் மலர் தரு ஐந்து முறித்தன - மேலுலகத்திலுள்ள பஞ்சதருக்

களையும் (ஐந்து விருட்சங்களையும்) முறித்துப் போகட்டன : கடலின் அம்பு ஒன்றுபட முகந்தன - கடலினீர் முழுவதையும் ஒருங்கே மொண்டெடுத்தன : எண்கிரி - எட்டுக் குலமலைகளையும், எற்றின - உடைத்தன; அம்பொன் நெடும் கிரியை - அழகிய பொன்மயமான பெரிய மகாமேருமலையை, பம்பரம் ஆடின - பம்பரம்போல எடுத்துச் சுழற்றின : திக்கு இபம் - எட்டுத் திக்கிலுமுள்ள யானைகளை, மோதின-தாக்கித் தள்ளின : பைம் புயல் - பசிய மேகம் போன்ற நிறமுடைய கண்ணனின், மேனிகொளும் - திருவுடம்பில் அணிந்துள்ள, செம்பொன் அணிக்கலன் - சிவந்த பொன்னாலாகிய ஆபரணங்களை, அங்கு - அவ்வப்போது, திருத்தின - ஒழுங்காக அணிந்தன ; (எ - று)

தேவலோகத்துப் பஞ்சதருக்கள் - அரிசந்தனம், கற்பகம், சந்தானம், பாரிசாதம், மந்தாரம் என்பன. எட்டுக்குல பருவதங்கள் - கைலாசம், இமயம், மந்தரம், விந்தியம், நிஷதம், ஏமகூடம், நீலகிரி, கந்தமாதநம் என்பன. 'அம்பொனெடுங்கிரி' என வருதற்கு ஏற்ப 'வெண்கிரி' என எடுத்து - வெள்ளி மலையான கைலாசமென்று உரைத்தலுமொன்று. அட்டதிக்கு யானைகள் - ஐராவதம், புண்டரீகம், வாமனம், குமுதம், அஞ்சனம், புட்பதந்தம், சார்வபௌமம், சுப்பிரதீகம் என்பன. பைம்புயல் - அடையடுத்த உவமவாகுபெயர். (90)

91. சங்கமு ழக்கித னுக்கள்கு னித்தயில்
சக்கர முத்தலைவேல்
வெங்கதை குந்தமு லக்கைக லப்பைவி
ளங்கும ழுக்கவண்வாள்
செங்கைக ளிற்கொடு பொங்கிவி ழிப்பொறி
சிந்திடு மெந்தைதனை
அங்கைகு வித்தம லாமுனி யேலென
அண்டர்ப ணிந்தனரே.

(இ - ள்,) சங்கம் முழக்கி - (வலம்புரிச்) சங்கங்களையொலிப்பித்து, தனுக்கள் குனித்து - விற்களை வளைத்து, அயில் - பெருவேல், சக்கரம் - சக்கராயுதம், முத்தலைவேல் - சூலம், வெம் கதை - கொடிய தண்டாயுதம், குந்தம் - கைவேல், உலக்கை—, கலப்பை-அலாயுதம், விளங்கும் மழு - சொலிக்கின்ற கோடாலிப்படை, கவண் - எறிகல்,

வாள் - வாளாயுதம் (இவற்றை), செங்கைகளில் கொடு - சிவந்த கைகளிற் கொண்டு, பொங்கி - கோபத்தினுல் கிளர்ந்தெழுந்து, விழி பொறி சிந்திடும் - கண்களில் தீப்பொறி பறக்கும், எந்தைதனை - எம் பெருமானுன கண்ணபிரானை, அண்டர் - தேவர்கள், அம் கை குவித்து - அழகிய கைகளைக் கூப்பி, அமலா! - தோஷமற்றவனே! முனியேல் - கோபியாதே, என - என்று கூறி, பணிந்தனர் - வணங்கிஞர்கள் ; (எ - று)

முத்தலைவேல் - சூலம்; 'நாவொரு மூன்றனவாஞ் சூலம்' என்ருர் வில்லியும். (உத்தி : கிருட் : தூது : 206) கவண் -எறிகல். 'விழிக்கட்டீயினன்' என்ருர் கம்பரும். (அயோத் : குகப் : 9). எந்தை - ஆசிரியரின் கிருஷ்ண பக்தி தெரிப்பது. முனியேல் - முன்னிலை யெதிர்மறை வியங்கோள். (91)

92. வாசவ லம்புரி மாலிய லாதுள
மன்னரு மாரியரும்
கேசவ துவாரகை வாசநெ டுங்கக
கேதன வேதமெலா
நீசமி யென்றுப ணிந்தன ரெண்கண
னீள்குலி சன்சுரரும்
நேசமு டன்றுதி செய்தலி னச்சின
நீங்கிய டங்கினனே.

(இ - ள்) வாசம் வலம்புரி மாலி அலாது - வாசனை பொருந்திய நந்தியாவட்டமாலையையுடைய துரியோதனராசன் நீங்கலாக, உள - சபையிலிருந்த, மன்னரும் - அரசர்களும், ஆரியரும் - வீடுமன் முதலாய பெரியோர்களும், கேசவ! - பிரமனையும் உருத்திரனையும் அங்கத்திற் கொண்டவனே! துவாரகை வாச! - துவாரகாபுரியில் நித்யவாசஞ் செய்பவனே!, நெடும் கக கேதன! - பெரிய கருடக் கொடியையுடையவனே! வேதம் எலாம் நீ - வேதங்களிற் கூறப்பட்டுள்ள நியமங்களெல்லாம் நீயே: (ஆகவே) சமி - எங்களைப் பொறுத்தருள், என்று - என்று சொல்லி, பணிந்தனர் - வணங்கிஞர்கள் : (அப்போது) எண்கணன் - பிரமனும், நீள்குலிசன் - நீண்ட வச்சிராயுதத்தை யேந்திய இந்திரனும், சுரரும் - தேவர்களும், நேசமுடன் துதி செய்தலின் - அன்போடு தோத்திரஞ் செய்தலால், அசினம் நீங்கி-அந்தக் கோபம் தணிந்து, அடங்கினன் - (தனது பெரிய அவ்விசுவரூபம்) ஒடுங்கப் பெற்ருன்; (எ - று).

வலம்புரி - நஞ்சாவட்டை: அந்த மாலையையணிந்தவன் துரியோதனன். மாலி - மாலையணிந்தோன். 'வனமாலி' என்றதும் நோக்குக. ககம் - பறவை: இங்கே, கருடன். கேதனம் - கொடி. சமி - க்ஷமி என்ற வடசொல். க்ஷமித்தல் - பொறுத்தல்: க்ஷமை என்றதும் காண்க: இது 'கமை' எனத் தமிழில் வரும். எண்கணன் - எட்டுக் கண்களையுடையவன்: எனவே, பிரமன். குலிசம் - வச்சிராயுதம். சமி - முன்னிலை வியங்கோள். (92)

93. **கண்ணன் துரியோதனனை நோக்கிக் கூறியது.**

மன்னவ நன்றிஃ துன்னிய துன்மதி
வன்மைய றக்குலமோ
டுன்னைமு டிக்குவ னைவர்ச வைக்கணு
ரைத்தமொ ழிக்குமியான்
முன்னம ரிற்படை தொட்டிடே னென்றமொ
ழிக்கும்வி டுத்தனனின்
றென்னவு ரைத்தவ னன்றியு ளார்வர
வெந்தையெ ழுந்தனனே.

(இ - ள்) மன்னவ! - துரியோதனராசனே! இஃது உன்மதி உன்னியது நன்று - இந்தச் செயலை உன் புத்தி நினைத்துச் செய்தமை நல்ல அழகிது! வன்மை அற - உன்னுடைய கொடுமையொழிய, குலமோடு - உன் சந்ததியாரோடு, உன்னை முடிக்குவன் - உன்னை யழித்திடுவேன்: (ஆனால்) ஐவர்-பஞ்சபாண்டவர்கள், சவைக்கண் உரைத்த மொழிக்கும் - சபையிடத்துச் சொன்ன சபத வார்த்தைக்கும், யான் - நான், முன்னம்-(நீ என்னைப் படைத்துணை வேண்டிய) அக்காலத்தில், அமரில் படை தொட்டிடேன் - போரில் படைக்கல மொன்றையும் (உனக்கு எதிராக) எடுக்கமாட்டேன், என்ற மொழிக்கும் - என்ற வார்த்தைக்கும் (கட்டுப்பட்டு), இன்று - இப்போது, விடுத்தனன் - (உன்னை) அழிக்காது [உயிரோடு] விட்டிட்டேன், என்ன உரைத்து - என்று சொல்லி, அவன் அன்றி உளார் வர - அந்தத் துரியோதனனைத் தவிர மற்று அங்கிருந்த அனைவரும் தன்னுடன் வர, எந்தை - எம்பெருமானாகிய கண்ணபிரான், எழுந்தனன் - (சபையைவிட்டு வெளியே) எழுந்தருளினான்; (எ.று.)

இனி, 'உன்னிய துன்மதி இஃது நன்று' என இயைத்து 'நீ நினைத்த இந்தத் தீயவறிவு நல்ல அழகிது!' என்னவுமாம். நன்று -

பிற குறிப்பு. 'நன்றிஃ' - ஆயுதம் அலகு பெற்றது. முடிக்குவன் - தன்மையொருமை. ஐவர் - தொகைக் குறிப்பு. மொழிக்குமியான் - "தன்னெழி மெய்ம்முன் யவ்வரின் இகரந் துன்னும்'' என்பது விதி. (நன் : மெய்யிற் : 3.) இந்த இகரம் அலகு பெற்றது. மொழிக்கு - நான்கனுருபு பொருட்டுப் பொருளது. உளார் - பலர்பால் வினையாலணையும்பெயர். (93)

94. கண்ணன் கர்ணனுக்கு அவன் பிறப்புணர்த்துதல்.

எஞ்சலி லானுட னேவரு மியாரையு
　　மின்னுரை யாடிநிறீஇச்
செஞ்சுடர் மைந்தனொ டங்குத னித்திது
　　செப்புவ னுதவனற்
பஞ்சவ ரைத்தரு முன்னர்க வுந்திப
　　யந்தன ளுன்னையடைந்
தஞ்சலி செய்தவ ருன்பணி செய்திட
　　அம்புவி யாள்கெனவே.

(இ - ள்) எஞ்சலிலானுடன் - அழிவில்லாத பரமனுகிய கிருஷ்ணனுடன், வரும் - (பின்னே வழிவிடுவதற்குத்) தொடர்ந்து வந்த, யாரையும் - எல்லாரையும், இன்னுரையாடி - இனிய உபசார வார்த்தைகளைக் கூறி, நிறீஇ - (தொடராது) நிற்கச் செய்து, (பிறகு) செஞ்சுடர் மைந்தனொடு - சூரியபுத்திரனுகிய கர்ணனேடு, அங்கு - அவ்விடத்து, தனித்து - தனியாகப் போய், இது செப்புவன் - இந்த விஷயத்தைச் சொல்லினன் : (அதாவது) பஞ்சவரைத் தரும் முன்னர் - பாண்டவரைவரையும் பெறுதற்கு முன்னுலே, கவுந்தி - குந்தி, ஆதவனுல் - சூரியனருளினுல், உன்னை பயந்தனள் - உன்னைப் பெற்ருள் : (எனவே) அடைந்து - நீ (அந்தக்) குந்தியைச் சேர்ந்து, அவர் - அந்தப் பாண்டவர்கள் ஐவரும், அஞ்சலி செய்து - கைகூப்பி வணங்கி, உன் பணி செய்திட - உன்னுடைய ஏவல்களைப் புரிய, (நீ) அம்புவி ஆள்க - அழகிய பூலோக முழுவதையும் (தனிப்பட) ஆளுவாய், என - என்று ; (எ - று).

திருமால் கிருஷ்ணவதாரஞ் செய்தவனுதலின் 'எஞ்சலிலான்' என்ருர். இன்னுரை - பண்புத்தொகை. ஆள்கென - வியங்கோளின் அகரவீறு தொகுத்தல். (94)

வேறு.

95. கர்ணன் கண்ணனை நோக்கிக் கூறும் உத்தரம்.

நின்னு லின்றென் பிறப்புணர்ந்தேன்
நெடியோய் ! அரசர் நிருபனழைத்
தின்னு னெனத்தேர்ந் தறிவரிய
எனக்குத் தன்வாழ் வினிதளித்தான்
அன்னுன் றனைவிட் டமர்நணித்தில்
அவர்பா லணுகி லவனியிற்சொல்
என்னு மெனக்கு நரகெனவங்
கிசைத்தான் இரப்போர் இடர்தவிர்ப்பான்.

(இ - ள்) நெடியோய் ! - பெரியோனே ! நின்னுல் - உன் சொற்களால், இன்று என் பிறப்பு உணர்ந்தேன் - இப்பொழுது என்னுடைய பிறந்த வரலாற்றையறிந்தேன் : (இதற்கு முன்னுல்) இன்னுன் எனத் தேர்ந்து அறிவு அரிய எனக்கு - நான் யார் எனத் தெளிவாக அறிதற்குமியலாத எனக்கு, தன்வாழ்வு - தன்னேடொத்த அரச வாழ்க்கையை, இனிது அளித்தான் - அன்போடு [மனப்பூர்வமாக] கொடுத்தான் : அன்னுன்தனை - அப்படி உதவி செய்தவனை, விட்டு - பிரிந்து நீங்கி, அமர் நணித்தில்-போர் நெருங்குஞ்சமயத்தில், அவர்பால் அணுகில் - அந்தப் பாண்டவர் பக்கல் சேர்ந்தால், அவனியில் சொல் என் ஆம் - பூவுலகத்தோர் என்ன பேச்சுப் பேசுவர் ? (பழி தூற்றுவரே): (மற்றும்) எனக்கு நரகு - எனக்கு நரகஞ் சித்திக்கும், என - என்று, அங்கு - அக்கண்ணனிடத்து, இரப்போர் இடர் தவிர்ப்பான் - யாசகர்களுடைய துயரத்தைப் போக்குபவனுகிய கர்ணன், இசைத்தான் - கூறினுன் ; (எ - று).

ஆரென்றறியத்தகாத என்னைத் துரியோதனன் அழைத்துஅரச வாழ்வினையீந்தான் : ஆதலின் அவனை விட்டுப் பாண்டவர் பக்கல் வந்து சேர்வனுயின் உலகோர் பழிதூற்றுவர் ; மேலும் நான் நரகத்தில் வீழ்வேன் என்று கர்ணன் கண்ணனிடம் கூறினுனென்க. 'தன் வாழ்வு அளித்தான்' என்றவிடத்து - அங்கதேசத்துக்கரசனுக முடிச்சூட்டிச் சீரும் திறமும் தனது பெருந்திருவும் அளித்தமை நினைக. நணித்து - தொழிற்பெயர்.

இது முதல் மூன்று கவிகள் - பெரும்பாலும் மூன்று ஆருஞ் சீர்கள் காய்ச்சீர்களும், மற்றை நான்கும் மாச்சீர்களுமாகிய கழிநெடிலடி நான்கு கொண்ட அறுசீராசிரிய விருத்தங்கள். (95)

96. கண்ணன் அசுவத்தாமனை மித்திரபேதஞ் செய்தல்.

மாயோ னதுகேட் டவன்மொழியை
 மருது விடுத்தங் காசிரியன்
சேயோ டொருசார் தனித்தரசன்
 சேனு பதியா காதைவர்
நீயோம் பெனமோ திரம்வீழ்த்தான்
 நிலம்பார்த் தவனு மெடுத்தளிப்பத்
தூயோன் வாங்கா தூர்கோள்கதிர்
 சூழ்ந்த தெனவங் கதைப்பார்த்தான்.

(இ - ள்) மாயோன் - கண்ணபிரான், அதுகேட்டு - கர்ணன் கூறிய வார்த்தையைச் செவிமடுத்து, அவன் மொழியை மருது விடுத்து - அவன் வார்த்தையினை மறுக்காமலேற்று அவனை விட்டு நீங்கி, அங்கு - அவ்விடத்து, ஒருசார் - ஒரு பக்கம், ஆசிரியன் சேயோடு-துரோணுசாரியன் மகனுகிய அசுவத்தாமனேடு, தனித்து-தனியாகவிருந்து, (அவனைப் பார்த்து) 'அரசன் - துரியோதன ராசனின், சேனுதிபதியாகாது - சேனைத் தலைவனுகாமல், ஐவர் - பாண்டவர்களைவரையும், நீ ஓம்பு' - [உயிர் பிழைத்திடுமாறு] நீ காப்பாற்ற வேண்டும்', என - என்று கூறி, மோதிரம் வீழ்த்தான்-(தன்) கை மோதிரத்தை(த்தானுக விழுந்ததுபோலத் தோன்ற) நழுவவிட்டருளினுன்: (அப்போது) அவனும் - அந்த அசுவத்தாமனும், நிலம் பார்த்து - (அது விழுந்த) தரையிடத்தைப் பார்த்து, எடுத்து - கையிலெடுத்து, அளிப்ப - (அவன் கையில்) கொடுத்திட, தூயோன் - புனிதனுகிய அவ்வெம்பெருமான், வாங்காது -(அதனை உடனே கையில்) வாங்கிக்கொள்ளாமல்), (வாங்குவதற்கு முன்பு என்றபடி) [அவ்வசுவத்தாமனை நோக்கி] 'கதிர் - சூரியனை, ஊர் கோள் - மண்டலம், சூழ்ந்தது - சுற்றிற்று', என - என்று சொல்ல• (அந்த அசுவத்தாமனும்) அங்கு - ஆகாயத்தினிடத்து, அதை பார்த்தான் - சூரியனது அந்த உருவத்தைப் பார்த்திட்டான்; (எ. று.)

'மருது' என்றது-எதிர் வேறுரர் மொழியும் விளம்பாமல் என்றபடி. 'சேனுபதியாகாது' என்றது - அரசன் ஒருகால் நீ சேனுபதியாவா யென்று சொன்னுலும் அதனையேற்காது மறுத்து என்றபடி. ஊர் கோள் - பரிவேஷம்: ஊர்ந்துகொள்வதுபற்றி, பரிவேஷத்திற்கு ஊர் கோள் என்று பெயர். ஊர்தல் - சூழ்தல். [பரிவேஷம் - சந்திர சூரியர்களைச் சுற்றிக் காணப்படும் ஊர்கோள் வட்டம்] (Halo around the sun or moon). ஈற்றிரண்டடிகளாற் பெறவைக்கும் விடயம் என்னவெனில்-கண்ணன் வீழ்த்திய மோதிரத்தை அசுவத் தாமன் எடுத்து அவன் கையிற்கொடுக்கலுற்ருன். பிறன் கைம் மோதிரத்தை அவன் கையினின்று தான் கையில் வாங்கிப் பூமியைத் தொட்டு ஆகாயத்தை நோக்கிச் செய்வதாகிய ஒரு சபதத்தை அசுவத்தாமன் கண்ணனுக்குச் செய்து கொடுத்ததாகப் பார்ப்பவர்க் குத் தோன்றிற்று. இங்ஙனம் கண்ணன் செய்தமை - அசுவத்தாம னிடத்தில் துரியோதனன் முதலாகிய கௌரவர் யாவர்க்கும் நம்பிக்கை கெடும்படி செய்த சூழ்ச்சிச் செயலாகும். இது மேலைக் கவியில் விளங்கும். ஓம்பு - வியங்கோள். ஊர்கோள் - முதனிலை திரிந்த தொழிலாகுபெயரென்ருவது, கருத்தாப்பொருள் விகுதி புணர்ந்து கெட்டுப் பகுதி விகாரப்பட்டதென்ருவது கொள்க. (96)

97. துரியோதனன் அசுவத்தாமனை இனி நம்பலாகாது என, அது கேட்டு அசுவத்தாமன் வருந்த, கண்ணன் விதுரன் மனை சேர்தல்.

அவையி னரச ருடனகிகே
    தைதப்பார்த் தரிக்குச் சூளுரைத்தான்
இவுளித் தாமன் றனைநம்பில்
    ஏத மெய்து மெனல்கேட்டுள்
கவலு முனிமைந் தனைவிடுத்துக்
    கருமங் கைகூ டிற்றெனப்போய்
தவாவல் விதுரன் அகத்தருந்திச்
    சார்ந்தான் கவுந்தி மனைத்திருமால்.

(இ-ள்) அவையின்-சபையிலிருந்த, அரசருடன்-மன்னர்களுடன், அகிகேது - துரியோதனன், அதை பார்த்து - [அசுவத்தாமன் கண்ணன் வீழ்த்திய மோதிரத்தை எடுத்துக் கொடுத்த] அந்தச் செயலைக் கண்டு, 'அரிக்கு சூளுரைத்தான். கண்ணனுக்குச் சபதஞ் சய்து கொடுத்துவிட்டான்: இவுளித்தாமன் தனை - அசுவத்தாமனை,

நம்பில் - (இனி) நம்புவோமாயின், ஏதம் எய்தும் - தீங்கு நேரும்', எனல் கேட்டு - என்று கூறியதைக் கேட்டு, உள் கவலும் முனி மைந்தனை - மனம் வருந்தும் துரோணன் மகனாகிய அசுவத்தாமனை, விடுத்து - (கண்ணபிரான்) விட்டு நீங்கி, 'கருமம் கைகூடிற்று' என போய் - 'நாம் நினைத்த செயல் நிறைவேறிற்று' என்று (திருப்தி யோடு) சென்று, தவா வல் விதுரன் அகத்து அருந்தி - கெடாத வலிமையினையுடைய விதுரனது மனையில் இட்ட உணவினையுண்டு, (பின்னர்) திருமால் - கண்ணபிரான், கவுந்தி மனை சார்ந்தான் - குந்திதேவியின் மாளிகையையடைந்தான் ; (எ - று)

கருமம்-அசுவத்தாமனை மித்திரபேதஞ் செய்தல். தவா-கெடாத, குன்றாத : "தவாஅப் பிறப்பீனும் வித்து" (குறள் : 361) வில்லை முறித்துப் போகட்டாலும், விதுரன் வலிமை குன்றவில்லையெனத் தெரித்தற்கு 'தவா வல்விதுரன்' என்றார். இனி 'தவா வில்விதுரன்' எனப் பாடங் கொண்டால் 'முன்னைய நிலை நோக்கிக் கூறியதென்க. (97)

வேறு.

98. கண்ணன் குந்தியைக் கர்ணனிடம் அனுப்ப, அவன் அவளை எதிர்கொண்டு உபசரிக்க, அவள் 'நான் உனக்குத் தாய்' எனல்.

மருகன்வந் திரவி மதலைபால் விடுப்ப
மடந்தைசென் றனளவ னெதிர்கொண்
டிருபத மிறைஞ்சி யழைத்துவந் திருத்தி
எய்துலென் னெனவவ ளுதயன்
அருளினீன் றதுவும் விடுத்ததும் புகல
அவன்சில ரெனக்கனை யெனவந்
துரகரி லமைத்த வுடையிறுன் புற்றென்
புருவமா யினரதை யுடுத்தால்.

(இ-ள்) மருகன் வந்து - (தனது) மருமகனான கண்ணன் வந்து, மடந்தை - குந்தி தேவியை, மதலைபால் விடுப்ப - (அவளது) மைந்தனாகிய கர்ணனிடத்து அனுப்ப, (அவள்) சென்றனன் - போயினாள்: அவன் - அந்தக் கர்ணன், அவள் எதிர்கொண்டு - அந்தக் குந்தியை எதிர்கொண்டு வந்து, இருபதம் இறைஞ்சி - இரண்டு பாதங்களிலும் வணங்கி, அழைத்து வந்து உள்ளே அழைத்துக்

கொண்டுவந்து, இருத்தி - (சிறந்ததோர் ஆசனத்திலே) வீற்றிருக்கச் செய்து, எய்தல் என் என - நீர் வந்த காரியம் ஏது என்று வினவ, அவள் - அந்தக் குந்தி, உதயன் - சூரியபகவான், அருளின் - அருளினால், ஈன்றதுவும் - (அவனைப்) பெற்றதையும், விடுத்ததும் -(பின்னர் பழிக்கஞ்சி) ஆற்றில் (பேழையில்) விட்டதையும், புகல - சொல்ல, (அதனைக் கேட்ட) அவன் - அந்தக் கர்ணன், சிலர் - சில மாதர், எனக்கு அனை என வந்து - எனக்குத் தாய் என்று சொல்லிக் கொண்டு வந்து, உரகரின் - நாகர்களால்-அமைத்த - அமைக்கப் பட்ட, உடையில் - வஸ்திரத்தால், துன்புற்று - துயரமடைந்து, என்பு உருவம் ஆயினர் - எலும்பு மாத்திரம் மிகுந்த வடிவமானார்கள் ; (ஆகவே) அதை உடுத்தால் - அந்த வஸ்திரத்தைத் தரிப்பாயானால்; (எ - று) 'உன்னை மதிப்பன்' என மேற்கவியிற் குளகமாய்த் தொடரும்.

குந்திக்கு உடன்பிறந்த முறையாகிய வசுதேவரது குமாரனாதலால், கண்ணன் அவளுக்கு மருமகனாவன். இன்னாள் பெற்ற பிள்ளையென்று ஏற்படாத கர்ணன் மிகுந்த உதாரண குணமுடையனாக இருந்ததனால் உலகத்தில் பணப்பித்துக் கொண்ட பல மாதர் இவனிடம் வந்து தாம் தாம் தாயென்று கூறிச் செல்வம் பறிக்க முயல, அதனை நோக்கிக் கர்ணன் நாகர்களை வேண்டவே, அவர்கள் தெய்வத் தன்மையுள்ள ஓராடையைத் தந்து உண்மையான தாயொருத்தியொழிய வேறு எவரேனும் தாயென்று வருபவர் இதனையுடுத்தால் இறப்பர்' என்று சொல்லிப்போக, அங்ஙனம் அவனாற் பரீட்சிக்கப்பட்டுப் பல தாய்மார் அச்சேலையால் உடலெரிப்பட்டு ஒழிந்தனரென வரலாறு காண்க. அனை-அன்னையென்பதன் இடைக் குறை. எய்தல் - தொழிற்பெயர் .

இது முதல் இச்சருக்கமுடியுமளவும் ஆறு கவிகள் - இரண்டு நான்கு ஏழாஞ் சீர்கள் மாச்சீர்களும், மற்றை நான்கும் விளச் சீர்களுமாகி வந்த எழுசீராசிரிய விருத்தங்கள். (98)

99. கர்ணனளித்த ஆடையினைத் தரித்துக் குந்தி அழியாது தாயென விருக்க, கர்ணன் களித்து நிற்கக் குந்தி சில கூறுதல்.

அன்னையென் றுன்னை மதிப்பனென் றளிப்ப
அறனதே யென்றுமெய் யணிந்து
கன்னியிற் பயந்த காலமொத் திருந்தாள்
கண்டுகண் களித்தனன் கவுந்தி

நின்னிளை யவர்க டொழவர சளிப்பான்
நீவரு கெனவவ னகையா
என்னையின் றளவுந் துணைவனு யிருத்தி
யாவருந் தொழவர சளித்தான்.

(இ - ள்) அன்னை என்று உன்னை மதிப்பன் - (எனக்குத்) தாயாவாய் என்று உன்னைக் கருதுவேன், என்று - என்று கூறி, அளிப்ப - அந்த வஸ்திரத்தைக் கொடுக்க, (குந்தி) அறன் அதே - அது தக்கதே, என்று - என்று சொல்லி, [அந்த வஸ்திரத்தை] மெய் அணிந்து - உடம்பில் தரித்துக்கொண்டு, கன்னியில் பயந்த காலம் ஒத்து இருந்தாள் - கன்னிப் பருவத்தில் (அவனைப்) பெற்ற அந்நாளிற்போல [மனம் மிக அன்புகொண்டு] இருந்தாள் : (அவ்வாறு குந்தியிருந்ததனைக்) கண்டு-பார்த்து, கண் களித்தனன்- (கர்ணன்) மகிழ்ச்சியடைந்தான் : (அப்போது) கவுந்தி - குந்தி தேவி, நான் இளையவர்கள் தொழ - உன்னுடைய தம்பியராகிய பாண்டவர்கள் (உன்னை) வணங்கிப் பணிவிடை செய்ய, அரசு அளிப்பான் - அரசாட்சி செய்யும்படி, நீ வருக என - நீ [அவர்கள் பக்கல்] வந்து சேர்வாயாக என்று கூற, அவன் - அந்தக் கர்ணன், நகையா - சிரித்து, (துரியோதனன்) இன்றளவும் - இன்றைவரையிலும், என்னை —, துணைவனுய் இருத்தி - (உயிரோடொத்த) நண்பனுக ஆக்கி, (மேலும்) யாவரும் தொழ - அனைவரும் (என்னைப்) பணிந்து வணங்கும்படி, அரசு அளித்தான் - அங்க தேசத்து ஆட்சியை (எனக்குக்) கொடுத்தான் ; (எ-று)

மதிப்பன் - தன்மையொருமை. அளிப்பான் - வினையெச்சம். வருக - முன்னிலையேவல். நகையா - உடன்பாட்டெச்சம். (99)

100. குந்தி கர்ணனிடம் வரம் வேண்டுதல்.

அச்சுயோ தனற்கே யமர்முனைச் செஞ்சோற்
றருங்கடன் கழிப்பதெற் கறமும்
மெச்சிய புகழு மென்னலு மன்னை
விசயன்மீ தொருதர மன்றி
நச்சராக் கணைமீட் டெடாமலு மற்றை
நால்வரை யடாமலு மெனக்கு
நிச்சய மாகப் புகலெனக் கன்னன்
நேர்ந்துபின் அனையொடு நிகழ்த்தும்.

(இ-ள்) அ சுயோதனற்கு - அந்தத் துரியோதனனுக்கு, அமர் முனை-போர்க்களத்தில்,செஞ்சோற்று அரும்கடன் கழிப்பது-(அவன்) செவ்வைகையாகப் போகட்டு வந்த சோற்றுக்கு உரிய கடனைத் தீர்ப்பது, எற்கு - எனக்கு, அறமும் - தருமமும், மெச்சிய புகழும் - (பிறரால்) மெச்சப்படுகின்றகீர்த்தியும், என்னலும் - என்று கூறிய வுடன், அன்னை - தாயாகிய குந்தி, விசயன்மீது - அருச்சுனன்மேல் ஒருதரம் அன்றி - ஒரு தடவை தவிர, நச்சு அரா கணை - விஷம் பொருந்திய நாகாஸ்திரத்தை, மீட்டு எடாமலும் - மறுதரம் பிரயோகிக்காமலும், மற்றவை நால்வரை அடாமலும் - ஏனைய நான்கு பேரையும் கொல்லாமலும் (இருப்பேனென்று), எனக்கு நிச்சயமாகப் புகல் என - எனக்குத் திண்ணமாகச் சொல் என்று இரு வரம் வேண்ட, கன்னன் நேர்ந்து - கர்ணன் (உடன்பட்டுக்) கொடுத்து, பின் - மேலும், அனையொடு - தாயோடு, நிகழ்த்தும் - கூறுவான் ; (எ.று) கர்ணன் கூறியதை மேலைக் கவியிற் காண்க.

செஞ்சோறு - சிறந்த அன்னம் : அறுசுவையோடு கூடிய உணவு. (100)

101. கர்ணன் குந்தியை நோக்கிக் கூறுவன.

சவ்வியசா சியினுற் சாயுநா ளனை நின்
    தனையனென் றுலகுளார்க் குணர்த்தி
இவ்வுரை யையவ ரறியில்பா ரெனக்கே
    யீவன்யான் துணைவனுக் கதனுல்
வெவ்வமர் காறும் விளம்புத லொழித்தல்
    வேண்டுமிங் கிருவர மெனலும்
அவ்வர நல்கி யவனையாங் கிருத்தி
    யடைந்துமாற் கவையெலா மறைந்தாள்.

(இ-ள்) சவ்வியசாசியினுல் - அருச்சுனனுல், சாயும் நாள் - (நான்) இறந்து விழும்பொழுது, எனை - என்னை, நின் தனையன் என்று - உம்முடைய புத்திரன் (யான்) என்று, உலகுளார்க்கு - உலகிலுள்ள மக்களுக்கு, உணர்த்தி - வெளியிட்டுத் தெரிவிப்பீராக : (மேலும்) இ உரை - (உமக்கு நான் புத்திரனென்கிற) இந்த உண்மை வார்த்தையை, ஐவர் அறியில் - பஞ்ச பாண்டவர்கள் அறிவாராகுல், பார் - இந்தப் பூவுலகை, எனக்கே - எனக்குக் கொடுத்துவிடுவர் : யான் - நான், துணைவனுக்கு ஈவன் - (என்)

சிநேகிதனுன துரியோதனனுக்குக் கொடுப்பேன்: அதனுல்—, வெவ் அமர் காறும் - கொடிய போர் முடிகிறவரையிலும், விளம்புதல் ஒழித்தல் வேண்டும் - (நீர்) உண்மையைச் சொல்லுதலை மறைத்து வைக்க வேண்டும்: (ஆக) இங்கு - இப்போது, இருவரம் எனலும்- (இந்த) இரண்டு வரங்களையும் கொடு என்றவுடன், அ வரம் நல்கி - அந்த இரண்டு வரங்களையும் கொடுத்து, அவனை - அந்தக் கர்ணனை, ஆங்கு - அவ்விடத்து, இருத்தி - இருக்கச் செய்து (விடைபெற்று), அடைந்து - (கண்ணன் இருந்த இடத்தைச்) சேர்ந்து, மாற்கு - கண்ணனுக்கு, அவை எலாம் - (கர்ணன் மனையில் நிகழ்ந்த) நிகழ்ச்சிகளையெல்லாம், அறைந்தாள் - கூறினுள்; (எ.று.)

சவ்வியசாசி = ஸவ்யஸாசீ - வலக்கையினுல் மாத்திரமன்றி இடக்கையினுலும் அம்பு தொடுப்பவன் என அருச்சுனனுக்கு ஒரு பெயர். உணர்த்தி - முன்னிலைவியங்கோள் 'விளம்புதல்' என்றதன் பின் இரண்டனுருபு தொக்கது. ஒழித்தல் - தொழிற்பெயர். (101)

102. கண்ணன் குந்தி விதுரன் இவர்களிடம் விடை பெறல்.

கேட்டெண முற்று மென்றெணி விடைமாற்
 கேட்பமா தமரிலை வருநின்
மாட்டடைக் கலமோம் பிகல்கடிந் திடலே
 மன்னற னென்றன ளென்றே
நாட்டவர்க் கெனலும் எந்தைபோய் விடைநீ
 நல்கென விதுரனு மாண்மை
காட்டனன் றென்ரு னெனச்சொலென் றுய்ப்பக்
 கனிட்டன்வா கினியொடு மெழுந்தான்.

(இ-ள்) கேட்டு - குந்தி கூறியவை கேட்டு, மால் - கண்ண பிரான், எணம் முற்றும் என்று எணி - தான் எண்ணிய எண்ணம் நிறைவேறும் என்று நினைத்து [முடிவுகட்டி], விடை கேட்ப- திரும்பு தற்கு அனுமதி வேண்ட, மாது - குந்திதேவி, அமரில் - போரில், ஐவரும் - (என் மைந்தர்களாகிய) பாண்டவரைவரும், நின்மாட்டு அடைக்கலம் - உன்னிடத்துச் சரண் புகுந்துள்ளனர்: அவர்களை (ஓம்பு) - பாதுகாப்பாயாக: (மேலும்) அவர்க்கு - அந்தப் பாண்ட வர்களுக்கு, இகல் கடிந்திடல் - பகையைப் போக்கிக் கொள்ளுதலே,

மன் அறம் என்றனள் என்று - இராச தருமமாகும் என்று (தாய்) சொன்னாள் என்று, நாட்டு-(மனத்தினில்) வலியுறுத்துவாய், எனலும்- என்று சொல்லவும், (அதனைக் கேட்ட பின்) எந்தை - எம்பெருமானாகிய கண்ணபிரான், போய் - (விதுரனிடம்) சென்று, நீ விடை நல்கு என - நீ (திரும்பிப் போதற்கு) அனுமதி கொடுப்பாயாக என்று கேட்க, விதுரனும்—, 'ஆண்மை காட்டல் நன்று என்றான்' என சொல் என்று - (போரில்) வீரங்காட்டுதலே நல்லது என்று நான் சொன்னதாகச் சொல்வாயாக, என்று, உய்ப்ப - (சொல்லிக்) கண்ணனை (விடை கொடுத்து) அனுப்ப, (அப்போது) கனிட்டன் - தம்பியாகிய சாத்தகி, வாகினியொடும் - சேனையோடும், எழுந்தான்- புறப்பட்டான் ; (எ.று)

எணம், எணி - எண்ணம், எண்ணியென்பதன் தொகுத்தல். மாடு - ஏழனுருபு. இகல் கடிந்திடல் - பகைவரையொழித்தல். ஆண்மை காட்டல்-நூற்றுவரையும் விண்ணேற்றுதல். ஓம்பு, நாட்டு முன்னிலை வியங்கோள். எந்தை-ஆசிரியரின் பக்திதெரிப்பது. (102)

103. கண்ணன் பாண்டவரிடம் மீண்டு வந்து, நடந்தவற்றை யுரைத்தல்.

தேர்புகுந் தமலன் சுயோதன னன்றிச்
சென்றவர் தமையெலா நிறுவி
நீர்புகு மகழி சூழர ணீங்கி
நெறியெலாங் கடந்துபாண் டவர்வாழ்
ஊர்புகுந் திரவி மதலைபாற் கவுந்தி
யுற்றதுஞ் சொற்றது மொழிய
சீர்புகு மற்றை வாறெலா மெடுத்துச்
செப்பினா னெப்பின்மைத் துனர்க்கே.

(இ-ள்) அமலன் - கண்ணபிரான், தேர் புகுந்து - தேரிலேறி, சுயோதனன் அன்றி - துரியோதனன் (வாராது போக அவனை) ஒழிந்து, சென்றவர் தமை எலாம் - (பின்னே) தொடர்ந்து வருகிற அரசர்களையெல்லாம், நிறுவி - (ஒருவரொருவராக) நிற்கச் செய்து, நீர் புகும் அகழி - நீர் நிறைந்துள்ள அகழி, சூழ் - நாற்புறமும் சுற்றியுள்ள, அரண் நீங்கி-கோட்டையை விட்டு நீங்கி (புறம் வந்து), நெறி எலாம் கடந்து - (வந்த) வழியெல்லாம் (மீண்டும்) திரும்பக் கடந்து போய், பாண்டவர் வாழ் ஊர் புகுந்து - பாண்டவர்கள் தங்கி

யுள்ள [உபப்பிலாவிய] நகரத்தைச் சேர்ந்து, இரவிமதலேபால்-சூரிய புத்திரனுகிய கர்ணனிடத்து, கவுந்தி உற்றதும் சொற்றதும் ஒழிய - குந்தி போனதும் (அவனிடத்துச்) சொல்லியதும் நீங்கலாக, சீர்புகும் மற்றைவாறு எலாம் எடுத்து - சிறப்பாகச் சொல்ல வேண்டிய மற்றைய நிகழ்ச்சிகளையெல்லாம் (ஒவ்வொன்ருக) விவரித்து, ஒப்பு இல் மைத்துனர்க்கு - நிகரற்ற மைத்துனர்களாகிய பாண்டவர்க்கு, செப்பினுன் - கூறியருளினுன் ; (எ.று.)

குந்தி கர்ணன்பால் உற்றதும் சொற்றதும் கூருததற்குக் காரணம் கீழே விளக்கப்பட்டது. வாறு - விதம் : இங்கே நிகழ்ச்சிகளைக் காட்ட வந்தது. மற்றை நிகழ்ச்சிகளாவன - தூது போய் துரியோதனனேடு உறுதி சொன்னது, அவன் உடன்படாது போரிடத் துணிந்தது, விதுரன் வில்லை முறித்துப் போகட்டது, வஞ்சனையாகத் தன்னை நிலவறையிற்றள்ளியது. அசுவத்தாமனைப் பேதித்தது முதலியன. அத்தை மகனை மைத்துனனென்பது முற்காலத்து வழக்கம் போலும். (03)

கிருஷ்ணன் தூது சருக்கம் முற்றிற்று.

4. படையெழுச்சிச் சருக்கம்

பாண்டவர் துரியோதனாதியர் என்னும் இருவரது சேனைகள் போரின் பொருட்டுத் தனித்தனி திரண்டெழுந்து நின்ற செய்தியைக் கூறுகின்றதொரு சருக்கம் என்பது பொருள். சருக்கம் - நூற்கூறு பாடு. படையெழுச்சி என்பது - படை எழுதல் என எழுவாய்த் தொடராகும்; படையினது எழுதல் என ஆறும் வேற்றுமைத் தொகைநிலைத்தொடராகவும் கொள்ளலாம். எழுச்சிச் சருக்கம் - எழுசியைக் கூறும் சருக்கம் என இரண்டனுருபும் பயனும் உடன் தொக்க தொகை. படை - (பகைவரைப்) படுத்தற்குக் கருவியானது என காரணப்பெயர்; படு - பகுதி. ஐ - கருவிப் பொருள் விகுதி. எழுச்சி - தொழிற்பெயர். சி - விகுதி.

இச் சருக்கத்தில் தருமபுத்திரன் பகை முடித்தற் பொருட்டுச் சேனை கூட்டின செய்கை, இராவானைக் களப்பலியூட்டியமை, பாண்டவர் சேனை பாசறையிறுத்தல், அங்ஙனமே துரியோதனன் சேனை திரட்டிப் பாசறையிறுத்தல், அணிவகுத்து இருதிறத்தாரும் போரிடக் கருதி நிற்றல் முதலிய கூறப்படும்.

வேறு.

1. கண்ணபிரான் துரியோதனன் நாடு கொடுக்க விசையாமல் போரிடத் துணிந்ததைக் கூறுதல்.

முகுந்தன் மீளவும் புகலுவான் குரவரும்
முனிவர்மூ வரும்யாரும்
தகுந்த ராதலந் தருதியென் றுரைக்கவுஞ்
சதுருபா யங்கள்காட்டி
மிகுந்த வைந்துமா நகரம்யா னிரக்கவும்
வினவிடாக் கொடும்பாவி

புகுந்து போர்பொரத் துணிந்தன னெட்டுணைப்
புவியினல் கிடேனென்றே.

(இ-ள்) முகுந்தன் - (தூது சென்ற மீண்டுவந்த) கண்ணபிரான், மீளவும் - மேலும், புகலுவான் - கூறுவான் : குரவரும் - வீடுமன் போன்ற பெரியோர்களும், முனிவர் மூவரும் - பரசுராமன், கண்வர், நாரதர் ஆகிய மூன்று முனிவர்களும், யாரும் - (அங்குச் சபையி லிருந்த அனைவரும்), தகும் - கண்ணன் கேட்பது தகுதியுடைத்தே ; (ஆகவே) தராதலம் தருதி - (பாண்டவர்க்குரிய) பூமியை அளிப் பாய், என்று உரைக்கவும் - என்று (உறுதி) கூறவும், யான் - நான், சதுர் உபாயங்கள் காட்டி - சாமபேததான தண்டமெனும் நான்கு உபாயங்களையும் கூறித் தெளியவைத்து, மிகுந்த - கடைசியாக, ஐந்து மா நகரம் இரக்கவும் - ஐந்து பெரிய ஊர்களையாசிக்கவும், வினவிடா - (காதிலும்) ஏற்றுக்கொள்ளாத, கொடும்பாவி - சொடிய துட்டன், எள் துணை புவியும் நல்கிடேன் என்று - எள்ளளவு நிலமும் கொடுக்கமாட்டேன் என்று கூறி, போர் புகுந்து - போர்க் களம் புகுந்து, பொர - சண்டையிட, துணிந்தனன் - முடிவு செய்த னன் ; (எ.று)

சதுர் உபாயங்கள் - இதன் விளக்கத்தை முன் சருக்கத்து முதற் செய்யுளுரையிற் காண்க. வினவிடா - ஏன் என்றும் கேட்காத ; காதிலேயே போட்டுக் கொள்ளாத என்றபடி. எள் + துணை = எட்டுணை "ளளவேற்றுமையில் றடவும்" என்பது விதி (நன்னூல் : மெய்யீற்றுப், 24)

இது முதல் ஐந்து கவிகள் - பெரும்பாலும் முதற்சீர் மாச்சீரும், ஆருஞ்சீர் மாங்காய்ச்சீரும், மற்றை நான்கும் விளச்சீர்களுமாகிய கழிநெடிலடி நான்கு கொண்ட அறுசீராசிரிய விருத்தங்கள். (1)

2. **கண்ணபிரான் குந்தி விதுரன் கருத்துக்களைக் கூறி, போரில் சில துன்பங்களைப் பொறுக்கவேண்டி வரும் எனல்.**

தமர்க ளென்னினு மஞ்சிடா தடுவதே
தரணிபர்க் கறனென்றே
நுமதனைப் புகன்றனள் சிலைவிது ரனவர்
நூற்றுவர் குடியேறச்

சமர்வி ளைப்பதே தருமமென் றனனது
தானெனக் குளநீவிர்
அமரி யற்றில்பா ரஞ்சில்கா லுறுமுணர்ந்
தறைமினுங் கருத்தென்ருன்.

(இ-ள்) தமர்கள் என்னினும் - நமது சுற்றத்தார்களாயினும், அஞ்சிடாது - கூசிப் பயப்படாமல், அடுவதே - கொல்லுவதே, தரணிபர்க்கு - அரசர்க்கு, அறன் என்றே - போர்த் தருமம் என்றே, நுமது அனை புகன்றனள் - உம்முடைய தாயாகிய குந்தி சொல்லி யனுப்பினுள் : (மற்றும்) சிலை விதுரன் - வில்லில் வல்ல விதுரன், நூற்றுவர் அவர் குடியேற - அந்தத் துரியோதனுதியர் நூறு பேரும் வீர சுவர்க்கத்தில் போய்ச் சேரும்படி (அதாவது பொன்றும்படி), சமர் விளைப்பதே தருமம் என்றனன் - போர் செய்தலே க்ஷத்திரிய தருமமாகும் என்று சொல்லியனுப்பினுன்: அதுதான் - அந்தக் கருத்தே தான், எனக்கு உளம் - எனக்கும் மனக் கருத்தாகும் : (ஆனுல்) நீவிர் அமர் இயற்றில் - நீங்கள் போர் செய்வீராயின், சில்கால் - சில சமயங்களில், பாரம் உறும் - (துன்பங்களைப்) பொறுக்கை ஏற்படும் : (ஆகவே) நும் கருத்து – உங்களுடைய முடிவான எண்ணத்தை, உணர்ந்து அறைமின் - நன்கு தெளிந்து கூறுங்கள், என்ருன் - என்று கண்ணபிரான் கூறி முடித்தான் ; (எ.று)

அரசர்க்குப் போர்க்குரிய தருமம் (க்ஷத்திரிய தருமம்) இன்ன தெனப் பெறவைக்கப்பட்டது. பாரம் - பொறுக்கை : (bearing). அனை - அன்னையென்பதன் இடைக்குறை. 'குடியேற' - பிறிதின விற்சி. அறைமின் - முன்னிலையேவற்பன்மை. (2)

3. தருமன் தன் பக்கல் இன்னும் வாராத நண்பரசர்க்கெல்லாம் செய்தி தெரிவிக்க, அவர்கள் தம்படையொடும் வந்து திரளுதல்.

விடங்கொ ணுகணை துறந்தவ னிவ்வணம்
விளம்பமற் றவைகேட்டங்
கடங்கொ ணுவெகு ளிக்கொடு முடிப்பன்யான்
அரும்பகை யினியென்னு
தடங்கொண் மாமுர சுயர்த்தவ னினம்வராத்
தரணிபர் தமக்கெல்லாம்

முடங்கல் போக்கினன் யாரும்வந் திறுத்தனர்
முரண்கொணாற் படையோடும்.

(இ-ள்) விடங் கொள் நாகணை துறந்தவன் - விஷத்தைக் கொண்ட பாம்புப் படுக்கையை நீத்துப் பூவுலகத்து வந்தவதரித்தவனாகிய கண்ணபிரான், இவணம் விளம்ப - இங்ஙனம் கூற, அவை கேட்டு - அந்த வார்த்தைகளைக் கேட்டு, அங்கு - அப்போது அவ்விடத்து, அடங்கொணா - அடக்கமுடியாத, வெகுளி கொடு - கோபங்கொண்டு, யான் - தருமனாகிய நான், இனி - இனிமேல் (சற்றும் தயங்காது), அரும்பகை முடிப்பன் என்று - அரிய பகைவரை யழிப்பேன் என்று சொல்லி, தடம் கொள் மா முரசு உயர்த்தவன் - இடமகன்ற பெரிய முரச வாத்தியத்தைக் கொடியிலெழுதித் தூக்கியவனாகிய தருமபுத்திரன், இனம் - இன்னும், வரா - தம் பக்கல் வந்து சேராத, தரணியர் தமக்கு எல்லாம் - மன்னர்களெல்லார்க்கும், முடங்கல் போக்கினன் - ஓலைகளையெழுதியனுப்பினான்: யாரும் - (ஓலையைப் பெற்று) அனைவரும், முரண் கொள் நாற்படையோடும் வந்து இறுத்தனர் – வலிமை கொண்ட (தமது) நால்வகைச் சேனையோடும் (தருமனிடம்) வந்து தங்கினர்: (எ.று)

நாகம்+அணை - நாகவணை: மவ்வீறொற்றழிந்து உயிரீறொப்பப் புணர்ந்து வகரவுடம்படுமெய் பெற்று வரவேண்டியது, இங்கு அந்த வகரவுடம்படுமெய்கெட்டு 'நாகணை' என நின்றது. சர்ப்பங்களுக்குத் தலைவனான ஆயிரந் தலைகளையுடைய ஆதிசேஷன் திருமாலுக்குப் படுக்கையாதலை ''புல்கும் அணையாம் திருமாற்கு அரவு'' என்ற பொய்கையாழ்வார் பாசுரத்தாலும் அறியலாம். 'நாகணை துறந்து' என்றது - திருப்பாற்கடலிலே தமது மூலகாரணமான வடிவம் நிற்க, தேவர்கள் வேண்டுகோளால் அதினின்று அமிசமாய் இங்கே அவதரித்ததை. இங்கு அவதரித்தவிடத்தில் ஆதிசேஷன் பலராமனாகத் தோன்றி உடனிருந்தாலும், தமக்கு ஏற்ற திருப்பள்ளிமெத்தையாகும் தன்மையில்லையாதலால், 'நாகணை துறந்து' என்றது. இது திருமாலின் ஒன்பதாம் அவதாரம். முரசு - அதன் வடிவமெழுதிய கொடிக்கு இருமடியாகுபெயர். தமது வெற்றிக்கு அடையாளமாகவும் மங்களகரமாகவும் முரசத்தின் வடிவைத் தருமன் கொடியிற் கொண்டனன் போலும். இனம் - இன்னம் என்பதன் இடைக்குறை. அடங்கொணா. வரா - ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சம். கொள் + நாகணை = கொணாகணை: வருமொழி நகரம் ணகரமாகத் திரிய, நிலைமொழியீற்று ளகரங்கெட்டது; ''ஈரிடத்தும் வருநத் திரிந்தபின் மாய்வும்'' என்றது விதி. (நன் : மெய்யிற் : 26)

(3)

4. தருமன் தனக்கு அரசுரிமை கொடாமல் துரியோதனன் மறுத்துப் போர்க்குடன்பட்டதைக் கூற, வந்த அரசர்கள் தருமனுக்குத் தைரியங் கூறுதல்.

தேய வேந்தரை நோக்கிமெய் விரதனும்
செப்புவான் யான்றூது
மாய வன்றனை விடுத்தனன் சுயோதனன்
மண்தர விசையாமல்
பாய மர்க்குடன் பட்டன னுங்களாற
பகைமுடித் தடல்வாகை
வேயு வேனென வவரவர் வெகுண்டடல்
விளம்பிவெல் குவமென்றார்.

(இ-ள்) மெய்விரதனும் - தருமபுத்திரனும், தேயவேந்தரை நோக்கி - [துணைபுரிய வந்த பல] தேச மன்னர்களையும் பார்த்து, செப்புவான் - கூறுவானாயினன் : யான் - நான், மாயவன்தனை - கண்ணபிரானை, தூது விடுத்தனன் - (துரியோதனனிடத்துத்) தூதுவனாகச் செய்தி சொல்லியனுப்பினன் : (அந்தச்) சுயோதனன் - துரியோதனன், மண்தர (எனக்குரிய) நாட்டினைக் கொடுக்க, இசையாமல் - உடன்படாமல், பாய் அமர்க்கு உடன்பட்டனன் - தாவிச் செய்யும் போருக்கு இசைந்துள்ளான் : (ஆகவே) நுங்களால் பகைமுடித்து - உங்கள் துணையால் (என்) பகைவனையழித்து, அடல் வாகை வேயுவேன் - அவ்வெற்றிக்கு அடையாளமான காட்டு வாகைப் பூமாலையைச் சூடுவேன், என - என்று சொல்ல, [அதனைக் கேட்ட] அவ்ரவர் - அந்த மன்னர்கள், வெகுண்டு - கோபித்து, அடல் விளம்பி – தமது வலிமையைப் பேசி, வெல்குவம் என்றார் - நாம் செயிப்பது திண்ணம் என்று கூறினார்கள் ; (எ.று)

அடல் - (பகைவரைக்) கொல்லுதல். வாகையென்னும் ஒரு மரத்தின் பெயர் - அதன் மலரினாலாகிய மாலைக்கு இருமடியாகு பெயர். வாகைப் பூமாலை பகைவரை வென்றோர் சூடுவதாதலை "வெட்சி நிரைகவர்தல்........ ....மிக்கோர், செருவென்றது வாகையாம்'' என்றதனாலும் அறிக. வேயுவேன் – தனித்தன்மைப் பன்மை. வெல்குவம் - உளப்பாட்டுத் தன்மைப்பன்மை. (4)

5. **தருமன் சுவேதனைச் சேனாபதியாக்கல்.**

முரச கேதவர் சொற்றசொற் களிற்பகை
முடித்தனன் போலாகி
உரைசெய் மச்சர்கோ னுயிர்த்தருள் சுவேதனை
யொலிகட லேயொத்த
அரசர் தானையக் குரோணிக ளேழினுக்
கதிபனாய் முடிசூட்டிக்
குரைசெய் பல்லிய மெழச்சமர் செய்குவான்
குறித்திருந் தனனிப்பால்.

(இ-ள்) அவர் சொற்ற சொற்களில் - அந்த அரசர்கள் கீழ்ச் சொன்ன வார்த்தைகளால், முரசகேது - தருமபுத்திரன், பகை முடித்தனன் போலாகி - பகைவர்களையொழித்தவன்போலக் கவலை யற்றவனாய், உரைசெய் - யாவராலும் புகழப்படுகின்ற, மச்சர்கோன் - விராடராசன், உயிர்த்தருள் சுவேதனை - பெற்றெடுத்த சுவேதனெ பவனை, ஒலி கடலே ஒத்த - சப்திக்கின்ற கடலைப்போலப் பரந்துள்ள, அரசர் தானை - மன்னர்களின் படையாகிய, அக்குரோணிகள் ஏழினுக்கு - ஏழு அக்ஷௌஹிணி தொகையினுக்கும், அதிபனாய் முடிசூட்டி - சேனாபதியாய் நியமித்து, குரைசெய் பல்லியம் எழ - ஒலிக்கின்ற பலவகை வாச்சியங்களும் முழங்க, சமர் செய்குவான் - போரினை நிகழ்த்த இருப்பதை, குறித்திருந்தனன் - வெளிப்படுத்தி யிருந்தான்: (அப்போது) இப்பால்-இந்தப் பக்கத்து (துரியோதனன் பக்கத்து) ; (எ.று)

அக்குரோணி-அக்ஷௌஹிணி என்னுந் தொகை. இவ்வளவினது என்பதைச் சஞ்சயன் தூது சருக்கத்துச் செய்யுள், 37, ஆம் உரை யால் தெளியலாம். (5)

வேறு.

6. தனக்குப் போர்த் துணையாகும்படி துரியோதனன் வாராத மன்னர்க்கெல்லாம் செய்தி தெரிவிக்க, அவர்கள் தமது படை களோடும் வந்துதிரள, பதினொரு அக்குரோணிக்கும் வீடுமனைச் சேனாபதியாக்குதல்.

மன்னரர சரிபோன பின்போர் செய்வான்
வந்தவர்க ளன்றியினம் வாரார்க் கெல்லாம்

பன்னுதிரு முகம்விடுத்தான் யாரும் நான்கு
படையொடுமேழ் கடலெனவே படர்ந்து
சூழ்ந்தார்
தன்னுடைய பதினோக் குரோணி தானை
தனக்கதிப னதிதனையன் றன்னை யாக்கி
அன்னவனைப் பணிந்துகளப் பலியார் நாள்யா
தறையெனமற் றவனறைந்த வவர்பா லேகி.

(இ-ள்) மன்னர் அரசு - துரியோதனராசன், அரி போனபின்-கண்ணபிரான் திரும்பிய பின்பு, போர் செய்வான் வந்தவர்கள் அன்றி-போரிடுதற்குத் துணையாக (முன்னரே) வந்திருந்த மன்னர்கள் தவிர, இனம் வாரார்க்கு எல்லாம் - இன்னும் வந்து சேராத மன்னர்களுக்கெல்லாம், பன்னு திருமுகம் விடுத்தான் - சிறப்பித்துச் சொல்லப்படுகின்ற ஓலைகளைப் போக்கினான்: யாரும் - எல்லா தேசத்தரசர்களும், நான்கு படையொடும் - (தத்தமது) நாற்படைகளோடும், ஏழ்கடல் என - சப்த சமுத்திரங்கள் என்னும்படி, படர்ந்து - எங்கும் பரவி, சூழ்ந்தார் - (நாற்புறமும்) நிறைந்து நின்றார்கள்: (அவ்வமயம் துரியோதனன்) தன்னுடைய பதினோர் அக்குரோணி தானை தனக்கு - தனது பதினொரு அக்ஷௌஹிணி சேனைகளுக்கும், அதிபன் - தலைவனாக, நதி தனையன் தன்னை ஆக்கி-கங்காபுத்திரனாகிய வீடுமனை நியமித்து, அன்னவனை பணிந்து - அவனை வணங்கி, 'களப்பலி யார் - போர்க்களத்தில் (போர் தொடங்குதற்கு முன் நம்மால்) பலி கொடுக்கப்படுதற்குத் தகுந்தவர் எவர்? நாள் யாது - நல்ல முகூர்த்தம் எது? அறை - சொல்லுவாயாக', என - என்று வினவ, அவன் - (அங்ஙனமே) அவ்வீடுமன், அறைந்த - சொன்ன, அவர்பால் - அந்த வீரர்களிடம்; ஏகி - சென்று; (எ.று.)

தனக்கு வில்வித்தைக் கற்பித்த ஆசிரியனாகிய பரசுராமனையே தோல்வியடையச் செய்தவனாதலின், வீடுமன் பராக்கிரமம் விளங்கும். எனவே, அவனைத் துரியோதனன் சேனாபதியாக்கினானென உணர்க. களப்பலி-போர்க்களத்துக்குரிய தேவதைக்கு (காளிக்கு)க் கொடுக்கும் பலி. பலி - தேவர்க்கு இடும் உணர்வு. சிறந்ததொரு முகூர்த்தத்திற் சிறந்த ஒரு வீரனைப் போர்க்களத்திற்குரிய தேவதைக்கு முன்னர்ப் பலி கொடுப்பவர், தவறாமல் வெற்றி பெறுவர் என்றல் மரபு. 'நாள் செய்வது நல்லோருஞ் செய்யார்' என்றபடி சிறந்த நேரத்தில் தொடங்கின காரியம் தவறாது பயன் தருமாதலால்

'நாள் யாது அறை' என்றுன். நாள் - நல்லதொரு வேளை : முகூர்த்தம். அவர் - என்றது சகதேவனையும், இராவானையும் குறிக்கும். செய்வான் - வினையெச்சம். திருமுகம் - ஓலைக்கு மங்கலவழக்கு. என - உவமவுருபு. அறை - முன்னிலைவியங்கோள். அறைந்த - பெயரெச்சம்.

இது முதல் மூன்று கவிகள் - பெரும்பாலும் ஒன்று இரண்டு ஐந்து ஆருஞ்சீர்கள் காய்ச்சீர்களும், மற்றைய நான்கும் மாச்சீர்களுமாகிய கழிநெடிலடி நான்கு கொண்ட எண்சீராசிரிய விருத்தங்கள். (6)

7, **சகதேவன் களப்பலிக்கு நல்ல முகூர்த்தம் நிச்சயிக்க, இராவான் தன்னைப் பலியிட இசைய, கண்ணன் சதுர்த்தசியை அமாவாசையாக மாற்றி, முதலில் தன்னைப் பலியிடும்படி தருமனுக்குக் கூறுதல்.**

சாதவே ளுற்றனுவின் கதிரைத் திங்கட்
சார்ந்தபக லிரவில்பலி தரநாட் கேளா
மாதேவ னிகரரவான் றனைக்கேட் டன்னேன்
மாதுபலிக் கிசையவிறை மகிழ்ந்து மீண்டான்
போதேவின் வேட்பயந்த புயலி தோர்ந்து
புகறிதிபன் னுன்கிலுவாப் புகச்செய் தெல்லாங்
கூதேவர் புகமைவர்க் குணர்த்தித் தன்னைக்
கொடுத்திடுமின் பலியெனலும் அரவான் கூறும்.

(இ-ள்) சாதேவனல் - சகதேவனிடத்து, தனுவில் - தநுர் [மார்கழி] மாசத்தில், கதிரை திங்கள் சேர்ந்த பகல் - சூரியனைச் சந்திரன் கூடிய நாளில் [அமாவாசையில்], இரவில் - இராத்திரியில், பலிதர - களப்பலி கொடுத்ததற்கு, நாள் கேளா - நல்ல முகூர்த்தத்தைக் கேட்டறிந்து கொண்டு, (பின்னர்) மாதேவன் நிகர் அரவான் தனைக் கேட்டு - சிவபெருமானை யொத்த (பராக்கிரமமுடைய) இராவானை (க்களப்பலியாதற்கு)க் கேட்டு, அன்னேன் - அந்த இராவான், மாது பலிக்கு இசைய - காளிதேவிக்குப் பலியாதற்குச் சம்மதிக்க, இறை மகிழ்ந்து- துரியோதனராசன் களித்து, மீண்டான் - தன் அரண்மனை திரும்பினுன் : (இஃது இங்ஙனுக) போது ஏவில் வேள் - பூக்களை அம்பர்கக் கொண்டு வில்லேந்திய மன்மதனை, பயந்த - பெற்ற, புயல் - மேகவண்ணனுகிய திருமால் (கண்ணபிரான்), இது ஓர்ந்து - இந்தத் துரியோதனன் செயலையறிந்து, புகல் திதி பன்னுன்கில் - பேசப்படுகின்ற (அமாவாசைக்கு முந்தின

தினமான) சதுர்த்தசி திதியினின்றைக்கே, உவா புக செய்து - அமாவாசையை யுண்டாகச் செய்து, எல்லாம் - இவ்வாறு தான் செய்த திதிமாற்றச் செயல்களுக்கெல்லாம் உடனிருந்து உதவிய, கூ தேவர் - பூதேவராகிய பிராமணர்களின், புகழ் - மேன்மையை, ஐவர்க்கு உணர்த்தி - பாண்டவர்கட்கு விளங்கச் சொல்லி, தன்னைப் பலிகொடுத்திடுமின் எனலும் - தன்னையே களப்பலியாகக் கொடுத் திடுங்கள் என்று கூறலும், (அது கேட்ட) அரவான் - இராவான், கூறும் - கூறலானான். (எ.று) இராவான் கூறியதை மேலைக் கவியிற் காண்க.

துரியோதனனுக்குச் சகதேவன் நாள் வைத்துக் கொடுத்ததை யும் அவனுக்கு இராவான் களப்பலிக்கு உடன்பட்டதையும் கண்ண பிரான் அறிந்து, அந்நாளை மாற்றவும், இராவானைத் தமதாக்கிக் கொள்ளவும் கருதி, முந்தின நாளாகிய சதுர்த்தசியன்றைக்கே அமாவாசையை வரும்படி தமது திவ்ய சக்தியால் செய்து, பிராமணர்களை நோக்கி இன்றைக்கே அமாவாசையென்று கூற, யாவரும் கண்ணன் கட்டளைப்படியே அதனைக் கொண்டாடினர். அப்பொழுது, சூரிய சந்திரர் பார்த்து 'இதென்ன காரணம்?' என்று தமக்குள் ஆலோசித்துக் கண்ணபிரானை ஒருங்கே வந்தடைந்து 'இன்றைக்கு எப்படி அமாவாசை' என்று வினவ, அவ்வெம்பெரு மான் 'அமாவாசையென்பது, நீங்களிரண்டு பேரும் கூடுந் தினமன்றோ? நீவிர் இருவரும் இப்பொழுதே கூடிவந்த இத் தினத்தை அமாவாசையென்று சொல்லத் தடையென்ன?' என்று விடைகூற, அவர்கள் உவந்து சென்றனர் என்பது இங்கே அறிய வேண்டிய விவரம். தனு - வில் : வில்வடிவமானதோர் இராசி. அதிற் சூரியன் பிரவேசிக்கும் மாதம் அதனால் தநுர்மாதம் எனப் பெயர்பெறும். சந்திரன் தனது பதினாறு கலைகளுள் இரண்டு கலை மாத்திரம் மிகுந்தவனாய்ச் சூரிய கிரணங்களில் மறைகிற தினமே அமாவாசையாதலால், ''கதிரைத் திங்கட் சார்ந்த பகல்' என்றார். 'இராவான்' என்ன வேண்டுவதை 'அரவான்' என்பது ஊர் வழக்கு. அருச்சுனனுக்கும் நாக கன்னிகை உலூபிக்கும் பிறந் தவன். தந்தையாகிய அருச்சுனனினும் பல மடங்கு பல பராக் கிரமங்களிற் சிறந்தவனாதலின் 'மாதேவன் நிகர்' என்றது. ஏ - அம்பு, போது – பூ. போது ஏ - புஷ்பபாணம். இது மன்மதனுக் குரியது. மன்மதன் திருமாலின் புதல்வன். கண்ணபிரான் மகன் பிரத்யும்நன் : அவனை மன்மதன் அவதாரம் என்பர். புயல் - உவமவாகுபெயர். பன்னான்கு - பதினான்கு என்பதன் மரூஉ. உவா - பதினைந்தாம் திதி. இங்கு இடத்திற்கேற்ப அமாவாசையாயிற்று. கூ - பூமி : ''கூநின்றளந்த குறளென்ப'' (வள்ளுவமாலை : 14).

கூதேவர் - பூதேவர், அந்தணர், பிராமணர். வானுலகத்துத் தேவர்போலப் பூமியில் விளங்குபவரென்ற காரணத்தால் பிராமணர் பூதேவரெனப்பட்டார். "கூதேவர் புகழை ஐவர்க்குக் கிருஷ்ணன் உணர்த்தியது" என்றவிடத்துப் பெருந்தேவனுர் பாரதத்தின்படி அறியவேண்டிய விவரம் .—"நீதியா நின்ற பதினுலா நாள்தன்னை, ஆதியமாவாசை யாக்கலாஞ் - சோதிமதி, ஆதித்தனேடே யமர்ந் திருக்கும் வேதியராற், சாதித்துக் கொள்வதுகாண் சார்வு" என்று திருவுள்ளம்பற்றி, கண்ணபிரான் பன்னிராயிரம் பிராமணர்க்கு மகாதானங்கற்பித்து அவர்களை வரவழைத்து சதுர்த்தசியை அமாவாசையாக்கித் தரவேண்டும் என்றும், "தேவராவாருந் திசை பாலராவாரும், மூவராய் நிற்கின்ற மூர்த்தியுமாய் - யாவருந்தான் கொந்தலருஞ்சோலைக் குருநாட்டுப் பூசுரர்கள், அந்தணரா லன்றே அவர்" என 'பிராமணர் உச்சரித்த மந்திரமன்றே தெய்வம்: உங்கள் பணி மறுக்குந் தன்மையுடையார் யாவரேனும் உண்டோ?' என்றும் உரைக்கக் கேட்டு, அந்தணாளர் அந்த ஸ்ரீவாசுதேவன் பணியை மருது தலைமேற்கொண்டு ஒருங்கு கூடி அநேக மந்திரங் களை உத்கோஷித்து அமாவாசைக்குரிய சடங்குகளுடனே சூரிய சந்திரரைத் துதிக்குமளவிலே, அந்தச் சந்திராதித்தர்களுந் தம்மிற் கூடி 'இது என்கொலோ' என்னுமளவில், சதுர்த்தசியும் அமாவா சையாயிற்று அப்பொழுது"—என்பது. ["தெய்வாதீனம் ஜகத் சர்வம், மந்த்ராதீநந்து தைவதம், மந்த்ரம் ப்ராம்மணுதீநம், ப்ராம் மணு மம தேவதா" என்று கண்ணன் கூறியதை நினைக.] துரியோ தனன் நமக்கு முன்னே பலிகொடுத்துவிட்டால், சயம் அவனதே யாய்விடும்: ஆதலின் 'உத்தமவிலக்கணமுடையவனைப் பலி கொடுக்க வேண்டும்' என்னும் முறைமைப்படி எல்லாவிலக்கணமும் அமைந்துள்ள என்னையே இப்பொழுது துரிதமாகப் பலிகொடுத் திடுங்களென்று கபடமாகக் கூறியருளினுன் கண்ணபிரானென்க. கேளா - உடன்பாட்டெச்சம் மாது - காளி: துர்க்கை: பார்வதியின் அம்சமான பெண். கொடுத்திடுமின் - முன்னிலையேவற்பன்மை. கூறும் - செய்யுமென்முற்று. (7)

8. இராவான் தன்னைக் களப்பலியிடும்படி உடன்பட்டுக் கண்ண னிடம் தான் சில நாள்வரையில் உயிரோடிருக்கும்படி வரம் வேண்டி, தன்னைப் பலியிடுதல்.

பன்னகக்கே தனற்கிசைந்தேன் அன்றின் றென்னைப்
பலியிடுமி னிடில்சமர்சிற் பகல்யா னுய்ய

சென்னியரு ளெனவரந்தந் தரியொன் றார்க்குத்
தெரியாம லவ்விரவிற் சென்று நாக
கன்னிமக னுடற்கொய்து காளிக் காங்கே
களப்பலிதந் தமர்வென்றி கருதிப் போற்றி
அன்னசுத னுடன்கோயில் நண்ணிக் கங்குல்
அகன்றபினர் புலரிகட னனைத்துஞ் செய்தார்.

(இ-ள்) பன்னக கேதனற்கு - பாம்புக் கொடியையுடைய துரியோதனனுக்கு, அன்று இசைந்தேன் - (அவன் என்னை வேண்டிக் கொண்ட) அந்தச் சமயத்தில் (பலிக்கு) உடன்பட்டேன்: இன்று - இப்பொழுது, என்னை - (உங்களுக்கு நேர்ந்த) என்னை, பலி இடுமின் - பலியிடுங்கள்; இடில் - பலியிட்டாலும், சமர் - போரை, சில் பகல் - சில தினங்கள் பார்க்கும்படி, யான் - அடியேன், உய்ய - பிழைத்திருக்குமாறு, சென்னி அருள் - தலையை மாத்திரம் விட்டு வையும், என - என்று வேண்ட, அரி - கண்ணபிரான், வரம் தந்து- அந்த வரத்தைக் கொடுத்து, (பின்) ஒன்றார்க்குத் தெரியாமல் - பகைவர்களுக்குத் தெரியாதபடி, அ இரவில் - அந்த இராத்திரியில், சென்று - தங்கள் சென்ம தேசமாகிய குருநாட்டிற்குப் போய், காளிக்கு - துர்க்கைக்கு, நாககன்னி மகன் உடல் கொய்து - உலூபி யென்ற நாக கன்னிகையின் குமாரனாகிய இராவானின் உடம்பின் உறுப்புக்களை யெல்லாம் [அறுக்கவேண்டிய முறைமைப்படி] (வாளால்) அறுத்து, ஆங்கு - அந்தக் காளிகோயிலில், களப்பலி தந்து - களப்பலி கொடுத்து, (மேலும்) அமர் வென்றி கருதி போற்றி- போரில் வெற்றி பெறுதலையெண்ணிக் காளியைத் துதித்து, அன்ன சுதனுடன் - களப்பலி யூட்டப்பட்ட அந்தக் குமரனுடன், கோயில் நண்ணி - தாம் தங்கியிருந்த மனைக்கு வந்து, கங்குல் அகன்ற பினர்- இரவு நீங்கிய பின்பு, புலரி கடன் அனைத்தும் செய்தார் - காலைக் கடன்களெல்லாம் செய்து முடித்தார்கள்; (எ.று.)

அமாவாசையில் தான் பலியாவதாக முன்பு துரியோதனனுக்கு வாக்களித்தபடி அமாவாசை வந்தும் பலிகொடுத்தற்குத் துரியோதனன் வரக்காணாமையால், இராவான் இப்பொழுது பாண்டவர்க்குப் பலிக்கு உடன்பட்டான். சிற்பகல் யான்உய்ய சென்னி யருள் என்றது - எட்டாம் நாள் போர் முடிவுவரையில் என்பது மேல் பீஷ்ம பருவத்து எட்டாம் போர்ச் சருக்கத்தால் பெறப்படும். நாககன்னிகை மகனான இவன், தலையின்மேற் படத்தோடு கூடிச் சிறிது பாம்பு வடிவம் உடையன். (8)

வேறு.

9. **கண்ணன் சேனையோடு எழும்படி சுவேதனுக்குக் கட்டளையிட, சுவேதன் பாண்டவர் சேனைவீரரை வகுத்தமையைக் கூறுதல்.**

இரண்டு கவிகள் - ஒருதொடர்.

சேனை யோடுநீ யெழுக வென்றரி
செப்ப வொப்பில்சு வேதனத்
தானை மன்னரி லதிர தாதிபர்
தானும் வீமனும் விசயனும்
மான வாளபி மன்னு மாரதர்
மன்னு திட்டிரன் சாத்தகி
தேன றுந்தொடை திட்ட தூய்மன்சி
கண்டி மச்சர்கா வலனுமே.

(இ-ள்) அரி-கண்ணபிரான், சேனையோடு நீ எழுக என்று செப்ப - படையோடு நீ புறப்படுவாயாக என்று சொல்ல, (அதனைக் கேட்டு) ஒப்பு இல் சுவேதன் - நிகரற்ற சுவேதனாகிய சேனாதிபதி, அ தானை மன்னரில்-அந்தச் சேனை மன்னர்களுள், அதிரத அதிபர் - முழுத்தேரரசர்கள், தானும் - தலைவனாகிய தானும், வீமனும் - வீமசேனனும், விசயனும் - அருச்சுனனும், (மற்றும்) மானம் வாள் அபிமன்னு - பெருமை பொருந்திய வாளில் வல்ல அபிமன்யுவும் ஆக, மாரதர் - மகாரதர்கள், மன் உதிட்டிரன்-அரசனாகிய தருமபுத்திரன், சாத்தகி—, தேன் நறும் தொடை திட்டதூய்மன் - தேன் பெருகும் வாசனையுள்ள மாலையையணிந்துள்ள திருஷ்டத்யும்நன், சிகண்டி—, மச்சர் காவலனும் - விராடராசன் ஆகிய இவர்களும் ஆக ; (எ.று.) மேற்கவியிலுள்ள 'ஆக' என்பது, ஈண்டும் ஆங்காங்கு எடுத்துக் கூட்டப்பட்டது.

சுவேதன், வீமன், விசயன், அபிமன்-இந்நால்வரும் அதிரதாதிபர்கள். உதிட்டிரன், சாத்தகி, திட்டத்துய்மன், சிகண்டி, விராடராசன் - இந்த ஐவரும் மகாரதாதிபர்கள்.

தேர்வீரர் நால்வகைப்படுவர் - அதிரதர், மகாரதர், சமரதர், அர்த்தரதர் என. இவர்களுள், அதிரதர்-முழுத் தேரரசர் ; அவராவார் - தாம் ஒரு தேரில் ஏறிநின்று தம் தேர் குதிரை சாரதிகளுக்கு அழிவுவராமற் காத்துப் பலவாயிரந்தேர்வீரரோடு எதிர்த்து வேறு

துணையில்லாமலே போர்செய்து வெல்லும் வல்லமையுடையார். அவரிற் சிறிது தாழ்ந்தவர் - மகாரதர். இவர் பதினாயிரந்தேர் வீரரோடு பொருபவர். சமரதர் - ஒரு தேர்வீரனோடு தாமும் ஒருவராய் எதிர்க்கவல்லவர். அர்த்தரதர் - அவ்வாறு எதிர்க்குமளவில் தம் தேர் முதலியவற்றை இழந்து போம்படியானவர் இவர் இருவர் சேர்ந்தால் ஒரு சமரதனுக்கு ஒப்பாவர். [அடுத்த செய்யுளில் இந்தக் கடைசியிரு வகையினரும் குறிக்கப்படுவர்.] மாரதர்-மகாரதர். உதிட்டிரன் = யுதிஷ்டிரன் : போரில் நிலையாக நிற்பவன் என்று காரணப்பொருள்படும். திட்டத்துய்மன் = த்ருஷ்டத்யும்நன்: காம்பீரியமும் பாதுகாத்தல் தொழில் வன்மையுமுடையனாய் ஆற்றல் முதலியவற்றோடு சிறப்பாகப் பிறந்தவனென்னுங் காரணம் பற்றியதென்று வியாச பாரதம் கூறுகின்றது. வீமன்-பீமன் : பகைவர்க்குப் பயங்கரனானவனென்று பொருள்.

இதுமுதல் ஆறுகவிகள்-பெரும்பாலும் ஒன்று மூன்று ஐந்தாஞ் சீர்கள் மாச்சீர்களும், மற்றை நான்கும் விளச்சீர்களுமாகிய கழிநெடிலடி நான்குகொண்ட எழுசீராசிரிய விருத்தங்கள். (9)

10. சமர தாதிபர் யாக சேன னு
தாம னுத்தமோ சாவுமே
லமரு மர்த்தர தர்க்கு நாயகர்
அரக்கி மைந்தன் மருத்துவர்
குமர ராகவங் கணி வகுத்தமர்
குருநி லத்திடை செய்குவான்
யமன ருட்சுத னனிக மன்னரை
யெழுமி னென்னவி யம்பினான்.

(இ-ள்) சம ரதாதிபர் - சமரதத் தலைவர்கள், யாகசேனன் - துருபதராஜன், உதாமன் - யுதாமந்யு, உத்தமோசாவும்-உத்தமோசா என்னும் இவர்களும் ஆக, மேல் - இதற்குமேல், அமரும் - விரும்பப் படுகின்ற, அர்த்தரதர்க்கு நாயகர் - அர்த்தரதத் தலைவர்கள், அரக்கிமைந்தன்-கடோற்கசன், மருத்துவர் குமரர்-நகுல சகதேவர் - ஆக - இவர்களும் ஆக, அங்கு - அவ்விடத்து, அணிவகுத்து - சேனை வரிசைகள் பிரித்து அமைத்து, (பின்னர்) அமர் - போரினை, குருநிலத்திடை செய்குவான் - குருக்ஷேத்திரத்திலே செய்யும்

பொருட்டு, யமன் அருள் சுதன் - யமதேவன் அருளாற் பிறந்த மைந்தனுகிய தருமன், அனிகம் மன்னரை - சேனே (வகுப்புத்) தலைவர்களை, எழுமின் என்ன - (போர்செய்யப்) புறம்படுங்கள் என்று, இயம்பினுன் - கட்டளையிட்டான். (எ.று).

துருபதராஜன், யுதாமன்யு, உத்தமோஜா இம்மூவரும் சமரதாதிபர்கள். கடோற்கசன், நகுல சகதேவர் - இம்மூவரும் அர்த்தராதிபர்கள். உதாமன் - யுதாமந்யு; போரிற் கோபமுடையானென்று பொருள். உத்தமோஜா - உத்தம ஓஜஸ் எனப் பிரிந்து, மேலான ஒளியையுடையானெனப் பொருள்படும். இவன் உத்தமபானு எனவும் படுவன். பானு - ஒளி. இவ்விரண்டு பேரும் துருபதனுக்கு உறவினர். 'மெய்விளங்க வரு குருநிலத்தினிடை' என்ருர், வில்லியும் (உத்தி : கிருட் : தூது : 120). "தர்மக்ஷேத்ரே குருக்ஷேத்ரே" என்ருர் கீதையிலும், தருமனை, 'யமனருட்சுதன்' என்றது. **கருத்துடையடைகொளி.** செய்குவான் - வினையெச்சம். எழுமின் - முன்னிலையேவற்பன்மை. (10)

11. தருமன் கட்டளையிட்டபடி சேனைத்தலைவர்கள், குருநிலத்துக்குப் புறப்பட்டுப் போதல்,

மூன்று கவிகள்—ஒரு தொடர் :

ஆன போதபி மன்க டோற்கசன்
அரவ கன்னிதன் மகன்மக
சேனி மைந்தரு மியாக சேனனும்
திட்ட தூய்மன்சி கண்டியும்
ஊன யிற்படை திட்ட கேதுவும்
உதாம னுத்தமோ சாவுமின்
மீன நாடனுத் தரன்ச தானிகன்
வராக கேதுசு வேதனும்.

(இ-ள்) ஆன போது - தருமன் கட்டளையிட்டபோது, அபிமன் - அபிமன்யு, கடோற்கசன் - கடோத்கசன், அரவகன்னிதன் மகன் - உலூபியின் மகனை இராவான் (இவர்களோடு) மகசேனி மைந்தரும் - திரௌபதி குமாரர்களும், யாகசேனனும் - துருபதராஜனும்,

திட்டதூய்மன் - திட்டத்யும்நனும், சிகண்டியும்—, ஊன் அயில் படை திட்டகேதுவும் - மாமிசம் பொருந்திய வேற்படையை யேந்திய திருஷ்டகேதுவும், உதாமன் - யுதாமந்யுவும், உத்தமோ சாவும் - உத்தமோஜாவும், மின் மீனநாடன் - ஒளிபொருந்திய மச்சநாட்டரசனுன விராடன், உத்தரன் - (அவன் இளைய மகன்) உத்தரன், சதானிகன் - (விராடன் தம்பி) சதானீகன், வராககேது - (விராடன் உறவினனுகிய) வராககேது, சுவேதனும் - (விராடன் மூத்த மகனுகிய) சுவேதன் ஆகிய இவர்களும்; (எ.று.) இது, மேலைச் செய்யுள் இறுதியிலுள்ள 'பூபாலரும்' என்பதோடு இயையும்.

மகசேனி - யாகசேனி, திரௌபதி. யாகசேனன் மகளாதலின் தத்திதாந்தநாமம்; ஜனகன் புத்திரிஜானகி என்பதுபோல. அவள் மைந்தர் - திரௌபதேயர் எனப்படுவர்: இது துரௌபதர் எனவும் வரும் இச்சொல் திரௌபதியிடம் தோன்றிய ஐவர் மகாரைக் குறிக்கும் அவர்கள் உப பாண்டவர் எனப்படுவர்: அவர்கள் பெயர் - விந்தன், சோமன், வீரகீர்த்தி, புண்டலன், செயசேனன் என்பன. திட்டகேது - திருஷ்டகேது; இவன் திருஷ்டத்யும் நனது மகன் என ஸ்ரீவிஷ்ணு புராணத்தால் விளங்கும். சதாநீகன்- நூறு (மிகப் பல) பெருஞ் சேனையையுடையான்: சத அநீகம் அன் எனப் பிரியும். வராககேது - பன்றிக் கொடியையுடையவன்: வராகம் - பன்றி: (Boar). [பிற்காலத்தில், சளுக்கிய மன்னரது கொடி பன்றிக்கொடியாகும் என்பது கருதத்தக்கது]. (11)

12. குராந றும்பொழிற் கேக யாதிபர்
குந்தி போசர்தெ லுங்கரும்
தராத லம்புகழ் சீனர் சோனகர்
சாவ காதிபர் மாளவர்
கராச லப்படை கலிங்க ரொட்டர்மா
கதர்து லுக்கர்கன் னடரொனுர்
பராவு மீனவர் சேரர் செம்பியர்
பதினெண் பூமிபூ பாலரும்.

(இ-ள்) குரா நறும் பொழில் - குராமரங்கள் செறிந்து வாசனை வீசுகின்ற சோலைகளையுடைய, கேகயம் - கேகயநாட்டு, அதிபர் - அரசரும், குந்திபோசர் - குந்திபோச மன்னரும், தெலுங்கரும் - தெலுங்கருக்கு அரசரும், தராதலம் புகழ் - பூமியிலுள்ளார் புகழ்

கின்ற, சீனர் சோனகர் சாவக அதிபர் - சீனவரசர் சோனக வரசர் சாவகவரசர் இவர்களும், மாளவர் - மாளவ தேசத்து மன்னரும், கராசலப்படை - யானைப்படையையுடைய, கலிங்கர் - கலிங்க தேசத்து மன்னரும், ஒட்டர் - ஒட்ரதேசத்தரசரும், மாகதர் - மகத தேசத்து அரசரும், துலுக்கர் - துருக்க தேசத்தரசரும், கன்னடர் - கன்னட தேச மன்னரும், ஒனர் பராவும் - பகைவர்களும் கொண்டாடும்படியுள்ள, மீனவர் - பாண்டிய மன்னர், சேரர் - சேரமன்னர், செம்பியர் - சோழமன்னர் (ஆகிய) இவர்களும் உள்ளிட்ட, பதினெண்பூமி பூபாலரும் - பதினெட்டு நாட்டு மன்னர் களும், (எ.று.) 'நடந்திட' என மேலைச் செய்யுளில் இயையும்.

பதினெண் பூமிகளாவன - சிங்களம், சோனகம், சாவகம், சீனம், துளுவம், குடகம், கொங்கணம் கன்னடம், கொல்லம், தெலுங்கம், கலிங்கம், வங்கம், கங்கம், மகதம், கடாரம், கௌடம், குசலம், திரமிளம் (தமிழ்நாடு) என்பன. கராசலம் - யானை. கலிங்கதேச மன்னரிடம் யானைப்படையதிகம். ஒனர் - ஒன்னர் என்பதன் இடைக்குறை. (12)

13. கொண்டல் போற்பல வியமி ரைத்திடக்
கொதி யளக்கரின் வரூதினி
மண்ட லம்பரித் திடும னந்தனெண்
மதக யங்கள யர்ந்திட
விண்ட லத்தைநுண் பொடி மறைத்திட
வேக மோடுந டந்திட
வண்ட லங்கலம் மச்சர் தந்திரி
வர்க்க மோடுசென் றனரோ.

(இ-ள்) கொண்டல் போல் பல இயம் இரைத்திட - மேகம் இடிப்பதுபோல பல வாச்சியங்கள் முழங்க, கொதி அளக்கரின் வரூதினி - பொங்கியெழுகின்ற கடலைப்போல் பரந்துள்ள படை யானது, மண் தலம் பரித்திடும் அனந்தன் - பூமியைக் கீழிருந்து தாங்கும் ஆதிசேடனும், எண் மத கயங்கள் - மதம்பிடித்த அட்ட திக்கு யானைகளும், அயர்ந்திட - [படைப் பாரத்தால்] சோர்ந்திட வும், விண் தலத்தை - ஆகாயவிடத்தினை, நுண்பொடி மறைத்திட - நுண்ணிய புழுதிகள் பரந்து மறைத்திடவும், வேகமோடு - மிக விரை வுடன், நடந்திட - நடந்துவர, (அந்த வேகத்திற்குச் சேர) வண்டு

அலங்கல் அமச்சர் தந்திரி - வண்டுகள் மொய்க்கின்ற மாலையைத் தரித்துள்ள அந்த மச்சநாட்டுச் சேனாபதியாகிய சுவேதன், வர்க்க மோடு - நாற்படை அணிவகுப்பினோடு, சென்றான் - நடந்து சென்றான்; (எ.று.) அரோ - ஈற்றசை.

வேகமாக நடந்துவருகின்ற படையின் பாரத்தால் ஆதிசேடன் அயர்ந்திட்டான்: அட்டதிக்கஜங்கள் அயர்ந்தன. அந்தப் படையெழுப்பிய புழுதி பரந்து ஆகாயத்திடத்தை மறைத்தன. தந்திரி - சேனைத் தலைவன். (தந்திரம் - சேனை). அளக்கர் - கடல்: இன் - உவமவுருபு. அளவிறந்த பரப்புக்கும், ஆரவாரத்துக்கும், அணியணியாக வருதற்கும் சேனைக்குக் கடல் உவமை. அனந்தன் - ஆதிசேடன். பொடி - சேறுதூளி. அயர்ந்திட, மறைத்திட என்ற வினையெச்சங்கள் 'நடந்திட' என்ற வினையெச்சத்தோடு இயைந்தன. அந்த வினையெச்சம் 'சென்றான்' என்ற முற்றோடு முடிந்தது. (13)

14. பாண்டவர்கள் பாசறையமைத்துத் தங்குதல்.

நற்றி னத்திறந் திரந டக்கவும்
நன்னி மித்தமுள வாகவும்
பெற்ற தந்தையர்க ளாசி கூறவும்
பேதை மார்பலர் வாழ்த்தவும்
கற்றை யங்குழன் மனைவி யாரொடும்
கரிய மாலொடும் குருநிலத்
துற்று றுஞ்சவை மனைகொள் பாசறை
யுளுற்றி யைவரும் வைகினர்.

(இ-ள்) நல் தினத்து - நல்ல நாள் பகற்போதில், இறந்து - உபப்பிலாவியத்தைவிட்டு நீங்கி, இர நடக்கவும் - இராப்பொழுதினில் நடந்தும், நல் நிமித்தம் உளவாகவும் - நல்ல குறிகள் உண்டாகவும், பெற்ற தந்தையர்கள் - தங்களைப் பெற்ற தகப்பன்மார்களாகிய தேவர்கள், ஆசி கூறவும் - ஆசீர்வாத மொழிகளைச் சொல்லி வாழ்த்தவும், பேதைமார் பலர் வாழ்த்தவும் - மகளிர் பலர் [சோபனங்கூறி] வாழ்த்தவும், கற்றை அம் குழல் மனைவியாரொடும் - தொகுதியான அழகிய கூந்தலையுடைய திரௌபதியோடும், கரிய மாலொடும் - கருநிறம் பொருந்திய கண்ணபிரானோடும், குருநிலத்து உற்று - குருக்ஷேத்திரத்தையடைந்து, உறும் சவை மனை கொள் பாசறை - பெரிய

சபையிடம் உறைவிடம் இவற்றைக் கொண்டுள்ள படைவீட்டை, உஞற்றி - எழுப்பி முடித்து, ஐவரும் - பாண்டவரைந்துபேரும், வைகினர் - தங்கினர்கள் ; (எ.று.)

பெற்ற தந்தையர் என்றது - யமன், வாயு, இந்திரன், அசுவிநீ தேவர்களைக் குறிக்கும். பெண்டிர் சோபனம் பாடி வாழ்த்தெடுத்தல் மரபு. சவை - சபை : அப்போதைக்கப்போது கூடி ஆலோசிப்பதற் கான சபை. இர - இரவு என்பது ஈறுகெட்டு நின்றது. நிமித்தம் - நற்குறி: சகுனம், உஞற்றுதல் - செய்தல், அமைத்தல், ஐவர் - தொகைக்குறிப்பு. (*14*)

வேறு.

15. துரியோதனன் வீடுமனுக்குச் சிலகூறி, நால்வகைத் தேர்வீரர் எவரெவர் என வினவல்.

இங்கிவர ருந்திதிம யக்கிபலி தந்தமரி
யற்றிடவெ ழுந்த துணரா
அங்கரவ கேதுநதி மைந்தன்முக நோக்கியவ
ரகத்துணிபி லாது வெருவி
தங்கண்மக னைப்பலிகொ டுத்தனர்ந மைப்பொருத
ரத்தரிலை நம்ப டைஞரிற்
பொங்குமதி ரதர்முதல விரதரெவ ரெவரவரைப்
புகலெனவ வன்பு கலுவான்.

(இ-ள்) இங்கு இவர் அரும் திதி மயக்கி - இந்தப் பக்கத்தில் இப்பாண்டவர் [மாற்றற்கு] அரிய திதியை [மாற்றி (சதுர்த்தசியை அமாவாசையாக்கி), பலி தந்து - களப்பலி கொடுத்து, அமர் இயற் றிட எழுந்தது உணரா - போர் செய்தற்குப் புறப்பட்டு வந்துள்ளதை யுணர்ந்து, அங்கு - அந்தப் பக்கத்தில், அரவகேது - துரியோதனன், நதிமைந்தன் முகம் நோக்கி - கங்காபுத்திரனாகிய வீடுமனைப் பார்த்து, அவர் அகத்துணிபு இலாது - அந்தப் பாண்டவர் மனோ திடம் இல்லாமல், வெருவி - (நமக்குப்) பயந்து, தங்கள் மகனை - தங்களது புதல்வனாகிய இராவானையே, பலிகொடுத்தனர் - களப்பலி யாகக் கொடுத்திட்டனர் : நமை பொரு தரத்தர் இலை - நம்மைத் தாக்கிப் போரிடும் வலியரில்லை : நம் படைஞரில் - நமது படைவீரர்

களில், பொங்கும் அதிரதர் முதல இரதர் - மேலான அதிரதரை முதலாகக் கொண்டு வருகின்ற [நால்வகை] ரதவீரர்கள், எவர் எவர் - யார் யாராவர்? அவரை - அந்த வீரர்களை, புகல் - நீ சொல்வாயாக, என - என்று வினவ, அவன் - அந்த வீடுமன், புகலுவான்- கூறுவானாயினான் ; (எ.று.)

அரவகேது - பாம்புக்கொடியையுடையவன் : துரியோதனன். புகல் - வியங்கோள்.

இது முதல் இச்சருக்க முடியுமளவுமுள்ள பதினைந்து கவிகள் - பெரும்பாலும் முதல் ஐந்து சீர்கள் விளங்காய்ச் சீர்களும், ஆறுஞ்சீர் தேமாச்சீரும், ஏழாஞ்சீர் புளிமாச்சீருமாகிய கழிநெடிலடி நான்கு கொண்ட எழுசீராசிரிய விருத்தங்கள். (15)

16. வீடுமன் அரசரைப் பிரித்தல்.

ஆரியன வன்குமரன் யான்பூரி சரவாவும்
அதிரதர்க டுன்மரு டன்ன
மாரிமத களிறுபக தத்தன்மதி தத்தனிவர்
மாரதர்க ணிச குனிகாந்
தாரிமரு கன்கிருத வன்மனவ மத்திரனும்
சமரதர்க ணின்று ணைவர்கள்
தேரிரவி மகன்விருட சேனனும ருத்தரத
சிரேட்டருணர் கென்ற னனரோ.

(இ-ள்) ஆரியன் - துரோணசாரியன், அவன் குமரன் - அவனுடைய மகனாகிய அசுவத்தாமன், யான் - வீடுமனாகிய நான், பூரிசரவாவும் - பூரிசிரவஸ் ஆகிய நால்வரும், அதிரதர்கள்-அதிரதத் தலைவர்கள் ; துன்மருடன் - துர்மர்ஷணன், மாரி மத களிறு அ பகதத்தன் - மழைபோல் மதநீரைப் பெருக்குகின்ற ஆண்யானை போன்ற வலிய அந்தப் பகதத்தன், மதிதத்தன் - சோமதத்தன், இவர் - இந்த மூவரும், மாரதர் - மகாரதர்களாவர் : கனி - கிருபாசாரியன், சகுனி —, காந்தாரி மருமகன் -சயத்திரதன், கிருதவன்மன் அவன் - கிருதவர்மன், மத்திரனும் - சல்லியன் ஆகிய ஐவரும், சமரதர்கள் - சமரதர்களாவர் ; நின் துணைவர்கள் - உன் தம்பிமாரா

கிய தொண்ணூற்றெண்பதின்மரும், தேர் இரவி மகன் - தேரிலேறி யோடும் சூரியனின் புத்திரனாகிய கர்ணனும், விருடசேனனும் - அந்தக் கர்ணனின் (மூத்த மகனாகிய) விருஷஸேநனும், அருத்தரத சிரேட்டர் - அர்த்தரதரிற்சிறந்தோர் : (இதனை) உணர்க - (நீ) அறிந்துகொள்வாயாக, என்றனன் - என்று (வீடுமன்) கூறிமுடித்தான் ; (எ.று.) அரோ - ஈற்றசை.

பூரிசரவா - பூரிசிரவஸ் சோமதத்தன் மகனென்ப, துன்மருடன்- துர்மர்ஷணன் : இந்தச் சொல்லுக்கு - (பகைவராற்) பொறுக்க வொண்ணாதவனென்று பொருள். பகதத்தன் பதினாயிரம் யானை வலியுடையான் என்பர் : இனி, 'களிறு பகதத்தன்' என்பதற்குக் களிற்றையுடைய பகதத்தன் என்னவுமாம் : பகதத்தன் யானையின் பெயர் - சுப்ரதீகம் : இது வெண்ணிறமுடையது. இரண்டு தந்தங்களையுடையது, சோமதத்தன் இவன் பூரிசிரவாவிள் தந்தை. கணி - ஞானகிருபனாதலின் அவரைக் காட்டிற்று, சயத்திரதன் காந்தாரியின் மகளாகிய துச்சளையின் கணவனாதலின் அவளது மருகன் என்றது. கிருதவன்மன் - யாதவ சேனைக்குத் தலைவனாகத் துரியோதனன் பக்கல் கண்ணபிரானால் அனுப்பப்பட்டவன் : யது குலத்தில் இருதிகன் என்பவனது குமாரன். அ-பிரசித்திகாட்டுவது· அவன் - முதல்வேற்றுமைச் சொல்லுருபு உணர்க - முன்னிலை யேவல். (16)

17. வீடுமனோடு கர்ணன் மனஸ்தாபப்பட, துரியோதனன் பெருஞ் சேனையோடு போர்க்களத்துக்குப் புறப்படுதல்.

வன்னியை முனிந்திரவி மைந்தனிகழ் வோதியுனை
மாய்ப்பனென வாளுருவிநீ
துன்னமரி லிறக்குமள வும்படையெ டேனெனவொர்
சூளதுபு கன்றனனரர்
மன்னுதுவ சன்படையெ ழுந்திடுக வென்றிடலு
மன்னவர்க டம்படையொடும்·
பன்னருமு கக்கடல்பெ யர்ந்ததென வெள்ளிடைப
ரப்பறவெ ழுந்தனர்களே.

(இ-ள்) வன்னியை முனிந்து - பிரமசாரியாகிய வீடுமனைக் கோபித்து, இரவி மைந்தன் - கர்ணன், இகழ்வு ஓதி - இகழ்வான

வார்த்தைகளைச் சொல்லி (ப் பழித்து), உனை மாய்ப்பன் என - உன்னைக் கொல்லுவேன் என்று (வீரவாதங் கூறித் தன்), வாள் உருவி-வாளாயுதத்தை (உறையினின்று) எடுத்து, (முடிவில்) 'நீ—, துன் அமரில் - நெருங்கிச் செய்யும் போரில், இறக்கும் அளவும்-, சாகும் வரையிலும், படை எடேன் - (நான்) ஆயுதத்தை யெடுக்கவும் மாட்டேன் [வந்து போர் செய்யேன்]' என - என்று, ஓர் சூள் அது புகன்றனன் - ஒரு சபதவார்த்தை கூறினன்; (அப்போது) அரா மன்னு துவசன் - பாம்பு பொருந்திய கொடியையுடைய துரியோதனன், 'படை எழுந்திடுக' - (நமது) சேனைகள் புறப்படட்டும், என்றிடலும் - என்று கட்டளையிட்டவுடன், மன்னவர்கள் - அரசர்கள் பலரும், தம் படையொடும் - தமது சேனைகளோடும், பன் அரும் உகக்கடல் பெயர்ந்தது என - சொல்லுதற்கரிய யுகாந்த காலத்துக் கடல் [கொந்தளித்து] எழுந்ததென்னும்படி, வெள்ளிடை பரப்பு அற - வெட்டவெளியாகிய போர்க்களம் முழுவதும், எழுந்தனர்கள் - பரவியிருந்தனர்கள்; (எ.று.)

வீடுமன் கர்ணனை அதிரத மகாரத சமரதரில் எவ்வகுப்பினும் சேர்க்காமல் ஊற்றதான அர்த்தரதரினத்திற் சேர்க்கவே, அவன் மிகக் கோபங்கொண்டு பல இகழ்வான நிந்தனைகளைக் கூறி, வீடுமனைக் கொல்ல வாளுருவ, அது கண்ட துரியோதனன் முதலியோர் விலக்கின வளவிலே அவன் 'போரில் வீடுமன் இறக்குமளவும் நான் வந்து போர் செய்வதில்லை' என்று சபதங் கூறிப் போயினன் என்றதாம். வெற்றியின் கீர்த்தி சேனைத்தலைவனுக்கே செல்லுதல் இயல்பாதலால், வீடுமன் சேனாதிபதியாய் வாழ்ந்திருக்கையில் தான் யுத்தஞ்செய்து அருச்சுனனாதியோரைச் சயித்தால் அந்தப் புகழ் தனக்குவராமல் வீடுமனுக்குச் சென்றிடுமே என்று கருதி, கர்ணன் வீடுமனுள்ள வரையில் "நான் போர் செய்யேன்" என்றான்.

கர்ணனை அர்த்தரதனாக வைத்ததற்குக் காரணம்—தனக்கு அழியா வலிமை தருவனவான கவசகுண்டலங்களை இந்திரனுக்குத் தானஞ் செய்து இழந்ததும், கற்ற வில்வித்தை யெல்லாம் தக்க சமயத்தில் உதவாமல் மறந்து போய்விடும்படி குருவாகிய பரசுராமனாற் சபிக்கப்பட்டதும், தன்னுடம்பு பகைவரம்பாற்சிதைபடவும் தேர்ச்சக்கரம் போர்க்களத்தில் அழுந்தி விடவும் ஓரந்தணனாற் சாபம் பெற்றதும், இதற்கு முன் பல போர்களிற் செருக்குக்கொண்டு சென்று எதிர்த்து ஒன்றிலேனும் வெற்றிபெறாது தோற்று மீண்டதும் முதலியனவென வடமொழி வியாசபாரதத்தால் விளங்குகிறது.

[துரியோதனன் ராஜராஜனுய் அரசாள்கிறவனுதலால் அவனைப் படைவகுப்பில் எந்த வகையிலுஞ் சேர்க்கவில்லை; தருமபுத்திரனும் மகாராசனேயாகிலும் அவனை மாத்திரம் மகாரதனுகக் கணக்கிட்டது, அக்காலத்தில் அவன் அரசாட்சியின்றி க்ஷத்திரிய வீரனுக மாத்திரம் இருத்தலாலெனக் காண்க.] உகக்கடல் - பிரளயப் பெருங்கடல். என-உவமவுருபு. வெள்ளிடை - வெளியிடம். அற - முழுவதும். மாய்ப்பன் - தன்மையொருமை. எழுந்திடுக - முன்னிலையேவல். (17)

18—20. துரியோதனன் பக்கல் எழுந்த வீரர்களைக் கூறும்.

மூன்று கவிகள்—ஒரு தொடர் :

விறன்மாக தன்சகுனி மாத்திரனும் விந்தனனு
விந்தனும லம்பு சனவற்
கறையுமிணை யோரிருவ ரவுணர்கள ளப்பிலரு
மாயிரபு யத்த னுமரா
விறையொடுக லிங்கர்காம் பீலியர்கள் கவுசியர்கள்
இகலேறு சோம தத்தன்
திறல்போசர் கேகயர்தெ லுங்கர்மா ளவர்கவுடர்
சேரர்சோ ழரு மெழுந்தார்.

(இ - ள்) விறல் மாகதன் - வலிமை மிக்க மகத தேசத்து அரசனும், சகுனி - சகுனியும், மாத்திரனும் - மத்திரதேசத்தரசனுகிய சல்லியனும், விந்தன் அனுவிந்தனும் - விந்தன் அனுவிந்தன் என்னும் அவந்தியரசர்களும், அலம்புசன் - (பகாசுரன் தம்பியாகிய) அலம்புசனும், அவற்கு அறையும் இணையோர் இருவர் அவுணர்கள் - அவனுக்குத் தம்பியராகச் சொல்லப்படுகின்ற இரண்டு அரக்கர்களும், அளப்பில் அரும் ஆயிரம் புயத்தவனும் - அளவிடுதற்கரிய சகஸ்ரபாகுவும், கலிங்கர் - கலிங்கதேசத்து மன்னரும், காம்பீலியர்கள் கவுசியர்கள் - காம்பிலி தேசத்து மன்னர்களாகிய கௌசிகர்களும், இகல் ஏறு சோமதத்தன் - பகைவர்க்குச் சிங்கம்போன்ற சோமதத்தனும், திறல் போசர் - வலிமை மிக்க போசமன்னரும், கேகயர்-கேகய தேசத்து மன்னரும், தெலுங்கர் - தெலுங்க தேசத்து மன்னரும், மாளவர் - மாளவதேசத்துப் மன்னரும், கவுடர் - 'கௌடதேசத்து மன்னரும், சேரர் - சேரமன்னரும்,

சோழரும் - சோழமன்னரும், அரா இறையொடு - பாம்புக் கொடியை யுடைய மன்னனான துரியோதனனோடு, எழுந்தார் - புறப்பட்டார்கள்; (எ.று.)

[ஐம்பத்தாறு தேசத்தரசர்களுள், அந்தந்த தேசத்து அரச குலத் தாருள் சிற்சிலர் பாண்டவர் பக்கத்தும் சிற்சிலர் துரியோதனாதியர் பக்கத்தும் வந்துகூடினரென்பது நோக்கத்தக்கது]. இங்குக் கூறிய மாகதன் - மகத தேசத்து அரசர்களுள் துரியோதனாதியர் பக்கல் சேர்ந்தவனாவன் [முன்னர் சராசந்தன் மகன் சகதேவன் என்னும் மகத மன்னன் தருமன் பக்கஞ் சேர்ந்துவிட்டதாகச் சஞ்சயன் தூது சருக்கத்து 36-ஆஞ் செய்யுளால் அறியலாம்.] ஆனால் வில்லி பாரதத்தில் இந்தச் சகதேவன் துரியோதனன் பக்கல் சேர்ந்தவனாகக் கூறப்பட்டுள்ளது. (பதினேழாம் போர் : 69) விந்தன் அனுவிந்தன்- இருவரும் அவந்தியரசர். அலம்புசன் - பகாசுரன் தம்பி: இவனை வீமன் கூர்வேலாற் கொல்லுகிறான். ஆயிரம் புயத்தன் - ஆயிர வாகு: சஹஸ்ரபாகு ; வாணனைப்புயமழித்த மந்திரத்தை ஸ்ரீக்ருஷ்ண னிடம் பெற்றுப் பின் இவன் கைகளையெல்லாம் அருச்சுனனழித்தான் என்றது வில்லிபாரதம்]. கவுசியர் - குசிக குலத்தவர் : தத்நிதாந்த நாமம். இவர் காம்பிலி தேசத்தவர் என்பதை - "கௌசிகன் காம்பி லீசன்" என்ற வில்லியார் கூற்றால் அறியலாம், (உத் : படை : 18) மாளவநாட்டரசன் பெயர்-இந்திர வர்மா என்பது. இவன் பட்டத்து யானைதான் அசுவத்தாமா என்பது. அருச்சுனனுக்குப் பெண் கொடுத்த சித்திரவாகனன் பாண்டியனாதலின், பாண்டியனை இங்குக் கூறாது விடுத்தமை நோக்கத்தக்கது. உம்மை பிறவிடத்தும் கூட்டிப் பொருள் கொள்ளப்பட்டது. (18)

19\. பங்களஞ்சீ னமொடடங் குகுரமா ரியம்பப்ப
ரஞ்சேதி கொங்க மிரட்டம்
வங்கங்க டாரமங் கந்துளுவ கொங்கணம
ராடகொப்ப கூபக திகத்தம்
சிங்களமெ னுந்தேய மெங்குமுள மன்னர்கள்மந்
திரிதந்திரி துணைவர் குமரர்
தங்களுட னுந்திரத மும்பலப ரியுமவர்
தானைபுடை வர வெழுந்தார்.

(இ-ள்) பங்களம் சீனம் ஒடடம் குகுரம் ஆரியம் பப்பரம் சேதி கொங்கம் இரட்டம் வங்கம் கடாரம் அங்கம் துளுவம் கொங்கணம்

மராடம் கொப்பம் கூபகம் திகத்தம் சிங்களம்—, எனும் - என்கிற, தேயம் எங்கும் உள மன்னர்கள் - தேசங்கள் முதலாக எல்லாவிடங்களிலும் உள்ள அரசர்கள், மந்திரி - (அவர்களுடைய) மந்திரிகள், தந்திரி - சேனைத்தலைவர்கள், துணைவர் - நண்பர்கள், குமரர் தங்களுடன் - புதல்வர்கள் இவர்களுடன், உந்து இரதமும் - செலுத்துகின்ற தேர்களும், பல பரியும் - பல குதிரைகளும், (உள்ளிட்ட) அவர் தானை புடைவர - அந்த மன்னர்களின் சேனைகள் சூழ்ந்துவர, எழுந்தார் - புறப்பட்டார்கள் ; (எ.று).

பங்களம் - பங்காளமென வழங்கும் ஒடடம் - ஒட்ரதேசம் : ஒட்டம் எனவும் வரும். (19)

20. முதலண்ண லுக்குறுதி புகலுற்ற படி தகுவர்
மூரிவிற்சஞ் சத்த கரவர்
அதலதலத் திருந்துமா வலியுய்ப்ப வருமறுப
தாயிரந்தே ராள ருமந்த
எதிரற்ற வெண்ணிரண்டா யிரரெனப்பு கலியாத
வக்குமரர் தாமுங் கொடிய
கதமுற்ற கவுரிமான் பூரிபக தத்தன்வி
கத்தசே னனு மெழுந்தார்.

(இ-ள்) முதல் அண்ணலுக்கு - மூத்த திருதராட்டிரனுக்கு, உறுதி புகலுற்றபடி - (துரியோதனன் தன் படைவலிமையைப்பற்றித்) திடவார்த்தை சொல்லியபடியே, தகுவர் - அசுரர்கள், மூரிவில் சஞ்சத்தகர் அவர் - வலிய வில்லையேந்திய சம்சப்தகர்கள் (ஆகிய இவர்கள்) அதலதலத்திலிருந்து - அதலமாகிய கீழுலகத்திலிருந்து, மாவலி உய்ப்ப - மகாபலி சக்கரவர்த்தியனுப்ப, வரும் - வந்து சேர்ந்த, அறுபதாயிரம் தேராளரும் - அறுபதினாயிரம் தேர்வீரர்களும், அந்த - புகழ்பெற்ற, எதிரற்ற எண்ணிரண்டாயிரர் என புகல்- நிகரற்ற பதினாறாயிரவர் என்று வழங்கப்படுகின்ற, யாதவ குமரர் தாமும் - யதுகுலத்து இளவீரர்களும், கொடிய கதம் உற்ற கவுரிமான்- கடூரமான கோபத்தை (இயல்பாக) உடைய கௌரிமா என்பவனும், பூரி - பூரிச்ரவசும், பகதத்தன் - பகதத்தனும், விகத்தசேனனும் - விகத்தசேனன் என்பவனும், எழுந்தார் - புறப்பட்டார்கள் ; (எ,று),

தகுவர் - அசுரர். ஸம்சப்தகராவார் - போர் தொடங்கு முன்னமே பலவகைச் சபதஞ் செய்து பின் அவ்வாறே நடத்திக்

காட்டும் வீரர்கள். இவர்கள் த்ரிகர்த்த ராஜபுத்திரர்களும் அவர் களை யனுசரித்தவர்களுமாகி ஒன்பது கோடித் தொகையினராவ ரென்று வியாச பாரதம் கூறும். இப்பெயர் நன்ருகச் சபதஞ் செய் பவரென்று பொருள்படும். மகாபலி அசுரராஜன் என்பது நினைக. யாதவகுமரர் - யதுகுலத்தவர் : தத்திதாந்தநாமம். யது - சந்திர வமிசத்து ஓரரசன். கண்ணனுக்குப் பதினாருயிரம் கோபஸ்திரீ களிடம் பிறந்தவர்களான நாராயண கோபாலர் முதலியோர். துரியோதனன் கண்ணனைப் படைத்துணையழைக்கப்போனபொழுது அவனுல் துரியோதனனுக்குத் துணையாகக் கொடுக்கப்பட்டனர் இவரென அறிக. விகத்தசேனனை 'வையம் பாடுசீர்-விகத்தசேனன்' என்ருர் வில்லியார். (உத் : படை : 22) பகதத்தன்-பிராக்சோதிஷ புரத்தரசனும் திருமாலுக்குப் பூமிதேவியினிடம் பிறந்தவனும் கண்ண ணுற் கொல்லப்பட்டவனுமாகிய நரகாசுரனது மகன். (20)

21. துரியோதனன் பதினேரு அக்குரோணி சேனையுடன் போர்க்களம் புகுதல்.

அங்கதமு யர்த்தநிரு பன்ருெழுது தாய்தந்தைய
ராசிவிடை பெற்றங் கர்கோன்
கங்கைமக ஞரியன வன்சேய்முதற் குருகனிட்டர்
புத்திரரோ டொத்த துணைவர்
தங்கரிய குழலின்மட மங்கையர்கள் வரவிரத
தந்திகந்து கம்வய வராம்
பொங்குபடை பதினேரக் குரோணிபுடை சூழ்தரவே
பொருசமர பூமி புகுவான்,

(இ-ள்) அங்கதம் - பாம்பினை, உயர்த்த - கொடியிலெழுதித் தூக்கிய, நிருபன் - அரசனுகிய துரியோதனன், தாய் தந்தையர் தொழுது - தனது தாயாகிய காந்தாரியையும் தந்தையாகிய திருத ராட்டிரனையும் வணங்கி, ஆசி விடைபெற்று - (அவர்களது) ஆசீர் வாதத்தையும் அனுமதியும் பெற்று, அங்கர்கோன் - கர்ணன், கங்கை மகன் - வீடுமன், ஆரியன் - துரோணுசாரியன், அவன் சேய் - அவனது குமாரனுகிய அசுவத்தாமன், முதற்குரு - கிருபா சாரியன், கனிட்டர் - தம்பிமார்கள், புத்திரரோடு ஒத்த துணைவர் - (தன்) புதல்வர்களோடு சமமான நண்பர்கள், தன் கரிய குழலின் மடமங்கையர்கள் - தனக்குரிய கருமையான கூந்தலையுடைய பெண்டிர்கள், (இவர்கள் அனைவரும்) வர-(தன்னுடன்) தொடர்ந்து

வர, இரதம் தந்தி கந்துகம் வயவராம் பொங்கு படை - ரதகஜதுரக பதாதிகளாகிய மிக்க சேனை, பதினோர் அக்குரோணி - பதினொரு அக்ஷௌஹிணி என்று கணக்கிடப்பட்டு, புடை சூழ்தர - (தன்) பக்கங்களிலே சூழ்ந்துவர, பொருசமர பூமி - போரிட வேண்டிய யுத்த பூமியில், புகுவான் - சென்று புகுந்தான் ; (எ.று).

அங்கதம் - பாம்பு. பெண்டிரும் பாசறையில் தங்குதல் மரபு போலும். தந்தி - தந்தத்தையுடையது, யானை கந்துகம் - குதிரை. வயவர் - வீரர் : காலாட்படையினர். இரததந்திகந்துகவயவர் - உம்மைத்தொகை. (21)

22. சமரபூமி புகுந்த துரியோதனன் மேலும் நடந்து துன்னிமித்தம் தோன்றவும் அஞ்சாது போர்க்களத்தை யடைதல்.

கறங்குமுர சாதிபல பல்லியமு ழங்கவெழு
கடல்புவிந டந்த தெனமண்
திறங்கொடு பரித்திடுமி பங்கணௌி யப்புழுதி
செங்கதிர்ம றைப்ப நமனும்
புறங்கொளவ டும்படையொ ளிச்சுடரி ருட்குழுபு
சித்திடந டந்து மறுகின்
அறங்கெடுநி மித்தமதெ திர்ந்திடவு மஞ்சலன
மர்க்களமடைந்த னனரோ.

(இ-ள்) கறங்கு முரசு ஆதி பல பல்லியம் முழங்க - ஒலிக்கின்ற முரசு முதலாகிய பல வாச்சியங்கள் பேரொலியெழுப்ப, எழுகடல் - ஏழு சமுத்திரங்கள், புவி நடந்தது என - பூமியிலே நடந்து வந்தன என்னும்படி, திறங்கொடு மண் பரித்திடும் - சாமர்த்தியமாகப் பூமியைத் தாங்குகின்ற, இபங்கள் - அஷ்டதிக்கு யானைகளும், நௌிய - (பாரம் தாங்கமாட்டாமல்) உடலை வளைக்கவும், புழுதி - சேனைகள் எழுப்பிய தூளிகள்; செங்கதிர் மறைப்ப - (மேலெழுந்து) சூரியனை மறைக்கவும், நமனும் - யமனும், புறம் கொள - முதுகிடும்படி, அடும் படை - கொல்லுகின்ற ஆயுதங்களின், ஒளிச் சுடர் - மிக்க பிரகாசமானது, இருள் குழு புசித்திட - இருட்டுப் படலத்தை அடியோடு இல்லையாக்கவும், நடந்து - (இரவிலும்) நடந்து, (போகும்போது) மறுகின் - தெருக்களில், அறம் கெடு நிமித்தம் அது எதிர்ந்திடவும் - துர்நிமித்தங்கள் (அபசகுனங்கள்) தோன்றிடவும், (சிறிதும்)

அஞ்சலன் - பயப்படாதவனாய், அமர்க்களம் அடைந்தனன் - போர்க் களத்தையடைந்தான் ; (எ.று.) அரோ - ஈற்றசை.

பலபல்லியம் என்பதில் - தோற்கருவி, கஞ்சக் கருவி, துளைக் கருவி, நரப்புக்கருவி என்னும் நால்வகை இசைக்கருவிகளும் அடங் கும். எல்லாச்சேனைகளும் ஓரிடத்தில் ஒருங்கு திரளவே பூமியைத் தாங்குகின்ற அஷ்டதிக்கயங்கள் அதிபாரத்தால் மிகத் தளர்ந்தது என்றவாறும் இது, மிகையுயர்வுநவிற்சியணி. புழுதி செங்கதிர் மறைப்ப, நமனும் புறங்கொள அடும்படை என்ற விடங்களிலும் இந்த அணி காணப்படும். இருள் புசித்திட - "உண்டற்குரிய வல்லாப் பொருளை, உண்டன போலக் கூறலும் மரபே" என்றது தொல்காப்பியம். எழுகடல் புவி நடந்ததென - இல்பொருளு வமையணி.

(22)

23. பலராமனும் விதுரனும் தீர்த்தயாத்திரைக்குச் செல்லுதல்.

வந்துகுரு பூமியிடை நிரைநிரைபல் பாசறைவ
குத்திவரி ருந்த னரவண்
புந்திநிகர் தன்மனவை வந்துமுச லிப்பலபு
கன்முறை புகன்று நிருப !
இந்தவுல குன்னதவர் வீதறிண மன்னவன்
இறந்திடுத னேக்கல மெனாச்
சந்தவில்வி தூரனொடு முந்துகட வுட்புனல்க
டான்படிய வேகி னனரோ.

(இ-ள்) வந்து - (போர்க்களத்திற்கு) வந்து, குருபூமி இடை - குருக்ஷேத்திரத்தில், நிரைநிரை - வரிசை வரிசையாக, பல் பாசறை வகுத்து - பல படைவீடுகளையமைத்து, இவர் - இந்தத் துரியோ தனன் பக்கத்தினர், இருந்தனர் - தங்கியிருந்தனர். அவண் - அந்தக் குருக்ஷேத்திரத்திற்கு, முசலி - பலராமன், புந்தி நிகர் தன்மன் அவை வந்து-தத்துவஞானத்தையொத்த தருமனுடைய பாசறைக்கு வந்து, புகல்முறை - சொல்லவேண்டிய முறைப்படி, புகன்று - (சில விஷயங்களைச்) சொல்லி, (பின்பு) நிருப! - தருமராசனே! இந்த உலகு உன்னது - இந்தப் பூவுலக அரசாட்சி உனக்குரியது : அவர் - அந்தத் துரியோதனாதியர், வீதல் திணம் - இறந்துபோதல் நிச்சயம் : (ஆகவே) மன்னவன் - துரியோதனராசன், இறந்திடுதல் - கொல்லப்

பட்டொழிதலை, நோக்கலம் - (கண்ணால்) பார்க்கமாட்டோம், என - என்று சொல்லி, (பின்) சந்தம் வில் விதுரனொடு - அழகிய வில்லை யேந்தியிருந்த விதுரனுடன், முந்து - முற்பட்டு, கடவுள் புனல்கள் தான் படிய - தெய்வத் தன்மை பொருந்திய தீர்த்தங்களில் நீராடும் பொருட்டு, ஏகினன் - போயருளினான் ; (எ.று) அரோ - ஈற்றசை.

முசலி - முசலத்தையுடையவன்: பலராமன். முசலம் - உலக்கை, பலராமனுக்குக் கலப்பையேயன்றி உலக்கையும் உரிய ஆயுதமென வுணர்க. உன்னது - உன்னுடையது. வீதல் - தொழிற்பெயர். திணம் - திண்ணம் என்பதன் இடைக்குறை. நோக்கலம் - உளப் பாட்டுத்தன்மைப் பன்மை : விதுரனையுளப்படுத்தியது. "உலக, நின்னதெனல் பொய்ம்மையல வங்கவ ரடங்கவுயிர் நீங்குவது திண்ணமினியான், பன்னரவகேதனன் விளிந்திடுத லென்விழி படாதகல்வ னீர்படியவே" என்றார் நல்லாப்பிள்ளை பாரதத்தில், நிரைநிரை - அடுக்குத்தொடர். (23)

24. இருதிறத்துச் சேனைமுழுவதையும் அழிக்க எவ்வளவு நாள் செல்லும் என்று துரியோதனன் வீடுமனை வினவ, அவன் மறுமொழி கூறல்,

சமர்பொருது கின்றகுரு கேத்திரத லத்துழித
 ரித்துறவி ரண்டு படையும்
நிமிர்புயமூ தாதைதனை வேந்தனெதிர் நின்றபடை
 நீக்கவுறு நாட் புகலென
அமர்கதிர ளித்தசுத னைந்துபகல் முப்பகலா
 சரியனவன் யானொ ருபகல்
எமனனைய குருமகனோர் கடிகையினில் கணத்திதனோ
 டெவ்வுலகு மாந ரன்வெலும்.

(இ-ள்) சமர் பொருதுகின்ற குருகேந்திரதலத்து உழி - போரிடப் போகின்ற குருக்ஷேத்திரவிடத்தினில், இரண்டு படையும் - இரு பக்கத்துச் சேனைகளும், தரித்து உற - தங்கியிருக்க, (அப்போது) வேந்தன் - துரியோதனராசன், நிமிர் புயம் மூதாதைதனை - (முதிய வனாயினும்) ஓங்கிய தோள்களையுடைய வீடுமனை நோக்கி, 'எதிர் நின்ற படை - எதிரிலே நிற்கின்ற இருதிறத்துப் படையையும், நீக்கவுறு நாள் புகல் - கொல்லுதற்கான நாள் எத்தனை பிடிக்கும் எனச் சொல்வாயாக', என - என்று வினவ, (அதற்கு விடையாக

வீடுமன்) அமர் கதிர் அளித்த சுதன் - (யாவராலும்) விரும்பப்படுகின்ற சூரியன் பெற்ற குமாரனாகிய கர்ணன், ஐந்து பகல் - ஐந்து தினங்களில் (கொல்லுவன்) : ஆசரியன் அவன்-துரோணாசாரியன், முப்பகல் - மூன்று தினங்களில் (கொல்லுவன்) : யான்-நான், ஒரு பகல் - ஒரு தினத்தில் (கொல்லுவேன்) : எமன் அனைய குருமகன் - யமனை யொத்த அசுவத்தாமன், ஓர் கடிகையினில் - ஒரு நாழிகையினில் (கொல்லுவன்) : மா நரன் - சிறந்த அருச்சுனனோ, கணத்து - ஒரு க்ஷண நேரத்தில், இதனோடு - இந்த இருதிறத்துச் சேனையோடு, எ உலகும் - எந்த உலகத்தோரையும், வெலும் - கொன்று வெற்றி பெறுவான் ; (எ.று.)

இதில், அவரவர்க்குப் போர்த்திறத்து உள்ள தாரதமியம் (ஏற்றத்தாழ்வு) விளங்குவது காண்க. உழி - ஏழனுருபு. வெலும் - செய்யுமென்முற்று. (24)

25. துரியோதனன் உலூகமுனிவனையனுப்பி, போருக்கு வரச் சொல்லுதல்.

என்றுநதி நந்தனனி சைப்பவகி கேதனனி
யம்புவதி யம்பி யிதைநீ
நன்றுரைசெய் தைவர்சொலு ணர்ந்துறுக வென்றுலுக
நாமனைவி டுப்ப வவனுற்
றன்றவையி னீவிர்புக லுஞ்சபத முற்றுவிர்க
ளாயின்விர காடு மரியோ
டின்றமர்பொ ரற்கெழுமி னென்றுரைசெய் என்றரசி
யம்பினனெ னப்பு கலலும்.

(இ-ள்) என்று நதி நந்தனன் இசைப்ப - என்று வீடுமன் கூற, அகி கேதனன் - பாம்புக்கொடியையுடைய துரியோதனன், உலுக நாமனை - உலூகமுனிவனை (நோக்கி), [பாண்டவரிடம் சென்று] 'இயம்புவது இயம்பி - வீடுமன் கூறியதைச் சொல்லி, இதை நீ நன்று உரை செய்து - இந்த விஷயத்தை நீ நன்கு (அவர்) மனத்திற் பதியும்படி சொல்லி, ஐவர் சொல் உணர்ந்து உறுக – பஞ்சபாண்டவரின் பதிலையறிந்து திரும்பி வருவாயாக' என்று - என்றுகூறி, விடுப்ப - அனுப்ப, அவன் - அந்த உலூகமுனிவன், உற்று - (பாண்டவரை) அடைந்து, அன்று - திரௌபதியைத் துகிலுரிந்த அன்றைத் தினம், அவையில் - (துரியோதனன்) சபையில், நீவிர் புகலும் -

நீங்கள் சொன்ன, சபதம் - வஞ்சினங்களை, முற்றுவிர்களாயின் - நிறைவேற்றவேண்டினீர்களாயின், இன்று – இப்போதே, விரகு ஆடும் அரியோடு - உபாயத்தைச் செய்யவல்ல கிருஷ்ணனோடு, அமர் பொரற்கு எழுமின் - போரிடுதற்குப் புறப்படுங்கள், என்று உரை செய் என்று - என்று நீ கூறிவருவாயாக' என்று, அரசு - துரியோதனராசன், இயம்பினன் - சொல்லியனுப்பினான், என - என்று, புகலலும்-(உலூகன்) செய்தி சொல்லி முடித்தலும்; (எ.று) 'அந்த மொழி கேட்டிலும்' என மேலைக்கவியில் தொடரும்.

விதுரன் வில்லையிறுத்ததையும், அசுவத்தாமனைப் பேதித்தலையும் உலூகன் அறிந்தவனாதலின் 'விரகாடும் அரி' என்றானென்னலாம். இயம்புவது - குறிப்பு வினையாலணையும் பெயர். ஐவர் - தொகைக் குறிப்பு. (25)

26. உலூகனிடம் கண்ணபிரான் துரியோதனனுக்குச் செய்தி சொல்லியனுப்ப, அப்போது அங்கு ருக்குமி வருதல்.

இரண்டு கவிகள்—ஒரு தொடர்.

அந்தமொழி கேட்டிடலு மவண் திறல்கொள்
குந்திசுத ரச்சுதனை நோக்க வவனும்
வந்தவொரு தூதுவனோ டீதுரைசெய் வானுமது
மன்னவனை மங்கை யரொடும்
கந்தருவர் கொண்டசிறை வந்துவிடு வித்தவர்க
ளைப்படையொ டன்ற மரில்வெந்
தந்தவரொ டோர்முதுவ னந்தணனை நம்பியமர்
தந்துவெல வந்த தழகே.

(இ-ள்) அந்த மொழி கேட்டிடலும்-[உலூகமுனிவன் சொன்ன] அந்த வார்த்தையைக் கேட்டவுடனே, அவண் - அவ்விடத்து, திறல் கொள் குந்திசுதர் - வல்லமை கொண்ட பாண்டவர்கள், அச்சுதனை நோக்க - கண்ணபிரானை (க் குறிப்பாக)ப் பார்க்க, அவனும் - (குறிப் பறியும்) அந்தக் கண்ணபிரானும், வந்த ஒரு தூதுவனோடு - வந்த தூதுவனாகிய உலூகனோடும், ஈது உரை செய்வான்-இதனைச் சொல்ல லாயினான்: (அது யாதெனில்) 'நுமது மன்னவனை - உமது துரி யோதனராசனை, மங்கையரொடும் - அவனுக்குரிய பெண்டிரோடும், கந்தருவர் கொண்ட சிறை - சித்திரசேனன் தலைமையில் கந்தருவர் கள் பிணித்த சிறையினின்று, வந்து - அந்த இடத்திற்கு வந்து,

விடுவித்தவர்களை - விடுதலை செய்த வீமார்ச்சுனர்களை,—அன்று - (விராடனது) நிரைமீட்சியின்போது, அமரில் - (செய்த) போரில், படையொடு - (தனது) சேனையுடனே, வெந் தந்தவரொடு - முதுகு காட்டியோடிவந்த கர்ணனோடு, ஓர் முதுவன் - ஒரு கிழவனாகிய வீடுமனையும், அந்தணனை-பிராமணனாகிய துரோணனையும், நம்பி—, அமர் தந்து - போரினைச் செய்து, வெல வந்தது - வெல்லும்படி (இப்போது) வந்துள்ள செயல், அழகு ஏ - மிகவும் நேர்த்தியானதோ (அழகன்று) ; (எ.று).

அழகே, ஏ - வினா ; ஈற்றசையெனினுமாம். கந்தருவர் துரியோதனனைச் சிறைபிடிக்க, தருமன் விருப்பப்படி வீமார்ச்சுனர் அவனைச் சிறை மீட்ட செய்தி ஆரணிய பருவத்திற் கூறப்பட்டுள்ளது. வெந்தந்தவர் - கர்ணன். முதுவன் - வயது முதிர்ந்த பாட்டன் வீடுமன். அந்தணன் என்றதால் துரோணன் போர்க்குரியனல்லனே என்றபடி, பதினெட்டுநாள் பாரதப் போரில், முதற் பத்துநாள் முதுவனும், பின் ஐந்துநாள் அந்தணனும், பின் இரண்டு நாள் கர்ணனும் சேனைத்தலைவராயிருந்து தோற்றலைப் பின்னர்க் காணலாம். (26)

27. சொற்சபத முற்றுமிவர் கொற்றவனை நாளையமர்
துன்னுமுறை பன்னு கெனவே
பொற்கலனொ டாடையுமளித்தவனை யேவியுறு
போதவைய டைந்து வளவி
தற்பநகர் மன்னரனை யொன்னலர்த மைத்தெறுச
மர்த்திலையு னக்கெ னிலியான்
விற்கொடுக ணத்தடுவ னென்றரிமு னாணறவி
ளம்பினன கைப்ப வெவரும்.

(இ-ள்) (மேலும்) இவர் - இப்பாண்டவர்கள், சொல் - கூறிய, சபதம்-வஞ்சினங்கள், முற்றும்-நிறைவேறும்: (ஆகவே) கொற்றவனை - (உமது அரசனாகிய) துரியோதனனை, நாளை - நாளைக்கு, அமர் துன்னும் முறை - போர்க்கு வரும் முறைமையினை, பன்னுக - தெரிவித்துச் சொல்லுவாயாக, என - என்றுகூறி, பொன் கலனொடு - பொன்னாபரணங்களோடு, ஆடையும் - வஸ்திரங்களையும், அளித்து-கொடுத்து, அவனை - அந்த உலூகனை, ஏவி - அனுப்பிவிட்டு, உறு போது - திரும்பி வந்தபோது, வள விதற்பநகர் மன் - வளப்பம் பொருந்திய விதர்ப்பநகர்க்கு அரசனாகிய ருக்குமியென்பவன், நரனை-

அருச்சுனனை (நோக்கி), 'உனக்கு—, ஒன்னலர்தமை - பகைவர்களை, தெறு - அழிக்கும்படியான, சமர்த்து இலை எனில் - சாமர்த்தியம் இல்லையென்றால், யான் - நான் ஒருத்தனே, வில் கொடு - என் வில்லைக் கொண்டு, கணத்து அடுவன் - ஒரு க்ஷண நேரத்தில் கொன்றொழிப்பேன்,' என்று—, அரி முன் - (தான் முன்னர்த் தோற்ற) கண்ணபிரான் முன்னே, நாண் அற - (சிறிதேனும்) வெட்கமின்றி, விளம்பினன் - சொல்லினான்: (அது கேட்டு) எவரும் - (ஆங்குக் கூடியிருந்த) அனைவரும், நகைப்ப - பரிகசித்துச் சிரிக்க; (எ.று.)

ருக்குமி - இவன் உருக்குமிணியின் உடன்பிறந்தோன். பீஷ்மகனுடைய புத்திரன். கண்ணபிரான் உருக்குமிணியை யெடுத்து வைத்துத் தேரிற் சென்றபோது அவனோடு போரிட்டுத் தோற்று அவமானமுற்றவன். அதனால்தான் அவன் 'ஒரு கணத்தடுவன்' என்று வீரம் பேசியபோது 'அரிமுன் நாணற விளம்பினன்' என்றது. நகை - இகழ்ச்சிபற்றியது. முற்றும் - வினைமுற்று. பன்னுக - வியங்கோள் வினைமுற்று. பன்னுகென - வியங்கோளின் அகரவீறு தொகுத்தல். விதர்ப்பநகர் என வரவேண்டியது விதற்பநகர் என எதுகை நோக்கி வந்தது. சமர்த்து - சாமர்த்தியம். எனிலியான் - 'தன்னொழி மெய்ம்முன் யகரம் வர இகரம் துன்னிற்று'. கொடு - கொண்டு என்பதன் தொகுத்தல். அடுவன் - தன்மை யொருமை வினைமுற்று. (27)

28. துரியோதனனிடம் ருக்குமிவர அவனும் அவனையேற்க மறுத்துவிட்டு, பிறகு உலூகன் கூறிய செய்தி கேட்டுப் போர்க்கு முரசறைவித்தல்.

வெற்றிசிலை வல்லவனு ருத்தரவ கேதுதவி
வேண்டுவன வற்கு தவெனச்
சொற்றனனுருக்குமிபு ரத்தணுகி னன்பிரதை
சுதர்களமர் நாளை யெனவந்
துற்றவர்த மக்கறிவு றுத்தினரு லூகனவ
னுற்றிவர்பு கன்ற மைசொலக்
கொற்றவனெ வர்க்குமமர் பிற்பகலி லேறுபொரு
குணின்முரச மறை வித்தனன்.

(இ-ள்) வெற்றி சிலை வல்லவன் - வென்றி பொருந்திய வில்லை யேந்திய அருச்சுனன், உருத்து-கோபித்து, (உருக்குமியை நோக்கி)

'அரவகேது உதவி வேண்டுவன் - துரியோதனன் (உன்) உதவியை வேண்டுவான், அவற்கு உதவு என - அவனுக்குத் துணை செய்வாயாக' என்று, சொற்றனன் - சொல்லினான் ; (அவன் சொற்படியே) உருக்குமி-ருக்குமியானவன், புரத்து அணுகினன்-(குருநிலத்திலுள்ள படைவீட்டிற்கு வந்தான் : (இது நிற்க) பிரதை சுதர்கள் – குந்தி புதல்வர்களாகிய பாண்டவர்கள், வந்து உற்றவர் தமக்கு-(தமக்குத்) துணையாக வந்து சேர்ந்த அரசர்களுக்கு, நாளை என - போர் நாளைக்குத் தொடங்கப்படும் என்று, அறிவுறுத்தினர் - தெரியப்படுத்தினர் : (அது கேட்ட) உலூகன் - உலூக முனிவன், அவண் உற்று-துரியோதனனிடம் வந்து, இவர் புகன்றமை சொல - இந்தப் பாண்டவர் கூறிய செய்தியைச் சொல்ல, (அதுகேட்டு) கொற்றவன் - துரியோதனராசன், எவர்க்கும் - அனைவருக்கும், 'அமர் பிற்பகலில்' - 'போர் நாளை தொடங்கும்' என்று, ஏறு பொரு - இடியொலி போன்று ஒலியெழுப்பும், குணில் முரசம் - கடிப்பினால் அடிக்கப்படும் முரசத்தின் மூலம், அறைவித்தனன் - அறைந்து பலர்க்கும் தெரிவித்தனன் ; (எ.று).

ருக்குமி துரியோதனனிடம் சென்று அவனுக்கு உதவுவதாகச் சொல்ல அவனும் மறுக்கவே, பலராமனைப்போல் ருக்குமி தீர்த்த யாத்திரைக்குச் சென்றான் என விவரம் அறிக.

[குறிப்பு : பலராமனும் ருக்குமியும் இருவர்தாம் அந்த யுத்தத்திலிருந்து விலகினார்கள்] பிரதை - குந்தி. இவள் யதுகுலத்துத் தோன்றலான சூரன் மகள் : இந்தச் சூரன் தன் அத்தை குமாரனான குந்திபோசனுக்கு மகவில்லாக் குறையைப் போக்க, தன் மகள் பிரதையை வளர்க்குமாறு கொடுத்தான் : அவளே குந்திபோசனால் வளர்க்கப்பட்டது பற்றிக் குந்தியென்று வழங்கப்படுவாளாயினாள். பிற்பகல் - மறுநாள். ஏறு - இடியேறு : பேரொலி யெழுப்பும் ஆண் இடி என்பர். பொரு - உவமவுருபு. குணில் - குறுந்தடி, பறையடிக்கும் கடிப்பு. உதவு - ஏவல் வினை. உற்றவர் - வினையாலணையும் பெயர். புகன்றமை - தொழிலாகுபெயர். (28)

29. மறுநாள் சூரியோதயமாதல்.

இந்தவண மீங்கிவரி ரண்டுபடை யுஞ்சமரி
யற்றுதலு ளங்க ருதியே
உந்திரவொ ழிந்திலைகொ லென்றவரெ ழுந்திடலு
ணர்ந்தமர்தெ ரிந்தி டவினன்

வந்துதய வெற்பினிலெ ழுந்தனனெ னுமுனிவ
குத்தனனுத் தியோக பருவப்
பைந்தமிழ ருங்கவிதை பத்திருப தோடுமிரு
பத்தேழின் முற்றி யதரோ.

(இ-ள்) இந்த வணம் - இந்தப்படி, ஈங்கு - இந்தக் குருநிலத்தில், இவர் இரண்டு படையும் - இவர்களது இருதிறத்துச் சேனைகளும், சமர் இயற்றுதல் - போரிடப்போதலை, உளம் கருதியே - மனத்தில் எண்ணிக் கொண்டே, உந்து இரவு ஒழிந்திலை - கழிந்து செல்லும் இராத்திரி இன்னும் நீங்கினபாடில்லை, என்று - என்று சொல்லிக் கொண்டே, அவர் எழுந்திடல் - அவர்கள் [படுக்கையினின்று] எழுதலை, உணர்ந்து - தான் அறிந்து, இனன் - சூரியன், அமர் தெரிந்திட - [நிகழப்போகும்] போரை [த்தானும்] அறிந்திடுதற்கு, உதயவெற்பினில் வந்து - உதயகிரியின்மேல் வந்து, எழுந்தனன் - தோன்றினான், எனு - என்று, முனி வைசம்பாயன முனிவன், வகுத்தனன் - (ஜனமேஜயனுக்குக்) கூறி முடித்தான்: உத்தியோக பருவம் - இந்த உத்தியோக பருவம், பைந்தமிழ் அரும் கவிதை - பசுந்தமிழிற் செய்த அரிய செய்யுட்கள், பத்திருபதோடும் இருபத்தேழில் - இருநூற்றிருபத்தேழு கொண்டு, முற்றியது - முடிந்தது; (எ.று) அரோ - ஈற்றசை.

மறுநாட்போரை மனத்தில் கருதியே படுத்தலால், இரவு நீட்டித்துத் தோன்றுதல் இயற்கை. கொல் - அசை. பத்திருபது - இருநூறு. அமர் தெரிந்திட இனன் எழுந்தனன் என்றது - தற்குறிப்பேற்றவணி. (29)

படையெழுச்சிச் சருக்கம் முற்றிற்று.

உத்தியோக பருவம் முற்றிற்று.

உத்தியோக பருவத்தின் அபிதான சூசிகையகராதி

அகத்தியன் : நகுஷனைச் சாபமிட்டு அது தருமனால் நீங்கும் என்றது, உலூ-24

அசுவத்தாமன் : இவன் முன் யமன் வென்னிடுவன், சஞ்-39 கண்ணனால் மித்திரபேதஞ் செய்யப்படல், கிரு-96: இவனைத் துரியோதனன் நம்பலாகாதெனல், 97: அதிரதன், படை-16: பகையை ஒரு நாழிகையினில் அழிப்பவன், 24:

அதிரதன் : திருதராட்டிரன் தேர்ப்பாகன்: கன்னனைக் கண்டெடுத்து வளர்த்தவன். கிரு-82.

அபிமன்னு : திருதராட்டிரனின் பவுத்திரரைக் கொல்ல நின்றவன், சஞ்-50: அதிரதன், படை-9.

அருச்சுனன் : துவரை போதல், உலூ-9: திருவடிப் பக்கம் அமர்தல், 11: கிரீசனை வென்று அசுரரைக் காய்ந்தோன், சஞ்-35: அதிரதன், படை-9: பகையை ஒரு கண நேரத்தில் அழிப்பன். 24-

இந்திரன் : இவன் கதை, உலூ-18-25: விருத்திராசுரனைக் கொன்றது, 20:

இராவான் (அரவான்) : புராந்தகன் இவன் எனப்படுபவன், சஞ்-35: அரவகன்னி குமாரன், 50: தீயோர்தம்மைக் கொல்ல நின்றவன், 50- களப்பலிக்கு இசைதல், படை-7: தான் சில நாள் வரையில் உயிரோடிருக்க வரம் வேண்டுதல், 8:

உத்தமோசா : இவன் துருபதனுக்கு உறவினன், சஞ்-36: சமரதன், படை-10.

உத்தரன் : விராடன் இளைய மகன், சஞ்-36:

உதாமன் : [யுதாமந்யு: போரிற் கோபமுடையான் என்று பொருள்:] துருபதனுக்கு உறவினன், சஞ்-36: சமரதன், படை-10.

உருக்குமி : விதர்ப்ப நகர் அரசன். படை-27: அருச்சுனனும் துரியோதனனும் இவனைத் துணைக் கொள மறுத்தல், 27, 28.

உலூகன் : துரியோதனனிடம் தூது போதல், உலூ-26: தூது செய்தி கூறல், 27: தருமனிடம் திரும்பி வந்து தூது போய் வந்த செய்தி கூறல், 31:

[குறிப்பு : உலூகன் என்ற நாமம் பெற்றவனைத் துரியோதனன் பாண்டவரிடம் அனுப்பி அவரைப் போருக்கு வரச் சொல்லுதல் படை-25]

கடோற்கசன் : கைத்திறற் கரி போன்றவன், சஞ்-36: மாருதி மைந்தன், 50: மாயை வல்லாரை மாய்ப்பன், 50: அர்த்த ரதன், படை-10,

கண்ணுவன் : கண்ணன் தூது மொழி கேட்டிட வந்தவர், கிரு-22: மாதலி கதை கூறித் துரியோதனனுக்கு உறுதி கூறல், 56-58.

கன்னன் : வீடுமனைக் கோபித்துக் கூறல், உலூ-29: வாயினால் வெல்பவன், சஞ்-32: உதயன் உயிர்த்தோன், 48: தினகரன் சேய், கிரு-41: ஆதவன் அளித்த மதலை, 43: நாகபுங்கம் கொண்டவன், 78: அங்கர் கோமான், 79 பணைக்கணை படைத்தவன் 82: அந்தணருக்கருள் கொடையான், 85: இரப்போர் இடர் தவிர்ப்பான், 95: குந்தியை இரு வரங் கேட்டல், 101: அர்த்தரதன், படை-16: வீடுமனோடு மனஸ்தாபப்படல், 17: பகையை ஐந்து பகலில் அழிப்பன், 24.

காந்தாரி : துரியோதனனுக்கு நற்புத்தி கூறல், சஞ்-56.

கிருஷ்ணன் : கன்றினால் விளவெறிந்தனன், மலைப்பாம்பினையழித்தனன், பரிவாய் பிளந்தனன், பகந்தனைக் கொன்றவன், உலூ-1- தூதேவுதல் நலம் என்றது, 3: அருச்சுனனைத் துவரைக்கு வரவழைத்தல், 9: பொய்த்துயில் புரிதல், 10: போரில் ஆயுதம் தொடேன் எனல், 13: சஞ்சயனுக்குக் கூறியது, சஞ்-12: வாசவன் கன்மழைக்கோர் வெற்பெடுத்தோன், 35: சகதேவன் திறத்தைப் பரீட்சித்தல், கிருஷ்-10: நின்குழல் முடிப்பேன் நான் என்று திரௌபதியிடம் கூறல், 16: திரிவிக்கிரமன், 21: பரந்தாமன், 28:

தெரிசனைக் கரியோன், 29: துளவோன், 29: ஆழியான், 32: அச்சுதன், 33: பச்சைமால், 33: நாரணன். 40: கனியுகுத்தோன், 42: இடையன், 42: யாதவர் மரபில் வந்தவன், 43: கரியவன். 48, 54: கமலன் முதலியர்க் கரிய தாமரைநாபன், 53: மாமருதிறுத்தவன், 70: நிரை துரந்து அளைகவர்ந்து கட்டுப்படுபவன், 72: குடைக் கொண்டொர் கிரிசிலையின் மழை தடுத்தோன், 80: விசுவ ரூபங் கொள்ளுதல், 88-92: கர்ணனுக்கு அவன் பிறப் புணர்த்துதல், 94: அசுவத்தாமனை மித்திரபேதஞ் செய்தல், 96: அமலன், 103: முகுந்தன், படை-1: நாகணை துறந்தவன், 3: போதேவின் வேள் (மன்மதன்) பயந்த புயல், 7: சதுர்த்தசியை அமாவாசையாக மாற்றுதல், 7.

கிருதவன்மா: துரியோதனனுக்குப் படைத்துணையாகக் கிருஷ்ண னால் யாதவ சேனைக்குத் தலைவனாக அனுப்பப்பட்டவன், உலூ-14: சமரதன், படை-16:

கிருபன்: பூர்வாசாரியன், சஞ்-39: இவன் முன் யமன் வென்னிடு வன், 39: சமரதன், படை-16.

குந்தி: கதிரவனுக்குயிர்த்த சேய் நதிவிடுத்தவள், கிரு-82: கர்ண னுக்குத் தான் தாயென நிரூபித்தல், 99: கர்ணனிடம் வரம் வேண்டுதல், 100:

சகதேவன்: மடங்கலை நேர்பவன், சஞ்-35: யுத்தம் நேராதிருத் தற்கு உபாயம் கூறல், 9: கிருஷ்ணனைக் கேட்ட வரம், 11: களப்பலிக்கு நாள் நிச்சயித்தல், பட-7: அர்த்தரதன், படை-10.

சகுனி: போர்வாளியின் வென்றிட வல்லான், சஞ்-39: மத்திரை மைந்தரால் கொல்லப்படுவன்' 50: கண்ணனைப் படுகுழி யிற் பாய்ச்சிச் சிறையிட வேண்டுமென்றவன், 85: சம ரதன், படை-16.

சஞ்சயன்: பாண்டவரிடம் வருதல், சஞ்-1: அவர்கள் சேமம் விசாரித்தல், 4: தருமனிடம் கூறிய செய்தி, 5-6: திருத ராட்டிரனிடம் கூறியவை, 21-29: பாண்டவர் படை வலிமை கூறல், 35-37:

சதானிகன்: விராடனுடைய உறவினன், படை-11.

சமதக்கினி (பரசுராமன்): கண்ணன் தூது மொழி கேட்டிட வந் தவர், கிரு-22: தம்போத்பவன் கதை செப்பித் துரியோ தனனுக்கு உறுதி கூறல், 55-56.

சயத்திரதன் : சிந்துபதி, சஞ்-39: அருச்சுனனுல் கொல்லப் படுவன், 50: சமரதன், படை-16.

சராசந்தன் : மகததேசத்துக் கிரிவிரசநகரினின்ருள்பவன், வீமனுல் கொல்லப்பட்டான், சஞ்—36.

சல்லியன் : துரியோதனனுல் வசப்படுத்தப்படல் உலூ—15: கர்ணன் வலிமை குன்றச் செய்தற்கு உடன்படல் , 17: இந்திரன் கதையைத் தருமனுக்குக் கூறினுன், 18—25: போர் வாளியின் வென்றிட வல்லான், சஞ்—39—: முரசகேது கொல்லநின்றவன், 49: சமரதன், படை—16

சாத்தகி : பலராமனைப் பழித்தல், உலூ—4: கேசவற் கிளவல், சஞ்—35: கிருதவர்மாவைக் கொல்பவன், 50: துரியோதனனுடன் சமாதானங் கூடாது எனல், கிருஷ்—15: சேனையோடு பாண்டவரிடம் திரும்புதல், 102: மகாரதன், படை 9

சிகண்டி : விற்பிடித்தவன், சஞ்—36: வீடுமனைக் கொல்ல நின்றவன், 49: மகாரதன், படை—9.

சிசுபாலன் : (சேதி நாட்டரசன்): மாலிகழ்ந்தோன், சஞ்—36.

சுவேதன் : விராடன் மூத்தமகன், சஞ்—36: மச்சர்கோன் உயிர்த்தவன், படை—5: தருமனுல் சேனுபதியாக முடி சூட்டப்படல், அதிரதன், 9: மச்சர்தந்திரி, 13-

சோமதத்தன் : பூரிசிரவாவின் தந்தை, சஞ்—40: துரியோதனனுக் குத் துணையாகுபவன், 40: மாரதன் படை—16

தருமன் : உலூகனைத் தூதனுப்புதல், உலூ—8: கன்னனது வலிமை குறையும்படி செய்யச் சல்லியனை வேண்டுதல் 17: சஞ்சயனைப் பிறர்சேமம் விசாரித்தல், சஞ்—3: பகையொழித்தபின் தவம்போவேம் எனல், 7: தருமன்சேனை ஏழு அக்குரோணி அளவினது, 37: படை—5. சரதமும் பொறையும் சாந்தமும் வலியும் தக்கதேவு அருளும் வாய்ந் திடும் மெய்விரதன், 37 கண்ணனுக்குத் தூது பேசும்விதம் கூறல், கிருஷ்—3: மெய் விரதன், படை-4: முரசகேது, படை—5: மகாரதன் படை—9.

திட்டகேது : [திருஷ்டத்யும்நன் மகன்] ஊனயிற் படையுடையவன், படை—11

திட்டத்துய்மன் : கடல் கனல் அனிலன் நஞ்சு இமனுக்கு ஒத்தவன், சஞ்—36: துரோணனைக் கொல்ல நின்றவன், 49, மகாரதன், படை—9

திருதராட்டிரன் : உலூகனைப் பாண்டவர்க்கு இதஞ் சொல வேண்டுதல், உலூ—30: சஞ்சயனைப் பாண்டவரிடம் தூதனுப்புதல் சஞ்—1: விதுரனை அழைத்து, தனது கவலைபோக்க வேண்டுதல். 18: துரியோதனனை வெறுத்துப் பேசுதல்: 63: திருக்கிலாதவன், 71

திரௌபதி : குழல் முடிப்பதெக்காலம் எனக் கண்ணனை வினவுதல் கிரு—14: சைவலக் குழலினள்,73

துச்சாதனன் . துரியோதனன் தம்பி, சஞ்—42: வீமனுற் கொல்லப்படுவன், 49: கிருஷ்ணனும் சீரியர்களும் துரியோதனனைத் தருமன்பால் அளிக்கும் நினைவினராவர் எனல்,70: கிருஷ்ணனை அவன் படையோடு இருள்போம்முன்னர் அடுவது கருமம் என்றவன், கிரு—84: அரியோடும் விதுரனைச் செந்தழலிட்டுச் செகுத்திடுவம் என்றவன், 85: அர்த்தரதன், படை—16.

துரியோதனன் : கிருஷ்ணனைத் துணை வேண்டித் துவரை ஏகுதல், உலூ—9: தலைப்பக்கம் அமர்தல், 11: சல்லியனை ஏமாற்றித் தன் பக்கம் சேர்த்தல், 15: உலூகனை வரவேற்றல் 26: பாண்டவர்களுக்குப் பாகம் இல்லையெனல், 30: சர்ப்ப கேதனன், சஞ்—1 தந்தைக்குத் தன் படைவலிமை கூறல் 38—42 இவன் சேனை பதினோரக் குரோணி அளவினது 41: படை—6. தன்விரகு வலிமை கூறல், 43: பாண்டவரையழைத்து அவர் பதம் தாழ்ந்து உயிர் வாழேன் எனல், 44-57: தன் ஆண்மை பேசல், 46—47: வீமனுற் கொல்லப்படுபவன், 49: சஞ்சயனை யிகழ்ந்து பேசுதல், 53: அற்ப மதியான், கிரு—6: பாம்புயர்த்தோன், 41: கிருஷ்ணனை இடையனென்றிகழ்தல், 42: முனிவர்களை நிஷ்டூரமாகப் பேசுதல் 64: பாண்டவர் இல்லொன்றளிக்கிலும் வெறுப்பரோ எனல், 67: ஆலமன்னவன், 70: தூணை மோதுதல், 71: விதுரனைச் சூளை தந்த மகன் எனப் பழித்து இகழ்தல், 75:

படுகுழியமைத்தவன், 86: கண்ணனுக்குப் பொய்யாசன மளித்தல், 87: அசுவத்தாமனை நம்பலாகாதெனல் 97: பன்னககேதனன், படை-8: அங்கதமுயர்த்த நிருபன், படை.21:

துருபதன் : பலராமன் மனுநெறிப்படி மொழிந்தனன் என்றவன், உலூ-4: தன் புரோகிதன் உலூகனைத் தூதனுப்பலாம் எனல், 5- சமரதன், படை-10.

துரோணன் : துரியோதனனுக்கு நற்புத்தி கூறல், உலூ-28: மறைக்கொடியோன், சஞ்-39. இவனுக்கு முன் யமன் வென்னிடுவன், 39: அதிரதன், படை-16: பகையை மூன்று தினத்தில் அழிப்பன், 24.

துரௌபதர் (உபபாண்டவர்) : கெடாத கற்பினள் சுதர், சஞ்-35·

துவரை : கண்ணபிரானது ஊர், உலூ-6: துரியோதனன் வந்தமை, 9.

துன்மருடன் : மாரதன், படை-16.

துன்முகன் : துரியோதனன் தம்பி, சஞ்-42: வீமனாற் கொல்லப் படுவன், 49: அர்த்தரதன், படை-16.

நகுலன் : மடங்கலை நேர்பவன், சஞ்-35: அர்த்தரதன், படை-10.

நகுஷன் : இந்திரனுக்கப்படடல், உலூ-21: அகத்தியர் சாபத்துக் கிலக்காதல், 24.

நாரதர் : கண்ணன் தூதுமொழி கேட்டிட வந்தவர், கிரு-22: காலவர் கதை கூறித் துரியோதனனைத் தெருட்டுதல், 59-63.

பகதத்தன் : [நரகாசுரனது மகன். பதினாயிரம் யானை வலியுடையவன்] புகர்மா நடத்துபவன், சஞ்.40: மாரதன், படை-16.

பலதேவன் (பலராமன்) : சூதினால் கொண்ட பூமியைச் சூதினாலேயே கொள்ள வேண்டும், உலூ-3: நீலாம்பரன், சஞ்-41: தீர்த்த யாத்திரை செல்லுதல், முசலி; படை-23.

பாண்டவர் : பாசறையமைத்துத் தங்குதல், படை-14.

பூரிச்சிரவன் (பூரிசிரவா) : துரியோதனனுக்குத் துணையாகுபவன், சஞ்-40: அதிரதன், படை-16.

வராககேது : விராடனுடைய உறவினன், படை-11.

விகருணன் : தூதரைக் கோறல் பங்கமுறு நரகுறுத்தும் என்றனன். கிரு-84.

விதுரன் : துரியோதனனுக்கு அறிவுரை கூறல்; உலூ-27: திருதராட்டிரனுக்கு நன்மதி கூறுதல், சஞ்-19: திருதராட்டிரனை இடித்துரைத்தல், கிரு-30: வெஞ்சிலை விதுரன், 36: கிருஷ்ணனுக்கும் அவனுடன் வந்தோர்க்கும் விருந்து செய்தல், 38: துரியோதனன் இவரை இகழ்ந்து பழித்தல்; 75: வில்முறித்துப் போகடுதல், 76: அறனே படிவமானுன், 80: தீர்த்த யாத்திரை செல்லுதல், படை-23.

வியாசன் : திருதராட்டிரனுக்கு நற்புத்தி கூறுதல், சஞ்-60-61:

விராடன் : கண்ணன் சொன்னபடி தூது போதல் நலம் என்ருன், உலூ-5: மாரதன், படை-9: மீனநாடன், படை-11.

விருடசேனன் : [கர்ணனின் மூத்தமகன்] அர்த்தரதன், படை-16

வீடுமன் : துரியோதனனுக்கு நற்புத்தி கூறல், உலூ-28: கர்ணனைப் பரிகசித்தல், 29: நதிமகன், சஞ்-32: மழுப்படையோன் வென்னிட்டோட வென்றவன், 38: இதழி வேய்ந்தவனும் கலக்கமுறச் செய்ய முடியாதவன், 38: பரசாயுதனை வென்றவன். 48: திருதராட்டிரனை யிழித்தல், கிரு-31: காங்கயன், 36: சிறுதாய் பயந்த அனுசர்க்குப் பார் தந்தவன், 68: வன்னி (பிரமசாரி) 79: படை-17: அரசரை நால்வகை ரதவீரராகப் பிரித்தல், படை-16: அதிரதன்-16: பகையை ஒரு தினத்தில் அழிப்பன், 24.

வீமன் : சஞ்சயன் கூறியது கேட்டு வெகுண்டு கூறுதல், சஞ்-7-8: கீசகர் இடும்பன் முதலியவரை வென்ருேன், 35: தன்னைத் தூது போக்க வேண்டல், கிரு-4: அதிரதன், படை-9.

அபிதான சூசிகையகராதி முற்றிற்று.

உத்தியோக பருவத்தின் அரும்பதவகராதி முதலியன

அக்குரோணி—அக்ஷௌஹிணீ, சஞ்-37

அகடு—வயிறு, சஞ்-61

அகி—பாம்பு, உலூ-8

அகிதலம்—நாகங்கள் வசிக்கிற பாதாள லோகம், கிரு-89

அங்கதம்—பாம்பு, படை-21

அங்கேசன் – கர்ணன், உலூ-28

அசரீரி—ஆகாசவாணி, உலூ-23

அஞ்சலித்தல்—கை கூப்புதல், சஞ்-2

அடுதல்—கொல்லுதல், கிரு-84

அடைக்காய்—வெற்றிலை, உலூ-15

அண்முதல்—நெருங்குதல், கிட்டுதல், கிரு-26

அணங்கு—வருத்தம், உலூ-21

அந்தகன்—குருடன், உலூ-7

அந்தரம்—ஆகாயம், கிரு-44

அப்பு—ஜலம், நீர், சஞ்-61

அபிதானம்—பெயர் (புகழ்), கிரு-77

அம்பரம்—ஆகாசம், வானம், கிரு-88

அம்பு—நீர், கிரு—90

அமலன்—தோஷமற்றவன், கிரு—91

அயர்தல்—தளர்தல் சஞ்—38

அர்த்தம்—பாதி, கிரு—3

அரக்கி மைந்தன்—கடோற்கசன், படை—10. (அரக்கி—இடும்பி)

அரம்பையர்—தேவமாதர், உலூ—21

அரவகன்னி—நாக கன்னிகை, உலூபி, சஞ்—50

அரவகேதனன்—துரியோதனன், (அரவம்-சர்ப்பம்) சஞ்—1

அரி—இந்திரன், உலூ—18

அரிகொள்பீடம்—சிம்மாதனம், உலா—2
அருத்தம்—பாதிபாகம், கிரு—50
அலகு—எண்ணிக்கை. சஞ்—37
அலங்கல்—மாலை, படை—13
அலாயுதன்—பலராமன், (அலம்—கலப்பை), உலா—14
அவதி—கால வெல்லை, உலா—26
அழல் கொம்பு—திரௌபதி, உலா—25
அளக்கர்—கடல், படை—13
அளை—வெண்ணெய், கிரு—72
அற—முழுவதும், படை-17
அறங்கெடு நிமித்தம்—துர்நிமித்தம், அபசகுனம், படை—22
அறுவை—ஆடை, சஞ்—3
அறைதல்—சொல்லுதல், சஞ்—24
அன்புகரந்தவன்—துரியோதனன், கிரு—42
அனங்கன்—மன்மதன், உலா—21
அனந்தன்—ஆதிசேடன், படை—13
அனிகம்—படை, சஞ்—46
அனிலன்—காற்று, சஞ்—36
அனுசர்—தம்பியர், கிரு—68
ஆசினி—பலாமரம், கிரு—28
ஆயு—ஆயுள், கிரு—58
ஆர்கலி—சமுத்திரம், சஞ்—61
ஆலம்—விஷம். கிரு—70
ஆன்போர்—ஆநிரையைக் கவரும் போர், உலா—29
ஆனனம்—முகம், கிரு—56
இகல்—பகைமை, கிரு—58
இகலவர்—எதிரிகள், கிரு—79
இகுத்தல்—அழித்தல், சஞ்—25
இதவு—இதம், நன்மை, கிரு—75
இதழி—கொன்றை, சஞ்—38
இந்திரை—இலக்குமி, கிரு—34
இபம்—யானை, உலா-18, சஞ்-28
இயம்—வாச்சியங்கள், படை-13
இரப்போர் இடர் தவிர்ப்பான்-கர்ணன், கிரு—95
இல்பொருளுவமையணி, படை—22

இவுளி - குதிரை, கிரு-62
இவுளித்தாமன்—அசுவத்தாமன், கிரு-97
இறுத்தவன்—சாய்த்தவன், முறித்தவன், கிரு 70
இனன்—சூரியன், கிரு-38; படை-29
ஈனர்—நீசர், கிரு-43
உகிர்—நகம், கிரு-89
உஞற்றுதல்—செய்தல், கிரு-76; அமைத்தல், படை-14.
உடற்றுதல்—செய்தல், போரிடுதல், உலூ-38
உடைந்தோன்—வலிமையிழந்தோன், தோற்றவன், உலூ-29
உத்தியோகம்—முயற்சி, (பக். 1)
உதயன்—சூரியன், சஞ்—48
உதாசனன்—அக்னிதேவன், கிரு-42
உதாசினம்—அலட்சியமான வார்த்தை, கிரு-77
உபசாரம்—முகமன் வார்த்தை, கிரு-42
உம்பர்-தேவர், உலூ-18
உய்த்தல்—அனுப்புதல், சஞ்-7
உரகர்—நாகர், கிரு-26 98
உரி—தோல், கிரு-54
உருத்தல்—கோபித்தல், உலூ-4
உரையால் வெல்பவன்—கன்னன், சஞ்-48
உரையில் வெல்கனன்—பேசுதலில் வெல்லும் கர்ணன், சஞ்-3
உவமையணி, சஞ்-25; கிரு-41
உவரி—கடல், கிரு-50
உவா—அமாவாசை, படை—7
உழக்கல்—உதைத்து மிதித்தல், கிரு—89
உழுவை—புலி, கிரு—54
உளக்கயிறு—மனமாகிய கயிறு, [உருவகம்] கிரு—10
உற்பலம்—குவளைமலர், (தருமனுக்குரியது) கிரு—15
உறை—மழை, கிரு—7
உன்னல்—நினைத்தல், சஞ்—15
ஊர்கோள்—மண்டலம், பரிவேஷம், (Hālo around the sun or moon) கிரு—96
ஊரு—தொடை, சஞ்—3
எஞ்சலிலான்—கிருஷ்ணன், (எஞ்சுதல்—அழிதல்,) கிரு—94
எண்கணன்—பிரமன், கிரு—92

எள்ளல்—இகழ்தல், உலூ—29

எற்றுதல்—தூக்கியெறிதல், கிரு—89

எறுழ்—வலிமை, உலூ—1

என்பு—எலும்பு, கிரு—98

ஏதம்—குற்றம், உலூ—4

ஏயது—பொருந்துவது, சஞ்—14

ஏர்—அழகு, சஞ்—5

ஏவலன்—வேலையாளன், உலூ—9

ஐம்படையான்—திருமால், சஞ்—60

ஒருமித்தல்—உடன்படல், சஞ்—6

ஒருவுதல்—நீங்குதல், சஞ்—3

ஒன்ர்—பகைவர்; [ஒன்னுர் என்பதன் இடைக்குறை] படை—12

ஓதி—கூந்தல், சஞ்—55

ஓதிமம் உயர்த்தோன்—பிரமன்: (ஓதிமம்—அன்னம்: இங்கே கொடியைக் காட்டி வந்தது) சஞ்—44

ககேதனம்—கருடக் கொடி. (ககம்—பறவை. கருடன்) கிரு—92

கங்குல்—இராத்திரி, கிரு—84

கடம்—காடு, கிரு—30

கடி—பேய், சஞ்—43

கண்படைபுரிதல்—துயில் கொள்ளுதல். தூங்குதல், உலூ—10

கணி—ஞானமுடைய கிருபன், படை—16

கதம்—கோபம், படை—20

கதலி—வாழை, கிரு—24

கந்துகம்—குதிரை, படை—21

கமலன்—பிரமன், கிரு—53

கராசலம்—யானை, படை—12

கரி—சாட்சி, சான்று, சஞ்—5

கருத்தன்—யாவர் மனத்திலும் இருக்கும் பிரான், கண்ண பிரான், கிரு—67

கருத்துடையடைகொளி, படை—10

கலுழன்—கருடன், கிரு—57

கவண்—எறிகல், கிரு—91

கவறு—சூதாட்டம், சஞ்—3
கவுந்தி—குந்திதேவி, கிரு—94, 99
கழித்துணை—மிக்கதுணை, பெருந்துணை, உலூ—12
களப்பலி,படை—6.
கன்னன் வாய்ப்பேச்சில் வெல்பவன், சஞ்—32
கனல் வந்தவன்—திட்டத்துய்மன், சஞ்—49
கனிட்டர்—தம்பிமார், படை—21
காங்கயன்—கங்கா புத்திரனாகிய வீடுமன், கிரு—36
காட்சியணி, கிரு—26
காலாந்தகன்—யமன், சஞ்—41
கிருஷ்ணார்ச்சுனர் கருநிறமுடையவர், சஞ்—23
கிளத்தல்—சொல்லுதல், சஞ்—21, கிரு—80
குணில்—கடிப்பு, (பறையடிக்கும்) குறுந்தடி, படை—28
குந்தம்—கைவேல், கிரு—91
குலிசன்—இந்திரன் (குலிசம்—வச்சிரப்படை), கிரு—92
குறுமுனி—அகத்திய மகரிஷி, உலூ—24
கூதேவர்—பிராம்மணர், (கூ—பூமி), படை—7
கையமர்த்துதல்—கையால் சைகை காட்டுதல், சஞ்-10
கையுறை—காணிக்கை, கிரு-24
கொடைச் சீர்வாய்த்தவன்—கன்னன், சஞ்—39
கொண்டல்—மேகம், படை—13
கோசிகன்—விசுவாமித்திரமுனிவன், கிரு—59
கோல்—அம்பு, கிரு—5
கோறல்—கொல்லுதல், உலூ—1; கிரு—84
சசி—இந்திராணி, உலூ—21
சஞ்சத்தகர் = ஸம்சப்தகர்: போர் தொடங்கு முன்னமே பல வகைச் சபதஞ் செய்து பின் அவ்வாறே நடத்திக் காட்டும் வீரர்கள் சஞ்—40; படை—20.
சதம்—நிலையானது, சஞ்—6
சதுர்—நான்கு, படை—1
சந்ததி—குலவரலாறு, கிரு—82
சந்தனம்—தேர், உலூ—14
சந்து—சந்தனமரம், கிரு—28
சந்து அணவுதல்—சமாதானம் செய்துவைத்தல், கிரு—85
உ—32

சமதக்கினி—ஜாமதக்னி, பரசுராமன், கிரு—54
சமர்த்து—சாமர்த்தியம், படை—27
சமரம்—போர், சஞ்—47
சமித்தல்—க்ஷமித்தல், பொறுத்தல், கிரு—92
சர்ப்பகேதனன்—துரியோதனன், சஞ்—1
சரதம்—நிச்சயம், சஞ்—16
சவ்வியசாசி—அருச்சுனன், (வலக்கையினுல் மாத்திரமன்றி இடக்கையினுலும் அம்பு தொடுப்பவன்) கிரு—101
சற்குணம்—நற்குணம், சஞ்—13
சிகரி—மலே, கிரு—26
சிந்துபதி—சயிந்தவன், சஞ்—39
சில்லியம்—சக்கரம், உலா—16
சினகரம்—கோயில், அரண்மனே, உலா—23
சீதரன்—திருமால், கிருஷ்ணன், உலா—9
சீர்த்தி—மிகுபுகழ், உலா—12
சீவன்—பிருஹஸ்பதி, வியாழன், உலா—22
சுடிகை—முடி, உலா—25
சுதன்—மகன், உலா—7
சுந்தரி—இந்திராணி, உலு-24
சுரர்படை—வச்சிராயுதம், உலா-19
சுனசி—இந்திரன், உலா-17
சூழ்ச்சி—உபாயம், கிரு-1
சூழ்ச்சி நான்கு—சாமபேததானதண்டம், கிரு-1
சூள்—சபதம், கிரு-97
சூலே—வேசி, கிரு-75
செஞ்சுடர்—சூரியன், கிரு-94
செஞ்சோற்றுக் கடன்—செவ்வையாகப் போகட்டு வந்த சோற்றை யுண்டகடன், (செஞ்சோறு-சிறந்த அன்னம்: அறுசுவையோடு கூடிய உணவு) கிரு-100
செப்புதல்—சொல்லுதல், கிரு-103
செய்யாள்—இலக்குமி, உலா-27
சென்னி—தலே, உலா-11
சேதி—செய்தி, சஞ்-4
சேவகம்—வீரச்செயல், உலா-29

சைவலம்—பாசி, கிரு-73

சோமன்—சந்திரன், கிரு-14

சௌபலன்—சுபலன்மகன், சகுனி, கிரு-35

ஞாயம்—நியாயம், கிரு-69

தகுவர்—அசுரர், சஞ்-40: படை-20

தடிதல்—கொன்றழித்தல், உலா-1

தணத்தல்—நீங்குதல், கிரு-70

தந்தி—யானை, படை-21

தந்திரம்—சேனை, உலா-27

தம்பம்—தம்பனம்: இயக்கத்தைத் தடுத்துத் தம்பிக்கச் செய்கை, சஞ்-42

தமாலம் – பச்சிலை மரம், கிரு 28

தரணிபர்—அரசர், உலா-7

தரியலர்—பகைவர், உலா-25; கிரு-15

தவா—கெடாத, குன்றாத, கிரு-97

தவிசு—ஆசனம், உலா-11

தளைபடுத்தல்—விலங்கு பூட்டுதல், கிரு-85

தற்குறிப்பேற்றவணி, படை-29

தற்குறிப்பேற்றவுவமையணி, கிரு-27

தனுவேதி—வில்வித்தையில் வல்லார் துரோணசாரியர், உலா-28

தாமரைநாபன்—பத்மநாபன், திருமால், கண்ணபிரான், கிரு-53

தாராபலம்—ஜன்ம நட்சத்திரத்தின் சுபமாகிய பலன், கிரு-17

தாலகேது—பனைக்கொடி: அதனையுடைய வீடுமன், சஞ்-1

தானை—சேனை, உலா-13

திணம்-(திண்ணம் என்பதன் இடைக்குறை) நிச்சயம், படை-23

திதிமயக்குதல்—திதியை மாற்றுதல், படை-15

திரிவிக்கிரமன்—கிருஷ்ணன், கிரு-21

திருக்கு—மாறுபாடு, கிரு-71

திருமுகம்—ஓலை, உலா-9; படை-6

திறம்—பராக்கிரமம், உலா-20

துகில்—ஆடை, சஞ்-12

துஞ்சல்—தூங்குதல், தூக்கம், சஞ்-17

துணை—அளவு, படை-1

துவர்—பவளம், கிரு-17
துவரை—துவாரகாபுரி, உலூ-9
துறக்கம்—சுவர்க்கம், உலூ-25
துன்னலார்—பகைவர், உலூ-4
தெரிசனை—தெரிசனம். தரிசனை. கிரு-29
தெவ்வர்—பகைவர், சஞ்-25
தெழித்தல்—அதட்டுதல், உலூ-30
தென் இக்கு—இனிய கருப்பஞ்சாறு, சஞ்-34
தேசிகன்—குரு, கிரு-59
தேவு—தெய்வம், சஞ்-37
தொடை—பாணம், சஞ்-48
தொறு—பசுக்கூட்டம், சஞ்-33
நச்சராக்கணை—நாகாஸ்திரம், கிரு-100
நஞ்சு—விஷம். சஞ்-17
நணித்தல்—நெருங்குதல், கிரு—95
நதிநந்தனன்—வீடுமன், படை-25
நந்தனர்—மைந்தர், உலூ-6
நந்துதல்—கெடுதல், அழிதல், உலூ-27
நம்பன்—சிவபெருமான், கிரு-54
நரன்—அருச்சுனன், உலூ-11
நள்ளார்—பகைவர், சஞ்-38
நாகணை துறந்தவன்—திருமாலாகிய கண்ணபிரான், படை-3
நாளம்—தண்டு, உலூ-23
நிமித்தம்—சகுனம், நற்குறி. படை-14
நிலவு—ஒளி, கிரு-88
நீதிமொய்ம்புடையவர்—பாண்டவர், சஞ்-6
நீலாம்பரன்—நீல ஆடையைத் தரித்தவன் பலராமன், சஞ்-41
நூறுதல்—அழித்தல், சஞ்-30
நெடியோன்—கிருஷ்ணன், கிரு-20
நெருநல்—நேற்றைய தினம், கிரு-45
நெளிதல்—வளைதல், படை-22
பகம்—கொக்கு, உலூ-1
பங்கம்—சேறு. கிரு-84
பணிக்கணை—நாகாஸ்திரம், கிரு-82

பத்திருபது—இருநூறு, படை-29
பதாகை—கொடி, உலா-6
பதாதி—காலாட்படை, சஞ்-37
பரகதி—மேலான முக்தி, சஞ்-27
பரசாயுதன்—பரசுராமன், சஞ்-48
பரந்தாமன்—கிருஷ்ணன், கிரு-28
பரிசு—விதம், வகை, கிரு-80
பரித்தல்—தாங்குதல், சஞ்-27
பவநாள்—அவதரித்தநாள், கிரு-27. (பவம்-பிறப்பு)
பவம்—பாவம், தோஷம், உலா-18
பவுத்திரர்—பேரப் பிள்ளைகள், சஞ்-50
பற்குனன்—அருச்சுனன், உலா-28
பன்னல்—சொல்லுதல், உலா-4
பன்னி—பத்நீ: பத்தினி- மனைவி. உலா-17
பாசறை—படைவீடு, படை-23
பாதலம்—பாதாளம், கிரு-88
பாந்தள்—பாம்பு, உலா-1
பாயம்—மனத்துக்கு விருப்பமானது, சஞ்-53
பாரம்—(துன்பங்களைப்) பொறுக்கை, (bearing) படை-2
பாரிடம்-பூதம், சஞ்-43
பான்மை-தன்மை, சஞ்-61
பிடரியின் மதி பெற்றகண்ணிலி—திருதராட்டிரன், சஞ்-9
பிலவறை—நிலவறை (பிலம்-குகை, பள்ளம்), கிரு-88
பிறகுறிப்பு, கிரு-93
பிறிதினவிற்சியணி, உலா-27; சஞ்-41; கிரு-4, 19, 38
பின்னோன்—பின்பிறந்தவன், தம்பி, உலா-13
புகர்—புள்ளி. சஞ்-40
புகர்மா—யானை, சஞ்-40
புங்கம்—அஸ்திரம், அம்பு, கிரு-78
புண்—குற்றம், கிரு-72
புணர்ப்பு—சம்பந்தம், சஞ்-5
புணரி—கடல், உலா-20
புந்தி—தத்துவ ஞானம், கிரு-37
புயங்கம்—பாம்பு, கிரு-39
புல்லார்—பகைவர், சஞ்-47

புல்லுதல்—தழுவுதல். உலூ-16

புலரிகடன்—காலைக் கடன்கள், படை-8

புரத்தல்—பாதுகாத்தல், உலூ-8

புரந்தரன்-இந்திரன், கிரு-41

புரவித்தாமன்—அசுவத்தாமன், சஞ்-39

புராந்தகன்—சிவன், சஞ்-35

புறம் நட்டல்—வெளிக்கு விசுவசித்தல், கிரு-75

பூசல்—சண்டை, கிரு-40

பூர்வாசரியன்—முதற்குரு, சஞ்-39

பொய்த்துயில்—உலூ-10

பொன்றுதல்—இறத்தல், அழிதல், சஞ்-12

பொன்னுலகு—தேவலோகம், உலூ-21

போது ஏ—புஷ்ப பாணம், படை-7 (ஏ-அம்பு, பாணம்)

போதேவின் வேள்—மன்மதன், படை-7

மகசேனி—திரௌபதி, படை-11

மகத்து எழும் வஞ்சி—திரௌபதி, சஞ்-2

மகம்—வேள்வி, உலூ-18

மச்சர்தந்திரி—சுவேதன், படை-13

மஞ்சுவண்ணன்—கிருஷ்ணன், (மஞ்சு, மேகம்), சஞ்-2

மடங்கல்-சிங்கம், சஞ்-35

மத்திரேசன்—மத்திரநாட்டரசன் சல்லியன், உலூ-15

மந்தணம்—இரகசிய ஆலோசனை, கிரு-85

மருத்துவர்—அசுவினி தேவர், படை-10

மருவார்—பகைவர், கிரு-14

மவுனம்—மௌனம், பேசாதிருத்தல், உலூ-20

மழுப்படையோன்—பரசுராமன், சஞ்-38

மறுகு—தெரு, படை-22

மறைக்கொடியோன்—துரோணாசாரியன் (பிராம்மணன் என்றபடி) சஞ்-39

மன்—தலைவன், அரசன்; உலூ-26

மன்றல்—திருமணம், கிரு-58

மா—செல்வம், உலூ-2

மாசுணம்—சர்ப்பம், பாம்பு. உலூ-24

மாடு—பக்கம், உலூ-11

மாதவன்—விஷ்ணு, உலா-20
மாது—காளி, துர்க்கை. கொற்றவை, படை-7
மாதுலன்-மாமன், உலா-1
மாதேவன்—சிவபிரான், படை-7
மாருதி—வீமன், சஞ்-50
மாலி—மாலையணிந்தோன், கிரு-92
மாற்றம்—வார்த்தை, உலா-4
மாற்றுநிலையணி கிரு-4
மிகையுயர்வுநவிற்சியணி, படை-22
மித்திரன்—சூரியன், சஞ்-16
மின்னார்—ஸ்திரீகள், உலா-18
மீனநாடன்—விராடன், படை-11
முகுந்தன்—கிருஷ்ணன், கிரு-8
முசலி—பலராமன். படை-23 (முசலம்-உலக்கை)
முடங்கல்—ஓலை, உலா-6
முதற்குரு—கிருபாசாரியன், படை-21
முதுவன்—கிழவன் [வீடுமன்] படை-26
மும்மை—முக்கால நிகழ்ச்சிகள். சஞ்-7
முரசகேது—முரசக்கொடி, தருமன், சஞ்-7
முரண்—வலிமை, படை-3
முராரி—விஷ்ணு. கிரு-57
முன்னவன்—கண்ணன், உலா-4
மூரி—வலிமை. சஞ்-28
மெய்த்துயில், உலா-11
மேதினி—பூமி, கிரு—3
மொய்ம்பு—வலிமை, உலா-17
யாணர்—செல்வம். கிரு-39
யாழ்வல்லோன்—கந்தருவன், சஞ்-33
யானம்—பல்லக்கு, உலா-23
வகுப்பது—செய்வது, கிரு-3
வசை—பழிச்சொல், சஞ்-7
வஞ்சினம்—சபதம், உலா-5
வட்டம்—விசிறி, சஞ்.22
வடு—மாவின் பிளவு, சஞ்-29
வண்ணமொழி—நேர்த்தியான வார்த்தை, கிரு-22
வயம்—வெற்றி. சஞ்-57

வயவர்—வீரர், காலாட் படையினர், படை-21

வயினன்—கருடன், கிரு-57

வர்க்கம்—அணிவகுப்பு, படை-13

வராககேது—பன்றிக்கொடியையுடையவன், (இவன் விராடன் உறவினன்) படை-11

வரூதினி—சேனை, கிரு-84

வல்—சூதாடு கருவி. சூதாட்டம், சஞ்-46, 56

வல்லை—விரைவாக, சீக்கிரமாக, சஞ்-48

வலம்புரி—நந்தியாவட்டை (இந்த மாலை துரியோதனனுக்கு உரியது) கிரு-92

வலாரி—இந்திரன், உலூ-23

வழங்கு—சொல்லு, கிரு-80

வழுதி—பாண்டியன், சஞ்-36

வளி—காற்று, சஞ்-43

வளை—சங்குப் பூச்சி, கிரு-24

வனி—(வன்னி என்பதன் இடைக்குறை) பிரமசாரி, சஞ்-49

வாகினி—சேனை, உலூ—15

வாசவன்—இந்திரன், உலூ-19

வாசி—குதிரை, கிரு-59

வாய்மை—வாக்கு, உலூ—13

வாய்மை பெற்றவர்—தருமன், உலூ-26

வாளி—அம்பு, சஞ்-39

விசித்தல்—கட்டுதல், சஞ்-33

விஞ்ஞை—வித்தையென்பதன் போலி, கிரு-82

விடலை—ஆண்பாற் சிறப்புப்பெயர், கிரு-12

விரகு—தந்திரம், உபாயம், சஞ்-42; வஞ்சனை, கிரு-89; உபாயம், படை-25

விருத்தர்—கிழவர், வயோதிகர், சஞ்.47

விழி பொய்த்தவன்—குருடன் திருதராட்டிரன், சஞ்-12

விள்ளுதல்—பிளத்தல், சஞ்-38

விறல்—பராக்கிரமம், கிரு-1

வீட்டுதல்—கொன்றொழித்தல், சஞ்-13

வீதல்—இறந்து போதல். படை-23

வெதிர்—மூங்கில், கிரு-86

வெந்தருதல்—முதுகுகாட்டியோடுதல், படை-26

வெந்நிடல்—புறங்காட்டியோடுதல், சஞ்-38
வெய்யன்—கொடியவன், கிரு-55
வெருவுதல்—அஞ்சுதல், சஞ்-57
வெள்ளிடை—வெளியிடம், வெட்டவெளி, படை-17
வெற்பு—மலை, உலூ-20
வேடை—வெப்பம், கிரு—27
வேய்தல்—சூடுதல், படை-4
வேள்வி கொடி—திரௌபதி, சஞ்-22
வேறல்—வெல்லுதல், உலூ-29
வையம்-பூமி, இராச்சியம், உலூ-30

சுபம்.

உத்தியோக பருவத்தின் சில அருந்தொடர்கள்

மைத்துனன் அன்பும் மன்னன் வஞ்சமும் நெஞ்சில் வைத்தோன், உலூ—11

மண்ணளிக்க மனதிலையேல் உங்கட் கைவர் வானளிப்பதுண்மை, உலூ—27

ஒருவில் கற்பினளறுவை தொட்டவன் ஊரு மீதிரு வென்பவன் உரையில் வெல்கனன் கவறில் வென்றவனும் சுகங்கொலோ—சஞ்—3

பாரிறுசையும் மாதராசையும் பைம்பொறுசையும் பகைவர் மேற்போரிறுசையும் விட்டு மாயை புணர்ப்பிலாத மெய்ஞ்ஞானியாஞ் சீரிறுகுதலரிது; சஞ்—5

பிடரியின் மதிபெற்ற கண்ணிலி, சஞ்—9

நாட்டில் ராசதன்மத்தை மன்னவர் நாட்டல் நற்றவம்; சஞ்—11

எந்தையெம்மாட்டருட்டிறம்பினும் வணங்கு தெய்வதத் தருட்டிறம் பொய்க்குமோ, சஞ்—11

பொருளிழந்தவனும் கல்வி வேண்டினனும் பொருநரை வெல்வலியிலனும் விரகமுற்றவனும் வஞ்ச நாடினனும் விழியுறங்கார், சஞ்—18

தேரினிலிபத்தின்மாவிற் செலத்தகுஞ் செம்மல் தன்னைப் பாரினில் நடத்துவித்த அப்பாதகர், சஞ்—28

கன்னன் வாயினுல் வெல்வன், சஞ்—32

தக்கவர் மொழி நஞ்சாகி. சஞ்—34

சரதமும் பொறையும் சாந்தமும் வலியும் தக்கதேவு அருளும் வாய்ந்திடும் மெய்விரதனை வெல்வோர் உளர்கொலோ, சஞ்—37.

நள்ளார் வலி கேட்டயர்தல் நன்றே, சஞ்—38

தெய்வவலி கொள் ஐவரை நீ சேனைவலியால் வெல்வனென்றால் உய்வதில்லை, ஆர் இருள் கதிர் வென்றுறுமே, சஞ்—45.

வினைளவும் அப்பார்கலி யெழுநாள் பல வண்டங்கள் அகட்டில் வைப்பானையுள்வைப்பார் செயல் வயமாகும், அவ்வரிதாள் தப்பாது உனி கதியெய்து, சஞ்—61.

மருளுற்றிடு மகராசையும் மாமாயையும் அற்றே தெருளுற்றறி வரியப்பொருள் தெரிவுற்றிட புகல் நின் அருளுற்றலும் உய்ந்தேன் அரியடி பற்றினன், சஞ்—62.

அப்பாரதப் போர் விளைத்துப் புவிபாரந் தீர்ப்பான் இந்நிலத் துற்றவதரித்த நீயல்லால் அது தவிர்க்க யார் வல்லார், கிரு—8.

துன்னலர் கடங்குலமும் தூயோர் சொல்வஞ்சினமும் நன்னுத லாய் நின் குழலும் நானே முடிக்கின்றேன், கிரு—16.

சீரின் மிக்கவர்க் கண்டலார் செருக்கொடு நிமிர்ந்தாங்கு; தாழ் தல் மிக்கது என்று உரகர் நாடண்மிய கிடங்கு நீரின் மிக்கவர் போன்றது, கிரு—26.

நிதிபடைத்தவை விழைவுறு நின்னை முன்படைத்த விதி படைத் தவன் விளங்கிழை முதலிய பொருணீ துதிபடைத்தளித்திடினும் ஏற்றிடுவனோ, கிரு—31-

தூயோர் கழறிய சொற்கெதிர் மறுத்தல் கடனோ, கிரு—63.

முனஞ் செய்தவம் இவ்வளவென்றெண்ணி [அந்த மொய்ம் பனைக் கூட்டுதி], கிரு—83.

மந்தணஞ் சொல்லிடத் தினைஞர் யாதுக்கு?, கிரு—85

இகல் கடிந்திடலே மன்னறம், கிரு—102.

தமர்களென்னினும் அஞ்சிடாது அடுவதே தரணிபர்க்கு அறன், படை-2

சுபம்

உத்தியோக பருவத்தின் செய்யுண் முதற்குறிப்பகராதி

அங்கதமுயர்த்த நிருபன்	228
அச்சுதன் வரிவிருபுய	127
அச்சுயோதனற்கேயமர்	199
அடிநாளிலிற் பொறுத்த	104
அண்ணனெறித்தன்னே	119
அத்தினபுரி யுத்தமனடைந்	53
அந்தமொழி கேட்டிடலு	233
அம்மொழி தன்செவிப்	176
அரிசெயல் சொற்றவன்விடு	17
அருத்த மென்னினு மளித்தி	163
அவராற்றலு மிவராற்றலு	95
அவையினரசருடனகி	196
அவையினிற் பெரியோர்	145
அற்பவாழ்வினைச் சதமெனக்	44
அறமுற்றவர்பாலேம்படை	95
அன்றுசூதரசிழந்து போன	140
அன்னவனுந்தன் மகளே	150
அன்னூர் மொழிக்குவந்தங்	149
அன்னுகின வென்ற நரநாரணுரிவ்	149
அன்னையென் றுன்னை மதிப்ப	198
ஆடுவார்களிற்ரேகைநின்	121

ஆண்டு மைந்தர்கள் பொன்று	89
ஆதலின் விசயனும்பர்க்காக	66
ஆதலினவரை யழைத்தரசு	57
ஆதலினல் நீ தூதங்கடைந்	102
ஆயபொழுதெய்துபரிசியாதென	61
ஆரியரவன்ருயவனிபன்	143
ஆரியனவன் குமரன்யான்	222
ஆழியான் வரினின்னுளக்	126
ஆனபோதபிமன்கடோற்	217
இங்கிவரருந்திதி மயக்கி	221
இங்குரைத்திடு மென்சொலிற்	52
இடியேற்ருெடு கன்மழை	80
இந்ததூதினுக்கந்தகன்	9
இந்தவணமீங்கிவரிரண்டு	236
இப்பான்மை யெங்குளதங்குறு	96
இரக்கவு மனதிரங்கிலாத	162
இரதவெங்கயமாபதாதி	73
இரவிறுயிலொருவிய வேந்	186
இருடிசொற்றல்கேட்	4
இருதாடொழுதிறைமன்னரிட	93
இருந்தவை மன்னவர்தமை	134
இவ்வகையியற்ற மனதில்லே	62
இவ்வுரைகளியார்க்குமியம்	111
இழந்த கண்ணிஞனன்றி	128
இன்றுளத்தினுக்கிசைவு	53
இன்னவை நீ செய்திடினும்	110
இன்னவோதிய தம்முனே	6
இன்னுரை சொற்றவிர்கலன்	38
ஈதியற்றுதலெத்தவத்தினு	48
ஈதுகாறுமிலாததாயினும்	43

ஈந்தேனெனிலஞ்சிப் புவி	94
உம்பர்மலர்த்தருவைந்து	189
உம்பர் முனையுகுந்திடினும்	173
உரைத்த துறுதியாமோ	81
உரைத்தவர் சினமுற்றுமா	7
உன்றன் மைந்தனயர் வஞ்சனை	142
உன்னுழை வந்தடுத்திடும் போலா	20
உனையாதரியாரிச்சுத ரொழிவார்	99
எஞ்சலிலானுடனேவரு	193
எந்தையொடுற்பவித்துமிற்றை	171
எம்மிலூர் நெருநலண்மியும்	138
என்ற மீதழகிவ் வாறெய்	157
என்றலும் விதுரனியம்புமன்	56
என்றவன்றனை தந்தைசீறி	91
என்றுதிட்டிரனுரை செய்	50
என்று நதிநந்தன னிசைப்ப	232
என்றுரைத்திடலுங்கன்னன்	67
என்னநெடுமால்இளையானைப்	115
என்னமாலுமிவை பன்ன	139
என்னிகலாரியற்காயு	152
ஏரின்மானிடராய்பிறப்பரி	43
ஐவர்தந்தையர்களாமொருத்தி	169
ஒருவடிவமாகிமாலோர்ந்து	111
கங்குலிடைச் சுயோதனன்	183
கடங்கலந்து மீண்டடைந்த	125
கடந்தவேலின் மாதுலன்	2
கண்ணுநீயவர்மனமாங்கற்	117
கண்ணிலாதவனல்விதுர	136
கதிரவனுக்குயிர்த்துநதி	180

கவலேலெனத் தேற்றிக்	115
கற்புடையாள் குழலலேயக்	103
கறங்குமுரசாதிபலபல்லிய	229
கன்னனே மன்னவன்கசிந்துட்	37
காங்கயன் மறையாரியர்	129
காசிகோசல போசர் இறைவர்	155
கீசகரிடும்பன் முதலியர்	70
குந்திநந்தனர்கருத்தொடும்	8
குராநறும் பொழிற்கேக	218
குரிசிலே விசித்தியாழ்வல்லோன்	68
குரிசிலே வில்லிறுத்து முனிந்தவன்	177
குருகுலத்திலொருவன் மகற்	172
குருவின் மிகுதுவட்டரையென்	21
குலேவளேத்திடு கதலியும்	120
கேசவனுரைப்ப வந்தகன்	144
கேட்டபரியறுசதமீந்	158
கேட்டெணமுற்றுமென்றெணி	201
கைத்திறற் கரிபோற்	72
கொண்டல்போற்பலவியமி	219
கோசிகன்பால்விஞ்ஞையுணர்	153
சங்கமுழக்கிதனுக்கள்	190
சஞ்சயனுபலாவியப்பதி	41
சஞ்சயனுரையால் நஞ்சருந்	54
சமர்பொருதுகின்றகுருகேத்திர	231
சமரதாதிபர்யாகசேனனு	216
சல்லியன்வேற் சுயோதனனுக்	18
சவ்வியசாசியினுற் சாயுநாளெனே	200
சற்றுமஞ்சாமலிச்சொற்	65
சாதேவனுற்றனுவின்கதிரை	211
சீரின்மிக்கவர்க்கண்டலார்	122

சீவனுரைப்படிநகுடன்	26
சுந்தரிதன்ஞற்சுரரிந்	30
சுந்தரி புல்வானகுடன்	28
சுற்றநந்தனர்துணைவராரியர்	46
சூதிஞலவன்கொளும்	5
செருவில் சந்தன நீதூண்டிற்	16
செல்லுகன்னனையந்தகன்	86
சேனையோடு நீ யெழுக	215
சொல்லுவசொற்றன்ஞேர்	117
சொற்சபதமுற்றுமிவர்கொற்றவனை	234
சொற்றமொழிவழுவியமருடற்றி	33
தக்கவர்மொழிநஞ்சாகிச்	69
தண்ணறைக்கமலன்முதலியர்க்	146
தந்ததாயகந்தானெனச்	123
தந்தைகாதலுறுதன்மை	164
தந்தைமுதல்யார்க்குந்தனு	116
தமர்களென்னினு மஞ்சிடா	205
தருதவிசிராதவனிதன்மிசை	60
தருமஞரியர்விதுரன்தாதை	42
தருமனுக்களித்தேன் வாய்மை	15
தருமனுரைத்தபடிசாதேவன்	112
தன்றிறமாசுரன்கொளத்	23
தனக்கமர்த்துணை வரும்படி	11
தனஞ்செயன்மேன்மறுகணை	181
தாலகேதுவிதுரஞரியர்	40
திருக்கிலாதவனழைக்க	167
தீதுநலமீதெனதெரிந்து	62
துச்சாதனன்துன்முகன்	79
துறவுரைத்தோனகன்றபினர்	100
தெய்வவலிகொளைவரைநீ	82

தேசுறுமாமணித்தீப	132
தேயவேந்தரை நோக்கி	208
தேர்புகுந்தமலன்சுயோதனன	202
தேரினிலிபத்தின்மாவிற்	64
தொடைநரனெய்துமுன்னர்	12
நலமறுமாதுலனுரைத்த	185
நவில்கந்தமாதனமதிற்றவஞ்	148
நள்ளார்வலிகேட்டயர்த	74
நற்றினத்திறந்திர நட	220
நானிருக்கதாஊவெல்வ	175
நிதிபடைத்தவை விழைவுறு	125
நிந்தைகூறலேயொரீஇ	128
நிரைதுரந்தஊகவர்ந்து	168
நிலவெறியத்தவிசரியுற	187
நின்றனுபொன்றியதைவர்க்	179
நின்னுலின்றென்பிறப்பு	194
நீயழைப்பவனிறைகொடுப்ப	90
நீலாம்பரனென்பால்	78
பங்களஞ்சீனமொடடங்	226
பரசாயுதன்வென்றவன்	85
பற்குணன்கதையோன்	51
பற்குனனீதுரைத்திடலும்	105
பறந்தபொழுதவன்வழுவ	154
பன்னககேதனற்கிசைந்தேன்	213
பன்னுமாமுனிவர்காள்	160
பாம்புயர்த்தோன்றுயரெய்த	133
பிடரியின்மதிபெற்றகண்ணிலி	47
புகர்மாநடவும்பகதத்தன்	77
புல்லார்வலியைப்புகழ்	84
புனிதரிற்சீறந்த சஞ்சயன்	58

பூணும்வெம்பழிப்புயங்க	131
பூர்வாசரியன் மறைக்கொடியோன்	75
பெரியோருரைக்கவுளநொந்து	147
பொருந்தனுக்கைவிதுரன்	170
பொருளிழந்தவனுங்கல்வி	55
மகிபயனிற்றிய விரகிது	188
மஞ்சமீதுருக்குமணிவட்டம்	59
மண்டமரிற்பொரநினைவோ	101
மண்ணளிக்கமனதிலையேல்	32
மண்ணுளக்கன்னன்மகவான்	108
மந்தணஞ்சொல்லிடத்திளைஞர்	184
மருகன்வந்திரவிமதலைபால்	197
மருகனைக்குருமகனை	87
மருவாரெனக்கிழைத்த	113
மருளுற்றிடுமகராசையும்	97
மலைதாங்கரியெனினும்	98
மற்றவற்குச்சல்லியனிங்	31
மன்னரரசரி போனபின்	209
மன்னவநன்றிஃதுன்னிய	192
மன்னவநின்குலநகுடன்	25
மாயனுன்னைநகரைந்தி	165
மாயோனதுகேட்டவன்	195
மாலடைந்ததுமிருந்தசீரியர்கள்	166
முகுந்தன்மீளவும்புகலுவான்	204
முடித்தாலென் விரித்தாலென்	106
முதலண்ணலுக்குறுதி	227
முந்திராகவற் குடைந்தோன்	35
மும்மையுந்தெரிவான்மொழி	45
முரசகேதவர்சொற்றசொற்	209
முன்னவர்போல் சகதேவன்	107

முனிவர்மூவரிகழரசுமீது	161
மெய்த்துயிலென்றுந்தாட்பான்	13
மேலுமச்சர்கோன்	10
மைந்தருக்கரசீந்தெம்மை	63
மைந்தாசமர்துணிகின்றமை	93
வடுக்கணுளிட்ட சாபம்	64
வந்தபற்பலமன்னர்தம்மெதிர்	88
வந்துகுருபூமியிடை	230
வந்துதம்பியொருமுன்னி	137
வந்துளார்தமைவிடுத்தலு	130
வரியோதி பணிந்தாதனம்	92
வருந்தராதிபர்யாவர்க்குந்	130
வருந்தியொருவருமறியா	27
வல்பாரிழந்து போமவரை	83
வன்னியை முனிந்திரவிமைந்த	223
வாசவலம்புரிமாலியலாது	191
வாட்டிறற்றுரியோதனுதியர்	49
வாரேறுமுரசுமுதல்	118
விடங்கொணுகணைத்துறந்தவ	206
விண்ணுயர்ந்த மாளிகைக் கொடி	123
விருத்திரன் கொட்டாவி கொளும்	22
விரைசெய்தண்டுளவோன்	124
விழித்துமுன்னரனை நோக்கி	14
விறன்மாகதன்சகுனிமாத்திரனும்	225
வீமன்கதையிருக்கவிசயன்கை	114
வெகுளிசெய்யகரியவன்	141
வெற்றிசிலைவல்லவனுருத்	235

சுபம்.

நூல் நிலைய வெளியீடுகள்

	ரூ.	பை
மகாபாரதச் சுருக்கம்—ஆதி பருவம்	40	00
மகாபாரதச் சுருக்கம்—சபா பருவம்	18	00
மகாபாரதச் சுருக்கம்—ஆரணிய பருவம்	40	00
மகாபாரதச் சுருக்கம்—விராட பருவம்	20	00
சீவலமாறன் கதை	25	00
ஐங்குறுநூறு மூலமும் பழைய உரையும் 6-ம் பதிப்பு	12	00
பதிற்றுப்பத்து மூலமும் பழைய உரையும் 7-ம் பதிப்பு	18	00
பரிபாடல் மூலமும் பரிமேலழகர் உரையும் 5-ம் பதிப்பு	15	00
மணிமேகலை மூலமும் அரும்பதவுரையும் 7-ம் பதிப்பு	30	00
இறைவாச நல்லூர்த் தலபுராணம்	18	00
காஞ்சிப் புராணம்	25	00
கமலாலயச் சிறப்பு	5	00
தமிழ்ப்பா மஞ்சரி பகுதி 1	1	50
தமிழ்ப்பா மஞ்சரி பகுதி 2	2	50
மருவிஞ்ஞானேசுவரீயம்	4	00
நவநீதப் பாட்டியல்	2	00
குமாரலிங்கர் குறவஞ்சி	6	00
திருக்குற்றாலக் குறவஞ்சி	1	25
சிவகாமி அம்மன் அந்தாதி	15	00
நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதி	10	00
கயற்கண்ணி மாலை	1	25
குலசை உலா	1	00
திரு இலஞ்சி முருகன் உலா	1	00
திருப்பூவண நாதர் உலா	1	00
சங்கர ராசேந்திர சோழன் உலா	5	00
வாட்போக்கியுலா	7	50
ஆதிவராகப் பெருமாள் வருக்கக்கோவை	12	00
அழகர் கிள்ளைவிடு தூது	3	00
தமிழ்விடு தூது	3	00
மூவரையன் விறலி விடுதூது	12	00
கீழ்வேளூர் முருகன் பிள்ளைத்தமிழ்	4	00
சொர்ணபுரி அம்பிகை பிள்ளைத்தமிழ்	7	00
தனிப்பாடல்கள்	20	00
அகராதி நிகண்டு	15	00
வடமலை நிகண்டு	15	00
வாகட அகராதி	5	00
சைவசித்தாந்த உரை நடை	5	00
என் சரித்திரம் 2-ம் பதிப்பு	48	00
என் ஆசிரியப்பிரான்	12	00
சங்கத் தமிழும் பிற்காலத்தமிழும்	6	00
நான் கண்டதும் கேட்டதும்	5	00
உதயணன் சரித்திரச் சுருக்கம்	2	00
திருக்குறள் (ஸம்ஸ்கிருத மொழிபெயர்ப்புடன்)	15	00